விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

தமிழ்த்தந்தி

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

★ விளம்பரங்கள்

★ வாழ்த்துகள்

மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:

Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 45 ஞாயிற்றுக்கிழமை 06.10.2019 Sunday 06th October 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

தமிழ் வாக்காளர்கள் மீண்டும் ஏமாறப்போகின்றார்களா?

கோப்புப்படம்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் தீர்மானிக்கும் சக்தியாக பலமுறை விளங்கியிருக்கின்றார்கள். பிரேமதாசா, சந்திரிக்கா, மகிந்த ராஜபக்ஷ போன்றவர்கள் விடுதலைப்புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் ஊடாகத்தான் வென்றார்கள். சந்திரிக்கா அம்மையார் விடுதலைப் புலிகளுக்கு வட,கிழக்கை பத்து வருடங்களுக்கு கொடுப்பேன் என்று கூறி 62 வீதமான வாக்குகளைப் பெற்று ஜனாதிபதித் தேர்தலில் வென்றார்.

மகிந்த ராஜபக்ஷ அவர்கள் விடுதலைப்புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களை வன்னியில் சென்று சந்திப்பேன் என்று அவருடைய தேர்தல் விஞ்ஞாபனமான மகிந்த சிந்தனையில் எழுத்தில் இட்டு வெற்றி பெற்றார்.

இந்த எழுத்து மூல உறுதிமொழியை விடுதலைப்புலிகள் மகிந்த ராஜபக்ஷவுடனும் ரணில் விக்கிரமசிங்கவுடனும் கேட்டிருந்தனர். இடைக்கால நிர்வாகத்தை ரணில் விக்கிரமசிங்க தருவதாகக் கூறவேண்டும் என விடுதலைப்புலிகள் கேட்டிருந்தார்கள். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவோ நான் அதைத் தருவேன், ஆனால் உறுதிமொழியாக எழுதித் தர மாட்டேன் என்று கூறினார்.

இதை பலமுறை மறைந்த அமைச்சர் சந்திரசேகரன் கூறியிருக்கின்றார். மறைந்த அமைச்சர் சந்திரசேகரனின் கருத்துப்படி, ரணில் விக்கிரமசிங்க சார்பாக தான் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டபோது, இடைக்கால நிர்வாகத்தை ரணில் தருவதாகக் கூறியதை எழுத்து மூலம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறச் செய்யும்படி கூறியபொழுது ரணில் அதை மறுத்தார். ஆனால் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் எழுத்து மூலம் விடுதலைப்புலிகளின் தலைவரை அவர்களின்குகைக்குள் சந்திக்கத் தயார் என்று கூறியிருந்தார். அதனால் விடுதலைப்புலிகள் ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவினால் பின்னப்பட்ட சர்வதேச வலையில் சிக்குண்டு மீள்வதறியாமல் வியந்திருக்கும் வேளையில் மீண்டுமொரு பேரிடியாக கருணாவையும் பிளவுபடுத்தி விடுதலைப்புலிகளின் மனித வளத்தையும் ஆயுதபலத்தையும் சிதறடித்ததற்கும் பதிலடி கொடுப்பதற்கும் இனி யுத்தத்தைத் தவிர வேறு வழியில்லை என்று மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு ஆதரவளித்தார்கள்.

அத்தகைய ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெறுகின்ற பொழுது விடுதலைப்புலிகள் மிகவும் பலம் பொருந்திய அமைப்பாக காணப்பட்டனர். அதனால் சந்திரிக்கா உட்பட தெற்குத் தலைவர்கள் எல்லோரும் விடுதலைப்புலிகளை ஆயுதபலத்தினால் வெல்ல முடியாது என்றும் அவர்களுடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவதன் மூலமே இந்த நாட்டில் அமைதியைக் கொண்டு வரலாம் என்றும் நம்பினார்கள்.

விடுதலைப்புலிகள் ஜெயசிக்குறு நடவடிக்கையை

02 ஆம் பக்கம் பார்க்க

ஒருமித்த கருத்தை முன்வைத்து அதனை நடைமுறைப்படுத்துவோம்

முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தமிழ்த்தந்திக்கு பிரத்தியேக செவ்வி

மக்கள் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள் அனைவரும் எங்களுடைய கட்சித்தலைவர்களைச் சென்று சந்தித்துப் பேசியுள்ளார்கள். அதாவது பொதுவேட்பாளரை நியமிப்பது சம்பந்தமாகவும், தமிழ் மக்கள் சார்பிலே பொது வான நிலைப்பாட்டை நாங்கள் எட்டக்கூடிய நிலையில் கொண்டு செல்லலாம் என்று அவர்கள் சென்று கதைத்துள்ளார்கள்.

இவ்வாறு முன்னாள் வடமாகாண முதலைமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ்த்தந்திக்கு கருத்துத் தெரிவிக்கையில் தெரிவித்தார்.

02 ஆம் பக்கம் பார்க்க

மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு மைத்திரிபால சிறிசேனவிற்கு அழைப்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக போட்டியிடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களை தொகுதிகளின் அமைப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற தொகுதி

02 ஆம் பக்கம் பார்க்க

விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை பாயும்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

வேட்பாளர்களின் எண்ணிக்கை

02 ஆம் பக்கம் பார்க்க

வேட்புமனுத் தாக்கல் நாளை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நாளை இடம்பெறும். காலை 9 மணி முதல் 11 மணி வரை வேட்பு மனுத்தால் செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேட்பாளர்களுக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிக்க விரும்புபவர்கள் காலை 11 மணி முதல் 11.30 மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவினால் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு அழைப்பு

இம்முறை ஜனாதிபதி தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தியுள்ள அனைத்து வேட்பாளர்களையும் இன்று (06) தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைகப்பட்டுள்ளனர்.

இன்று பிற்பகல் 2.30 க்கு குறித்த வேட்பாளர்கள் அனைவரும் தேர்தல் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நாளை (07) இடம்பெறவுள்ள நிலையில், அது தொடர்பில் தெளிவு படுத்துவற்காக கட்டுப்பணம் செலுத்தியுள்ள அனைத்து வேட்பாளர்களுக்கும் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவில் தமிழ் மக்களின் பாரம்பரிய காணி தொடர்பில் நடவடிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் சர்ச்சைக்குரிய மகாவலி எல் வலயத்திலுள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய காணிகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நந்திக்கடல் மற்றும் நாயாறு பகுதிகளில் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகளையும் மீள மக்களிடம் கையளிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வட மாகாண ஆளுநர் வாக்குறுதி அளித்துள்ளார்.

புலமைப்பரிசில்பரீட்சை பெறுபேறுகள் அடுத்தவாரம்

இம் முறை நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக்கட்ட பணிகள் தற்பொழுது இடம்பெற்று வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலையத்திலிருந்து விரைவில் சேவைகள்!

கோப்புப்படம்

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்திலிருந்து வரும் 17ஆம் திகதி விமான சேவைகள் ஆரம்பித்து வைக்கப்படும் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

பலாலி விமான நிலையத்தை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமாக பெயர் மாற்றம் செய்யும், அமைச்சரவைப் பத்திரம் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையம்

02 ஆம் பக்கம் பார்க்க

பணிப்பகிஷ்கரிப்பு தொடர்ந்தாலும் 12 ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக போக்குவரத்து அமைச்சு தெரிவிப்பு

பகிஷ்கரிப்பு தொடர்ந்தால் நாளை முதல் இராணுவத்தினரை சேவையில் ஈடுபடுத்த தீர்மானம்

ரயில்வே ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்ந்தாலும் நேற்றும் 12 ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்தது.

கம்பஹா, பொல்கஹவெல, மஹவ உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்து கொழும்பு கோட்டை வரை குறித்த ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டதாக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எல்.பீ. ஜயம்பதி தெரிவித்தார்.

இதனிடையே, சம்பள பிரச்சினை உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து ரயில்வே தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த பணிப்பகிஷ்கரிப்பு பத்தாவது நாளாகவும் தொடர்கின்றது.

ரயில் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ரயில்வே ஊழியர்களின் விடுமுறைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே

02 ஆம் பக்கம் பார்க்க

இடியுடன் மழை பெய்யும்

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலையில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல், தென் மற்றும் கிழக்கு மாகாணங்களில் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, வடமத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களிலும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சில இடங்களில்

02 ஆம் பக்கம் பார்க்க

சுகவீன விடுமுறைக்கு தயாராகும் கிராமசேவகர்கள்

சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் உள்ள அனைத்து கிராம சேவகர்களும் எதிர்வரும் 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் சுகயீன விடுமுறை போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

அதற்கமைய அன்றைய தினங்களில் தத்தமது அலுவலகங்களுக்கு முன்னாளும், நாரஹேன்பிட்டியவில் அமைந்துள்ள பிரதான காரியாலயத்திற்கு முன்பும் ஒன்று கூடி ஆர்பாட்டங்களை நடத்துமாறு கிராம சேவையாளர்களின் தொழிற்சங்க ஒன்றியம் கேட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர் சேவையை தனியொரு சேவையாக

02 ஆம் பக்கம் பார்க்க

கார் விபத்து - இருவர் பலத்த காயம்

க.கிஷாந்தன்

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாமஸ்டன் பிரதேசத்தில் கார் ஒன்று 05.10.2019 அன்று மாலை மண்மேட்டில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

நுவரெலியா பகுதியிலிருந்து அட்டன் பகுதியை நோக்கி செல்லும் போது அட்டன் நுவரெலியா

02 ஆம் பக்கம் பார்க்க

தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு விசேட பாதுகாப்பு

இராஜகிரிய விலுள்ள தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு இன்று (06) காலை முதல் விசேட பாதுகாப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பொலிஸ் விசேட பாதுகாப்பு படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

02 ஆம் பக்கம் பார்க்க

சிறுவர் தினத்தில் மாணவர் தலைமைத்துவம்

மஸ்கெலியா நிருபர்

சர்வதேச சிறுவர் தினத்தில் மாணவர்களுக்கான தலைமைத்துவத்தின் உன்னத சி ன்னத்தை வழங்கி பெருமைப்படுத்தியது தங்ககலை தமிழ் மஹா வித்தியாலயம். தங்ககலை தமிழ் மகா வித்தியாலயம் வரலாற்றில் முதல் தடவையாக மாணவ தலை வன் கழுத்துபட்டி அணிவித்தலும், மாணவத்தலைவன் அடையாள இலட்சினை வழங்கும் நிகழ்வுகளை மிக சிறப்பான முறையில் ஒழுங்கமைப்பு செய்திருந்தது.

மீண்டும்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

அமைப்பாளர்களின் கூட்டத்தின் போது கருத்துக் கேட்டறியப்பட்டுள்ளது.

அதன் போது ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அவர்கள் இந்தத் தேர்த லில் போட்டியிடக் கூடிய சந்தர்ப்பம் இருப்பதாகவும் அவரை இதில் போட் டியிடுமாறு தொகுதி அமைப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாக கட்சி யின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கருத் துத் தெரிவித்துள்ளார்.

பணி...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

பொது முகாமையாளர் டிலந்த பெர் னாண்டோ தெரிவித்தார்.

இதனால் அனைவரும் உடனடியாக சேவைக்குத் திரும்ப வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

கார்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

பிரதான வீதியில் பாமஸ்டன் பிரதே சத்தில் பிரதான வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த காரில் இருவர் பயணித்துள்ள தாகவும், இருவரும் பலத்த காயங்களுக் குள்ளாகி லிந்துலை பிரதேச வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா போக்குவ ரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

சுகவீன...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

அறிவிக்குமாறும், தமக்கு 5000 ரூபா சலுகை கொடுப்பனவை பெற் றுத் தருவதற்கான அமைச்சரவை பத்தி ரத்தை அமைச்சரவையில் சமர்பிப்பதாக தெரிவித்து விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் அதனை சமர்பிக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்த போராட்டம் இடம்பெறவுள்ளது.

நாட்டில் அசாதாரண காலநிலை ஏற் பட்டால் அலுவலகத்தை பராமரிப்பதற்கு போதுமான வசதிகள் வழங்கப்படாமை, மற்றும் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமை உள்ளிட்ட பல விடயங்களின் அடிப்ப டையில் இந்த போராட்டம் நடத்தப்படு வதாக அந்த தொழிற்சங்கத்தின் தலைவர் கே.டி.சுமித் கொடிகார கூறியுள்ளார்.

இந்த மாதம் 9 ஆம் மற்றும் 10 திக திலில் இந்த போராட்டத்தை நடத்த திட்டமிட்டிருந்த போதிலும் எல்பிட்டிய பிரதேச தேர்தல் நடைபெறுவதை கருத் திற்கொண்டு எதிர்வரும் 16 ஆம் மற் றும் 17 ஆம் திகதிகளில் தமது போராட் டத்தை முன்னேடுக்க போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேர்தல்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இம்முறை ஜனாதிபதி தேர்தலுக் கான வேட்புமனுக்கள் நாளை ஏற் றுக்கொள்ளப்படவுள்ள நிலையில், அன்றைய தினம் ஆணைக்குழுவை அண்மித்த பகுதிகளிலும் விசேட பாது காப்பு வழங்குவதற்கான நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். பாதுகாப்பு நடவடிக்கைகளில் 1200-க்கும் அதிக பொலிஸ் உத்தியோகத் தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ள தாகவும் இந்த எண்ணிக்கைக்கு சமமாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதா கவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசே கர மேலும் தெரிவித்தார். இதனிடையே, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அமைந் துள்ள சரண மாவத்தையில் அனுமதி யின்றி உட்பிரவேசிக்க தடை விதிக்கப் பட்டுள்ளது. அதேபோன்று, அனுமதி பெற்று உட்பிரவேசிக்கும் வாகனங்கள் மற்றும் நபர்கள் சோதனைக்குட்படுத்தப் படவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்ச ளர் தெரிவித்தார்.

விதிகளை...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

அதிகரிக்கும் பட்சத்தில், அது வாக் களிப்பு நிலையங்களுக்கு பொறுப்பா கவுள்ள அதிகாரிகள், கிராம உத்தியோ கத்தர்கள், வாக்களிப்பு நிலையங்களை அமைப்பவர்கள், வாக்கெண்ணும் அதி காரிகளுக்கு சிரமமாக இருக்கும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

வேட்பாளர் ஒருவர் வாக்களிப்பு நிலையத்திற்கு இரண்டு பிரதிநிதிகளை அனுப்ப முடியும். 25 வேட்பாளர்கள் என்றால், 50 பேர். வாக்கெண்ணும் நிலையங்களில் 5 நபர்கள் வீதம் 25 வேட்பாளர்களுக்கு 125 பேர் காணப்படு வார்கள். வாக்குகளை எண்ணுவதற்கு 75 அதிகாரிகளை ஈடுபடுத்த வேண்டும். 200 பேர் இருக்கக்கூடிய மண்டபமொன்றைத் தேட வேண்டும். கொழும்பிலுள்ள பாட சாலைகளில் பெரிய வகுப்புக்களை நாம் தற்போது தேடுகின்றோம்.

நியமனங்கள் தொடர்பில் எமது அனு மதியைப் பெற வேண்டும் என அனை வருக்கும் கூறியுள்ளோம். அத்துடன், அரச நிகழ்வுகள் உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகள் தொடர்பிலும் எம்மிடம் கேட்க வேண்டும் என கூறியுள்ளோம். அரசியல் அல்லாத நிகழ்வுகளை எவ்வ கையிலும் அரசியலை ஊக்குவிக்காத வகையில் முன்னெடுக்க வேண்டும் என்பதை முக்கியமாகக் கூறியுள்ளோம். அரசியல்வாதிகளின் பங்கேற்பை முடிந் தளவு குறைக்க வேண்டும். முக்கியமான நிகழ்வொன்றில் அரசியல்வாதி ஒருவர் பங்கேற்கின்றார் எனின், ஒரு கட்சியிலி ருந்து மாத்திரமின்றி ஏனைய கட்சிகளின துன் அரசியல்வாதிகளை அழைக்கும் சம் பிரதாயம் நாட்டில் இருக்க வேண்டும்.

என மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார்.

கடலரிப்பினால் வாழ்வாதாரத்தை இழக்கும் அம்பாறை கரையோர மீனவர்கள்

பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையிலான கடற்கரை பிரதேசங்கள் கட லரிப்பினால் மிகவும் பாதிக் கப்பட்டு கடற்றொழிலை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டிடிருப்பதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நிந்தவூர் கடற்கரை பிரதே சம் வெகுவாக பாதிக் கப்பட்டுவருகின்றமை யினால் கடற்கரையை அண்டிய பகுதியில் உள்ள மீனவ வாடிகள் மற்றும் கடற்க்கரை பகு தியில் உள்ள தென்னை மரங்கள் கடல் அரிப் பினால் கடலினுள் இழுத்து செல்லப்பட் டுள்ளன.

இவ் கடலரிப்பு குறித்து அரசியல் வாதிகளுக்கும் துறைச ார் அதிகாரிகளுக்கும் பல தடவை மக்கள் தெரிய படுத்தியும் பாராமுகமாக இருப் பதாக அப் பகுதி வாழ் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்க ளின் சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பான அறிக்கை ஒரு மாதத்திற்குள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள தாக தேசிய சம்பள மற்றும் பதவியணிகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பரிந்துரை கள் அடங்கிய அறிக்கை கோரப்பட்டதை யடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.ரனுக்கே தெரிவித்தார்.

இதனிடையே, பல்கலைக்கழக கல் விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பா டுகளை நீக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தேசிய சம்பள மற்றும் பதவியணிகள் ஆணைக்குழுவிற்கு அறி வுறுத்தியுள்ளதாக உயர்கல்வி அமைச்சி ன் செயலாளர் M.M.P.K.மாயாதுன்னே கூறினார்.

சம்பள முரண்பாடுகளை நீக்கக் கோரி பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களி னால் முன்னெடுக்கப்பட்டுள்ள பணிப்ப கிஷ்கரிப்பு 26 ஆவது நாளாக தொடர்கின் றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிளிநொச்சி பிறிமியன் லீங் போட்டிகள் ஆரம்பமாகின

கிளிநொச்சி பிறிமியன் லீங் போட் டிகள் ஆரம்பமாகின. கிளிநொச்சியில் பதிவு செய்யப்பட்ட கழகங்களிற்கிடை யிலான கடினப்பந்து போட்டிகள் நான்கு வருடமாக இடம்பெற்று வருகின்றது. 2019ம் ஆண்டுக்கான குறித்த போட்டி கள் இன்று கிளிநொச்சி மத்திய மகாவித் தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. குறித்த போட்டியில் 12 கழக அணிகள் மோதுகின்றன. இன்று குறித்த போட் டியின் ஆரம்ப நிகழ்வும், கிண்ண அறி முகமும் இடம்பெற்றது. குறித்த போட் டியின் ஆரம்ப நிகழ்வில் தென்னிந்திய இயக்குனர் இயக்குனர் இமயம் பாரதி ராஜா, இயக்குனர் அமீர், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சி.சிறிதரன், கரைச்சி பிரதேச சபை தவிச ாளர், லண்டன் கற்பக விநாயகர் ஆலயம் மற்றம் அகிலன் பவுண்டேசன் ஸ்தாபகர் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பான்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட் டதை தொடர்ந்து மங்கள விளக்கேற் றப்பட்டது.. தொடர்ந்து தேசிய கொடி ஏற்றப்பட்டதுடன், துடுப்பாட்ட சம் மேளன கொடிகள் மற்றம் கழகங்களின் கொடிகளும் ஏற்றப்பட்டன. தொடர்ந்து வருகை தந்த விருந்தினர்களால் குறித்த புாட்டிக்கான கிண்ணம் அறிமுகப்படுத் தப்பட்டது. தொடர்ந்து வருகை தந்த விருந்தினர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இடியுடன்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

75 தொடக்கம் 100 மில்லிமீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் சில இடங்க ளில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்பு களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

பலாலி...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

சர்வதேச விமான நிலையமாக குறுகிய காலத்துக்குள் தரமுயர்த்தப்பட்டுள்ளது, அரசாங்கத்தின் முக்கியமானதொரு வெற் றியாகும் என்று அமைச்சர் அர்ஜுன ரண துங்க தெரிவித்தார்.

இந்த மாதத்தில் இருந்து பிராந்திய விமான சேவைகளை ஆரம்பிக்கும் வகை யில், பலாலி விமான நிலையம் 22 பில்லி யன் ரூபா செலவில் இலங்கையின் மூன் றாவது சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

ஜூலை 5ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகள், வரும் 10ஆம் திக திக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையத்தை ஒக்ரோபர் 17ஆம் திகதி சிறி லங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திறந்து வைத்து விமான சேவைகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

முதற் கட்டமாக இங்கிருந்து, தென் னிந்திய நகரங்களுக்கு விமான சேவை களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக பலாலி விமான நிலைய ஓடுபாதை 950 மீற்றருக்கு அபிவி ருத்தி செய்யப்பட்டு, சி-100 வகையைச் சேர்ந்த 72 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய விமானங்கள் இயக்கப்படவுள்ளன.

இரண்டாவது கட்டமாக ஓடுபாதை யின் நீளம் 1.5 கி.மீற்றராக விரிவாக்கப் பட்ட பின்னர், 1800 கி.மீ தொலைவு வரை பயணிக்கக் கூடிய விமானங்களை தரையிறக்கக் கூடியதாக இருக்கும்.

மூன்றாவது கட்டமாக, இந்த விமான நிலையத்தின் ஓடுபாதை 2.3 கி.மீற்றராக விரிவாக்கப்பட்டு, ஏ-320 -321 விமானங் களைத் தரையிக்கக் கூடிய வசதிகள் செய் யப்படும்.

அதேவேளை, யாழ்ப்பாணம் சர்வ தேச விமான நிலையத்துடன், கொழும்பு இரத்மலானை விமான நிலையம், மட்டக் களப்பு விமான நிலையம் ஆகியனவும் சர்வதேச விமான நிலையமாக அறிவிக்கப் பட்டுள்ளன.

இதையடுத்து, சிறிலங்காவின் சர்வ தேச விமான நிலையங்களின் எண் ணிக்கை 5 ஆக அதிகரிக்கவுள்ளன என வும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தமது பகுதிகளில் விமா னங்கள் பறக்கவுள்ள நாளை எதிர்பார்த்து காத்திருந்த யாழ்ப்பாண மக்களுக்கு இது ஒரு மகிழ்ச்சி தரும் செய்தியாக இருக்கு மென்பது குறிப்பிடத்தக்கது.

ஒருமித்த...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இவ்வாறு அவர்கள் தமிழ் தேசிய கூட் டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர் களிடம் சென்று பேசினார்கள். பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு அவர் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. அடுத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத் துடன் கொழும்பில் பேசியிருக்கின்றார் கள், அவர் தேர்தலை பகிஷ்கரிக்க வேண் டும் என்ற கருத்தைத்தான் கொடுத்ததாகக் கேள்விப்படுகின்றேன்.

அதன் பின்னர் என்னிடம் வந்து கேட் டார்கள். நான் அரசியல் கட்சிகளோடு சம்பந்தப்படாத தமிழ் பொதுவேட்பாள ரை, இன்னும் இரண்டு, மூன்று நாட்கள் இருந்தாலும் கூட அந்தகாலகட்டத்திற் குள் அவரை தேர்தலில் போட்டியிடவைக் கலாம் என்றும், ஆனால் ஒரு கேள்விக் கொத்தொன்றை அவருக்கூடாகவோ அல்லது நாங்களாகவோ முக்கியமான அர சியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அனுப் பி, எங்கள் சார்பான பல விடயங்களை அவர்கள் எங்கள் சார்பாக அவர்களால் ஏற் றுக் கொள்ள முடியுமா? அவற்றிற்கு அவர் களின் சம்மதத்தைத் தெரிவிக்க முடியுமா என்று கேட்க வேண்டுமென்றும், அப்ப டிக் கேட்கும் பொழுது அவர்கள் அதற்கு ச ாதகமாகப் பதிலளித்தால், எவர் எவ்வெற் றுக்கு சாதகமாகப் பதிலளிக்கின்றார் என்ற முறையிலே நாங்கள் வேண்டுமெனில் எங்களுடைய வேட்பாளரை தேர்தலில் நிற்காமல் பின்வாங்க முடியுமென்றும் தமிழ் மக்களை அவ்வாறான வேட்பாள ருக்கு வாக்களிக்கக் கூறலாமென்றும் நான் கூறியிருந்தேன்.

இரண்டாவதாக, அவர்கள் நாங்கள் கேட்கும் எந்தக் கோரிக்கைக்கும் அல்லது நல்ல விதத்திலே பதிலளிக்க முடியாது என்ற நிலையேற்பட்டால், தொடர்ந்து எங் களின் தமிழ் வேட்பாளர் போட்டியிலே பங்குபற்றுவாரென்றும் அப்பொழுது தமிழ் மக்கள் எல்லோரையும் அவருக்கு வாக்களிக்குமாறும், நாங்கள் வேண்டிக் கொள்ள வேண்டுமென்றும் நான் என்னு டைய கருத்தைத் தெரிவித்தேன்.

அந்தக் கருத்தை அவர்கள் எடுத்துச் சென்றிருக்கின்றார்கள். ஈபிஆர்எல் மற் றும் ரெலோ தலைவர்களையும் சந்தித்த தாகவும் கேள்விப்படுகின்றேன். ஆகவே இது சம்பந்தமாக அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். எவ்வா றான தீர்மானத்திற்கு அவர்கள் வருவார் கள் என்று தெரியாது.

அதேநேரம் இன்றைய தினம் (நேற்று) பல்கலைக்கழக மாணவர்களும் கட்சித் தலைவர்களுடன் சந்தித்து இதேகேள்விக ளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே முற்றுமுழுதாக கட்சிகள் யாவை யும் ஒன்று சேர்ந்து ஒருநிலைப்பாட்டில் வருவதை பற்றி நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். இது எங்களின் வருங்காலத்திற்கு நல்ல சகுனம் என்று தான் கூறவேண்டும். இந்த விடயத்தை முன்வைத்து எங்களுள் ஓரளவிற்கு ஒற்று மையை ஒருமித்த கருத்தை சிலவிடயங்க ளிலாவது ஒருமித்த கருத்துக்களை நாங்கள் இந்த சந்தர்ப்பத்தை வைத்து ஆராய்ந்து பார்க்கலாமென்றும் நம்புகின்றேன்.

தமிழ் பொதுவேட்பாளர் சாத்தியமா என்று பார்ப்பது பிழையென்றுதான் என் னுடைய கருத்து. ஏனென்றால் இதுவரை காலமும் இவ்வாறான விடயங்கள் சாத் தியமாகது என்ற முறையிலே யார்யாரோ வந்தார்கள் போனார்கள் எங்களுக்கு எது வுமே கிடைக்கவில்லை. இப்பொழுது வெள்ளம் முழங்காலுக்கு மேல் வந்து விட்டது. நாங்கள் இவ்வாறு இருந்தோமா னால், எங்களின் வருங்காலம் முற்றுமுழு துமாக இல்லாமல் போய்விடும். இன்னும் பத்துப் பதினைந்து வருடங்களுக்குள் ஆயிரம் புத்த விகாரைகள் வட,கிழக்கு மாகாணங்களில் கட்டப்படும். சிங்கள மக்கள் சகல திணைக்களங்களுக்கும் நியமிக்கப்படுவார்கள். சகல விதத்திலும் கடிதங்கள் எல்லாம் சிங்களத்திலே மத்திய அரசாங்கத்திலிருந்து அனுப்பப்படும்.

ஆகவே நாங்கள் ஏதாவது ஒரு முக்கி யமான வழிமுறையை பின்பற்ற வேண் டிய அவசியத்தில் இருக்கின்றோம். சும்மா எங்களுக்குள் தேர்தலில் விட யங்களில் பிரச்சனைப் பட்டுக் கொண் டிருப்பதிலும் பார்க்க இவ்வாறான ஒரு ஒருமித்த கருத்தை முன்வைத்து அதனை நடைமுறைப்படுத்த நாங்கள் எத்தனிப் போம். அதில் வெற்றிபெறுவோமோ இல்லையோ என்பது இறைவனுடைய கையில் என்பது எனது தாழ்மையான கருத்து என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

மேற்கொண்ட பொழுது தாண்டிக்குளம் வரை தாக்குதலை நடத்திக் கொண்டு வந் திருந்தார்கள். இதனால் வவுனியா ஜோப் இராணுவ முகாமிலிருந்த கனகர ஆயுதங் களை அனுராதபுர இராணுவ முகாமிற்கு மாற்ற வேண்டிய நிலைமை இலங்கை இராணுவத்திற்கு ஏற்பட்டது. இத்தகைய நிலைமை விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது என்ற மனோநிலையை அப்போ தைய சிங்களத் தலைவர்களுக்கு ஏற்படுத் தியது.

கொழும்பு கட்டுநாயக்க விமான நிலைய தாக்குதலின் ஊடாக உல்லாச பயணிகளின் வருகை மட்டுமன்றி பொருளாதாரமும் சிதைந்து ஆட்சியை எப்படி நடத்துவது, நிதியமைச்சின் கஜா னாவை எப்படிப் பேணிப் பாதுகாப்பது என்பதறியாமல் வியந்தது மட்டுமன்றி அமைச்சுகளின் செயலாளர்கள் மட்டுமன்றி அமைச்சர்களின் இணைப்பாளர்கள் வரை குளிரூட்டப்பட்ட அறையில் வாழ்க்கை வேண்டாமென்ற நிலைமைக்கு அரச நிதி நிலைமை மோசமாக இருந்தது.

ஆனால், தற்பொழுது தமிழர்களின் நிலைமை பலமிழந்த நிலையிலே காணப் படுகின்றது. ஜனநாயக ரீதியாக செயற் படுகின்ற தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை முற்றுமுழுதாக சிதைந்து காணப்படுகின் றது. இந்த நிலைமையை பிரதான ஜனா திபதி வேட்பாளர்கள் நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றார்கள். இந்நிலைமையில் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை எவ்வாறு பயன்படுத்தப் போகின்றார்கள் என்பது பிரதானமானதாகும்.

நேற்று மாலை மார்ச் 12 இயக்கம் ஜனா திபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் களுக்கான ஒரேமடையில் உறுதிமொழி பெறும் நிகழ்ச்சியான மக்கள் மேடை எனும் நிகழ்ச்சியினை ஒழுங்கு செய்திருந்தார் கள். ஆனால் இந்நிகழ்ச்சியில் சஜித் பிரேம தாசவும், அனுர குமார திஸாநாயக்கவும் மாத்திரமே கலந்து கொண்டிருந்தார்கள். கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் கலந்து கொள்ளாமை நிகழ்ச்சி ஏற்பாட்டளர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும்.

இங்கு பிரதானமாக சஜித் பிரேம தாச கருத்துத் தெரிவிக்கையில், ஊழல் இலஞ்சத்திற்கு எதிராக தான் செயற்பட இருப்பதாகவம் நிலையான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆகவே மறைமுகமாக தற்போதைய ஆட்சியில் ஊழல் இலஞ்சம் இருப்பதை அவர் ஏற்றுக் கொள்வதுபோல தெரிகின் றது. குறிப்பாக மத்திய வங்கியின் பாரிய ஊழல் மோசடியைப் பற்றி அவர் குறிப்பிட வில்லை.

அத்துடன் இரண்டு வேட்பாளர்களுமே இலங்கையின் படுகடன் பற்றியும் வரவு -செலவுத் திட்ட துண்டுவிழும் தொகை பற்றியும் பேசியதோடு இராணுவத்தின ருக்கான சலுகை அதிகரிப்புத் தொடர்பா கவும் அவர்களின் வசதிகள் தொடர்பாகவும் பேசியதிலிருந்து இராணுவத்தை திருப்திப் படுத்துவதன் ஊடாக இலங்கைத் தலை வர்கள் அனைவரும் கரிசனையோடு இருப் பதை அவதானிக்கலாம்.

ஆனால் ஆயிரக்கணக்கில் காணாமல் போனோர்கள் பற்றியோ, கைகால் கண் களை இழந்து வாழ்வாதாரம் இன்றி தவிக் கும் போரினால் பாதிக்கப்பட்டோர்கள் பற்றியோ குறிப்பிடாமை தமிழ் மக்கள் மத் தியில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியி ருக்கின்றது.

அண்மையில் நடந்த முல்லைத்தீவு நீ ராவியடி பிள்ளையார் ஆலய வீதியில் இடம் பெற்ற பௌத்த துறவியின் உடல் தகன சம்பவம் தமிழ் மக்களால் கொண்டு வரப் பட்ட இந்த அரசின் நடவடிக்கையாகத்தான் கருதுத் தோன்றுகிறது. காரணம் பொலிஸா ரின் முழுப்பாதுகாப்புடன் அரங்கேறியிருக் கிறது.

இதற்கு அரசுடன் இணைந்த தமிழ் கூட் டமைப்புக்கு வெள்ளம் வரும்முன் அணை கட்ட வேண்டும் என்ற எண்ணம் ஏன் ஏற்ப டவில்லை.

அரசுடன் இணைந்திருந்தும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் போட்டியில் பங்குகொண்டளவிற்கு தமிழ் மக்களின் பிரச்சினையில் பங்கு கொள்ளவில்லை.

தற்பொழுது வந்துள்ள ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கோ அல் லது கோத்தாவுக்கோ வாக்களிப்பதன் ஊடாக தமிழர்களுக்கு என்ன கிடைக்கப் போகின்றது என்பதனை சஜித்துடன் இருப் பவர்களோ கோத்தாவுடன் இருப்பவர்களோ மக்களுக்கு சொல்வதற்கு தயாரரில்லை. காரணம் இவர்கள் ஒன்றும் கேட்கவில்லை. இவர்கள் கேட்பதெல்லாம் தங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் வேண்டிய சலுகைகள்.

சம்பதன் பெற்றுக் கொண்ட பங்களாக்க ளும் அடைக்கலநாதன் பெற்றுக் கொண்ட பங்களாக்களும் இதற்கு சான்றாகின்றன.

அதேநேரம் 15 வருடங்களுக்கு மேலாக அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா மீண்டும் தனக்கு அமைச்சர் பதவியைக் கேட்டிருக்கிறாரே தவிர தமிழ் மக்கள் சார் பாக கோத்தாவிடம் பேசியிருந்தால் தமிழ் மக்களுக்கு என்னதருவார் என்று கூறியிருக் கலாம். பகிஷ்கரிக்க கூறும் மற்றக் குழுவி னர் பகிஷ்கரிப்பதன் ஊடாக கோத்தாவை வெல்ல வைத்து என்னத்தை சாதிக்கப் போகின்றார்கள் என்பதை தமிழ் மக்களுக் குச் சொல்லவில்லை.

தமிழ் மக்கள் இந்த முறையும் சிந்திக்கா விட்டால் தமிழ் மக்களுக்கு கடந்த ஐந்து வருடங்களுக்கு ஏமாற்றத்தையே கொடுக் கும்.

DLB யின் பராமரிப்பு ஆறாவது வைத்திய முகாம் பதுளையில்

அபிவிருத்தி லொத்தர் சபையின் DLB யின் பராமரிப்பு என்ற தொனிப் பொருளின் கீழ் விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்களின் நலன்களை கருத்திற் கொண்டு நடாத்தப்படும் வைத்திய முகாம் தொடரின் மற்றொரு அங்கம் கடந்த நாட்களில் இடம்பெற்றது.

பதுளை மாவட்டத்தின் விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்களுக்காக நடாத்தப்பட்ட இவ் வைத்திய முகாம், நடைபெறுகின்ற வைத்திய முகாம் தொடரின் ஆறாவதாகக் காணப்படுகின்றது.

கடந்த செப்டம்பர் மாதம் 27 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட இவ் வைத்திய முகாமிற்கு 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதோடு, அதன்போது வைத்திய பரிசோதனை மற்றும் வைத்திய ஆலோசனைகளுடன் மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டதோடு, அதில் கண் பரிசோதனைகளும் குறைபாடுடையவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கி வைக்கும் நிகழ்வு அங்கு இடம்பெற்றது.

இவ் வைத்திய முகாமிற்கு கண்டி மாவட்டத்தின் விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டார்கள். அத்தோடு இவ்வாறான சமூகப் பணியினை மேற்கொள்வது தொடர்பாக அவர்களிடமிருந்து தொடர்ச்சியாக பாராட்டுக்களும் நன்றிகளும் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு குவிந்த வண்ணமிருக்கின்றது.

இவ் வைத்திய முகாமிற்கு அபிவிருத்தி லொத்தர் சபைத் தலைவர் திரு. சேன சூரியப் பெரும அவர்கள், பொது முகாமையாளர் அநுர ஜயரத்ன அவர்கள், உதவிப் பொது முகாமையாளர் (விற்பனை) சுனில் ஜயரத்ன அவர்கள், பதுள்ளை மாவட்ட வலய முகாமையாளர் உபாலி சமன்குமார அவர்கள் உள்ளடங்லான பணியாட்தொகுதியினர்கள் அந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்கள்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நியமனங்களை தருமாறு கோரிக்கை

என்.ஹரன்

இலங்கை அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 29/2019 இலக்கத்தின் பிரகாரம் தற்காலிக, அமைய (நாளாந்த), பதில் கடமை , ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான நிரந்த நியைனங்கள் வழங்குதல் எனும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாணங்களின் பிரதம செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டசபை தலைவர்களா போன்றோருக்கு கடந்த 18ம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எனினும் இன்றுவரை தமக்கு எவ்வித நேர்முக தேர்வுக்கான அழைப்புக்கடிதங்களும் கிடைக்கப்பெறாத நிலையில் தமது தொழில் தொடர்பில் உயரதிகாரிகள் கரிசனை கொள்ளவேண்டும்

மேலும் கடந்த பல வருடங்களாக சுகாதார அமைச்சின் கீழ் ஒப்பந்த அடிப்படியில் GFATM திட்டத்தின் கீழ் கடமை புரிந்த உத்தியோகத்தர்களுக்கான நியமனங்களை விரைவுபடுத்தி தருமாறு சுகாதார அமைச்சிடம் உத்தியோகத்தர்கள் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

எனினும் இது தொடர்பில் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை வெளியாவதற்கு முன்னர் கடந்த வருடம் முதல் இவர்கள் தமது தொழில்வாய்ப்பு தொடர்பில் ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் சுகாதார இராஜாங்க அமைச்சர் போன்றோரினை சந்தித்து தமது நிலைப்பாடு தொடர்பில் தெளிவுபடுத்தி போராடி வருவதாகவும் தற்போது தமக்கான வாய்ப்பினை இந்த நல்லாட்சி அரசாங்கம் ஏற்படுத்தி தந்திருப்பதினை இட்டு நன்றி தெரிவிப்பதுடன் தமக்கான நியமனங்களை வருகின்ற ஜனாதிபதி தேர்தலுக்கு முதல் வழங்கி வைக்குமாறும் கோரிக்கை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் கையாளக்கூடிய சட்டம் என்றால் அது தகவல் அறியும் சட்டமாகும்

பைஷல் இஸ்மாயில், றாசிக் நபாயிஸ்

அரச கருமங்களை மீறும்போது முறைப்பாடுகளை விசாரணைக்கு உட்படுத்துவதில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமைகள், அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது பிரஜை ஒருவருக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆட்சி மற்றும் ஏனைய தகவல்களைக் கோரி நாம் பெற்றுக்கொள்ளக்கூடியது எமது உரிமையாகும். அதை நாம் அறிந்திருத்தல் அவசியம் என மாற்றுக்கொள்கைக்கான சிரேஷ்ட ஆய்வாளர் லயன் குருகே தெரிவித்தார்.

சிலோன் மீடியா போரம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் தகவல் உரிமைச் சட்டம் செயல மர்வு சனிக்கிழமை (05) சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் சிலோன் மீடியா போரத்தின் தலைவர் றியாத் ஏ.மஜீத் தலைமையில் இடம் பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 1000 இற்கு மேற்பட்ட சட்டங்கள் இருக்கின்றது. ஆனால் பொதுமக்கள் கையாளக்கூடிய சட்டமாக இருப்பது என்றால் அது தகவல் அறியும் சட்டமாகும்.

உயிர்வாழ்வதற்கு தேவையான பாரிய அல்லது சிறிய பொதுவான அல்லது முக்கியமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் எமக்கு அது குறித்து தகவல் தேவைப்படுகின்றது என்றும் எமது உணவு நல்லதா? கெட்டதா என நாம் அறிந்திருத்தல் வேண்டும்.

நீங்கள் வாழும் பிரதேசம் அல்லது பணியாற்றும் சூழலுக்கு அமைய எதேனும் பொதுவான பிரச்சினைகள் ஏற்படும்போது அது குறித்து தகவல்களை பகிரங்கமாக குறித்த அதிகார சபையிடம் பொற்றுக்கொள்ள முடியும்.

அதற்கென தகவல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் ஊடாக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். குறித்த அலுவலர் நாம் கோருகின்ற தகவல்களை அல்லது கோரிக்கைகளை நிராகரித்தால் அவருக்கெதிராக மேன்முறையீடு ஒன்றை சமர்ப்பிக்க முடியும் என்பதையும் நாம் நன்கறிந்திருக்க வேண்டும்.

இதில் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள், சமூக ஊடக செயற்பட்டாளர்கள், வர்த்தக பிரதிநிதிகள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட 75 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

செயலமர்வில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்டபட்ட பிரிவில் மீராநகர் கிராம சேவகர் பிரிவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மினாநகர் கிராம விட்டுத் திட்டம் பிரதேச செயலாளர் ஜே .ஸ்ரீபதி தலைமையில்நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மக்களிடம் உத்தியோக பூர்வமாக மாவட்ட அரசாங்க அதிபர் என் ஏ புஸ்பகுமார திறந்து வைத்து மக்களின் பாவணைக்காக திறந்து வைத்ததையும் இவ் நிகழ்வில் அரச அதிகாரிகள் ஊர் பிரமுவர்கள் கலந்து சிறப்பித்ததையும் படத்தில் காணலாம்

படம்: முள்ளிப்பொத்தானை நிருபர்

நவராத்திரி விழாவை முன்னிட்டு கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள காரைதீவு இராம கிருஷ்ண மிசன் பெண்கள் பாடசாலை மாணவர்களின் எற்பாட்டில் வாணி விழா ஊர்வலம் பாடசாலை அதிபர் திரு.எஸ்.மணிமாறன் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது.

படம்: காரைதீவு நிருபர்

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் குறித்த பிரச்சினைக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும்

ஏ.எஸ்.எம்.ஜாவித்

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் குறித்த பிரச்சினைக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

ராஜகிரியவிலுள்ள அவரது அலுவலகத்தில் இது குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அண்மையில் இடம்பெற்றது. இங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள்இ பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இது சம்பந்தமாக அடிக்கடி கலந்துரையாடி வந்துள்ளேன்.

இந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் பாராளுமன்றத்தில் விவாக, விவாகரத்து திருத்தச் சட்டம் சமர்ப்பித்தோம். ஆனால், இன்று வரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

இந்த விவகாரம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு நான் அவசரக் கடிதமொன்றும் அனுப்பி வைத்தேன். அந்தக் கடிதத்தில்இ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு குறித்த பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரியிருக்கின்றேன். அதற்கான சிறந்த பதிலையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

உண்மையில்இ இந்த விவகாரம் இழுபறியான நிலையில் இருந்து வருவதையிட்டு நான் கவலையடைகின்றேன். நாங்கள் அவசரமாக ஒரு முடிவுக்கு வரவேண்டும். பெண்கள் அமைப்புக்களும் இதற்கு ஒரு தீர்க்கமான முடிவு தரவேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்தி வருகின்றனர். எனவேஇ முஸ்லிம் பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதும் அவர்களுக்குரிய கௌரவங்களை வழங்குவதும் ஒரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் என்றவகையில் எனங்கும் ஒரு பங்கிருக்கின்றது.

முஸ்லிம் பெண்களின் இருப்புஇ இன்று மிகவும் இக்கட்டான நிலையில் இருந்து வருகின்றது. உடனடியாக இதற்கு மிக தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும்.

இங்கு ஊடகவியலாளர்கள் முன்னாள் அமைச்சரிடம் அரசியல் நிலவரங்கள் குறித்தும் கேள்வி எழுப்பினர். இதன்போது அவர் கூறியதாவது:-

லங்கா சுதந்திரக்கட்சி இந்த நாட்டில் மிக பிரபல்யமான கட்சியாகும். இந்தக் கட்சி தொடர்பில் எவருக்கும் விமர்சனம் செய்ய முடியாது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இந்தக் கட்சியாருக்கு தனது ஆதரவை வழங்கும் என்று கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது. அண்மையில் ஜனாதிபதி குருநாகலில் நடைபெற்ற நிகழ்வில் எதனைக் கூறினாரோ, அதனையே நானும் இன்று கூறுகின்றேன். எமக்கு எவருடனும் எதிர்ப்போ, குரோதங்களோ கிடையாது. அனைவரையும் அனுசரித்துச் செல்ல வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். ஜனாதிபதியினது கருத்தும் இதுவாகும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவை வழங்குவதா இல்லையா என்பது குறித்த இறுதித் தீர்மானத்தை எதிர்வரும் 5ம் திகதி வழங்க வுள்ளோம் என்றார்.

பிறந்த 20 நாள் குழந்தையை 40ஆயிரத்திற்கு விற்ற கொடுமை

மஸ்கெலியா நிருபர்

கடந்த ஒருவருட காலமாக இரகசியமான முறையில் சிசுக்கள் விற்பனை செய்து வருவதாக கண்டி சிறுவர் பாதுகாப்பு காவல் துறை பெண்கள் பிரிவில் உயர் அதிகாரிகளுக்கு தகவல் கிட்டியுள்ளது.

பிறந்த 20 நாட்கள் சிசுவை 40 ஆயிரம் ரூபாவிற்கு வாங்கியதாக கண்டி கட்டுகலை பகுதியில் உள்ள 47 வயது டைய பெண்னொருவர் சிசுவுடன் கைது செய்யப்பட்டுள்ளார். கண்டி பொலிஸ் சிறுவர் பாதுகாப்பு பிரிவின் உயர் அதிகாரி ஆயிசா பண்டார அவர்களில் சந்தேக நபரை விசாரித்த போது இந்த குழந்தையை 40 ஆயிரம் ரூபாவிற்கு பெற்றதாகவும் சந்தேக நபருக்கு குழந்தைகள் இல்லாததால் அவர் பணம் கொடுத்து குழந்தையை வாங்கியதாகவும் இது விடயமாக கண்டி மாவட்ட காவல் துறை உயர் அதிகாரி டி.எம்.எஸ். தென்னகோண் மற்றும் வலய பொறுப்பதிகாரி சஞ்சீவ இவர்களின் பணிப்புரையில் சம்பவம் சம்பந்தமாக விசாரனை மேற்கொண்ட போது சந்தேக நபர் சிசுவை கம்பளை வைத்தியாலை பகுதியில் நபரொருவரிடம் மேற்படி பணம் கொடுத்து பெற்றதாக கூறியுள்ளனர்.

தடுப்பு காவலில் வைத்து விசாரனை மேற்கொண்டு வருவதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

அட்டனில் புடவை கடை தீயினால் எரிந்து நாசம்

க.கிஷாந்தன்

அட்டன் நகரத்தில் டன்பார் வீதியில் அமைந்துள்ள புடவை விற்பனை நிலையமொன்றில் ஏற்பட்ட தீயினால் அந்த புடவைக்கடை பகுதியளவில் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த சம்பவம் 03.10.2019 அன்று இரவு 10 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இத் தீவிபத்தில் ஒருவர் காயங்களுக்குள்ளாகி டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், விற்பனை நிலையத்தில் இருந்த புடவைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். தீ பரவுவதை கேள்வியுற்று ஸ்தலத்திற்கு விரைந்த அட்டன் நகர சபை தீயணைப்புப் படையினர் மற்றும் பொலிஸார், பிரதேசவாசிகள் இணைந்து தீயினை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

மருத்துவ முகாம் நடைபெற்றது

மஸ்கெலியா நிருபர், செ.தி.பெருமாள்

மஸ்கெலியா கிராப்பு தோட்டத்தில் 4ம் திகதி காலை 10 மணி முதல் 4 மணி வரையில் முதியோர்களுக்கான மருத்துவ முகாம் ஒன்றினை அவ்வட்டாரத்தின் பிரதேச சபை உறுப்பினரான ராஜ் அசோக்குமார் ஏற்பாடு செய்தார். இம் மருத்துவ முகாமிற்கு மஸ்கெலியா வைத்திய அதிகாரி எம். எ(இ)ச். ரிசாட் கலந்து கொண்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தார்.

சுமார் அவ்வட்டாரத்திலுள்ள 100க்கு மேற்பட்டோர் வைத்திய முகாமில் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். இந்நிகழ்வுக்கு முன்னாள் மத்திய மாகாண உறுப்பினர் எஸ். உதய குமார் தேவையான மருந்து பொருட்களை வழங்கியதுடன் புரவுன்லோ தோட்ட வைத்தியர் எம். கோபால் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உடல் நலக்குறைவால் இறந்த 344 வயது ஆமை

தங்களுக்கு சொந்தமான 344 வயதான ஆமை ஒன்று உடல்நல குறைவின் காரணமாக இறந்துவிட்டதாக நைஜீரியாவில் உள்ள அரச குடும்பம் ஒன்று அறிவித்துள்ளது.

வயதானது என்னும் அர்த்தம் கொண்ட அலக்பா என்றழைக்கப்பட்ட அந்த ஆமை நைஜீரியாவின் ஓயோ மாநிலத்தில் ஓக்போமோசோ அரண்மனையில் வாழ்ந்து வந்தது.

மாதத்திற்கு இரண்டு முறை மட்டுமே உண்ணும் இந்த பெண் ஆமையை பார்த்துக்கொள்வதற்கு மட்டுமே இரண்டு தனிப்பட்ட வேலையாட்கள் இருந்தனர்.

இந்த ஆமைக்கு நோய்களை குணப்படுத்தும் ஆற்றல் இருப்பதாக கருதப்பட்டதால் அந்நாட்டின் தொலைத்தூர பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து பார் வையிடுவது வழக்கம்.

1770 முதல் 1797 வரை ஆட்சி செய்த ராஜ்ஜியத்தின் மூன்றாவது தலைவரான இசான் ஒகுமாய்டே என்பவரால் இந்த ஊர்வன அரண்மனைக்கு கொண்டு வரப்பட்டது.

ஒகுமாய்டேவின் காலத்தில் அரண்மனைக்கு கொண்டுவரப்படும் போதே அலக்பாவுக்கு 100 வயதிற்கு மேல் இருந்திருக்கும் என்று கருதப்படுகிறது.

அதே சூழ்நிலையில், இந்த ஆமையின் வயது விவகாரத்தில் வல்லுநர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

பிரிஸ்டல் மிருகக்காட்சிசாலையின் ஊர்வனவற்றின் கண்காணிப்பாளரான டிம் ஸ்கெல்டன், அலக்பா இவ்வளவு நீண்ட காலம் வாழ்ந்திருப்பது சாத்தியமற்றது என்றார்.

டிரம்ப் பதவி நீக்க விசாரணை: ஆவேசமடைந்து இழிவான வார்த்தையை பயன்படுத்திய அமெரிக்க அதிபர்

இந்த வாரம் தன் மீதான பதவி நீக்க விசாரணையில் ஆஜராக சட்ட ரீதியிலான அழைப்பாணையை வெள்ளை மாளிகைக்கு அனுப்பப்போவதாக தெரிவித்துள்ள ஜனநாயக கட்சியினர் மீது ஆவேசமடைந்து கடும் வார்த்தைகளை அமெரிக்க அதிபர் டிரம்ப் பயன்படுத்தியுள்ளார்.

தனது அரசியல் எதிராளியை வீழ்த்த வெளி நாட்டு நபர் ஒருவரிடம் உதவி கோரியதாக ஜனநாயக கட்சியினரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பை பதவிநீக்கம் செய்வது குறித்த விசாரணை தொடர்பாக விசாரித்து வரும் குழுக்கள் இது குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளன.

இழிவான வார்த்தை ஒன்றை பயன்படுத்தி, ஜனநாயக கட்சி தலைவர்களை நேர்மையற்றவர்கள் என்று விமர்சித்த டிரம்ப், அவர்கள் மீது தேசத்துரோக குற்றச்சாட்டு சுமத்தினார்.

ஆனால் இந்த விசாரணை நடப்பதை நியாயப்படுத்தியுள்ள ஜனநாயக கட்சியினர், நிச்சயம் ஒரு நேர்மையான நடைமுறையில் விசாரணை நடைபெறும் என்று நம்பிக்கை வெளிப்படுத்தியிருந்தனர்.

த்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் பேசிய டிரம்ப், இந்த குற்றச்சாட்டில் டிரம்ப் பழிவாங்கியதாக கூறப்பட்ட முன்னாள் அமெரிக்கத் துணை அதிபரான ஜோ பிடென் மற்றும் அவரது மகன் ஹண்டர் ஆகிய இருவரையும் முழுமையான ஊழல் பேர்வழிகள் என்று குறிப்பிட்டார்.

மேலும் இந்த விசாரணை தொடர்பான புலானய்வு குழு தலைவர் ஆடம் ஸ்கிஃப் மீது தனது கோபத்தை டிரம்ப் வெளிப்படுத்தியிருந்தார்.

மிகவும் கீழ்தரமானவர் என்றும், அவமதிப்பு நடத்தையால் தனது பதவியை விட்டு விலக வேண்டும் என்றும் ஸ்கிஃப் குறித்து டிரம்ப் கூறினார்.

எந்த ஆதாரமும் இல்லாமல் புகார் அளித்தவரின் வார்த்தைகளை ஏற்று ஸ்கிஃப் இந்த

விசாரணை அறிக்கையை தயாரித்ததாக டிரம்ப் குற்றம்சாட்டினார்.

அமெரிக்காவின் உளவுப்பிரிவைச் சேர்ந்த ஒருவர், அதிபர் டிரம்ப் உக்ரேன் நாட்டை சேர்ந்த அரசியல் தலைவரான ஜெலன்ஸ்கியுடன் தொலைப்பேசி உரையாடல் மேற்கொண்டதாக முறையாகப் புகார் வைத்ததைத் தொடர்ந்து இந்த சர்ச்சை எழுந்தது.

இவர்கள் இருவரும் தொலைப்பேசியில் என்ன பேசினார்கள் என்பது கூறப்படவில்லை, ஆனால் அதிபர் டிரம்ப் முன்னாள் அமெரிக்கத் துணை அதிபரான ஜோ பிடென் மற்றும் அவரது மகன் ஹண்டர் ஆகிய இருவர் மீதும் உக்ரேன் விசாரணை செய்ய வேண்டும் என்றும் , அவ்வாறு செய்யவில்லையெனில் அந்நாட்டுக்கு அழைத்து வரும் ராணுவ உதவியை அமெரிக்கா நிறுத்திவிடும் என்று அச்சுறுத்தியதாகவும் ஜனநாயக கட்சியின் குற்றம்சாட்டுகின்றனர்.

தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள அதிபர் டிரம்ப், ஜனநாயக கட்சியினரின் முயற்சிகளை குப்பை என்று வர்ணித்துள்ளார்.

அதிபர் டிரம்பை பதவிநீக்கம் செய்யும் தீர்மானத்துக்கு ஜனநாயக கட்சியினர் மத்தியில் பலத்த ஆதரவு இருந்தாலும், குடியரசு கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள செனட் சபையில் இது தொடர்பாக ஒப்புதல் கிடைக்காது என்றே கூறப்படுகிறது.

கடந்த ஜூலையில் ஆப்ரிக்க - அமெரிக்க வழக்கறிஞர் குறித்து டிரம்ப் பதிவிட்ட ட்வீட் ஒன்று, ஒருவரை இன ரீதியிலாக தாக்குவது என அமெரிக்காவின் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி குற்றம்சாட்டினார்.

ஜனநாயக கட்சியின் பிரதிநிதியான எலிஜா க்யூமிங்க்ஸ் மற்றும் அவரின் மேரிலாண்ட் மாவட்டம் குறித்து டிரம்ப் டிவிட்டரில் பதிவிட்டார்.

கறுப்பின மக்களை அதிகமாக கொண்ட க்யூமிங்க்ஸின் பால்டிமோர் மாவட்டத்தை எலிகள் மிகுந்த அழுக்கான ஒரு பகுதி என டிரம்ப் கூறினார்.

அமெரிக்க - மெக்ஸிகோ எல்லையில் குடியேறிகளை நடத்தும் விதம் குறித்து விமர்சித்திருந்த க்யூமிங்க்ஸ் பிறரை 'கொடுமைப்படுத்துபவர்' என்றும் டிரம்ப் தெரிவித்திருந்தார்.

அமெரிக்க மக்கள் கணக்கெடுப்புப்படி, 50 சதவீதத்துக்கும் அதிகமான கறுப்பின மக்கள் வாழும் மாவட்டம் குறித்து டிரம்ப் பேசியது இன ரீதியிலான தாக்குதல் என சபாநாயகர் நான்சி பெலோசி குற்றம் சுமத்தினார்.

கருப்பின வாலிபரை கொன்ற பெண் பொலீசுக்கு மன்னிப்பு: அமெரிக்க கோர்ட்டில் நடந்த நெகிழ்ச்சியான காட்சி

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் டல்லாஸ் நகரில் போலீஸ் அதிகாரியாக பணியாற்றி வந்த பெண் ஆம்பர் கைகெர் (வயது 31). வெள்ளை இனத்தை சேர்ந்த இவர் கடந்த ஆண்டு செப்டம்பர் 6-ந் தேதி, தனது வீட்டின் அருகே வசித்து வந்த கருப்பின வாலிபரான போதம் ஜீன் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார்.

இந்த சம்பவம் நிறவெறி தாக்குதல் என கூறி அந்நாட்டில் போராட்டம் வெடித்தது. ஆனால் அதனை மறுத்த ஆம்பர் கைகெர், போதம் ஜீன் தனது வீட்டில் கொள்ளையில் ஈடுபட முயன்றதாக தவறாக நினைத்து, தற்காப்புக்காக அவரை சுட்டதாக கூறினார்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை டல்லாஸ் நகர கோர்ட்டில் நடந்து வந்தது. இதில் ஆம்பர் கைகெர் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடம் இன்றி நிரூபிக்கப்பட்டன. ஆம்பர் கைகெருக்கு குறைந்தது 28 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்க வேண்டும் என போதம் ஜீன் குடும்பத்தினர் வலியுறுத்தினர்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்த வழக்கில் நீதிபதி டாம்மி கெம்ப் தனது இறுதி தீர்ப்பினை வழங்கினார். அப்போது அவர், ஆம்பர் கைகெருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

இதற்கிடையே போதம் ஜீன் குடும்பம் சார்பில் கோர்ட்டுக்கு வந்திருந்த அவரது இளைய சகோதரர், நீதிபதி தீர்ப்பை வாசித்த பிறகு நேராக ஆம்பர் கைகெரிடம் சென்று அவரை ஆரத்தழுவி நான் உங்களை மன்னித்துவிட்டேன். கடவுளும் உங்களை மன்னிப்பார். மற்றவர்களை போலவே உங்களை நான் நேசிக்கிறேன் என கூறி அவருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

கோர்ட்டில் நடந்த இந்த நெகிழ்ச்சி சம்பவம், அங்கிருந்த அனைவரையும் கண்கலங்க வைத்தது. ஆம்பர் கைகெரும் கண்ணீர் சிந்தியபடியே கோர்ட்டில் இருந்து வெளியேறினார்

போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தியதால் சுட்டுக்கொல்லப்பட்ட வரிக்குதிரை

சர்க்கஸ் குழுவிலிருந்து தப்பித்து நகர சாலைகளில் சுதந்திரமாக சுற்றிய வரிக்குதிரையால் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகள் ஏற்பட்டதால் அதை காவல்துறையினரே சுட்டுக்கொன்ற சம்பவம் ஜெர்மனியில் நடந்தேறியுள்ளது.

ஜெர்மனியின் வடக்குப்பகுதியிலுள்ள ரோஸ்டோக் நகரத்தின் முக்கிய சாலைகளில் சுற்றித் திரிந்த வரிக்குதிரையால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன், கார்கள் சேதமாகி விபத்துகளும் ஏற்பட்டதால் அதை சுட்டுக்கொன்றதாக அந்நகர காவல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதே போன்று, அதே சர்க்கஸிலிருந்து தப்பியோடிய மற்றொரு வரிக்குதிரை உயிருடன் பிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரிக்குதிரை மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு குறித்த மேலதிக விவரங்கள் எதுவும் பொது வெளியில் வெளியிடப்படவில்லை.

இந்த இரண்டு வரிக்குதிரைகளும் சர்கஸிலிருந்து எப்படி தப்பித்தன என்பதில் தெளிவில்லை.

சாலையின் நேரெதிர் திசையில் வரிக்குதிரை சென்றதால் உடனடியாக நிறுத்தப்பட்ட வாகனங்களுக்கு பின்னால் வந்த வாகனங்கள் ஒன்றன் பின்னொன்று மோதி விபத்துக்குள்ளாயின. இதன் காரணமாக தேசிய நெடுஞ்சாலையை தற்காலிகமாக மூடும் நிலை ஏற்பட்டது என்று காவல்துறை தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

வரிக்குதிரையை உயிருடன் பிடிக்காமல் சுட்டுக்கொன்ற காவல் துறைக்கு எதிராக சமூக ஊடகங்களில் பலர் தங்களது கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்காவில் சிங்கத்தின் முன் நடனமாடிய பெண்

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் பிரான்க்ஸ் உயிரியல் பூங்கா உள்ளது. இந்த பூங்காவுக்கு வந்த இளம்பெண் ஒருவர் பாதுகாப்பு வேலியை தாண்டி சிங்கம் இருக்கும் இடத்துக்குள் நுழைந்தார்.

அப்போது அங்கிருந்த ஆண் சிங்கம் அந்த பெண்ணை நோக்கி நெருங்கி வந்தது.

ஆனால், அந்த பெண் சிறிதளவும் பயம் இல்லாமல் சிங்கத்தை நோக்கி கையசைத்து, நடனமாடினார்.

அந்த சிங்கமும் பெண்ணின் அசைவுகளை வேடிக்கை பார்த்தபடி அவரை எதுவும் செய்யாமல் அப்படியே நின்று கொண்டிருந்தது. இந்த காட்சிகளை அந்த பெண்ணுடன் வந்திருந்த நபர் செல்போனில் வீடியோ எடுத்தார்.

வீடியோவை அந்த பெண் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டார். தற்போது அந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இதற்கிடையில் அபாயத்தை உணராமல் சிங்கம் இருக்கும் இடத்துக்குள் அத்துமீறி நுழைந்ததாக அந்த இளம்பெண் மீது பூங்கா நிர்வாகத்தினர் போலீசில் புகார் செய்துள்ளனர்.

இந்த அத்துமீறல் குறித்து விசாரணை நடத்தி வரும் நியூயார்க் போலீசார் இப்போது வரை எந்தவித கைது நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ஹாங்காங்கில் விடிய விடிய போராட்டம்

ஹாங்காங்கில் கிரிமினல் வழக்குகளில் சிக்குபவர்களை சீனாவுக்கு கொண்டு சென்று விசாரணை செய்யும் விதமாக கைதிகள் பரிமாற்ற சட்டத்தில் திருத்தம் கொண்டுவர ஹாங்காங் நிர்வாகம் முடிவு செய்தது.

இந்த சட்ட திருத்தத்திற்கு கடும் எதிர்ப்பு எழுந்ததையடுத்து மசோதா கைவிடப்பட்டது. ஆனாலும், ஹாங்காங்கின் தன்னாட்சியில் சீனா தலையிடுவதை நிறுத்துதல், சுதந்திரமாக தேர்தல், போராட்டக்காரர்களை தாக்கிய போலீசார் மீது விசாரணை மேற்கொள்ளுதல், கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள போராட்டக்காரர்களை நிபந்தனையின்றி உடனடியாக விடுதலை செய்தல் போன்ற கோரிக்கைகளுடன் நான்கு மாதங்களுக்கும் மேலாக போராட்டம் நடைபெற்று வருகிறது. போராட்டக்காரர்கள் தங்கள் அடையாளங்களை போலீசார் கண்டுபிடித்துவிடக்கூடாது என்பதற்காக முகங்களில் முகமூடி அணிந்துகொண்டு போராடி வருகின்றனர்.

இதற்கிடையில், ஹாங்காங்கில் முகமூடி அணிந்து போராடுவதை தடைவிதிக்கும் வகையில் அவசர சட்டதை நகர தலைமை நிர்வாகி கேரி லாம் அமல்படுத்தினார்.

இளவரசி மேகன் ஊடகங்களால் குறிவைக்கப்படுகிறார்

இங்கிலாந்தில் பிரபலமான மெயில் ஆன் சண்டே என்ற பத்திரிகை இளவரசி மேகன் அவரது தந்தைக்கு எழுதிய தனிப்பட்ட கடிதத்தை அவரின் அனுமதியில்லாமல் வெளியிட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக மெயில் ஆன் சண்டே நிறுவனத்தின் மீது

இளவரசி மேகன் வழக்கு தொடர்ந்துள்ளார்.

தனிப்பட்ட தகவல்களை தவறாகப் பயன்படுத்தி, அவதூறு பரப்பும் செயலில் ஈடுபட்டதாக அந்த பத்திரிகை நிறுவனம் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. ஆனால் மெயில் ஆன் சண்டே இந்த குற்றச்சாட்டை மறுக்கிறது. கடிதத்தை வெளியிட்டதில் எந்த தவறும் புரியவில்லை என்று விளக்கம் அளித்துள்ள அந்த நிறுவனம், கோர்ட்டில் இந்த வழக்கை தற்காத்து வாதாட தயாராக இருப்பதாக கூறியுள்ளது.

இதற்கிடையில் இளவரசர் ஹாரி, தனியார் பத்திரிகையின் இந்த செயல் எனது மனைவிக்கு எதிரான ஈவுஇரக்கமற்ற நடவடிக்கை என கூறி கண் டனம் தெரிவித்துள்ளார். மேலும் ஊடகங்களின் பெரும் தொல்லையினாலேயே தனது தாயாரும், இளவரசியுமான டயானா பாதிக்கப்பட்டதாகவும், அதே போன்று வரலாறு மீண்டும் திரும்பிவிடுமோ என்பதே தனது மிகப்பெரிய அச்சம் என்றும் அவர் கூறினார்.

இதுபற்றி அவர் கூறுகையில், அப்போது எனது தாயாரை இழந்தேன். இப்போது அதே சக்திகளால் எனது மனைவி பாதிக்கப்படுவதை கண்கூடாக பார்க்கிறேன் என வருத்தத்துடன் கூறினார்.

இளவரசி டயானா வாழ்ந்த காலத்தில், அவரை புகைப்படம் எடுக்க புகைப்பட கலைஞர்கள் அவரை பின்தொடர்ந்தது அவருக்கு பெரும் தொந்தரவாக அமைந்தது. 1997-ம் ஆண்டு ஆகஸ்டு 31-ந்தேதி பிரான்ஸ் தலைநகர் பாரிசில் இளவரசி டயானா தனது காதலர் டோடி பயத்துடன் காரில் சென்று கொண்டிருந்தபோது, புகைப்பட கலைஞர்கள் அவரது காரை விரட்டி சென்றதால் விபத்துக்குள்ளாகி டயானா உயிரிழந்தது நினைவு கூரத்தக்கது.

காதல் மனைவியாக வாய்த்தவர் சகோதரியா? மரபணு பரிசோதனையால் அதிர்ந்த இளைஞன்

பிரிட்டனைச் சேர்ந்த 24 வயது இளைஞர் ஒருவர், தனது பெயர் உள்ளிட்ட விவரங்களை தெரிவிக்காமல் ரெட்டிட் என்ற சமூக வலைத்தளத்தில் ஒரு பதிவை வெளியிட்டார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

எனக்கும் என் கர்ப்பிணி மனைவிக்கும் ஒருவரே தந்தை என்பதை அறிந்தோம். அதை உறுதி செய்ய இருவரும் தனித்தனியாக மரபணு பரிசோதனை செய்தோம். அதில் என் மனைவி எனது சகோதரி என்பது தெரியவந்துள்ளது. 8 ஆண்டுகளாக காதலித்து வந்த நாங்கள் இருவரும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் திருமணம் செய்து கொண்டோம். அடுத்த ஆண்டு மார்ச் மாதம் எங்கள் முதல் குழந்தையை எதிர்பார்க்கிறோம்.

என் அம்மாவும் என் மனைவியின் அம்மாவும் எங்களின் தந்தை பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. அவரும் எங்களுடன் இல்லாததால் தெரியவில்லை. இந்த பிரச்சனையால் பிறக்க போகும் குழந்தைக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா? உங்கள் ஆலோசனை தேவை.

இதை தெரிந்துகொண்ட பிறகும் எங்கள் உணர்வில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. எங்களை யாரும் பிரிக்க விடமாட்டேன். அவளும் அதை விரும்பமாட்டாள். எங்களுக்கு என்ன நடக்கும்? நாங்கள் என்ன செய்ய வேண்டும்? இதை அப்படியே புதைத்துவிடவா?

இவ்வாறு அவர் கூறியிருந்தார்.

இதற்கு ஏராளமானோர் பதில் அளித்து அவருக்கு ஆலோசனைகளை வழங்கினர். அதில் ஒருவர், நீங்கள் இன்னும் அன்பு செலுத்துகிறீர்கள் என்றால், ஒன்றாக இருங்கள். குழந்தையை உங்களுடன் வைத்துக்கொள்ள விரும்பினால் வைத்துக் கொள்ளுங்கள். இதுபற்றி யாரிடமும் சொல்லாதீர்கள் என்று தெரிவித்துள்ளார்.

மற்றொருவர் உங்கள் காதல் வலுவாக இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் இதைத் தேர்வு செய்யவில்லை, எனவே மறந்துவிடுங்கள். மகிழ்ச்சியாக இருங்கள் என கூறியுள்ளார்.

சீனாவில் முன்னாள் மேயர் வீட்டில் 13 டன் தங்கம் பறிமுதல்

சீனாவின் ஹைனன் மாகாண தலைநகரான ஹாய்காவ் நகரின் மேயராக 2008 முதல் 2010 வரை இருந்தவர் ஜாங் குய். மேலும் இவர் கம்யூனிஸ்டு கட்சி குழுவின் ஹாய்காவ் நகர செயலாளராகவும் இருந்து வந்தார். ஜாங் குய், தனது பதவி காலத்தில் பல்வேறு ஊழல்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இது குறித்து அந்நாட்டின் ஊழல் தடுப்பு பிரிவு விசாரித்து வருகிறது.

இந்த நிலையில், அண்மையில் ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகள் ஹாய்காவ் நகரில் உள்ள ஜாங் குய் வீட்டில் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது வீட்டின் கீழ் தளத்தில் உள்ள ஒரு ரகசிய அறையில் குவியல் குவியலாக தங்க பிஸ்கட்டுகள், நகைகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் அமெரிக்க டாலர்கள், சீன யுவான் மற்றும் ஐரோப்பிய யூரோ என கட்டுகட்டாக பணமும் சிக்கியது.

மொத்தமாக 300 மில்லியன் பவுண்ட் மதிப்புடைய 13 டன் எடை கொண்ட தங்க பிஸ்கட்டுகள் மற்றும் நகைகளையும், 30 பில்லியன் பவுண்ட் பணத்தையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

ஜாங் குய் மீதான பொருளாதார குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..
ஞாயிற்றுக்கிழமை 06.10.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

ஜனாதிபதித் தேர்தலின் மிக முக்கியமான வாரம்

நடைபெற இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டதன் பின்னர் வேட்பாளர் தெரிவிற்கு கட்சிகள் தயாராகின. இதில் பொதுஜன பெரமுன கோத்தபாய ராஜபக்ஷ அவர்களை தமது வேட்பாளர் என எதுவித பிரச்சினைகளுமின்றி அறிவித்தது. அவ்வாறே ஜே.வி.பி.யும் தமது வேட்பாளரை எதுவித சங்கடமுமில்லாமல் அறிவித்தது. ஆனால் ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஒரு பாரிய புயலே வீசியது என்று கூறுவதா அல்லது வீசவைக்கப்பட்டதா என்ற சந்தேகம் நிலவுகின்றது. அரசியல் சாணக்கியம் மிக்க பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தமது கட்சிக்காக பாரிய இலவச பிரச்சாரம் ஒன்றை வேட்பாளர் தெரிவின் ஊடாக மேற்கொண்டார். இதனால் முழு இலங்கைத் தீவுமே ஐக்கிய தேசிய கட்சி பக்கம் திரும்பியிருந்தது. ஆனால் தான் போட்டியிடுவதில்லை என்ற நிலைப்பாட்டினை பிரதமர் ரணில் அவர்கள் முன்னமே எடுத்திருக்க வாய்ப்புள்ளது. அவ்வாறிருந்தும் அவர் முடிவினை இறுதிவரை இழுத்தடித்ததற்கான காரணம் ஒரு திகில் திரைப்பட முடிவினைப்போல தமது முடிவை அமையவைத்து, வாக்காளர்களை கவர்வது அவர் உத்தியாக இருந்திருக்கின்றது. எது எவ்வாறிருந்தபோதும், திரு.ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இளம் தலைவரான சஜித் பிரேமதாச அவர்களை வேட்பாளராக அறிவித்தமை மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும். இதனால் கட்சியின் இளம் உறுப்பினர்கள் உற்சாகமடைந்து, கட்சியின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் பெரும் துணையாக இருப்பார்கள் என்பது முக்கியமானதாகும். இந்நிலைமை வீழ்ந்திருக்கும் கட்சியின் செல்வாக்கை மேலும் பலப்படுத்தும். பிரதமர் ரணில் காட்டிய வழியினை, பிரதான மாக தமிழ் கட்சித் தலைவர்களும் பின்பற்றுவது மிகவும் சிறந்ததாகும். இலங்கையில் தமிழ் கட்சிகளில் இருக்கக்கூடிய தலைவர்கள் தாங்களும் பிரதமரின் வழியை பின்பற்றி இளம் தமிழ்த் தலைவர்களிடம் பொறுப்பை ஒப்படைப்பது சிறந்ததாகும். இங்கு பொறுப்பை ஒப்படைப்பதென்பது முதிய தலைவர்கள் கட்சியை விட்டு ஒதுங்க வேண்டும் என்பது பொருளல்ல. மாறாக, அத்தகைய இளம் தலைவர்களுக்கு ஆலோசகர்களாக இருந்து வழிநடத்துவது சாலச்சிறந்ததாகும். பிரதமர், சஜித்திற்கு விட்டுக் கொடுத்தாலும் எதிர்காலத்தில் ஜனாதிபதியாக சஜித் தெரிவு செய்யப்பட்டால், தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஏற்படுத்திய முட்டுக் கட்டைகளை சஜித்திற்கும் பிரதமர் ஏற்படுத்துவார் என்று ஒரு கருத்து நிலவுகின்றது. ஆனால், அவர் அவ்வாறில்லாமல் சஜித்துடன் ஒத்துழைப்பாராக இருந்தால் மிகவும் சிறந்ததாக இருக்கும். பொதுஜன பெரமுனவைப் பொறுத்தமட்டில் கடந்த வெள்ளிக் கிழமை மாலை திகில் நிமிடங்களாகும். அதனால் உள்ளூர், மற்றும் சர்வதேச ஊடகங்கள் அந்த மூன்று உயர்நீதிமன்ற நீதிபதிகளின் தீர்ப்பை எதிர் பார்த்து நீதிமன்ற வளாகத்தை சூழ்ந்திருந்தன. ஐக்கிய தேசிய கட்சி ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் எத்தகைய இலவச விளம்பரத்தைப் பெற்றுக் கொண்டதோ, நீதிமன்ற வழக்கின் ஊடாக பொதுஜன பெரமுன வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்களும் தேடிக்கொண்டார். அதாவது முழு இலங்கை நாடுமே தீர்ப்பில் என்ன வரப்போகின்றது என்று எதிர்பார்த்திருந்தது. இதனால் ஊடகங்கள், பொதுமக்களின் எதிர்பார்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து தீர்ப்பின் செய்தியை மக்களுக்குத் தெரியப்படுத்தின. ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் இத்தகைய பதற்றமான வேட்பாளர் தெரிவு நிலைமை இடம்பெறவில்லை. எது எவ்வாறிருந்தாலும் தற்பொழுது போட்டியாளர்கள் தயாராகிவிட்டார்கள். இந்த நிலைமையில் வன்முறைகள் அற்ற வகையிலும் சாதாரண பொதுமக்களுக்கும் பொதுச் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்காத வகையிலும் அமைதியான முறையில் தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொண்டு தேர்தலை முகம் கொடுக்க வேண்டியது அனைத்து வேட்பாளர்களினதும் கடமையாகும்.

வீதிப்போராட்டங்களும் விடுதலை பெறா தமிழினமும்

இலங்கையில் தமிழ் இனம், தனது இன விடுதலைக்காக சுமார் எழுபது வருடங்களாக ஒப்பற்ற தியாகங்களைச் செய்து போராடி வருகின்றது. இதனால் போராட்டம் என்பது தமிழ் மக்களின் வாழ்க்கையில் எழுதப்பட்ட விதியாக பரிணமித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு காலம் காலமாக தமிழ் மக்கள் தமது உரிமைக்காக போராடிவருகின்ற நிலவரமே சான்று பகர்கின்றது. அத்துடன் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு பொறுப்பு வாய்ந்த தமிழரசுக் கட்சி இன்று பல்வேறு இழுத்தடிப்புக்களையும் அசமந்தப் போக்குகளையும் கடைப்பிடிப்பதால் இன்று தமிழர்கள் வாழ்வில் எஞ்சப்போவது வெறும் ஏமாற்றமாகவே இருக்கப்போகின்றது. இப் பின்னணியில் தமிழர்களின் விடுதலை காண பல அரசியல் கட்சிகள், விடுதலை அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. விடுதலைப் புலிகளின் நேரடியான பங்குபற்றல் மற்றும் ஒப்புதலுடன் 2001 ஒக்டோபர் 20 ஆம் திகதி பிரசவித்ததே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகும். ஆனால் இன்று அக்கூட்டமைப்பினாலேயே தமிழ் மக்களுக்கு நீதியினைப் பெற்றுக்கொடுக்க முடியாமல் இருப்பதென்பது வேதனைக்குர்ணீய விடயமாகவே உள்ளது.

இந்நிலையில், இலங்கை நாட்டில் நடைபெற்ற மூன்று தசாப்த யுத்தத்தில் வடக்கு, கிழக்குப்பகுதியைச் சேர்ந்த பலர் காணாமால் ஆக்கப்பட்டுள்ளனர். இறுதியுத்தத்தில் சரணடைந்தவர்களும், விசாரணையென்ற பெயரில் இராணுவ முகாம்களுக்குள் அழைக்கப்பட்டவர்களும், தொழிலுக்காக சென்றவர்களும் இதில் அடங்குகின்றனர். இவர்கள் இன்றுவரை உயிரோடு இருக்கின்றனரா? இல்லையா? என்பதே தெரியாதுள்ளது. ஆனாலும் இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிருடன் இருக்கின்றனர் என்ற நினைப்பில் அவர்களது உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வருகைக்காக காத்திருக்கின்றனர். இதற்காக இந்த நாட்டிலே போராட்டங்களையும்; நடாத்தி வருகின்றனர். இதற்கான தீர்வினை அரசுவழங்குவதாக தெரியவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் சரியான தகவல்களைப்பெற்று, விசாரணைகளை மேற்கொண்டு, தேடுதல் செயற்பாடுகளில் ஈடுபட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடித்து உரியதரப்பினரிடம் உறவுகளை வழங்கவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தால் அவர்கள் குறித்த தகவல்களையும், அவர்களது உடலங்கங்கள் எங்கே என்பது தொடர்பிலும் விளக்கங்களை உரிய உறவினர்களுக்கு வழங்க வேண்டும். கணவனை, பிள்ளைகளை, சகோதரங்களை, மனைவியை காணவில்லையென பலநாட்களாக காத்திருக்கும் மக்களுக்காக, ஐ.நா சபையின் கூட்டத்தொடர்களை இலக்குவைத்து, ஏதோ ஒன்றைக்கூறியும், செய்தும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் கரிசனை காட்டுவதாக தம்மை இனங்காட்டி வருகின்றனர் என்ற விமர்சனங்களும் இருந்துகொண்டுதான் இருக்கின்றன.

மைத்திரிபாலசிறிசேன தமிழ்மக்களின் வாக்குப்பலத்தினால் அரியணை ஏற்றப்பட்டதன் பிற்பாடும், இந்த நாட்டிலே நூற்றுக்கணக்கான நாட்களைக்கடந்து, குறிப்பாக ஆட்சிப்பொறுப்பேற்றதில் இருந்து இன்றுவரை ஒவ்வொரு நாட்களும் தமது உறவுகளை கண்டுபிடித்து தம்மிடம் ஒப்படைக்குமாறு கூறி வீதிகளிலே படுத்துறங்கி, நீதிக்காக போராடிக்கொண்டிருக்கின்றனர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பலரின் வாழ்க்கை வீதியிலே கழிந்துகொண்டிருக்கின்றது. மனரீதியாக நாளுக்கு நாள் அழுத்தங்களுக்கு உட்பட்டு முற்றுமுழுதாக பாதிக்கப்பட்ட சமுகமாக மாறியிருக்கின்றனர். தமது உறவுகளின் படங்களை வைத்துக்கொண்டு அவற்றினையே பார்த்துப் பார்த்து, இன்றுவருவார் நாளைவருவார் என்ற ஏக்கங்களுடன் தமது வாழ்க்கையினையும் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். இலங்கை நாட்டிற்கு வருகைதந்து செல்கின்ற ஐநா பிரதிநிதிகளும் இதனைக் கண்ணுற்றும் செல்கின்றனர். அறிக்கைகளையும் முன்வைத்தும் செல்லுகின்றனர். தற்போதைய ஆட்சியாளர்களும் மனதினைநொருக்கடிக்கும் விதத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் வெளிநாடுகளுக்கு சென்றிருப்பர் என்ற பேச்சுகளையும் கூறியிருக்கின்றனர். இதனாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதனையும், அரசின்மீது முழுமையான நம்பிக்கையினையும் இழந்திருக்கின்றனர். இதற்காக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், இதுதொடர்பில் கரிசனைகொள்ள வேண்டும் என்பதனை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்களையும் செய்து வருகின்றனர். குறிப்பாக வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த மாதம் வடக்கில். காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகேட்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு அவகாசம் வழங்கக் கூடாது என வலியுறுத்தியும் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர். அதேபோல வட,கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமாக எந்த நடவடிக்கையும் எடுப்பதாகதெரியவில்லையெனத் தெரிவித்து அமெரிக்காவின் தலையீட்டினைக்கோரி யாழ்ப்பாணத்தில் கையெழுத்துப் போராட்டமொன்றை ஆரம்பித்தனர். காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளை மீட்டுத்தர அமெரிக்கா முன் வரவேண்டும் என வலியுறுத்தி வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதுபோன்று பல போராட்டங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை உள்ளிட்ட கிழக்கு மாகாணங்களிலும், வடக்கு மாகாணங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இவ்வாறான தொடர் போராட்டங்களின் அழுத்தங்களினால்தான், ஆட்சியின் பங்குதாரர்கள் சில முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக ஐநா கூட்டத்தொடரினை இலக்குவைத்தே அவ்வாறான முன்னெடுப்புக்களும் இடம்பெற்று வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலக சட்டமானது கடந்த 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நிறைவேற்றப்பட்ட போதும், அதற்கான பிரதிநிதிகள் ஒருவருடங்களை கடந்தே நியமிக்கப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் அலுவலகத்தின் தலைவராக சாலிய பீரிஸ் நியமிக்கப்பட்டதுடன், ஜயதீபா புன்னிய மூர்த்தி, மேஜர் ஜெனரல் மொஹந்தி ஏ. பீரிஸ், சிரியானி நிமல்கா பெர்னாண்டோ, மிரக் ரஹீம், சோமரிசி கே லியனகே மற்றும் கணபதிபிள்ளை வேந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக 10 அமைச்சர்களைக்கொண்ட அமைச்சரவை உபகுழு ஒன்றை அமைப்பதற்கும் துணை குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான வசதிகளை செய்வதற்காகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தினால் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின் மூலம், பாதிப்பை ஈடுசெய்யக்கூடிய சட்டரீதியிலான பொறுப்புக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை, இவ்வாறான சம்பவம் மீண்டும் இடம்பெறாத வகையில் பார்த்துக்கொள்வதற்கான சட்ட ரீதியிலான மறுசீரமைப்பு மேற்கொள்வது தொடர்பில் தனது சிபாரிசுகளை சமர்ப்பித்துள்ளது. இதேபோன்று பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிதி உதவி வேலைத் திட்டம், கடன் நிவாரண வேலைத் திட்டம், வீடமைப்பு அபிவிருத்தி வேலைத் திட்டம், கல்வி நடவடிக்கைகளுக்கு தேவையான நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத் திட்டம், தொழிற்பயிற்சி, வாழ்க்கை நிலையை மேம்படுத்துதல், தொடர்பான சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த சிபார்சுகளை மதிப்பீடு செய்து பொருத்தமான எதிர்கால நடவடிக்கைகளுக்கான பரிந்துரைப்பதற்காக விஜயதாச ராஜபக்ஸ தலைமையில் கீழ் மேலும் 10 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை துணை குழு ஒன்றை நியமிப்பதற்கும் உப குழுவின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வசதிகளை செய்வதற்காகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதாக காணி அபிவிருத்தி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அமைச்சரவை துணை பேச்சாளருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்திருந்தார்.

இறுதி யுத்தத்தின்போது சரணடைந்தவர்கள், தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான பெயர் விபரங்களையும் எங்கெங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது தொடர்பான விபரங்களையும் வெளியிடுமாறு தேசிய பாதுகாப்பு சபைக்கு உத்தர விடுவேன் என்று காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் கடந்த காலங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதியளித்திருந்தார். அதே போன்று காணாமல் போனவர்களுக்கான சான்றிதழை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். காணாமல் போனவர்கள் தொடர்பாக புதிது புதிதாக ஆணைக்குழுக்களை அமைப்பதன் ஊடாக எந்தப் பலனும் இல்லை. பழைய தகவல்களுக்கு அமைய பரணகம மற்றும் உடலாகம ஆணைக்குழுவின் தகவல்களை பெற்று காணாமல் போனோருக்கான சான்றிதழை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் சபைக்கு இலங்கை சார்பான பிரதிநிதிகளை அனுப்பி, நடைமுறைக்கு சாத்தியப்படும் வகையிலான இரண்டு வருடகால செயற்றிட்டம் ஒன்றை அமைப்பது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும். அதன்மூலம் யுத்த பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஒரு தீர்வை பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க அண்மையில் குறிப்பிட்டிருந்தார். அதேபோன்று காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகத்தின் இரண்டு பிராந்தியக் கிளைகள் மன்னார், மாத்தறை மாவட்டங்களில் திறந்து வைக்கப்பட இருக்கின்றதாகவும், காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகி உள்ள நிலையில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்ததுடன், இது தொடர்பான பிரதான நிகழ்வு அடுத்த மாதம் 9 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நக்கீரர்

காணாமால் ஆக்கப்பட்டோர் தொடர்பான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு ஒருவருடங்களுக்கு பின்பு அதற்கான அங்கத்தவர் தெரிவும், அங்கத்தவர் தெரிவிலிருந்து ஒருவருடத்திற்கு பின்பு கிளைகள் திறப்பும் நடைபெறுகின்றமை அரசின் இழுபறிநிலையையும், அக்கறைக்கொண்டிராத தன்மையையும் வெளிப்படுத்தி நிற்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டி நிற்கின்றனர்.

கோப்புப்படம்

யுத்தம் நிறைவுபெற்று ஒருதசாப்தம் நிறைவுபெறவுள்ள நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விரைவு செயற்பாட்டினை மேற்கொண்டு தேடிதலினை இந்த நாட்டிலே இதுவரை மேற்கொள்ளாமை மிகவும் கவலையளிக்கும் விடயமாகவே உள்ளது. சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட அதே காலப்பகுதியில் அதற்கான அங்கத்தவர்களை தெரிவு செய்து, கிளைகளையும் அமைத்து, தேடுதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, உரியநபர்களுக்கான பதில்களையும் கூறியிருக்க வேண்டிய அரசாங்கம் ஆமைவேகத்தில் செயற்படுவது மிகவும் வேதனைக்குரியதென அரசியல்விமர்சகர்கள் கூறிவருகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அனைத்தும், ஐநா கூட்டத்தொடருக்கு அண்மையிலே இடம்பெற்றிருந்தமையும் கவனத்தில் கொள்ளத்தக்கது. யுத்தத்தினை வெற்றிகொண்டதாக கூறும் அரசாங்கம், இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதென்பது இலகுவானதொன்றே. அவ்வாறிருந்தும், இன்னும் தேடுதல்களை மேற்கொள்ளாமல் இருப்பதும், காலத்தினை நீடித்து செல்வதும் தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக இலங்கை அரசின் மீதான நம்பிக்கையினை குறைத்து கொண்டு செல்வதாகவே இருக்கின்றது.இதனால்தான் சர்வதேசத்திற்கு தொடர்ச்சியாக அழுத்தங்களையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நாட்டிலே மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஆட்சி உருவாக்கப்பட்ட போது, தமிழ் தலைமைகளும், தமிழ்மக்களும் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தனர். இன்று அந்நிலை மாற்றமுற்று, சர்வதேசத்தினையே முழுமையாக நம்பவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர் என்பதே நிதர்சனம்.

தீமூக்கில் 18

சிந்திய இரத்தங்கள்

மட்டக்களப்பு நகரிலிருந்து 15 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கிராமமே புதுக்குடியிருப்பு ஆகும். மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவில் உள்ள புதுக்குடியிருப்பு கிராமம் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளை கொண்டுள்ளது. புதுக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு தெற்கு, புதுக்குடியிருப்பு வடக்கு ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவிலும் 1217 குடும்பங்களை சேர்ந்த 4477 பேர் வசிக்கின்றனர்.

விவசாயம், மீன்பிடி ஆகிய தொழில்களை இம்மக்கள் செய்கின்ற போதிலும் அதிகமானவர்கள் அரச உத்தியோகத்தர்களாகவும் உள்ளனர்.

சைவப்பாரம்பரியம் மிக்கதும் இனமொழிப்பற்று நிறைந்ததுமான இக்கிராமத்தில் தான் 1990ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் திகதி நள்ளிரவு வேளையில் பெண்கள் குழந்தைகள் உட்பட 17 தமிழர்கள் கூரிய ஆயுதங்களினால் வெட்டியும், குத்தியும், துப்பாக்கியால் சுட்டும் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பல கூட்டுப்படுகொலைகள் நடைபெற்றன. செப்டம்பர் 5ஆம் கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமில் 158 தமிழர்களும், செப்டம்பர் 09ஆம் திகதி சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, கொக்குவில், பனிச்சையடி கிராமங்களை சேர்ந்த 184 தமிழர்களும், ஓகஸ்ட் 21ஆம் திகதி சித்தாண்டி முருகன் ஆலய அகதி முகாமில் இருந்த 33 தமிழர்களும் படையினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த அச்சமான சூழல் நிலவிய காலத்திலேயே புதுக்குடியிருப்பு கிராமத்திலும் இப்படுகொலை இடம்பெற்றிருந்தது.

இந்த படுகொலையை ஆயுதம் தரித்த முஸ்லீம்களே செய்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

1990 அம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதி இரவு இராணுவ சீருடை அணிந்த முஸ்லிம் ஊர்காவற்படையினர் புதுக்குடியிருப்பு கிராமத்திற்குள் புகுந்து தங்களது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த தமிழ் மக்களை எழுப்பி தாங்கள் இராணுவத்தினர் 17 பேர் படுகொலை செய்யப்பட்டனர் என அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்படுகொலையில் உயிர் தப்பிய பேரின்பராசா என்பவரை சந்தித்த போது அவர் இச்சம்பவம் பற்றி விபரித்தார்.

கண்களும் கையும் கட்டப்பட்ட நிலையில் கடற்கரைக்கு அண்மையில் இருந்த குளிக்குள் படுகொலை செய்யப்படுவதற்காக காத்திருந்தோம். நான் அன்று தப்பியோட முயற்சிக்காவிட்டால் முஸ்லீம் ஊர்காவல் படையினர் எமது ஊரையே அழித்திருப்பார்கள் என தெரிவித்தார்.

அன்று 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதியாகும் எனக்கு அப்போது 25 வயது மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கிராமம்தான் எனது வசிப்பிடம். அப்போது நான் திருமணம் செய்யவில்லை அம்மா அப்பா மற்றும் சகோதர சகோதரிகளுடன் வசித்து வந்தேன் க.பொ.த உயர் தரம் வரையும் படித்து விட்டு அரச வேலைக்காக காத்துக்கொண்டிருந்த காலம் அது.

வழமைபோல் நான் எனது வீட்டில் (மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதிக்கு அருகில்) இரவு உணவை முடித்துவிட்டு எனது அம்மாவினுடைய அக்காவின் (பெரியம்மா) வீட்டுக்கு (கடற்கரைக்கு அண்மித்த இடம்) இரவு உறக்குவதற்காக சென்றேன் அப்போது நேரம் ஒரு 8.00 மணியிருக்கும் என்றும் ஊரை சுற்றி வளைத்துள்ளதாகவும் விசாரணை செய்ய வேண்டும் எனவும் கூறி பெண்கள் ஆண்கள் முதியவர்கள் உட்பட 45 பேரை கடற்கரை ஓரத்திற்கு அழைத்துச் சென்று கத்தியால் வெட்டி படுகொலை செய்துகொண்டிருக்கும் வேளை இளைஞர் ஒருவர் அவர்களின் பிடியில் இருந்து தப்பியோட அவசர அவசரமாக துப்பாக்கி பிரயோகம் செய்துவிட்டு ஊர்காவற்படையினர் தப்பியோடிவிட்டனர். இதன்போது இவர்களினால்

பின்பு பிபிசி கேட்டுவிட்டு 9.20 உறங்குவதற்காகச் எங்களது கதவை தமிழில் அழைத்தார் திறந்து பார்த்தேன் என்பவர் எனது பெரியப்பாவின் பெயரைச் (கதிரண்ணன்) சொல்லி அழைத்தார் இராணுவத்தினர் சுற்றிவழைத்துள்ளதாகவும் விசாரணை செய்யப் போவதாகவும் பயப்படாமல் எல்லோரும் வரும்படியும் அவர் சொன்னார் அவருக்கருகில் இராணுவ உடை தரித்து ஆயுதங்களுடன் 4 பேர் நின்றார்கள் (அவர்கள் இராணுவ உடை அணிந்த முஸ்லிம் ஊர்காவல் படையினர் என்பதை பின்னர் அறிந்து கொண்டேன்.)

முத்துலிங்கம் என்பவருக்கு மூன்று மொழியும் தெரியும் இதனால் இவரைக் கொண்டே மற்றவர்களை வீடு வீடாகச் சென்று அழைத்தனர்.

அப்போது என்னையும் எனது பெரியம்மா பெரியப்பா மற்றும் எனது சகோதரிகளையும் அழைத்துக்கொண்டு வீதிக்கு வந்தார்கள் அப்போது 40 இற்கு மேற்பட்டோர் வீதியில் வரிசையாக நின்பதைக் கண்டேன் எங்களையும் அவர்களுடன் நிற்கச் சொன்னார்கள்.

அனைவரையும் கடற்கரை நோக்கி அழைத்துச் சென்றார்கள் எனக்கு என்னவோ சந்தேகமாகத்தான் இருந்தது ஏதோ விபரிதம் நடக்கப்போகின்றது என நான் மனதிற்குள் எண்ணிக்கொண்டேன்.

கடற்கரைக்கு அண்மையில் இருந்த ஒரு பெரிய குளிக்குள் எல்லோரையும் அமர வைத்துவிட்டு எனது பெரியப்பாவையும் மூன்று மொழிகளும் தெரிந்த முத்துலிங்கம் என்பவரையும் முதலில் அழைத்துக்கொண்டு கடற்கரைக்கு சென்றார்கள். அப்போது நின்ற ஒரு ஆயுததாரி (இராணுவ உடை அணிந்த முஸ்லிம் ஊர்காவல் படைவீரர்) ஏதோ சிங்களத்தில் சொல்ல அதற்கு முத்துலிங்கம் என்பவர் இப்போது இருவர் இருவராக விசாரணைக்கென்று பெரியவர் அழைக்கின்றார் நாங்கள் முதலில் போகின்றோம் அவர் விசாரிக்கின்றபோது சில நேரம் தடியால் அடிப்பார் இதனால் யாரும் அழுதால் நீங்கள் பயப்படத் தேவையில்லை என சொல்லிவிட்டு போனார்கள்.

ஆனால் திரும்பிவரவில்லை ஆனால் அழுகுரல் கேட்டது பின்பு இன்னும் இருவர் சென்றார்கள் அவர்களும் வரவில்லை அழுகுரல்தான் கேட்கின்றது அப்போது எனக்கு சந்தேகம் உறுதியாகிவிட்டது.

நான் பின்னுக்கு பின்னுக்கு சென்றேன் 10 பேருக்கு மேல் சென்றுவிட்டார்கள் அடுத்ததாக மிகவும் உறுதியான பலமுள்ளவர்கள் இருவர் (நல்லையா மற்றும் கோவிந்தன்) ஆகியோர் சென்றார்கள் அதில் கோவிந்தன் என்பவர் தப்பி ஓடுவதற்கு எத்தனிக்க அவரை துரத்திக்கொண்டு நீண்ட நேரமாக கொல்லுவதற்காக முயற்சிப்பதும் நல்லையா என்பவர் அவர்களுடன் சண்டை போட்டு தப்பிக்க எத்தனிக்கவும் அதிக நேரமாக அடுத்த இருவரை அழைப்பதற்கு அவர்கள் வரவில்லை அப்போது நான் எப்படியாவது ஓட வேண்டும் என முடிவெடுத்தேன்.

ஆனால் பின்பு வந்தவர்கள் பெண்களின் சாறிகளை கிழித்தும் எங்களது சட்டைகளை கழட்டியும் எமது கண்ணையும் இரு கைகளையும் பின்புறமாகக் கட்டிவிட்டு இன்னும் இருவரை அழைத்துச் சென்றார்கள் அடுத்ததாக எனது முறை நானும் எனது மைத்துனர் முறையான ஒருவரும் செல்ல வேண்டும். அப்போது நான் எனது கண்ணை கழட்டினேன் பின்பு கையையும் ஒரு மாதிரி கழட்டிவிட்டு எனக்கு முன்னால் நின்ற ஆயுததாரியை (இராணுவ உடை அணிந்த முஸ்லிம் ஊர்காவல் படையினர்) வேகமாக உதைத்து தள்ளிவிட்டு ஓடினேன். சிறிது நேரத்தில் அடம்பன் கொடியில் தடுக்கி விழுந்தேன் என்னை நோக்கி துப்பாக்கியால் சுட்டார்கள். நான் விழுந்ததால் எனக்கு படவில்லை. என்னுடன் நின்ற எனது மைத்துனரும் மற்ற திசையில் ஓடினார்.

பின்பு நான் ஒரு மணிநேரமாக திசை தெரியாமல் ஓடித்திரிந்து ஊருக்குள் வந்து எனது வீட்டை அடைந்தேன். நான் ஓடியதால் பயமடைந்த அந்த ஊர்காவல் படையினர் பலரை அவசர அவசரமாக துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் வெட்டியும் விட்டு ஓடிவிட்டார்கள் இவர்களின் இந்த வெறிச் செயலினால் 17 பேர் படுகொலை செய்யப்பட்டும் 10 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

நான் தப்பிக்காமல் இருந்திருந்தால் அழைத்துச் செல்லப்பட்ட 45 பேரும் முதற்கட்டமாக படுகொலை செய்யப்பட்டு அடுத்த கட்டமாக இன்னும் ஊருக்குள் வந்து அடுத்தடுத்த கட்டங்களாக படுகொலை செய்திருப்பார்கள் அந்த முஸ்லிம் ஊர்காவல் படையினர்.

அதன் பின் அதிகாலைவேளையில் அங்கு வந்த இராணுவத்தினர் காயமடைந்தவர்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்து சென்றனர்.

அன்று நடந்தேறிய அந்த கொடுரமான படுகொலைச் சம்பவத்தினை நினைத்தால் இப்போதும் எனது நெஞ்சு காய்கின்றதென கூறினார் குறித்த படுகொலையில் இருந்து உயிர் தப்பிய பேரின்பராசா.

இந்த படுகொலைச் சம்பவம் இடம்பெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு இடம்பெற்ற காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலையின் எதிரொலியாகத்தான் இந்த புதுக்குடியிருப்பு படுகொலை அப்போது நோக்கப்பட்டது.

இதில் படுகொலை செய்யப்பட்ட 12 வயதுடைய ஒரு சிறுவனை இந்த இராணுவ உடை அணிந்த முஸ்லிம் ஊர்காவல் படைவீரர்கள் சிறிய சிறிய துண்டாக அரிந்து படுகொலை செய்திருந்தார்கள்.

இந்தச் சிறுவன் தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து வீரச்சாவடைந்த தனது அண்ணனின் எட்டாவது நாளுக்கு தனது வீட்டில் பொங்கல் படைத்துவிட்டு அந்தப் பொங்கலை அவரின் உறவினருக்கு கொடுப்பதற்காக வீதியில் வந்தபோது இந்தக் கொலைகாரர்களின் பிடியில் சிக்கி இருந்தார். அப்போது அவர் தெரிவித்த தகவலின் அடிப்படையில்தான் இவ்வாறு ஈவு இரக்கமின்றி துண்டு துண்டாக வெட்டி படுகொலை செய்யப்பபட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சம்பவத்தில் திரு.சி.கதிர்காமபோடி, திருமதி க. செல்லம்மா, செல்வி க. கமலேஸ்வரி, திரு. க. இந்திரன், திருமதி செ.சிவசோதி, திரு. பா. நல்லையா, திருமதி கு.கண்ணகை, திரு. சு. முத்துலிங்கம், திருமதி க. மகேஸ்வரி, செல்வி மு. தருமவதி, திரு. ஆ.கதிர்காமபோடி, திரு. வே. புலேந்திரன், செல்வி வே. லோகவதி, செல்வன் அ.வரதராசா, திருமதி த. அழகம்மா, செல்வன் சா. உதயகுமார், செல்வன் சா. சிவகுமார் ஆகியோர் இச்சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் 8பேர் பெண்கள். 3சிறுவர்கள், திருமணமாகாத 3 இளம்பெண்களும் அடங்குவர்.

ஒரே குடும்பத்தை சேர்ந்த கணவன், மனைவி, பிள்ளைகள் என படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இவர்களின் நினைவாக புதுக்குடியிருப்பு கடற்கரை பகுதியில் 12 அடி உயரத்தில் நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி இந்நினைவுத்தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

புதுக்குடியிருப்பு கிராமத்தை பொறுத்தவரை இச்சம்பவம் மாறமுடியாத ரணமாக இம்மக்கள் மத்தியில் இருந்து வருகிறது.

தொடரும்

உரிமை

மறுக்கப்பட்டும் மறக்கப்பட்டும்

கோப்புப்படம்

வாழும் சிறுபான்மையினம்

முனையூரான்

10 வருடங்களுக்கு ஒருமுறை, ஏதோ ஒரு வகையில் இடம்பெறுகின்ற வன்முறைகளினால் சமூகங்கள் பாதிக்கப்படுகின்றன. இலங்கையில் பொறுப்புக்கூறல் பொறிமுறையானது அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது. காணாமல்போனோர் விடயம், காணி விடயம், தடுத்து வைத்தல், சித்திரவதைகள், வன்முறைகள், சிவில் சமூகம் மீதான கண்காணிப்பு பாதிக்கப்பட்ட மக்களை கண்காணித்தல் போன்ற விடயங்களில் அதிகமானவை தீர்க்கப்படாமலே உள்ளன

பிறந்த மண்ணில் வாழுகின்ற உரிமை ஒவ்வொருக்கும் இருக்கின்றது. அதே மண்ணில் இனங்களுக்கு சமமாக வாழவேண்டிய உரிமையும், இனங்களை சமமாக பார்க்க வேண்டியதும் ஆள்பவர்களின் கடமையாகும். இலங்கை நாட்டிலே தற்கால சூழலில் பெரும்பான்மையாக வாழுகின்றவர்களாக சிங்களமக்களும், சிறுபான்மை இனத்தினராக தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனத்தவர்களும் வாழுகின்ற அதேவேளை, ஆளுகின்ற வர்க்கத்தினராக சிங்களமக்கள் இருந்து கொண்டிருக்கின்றனர். ஆளுகையில், சமபங்கீடுகள், உரிமைகள் ஊடாக நாட்டில் உள்ள மக்களை வழிநடாத்தமையினால், மூன்று தசாப்த யுத்தம் இலங்கைத் தீவிலே நடந்தேறியிருக்கின்றது. இதனால் ஏற்பட்ட இழப்புக்கள் பாரதூரம் என்பதுடன், யுத்தத்தின் போது ஏற்பட்ட இழப்புக்கள் மற்றும் அநீதியான செயற்பாடுகளுக்கு நீதிகேட்டு போராடத் தொடங்கிய போராட்டமும் ஒரு தசாப்தத்தினை எட்டவுள்ளது.

மீள் நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பது பாதிக்கப்பட்ட மக்களின் மிகப்பெரிய தான வேண்டுகோளும், கோரிக்கையுமாகும். ஆழமான, அழுத்தமான இக்கருத்துக்கான அங்கீகாரம் முற்றுமுழுதாக கடந்த ஆட்சி காலத்தில் கிடைக்கவில்லையென்பது பாதிக்கப்பட்ட மக்களின் கருத்து, அதேபோன்று தற்போதைய ஆட்சியிலும் கிடைக்கவில்லை, கிடைக்குமென்ற நம்பிக்கை வலுவிழந்திருக்கின்றது. என்ற கருத்தும் பாதிப்புக்குள்ளான மக்கள் மத்தியில் எழுந்திருக்கின்றது. எழுகைக்கு காரணம், உண்மை, நீதி கண்டறியப்படாமை, சிறுபான்மையினரின் கோரிக்கைகள் இழுத்தடிப்பு போன்றவையே என்பதும் விரக்தியுற்ற சமூகத்தின் வசனங்களாகவிருக்கின்றன.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் நாட்டினைப் பொறுப்பேற்று நான்கு வருடங்கள் நிறைவுபெற்றிருக்கின்றன. இக்கால சூழலில் பாதிக்கப்பட்ட சமூகத்தினால் தொடர்ச்சியாக கேட்கப்பட்டுவருகின்ற, இறுதி யுத்தத்திலே இழைக்கப்பட்ட அநீதிக்கான நீதி, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான தீர்க்கமான முடிவு, படையினரினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணி விடுவிப்பு, நாட்டிலே வாழுகின்ற பெரும்பான்மை சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது போன்றதான சம உரிமைகளை வலியுறுத்தியதான கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் இழுதடிப்பினை தற்போதைய அரசாங்கமும் செய்துவருகின்றது. என்பதனை தமிழ் தரப்பினர் தொடர்ச்சியாக கூறிவருகின்றனர்.

இக்கருத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில், ஐக்கிய நாடுகளின் விசேட ஆணையாளர் பப்லோ டிகிரீப் கருத்தொன்றினை ஜெனிவாவில் முன்வைத்திருந்தார். இலங்கையில் அனைத்து சமூகத்தினரிலும் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளனர். 10 வருடங்களுக்கு ஒரு முறை, ஏதோ ஒரு வகையில் இடம்பெறுகின்ற வன்முறைகளினால் சமூகங்கள் பாதிக்கப்படுகின்றன. இலங்கையில் பொறுப்புக்கூறல் பொறிமுறையானது அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது. காணாமல்போனோர் விடயம், காணி விடயம், தடுத்து வைத்தல், சித்திரவதைகள், வன்முறைகள், சிவில் சமூகம் மீதான கண்காணிப்பு பாதிக்கப்பட்ட மக்களை கண்காணித்தல் போன்ற விடயங்களில் அதிகமானவை தீர்க்கப்படாமலே உள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்த கருத்தும், பாதிக்கப்பட்ட சமூகமும் கூறிநிற்கின்ற கருத்தும் ஒன்றாகிருக்கின்றன.

காணாமற் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் தற்போதைய ஆட்சியாளர்கள் தொடர்ச்சியான இழுத்தடிப்பினை செய்து கொண்டு வருகின்றனர் என்ற குற்றச்சாட்டினை தமது உறவுகளை காணாமற் தேடும் மக்கள் கூறிக்கொண்டிருக்கின்றனர். இதனை காணாமற் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான அலுவலக சட்டமூலம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டமையும், இருபது மாதங்களுக்கு பின்பு அதற்கான அலுவலர்கள் தெரிவு இடம்பெற்றமையும் தெளிவாக உதாரணம் காட்டி நிற்பதாக பாதிக்கப்பட்ட சமூகத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜெனிவா கூட்டத்தொடரில், பாதிக்கப்பட்ட சமூகத்தின் சார்பில் ஜயனி தியாகராசா என்ற பெண் மனித உரிமைப் பேரவையில் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட சமூகம் என்ற அடிப்படையிலும், பாதிக்கப்பட்டவர்களில் ஒருத்தி என்ற நிலையிலும் இருந்து கொண்டு கருத்தொன்றினை முன்வைத்திருந்தார். இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் கீழ் பணியாற்றிய ஒரு குழுவே எனது சகோதரர் ஜெகன் தியாகராசா

08 ஆம் பக்கம் பார்க்க....

வாழ்க்கை ஆரம்பிப்பது
55 வயதின் பின்னரே...

வாழ்க்கையை
மகிழ்ச்சியுடன்
அனுபவிக்கின்றோம்

இப்போது நாங்கள் வாழ்க்கையை
சுமையின்றி மகிழ்வுடன்...
அனுபவிக்கின்றோம்...

அதற்கு காரணம்
மக்கள் வங்கியின் பரிணத கணக்கு.
அது எமக்கு மிகப்பெரிய பலம்.

ஒக். 1 முதல் டிசெம். 31 வரை பரிணத
கணக்கில் சேமிக்கும் உங்களுக்கு
எங்களிடமே அதிகூடிய வட்டி!

உங்களது அவசியத் தேவைகளுக்கு
இலகுவாகக் கடன்
பெற்றுக்கொள்ளவும் முடியும்.

* நிபந்தனைகளுக்குட்பட்டது

Parinatha

"பரிணதவுடன்" நீங்களும்
வாழ்க்கையை அனுபவியுங்கள்!

PEOPLE'S BANK
The Bank of the People

www.peoplesbank.lk
1961 PEOPLE'S BANK CALL CENTRE
AA+ (lka) Fitch Rating, AA+ Brand Finance Rating
People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

கோப்புப்படம்

இயலாமையில் எதிர்பார்ப்புகளற்றே

சிறுபான்மையினர் சஜித்தை வெற்றி பெறச் செய்வர்!

தீவகன்

இலங்கைத்தீவில் கிறீஸ்தவ ஆலயங்களையும் கிறீஸ்தவ மக்களையும் இலக்கு வைத்து நடாத்தப்பட்ட கொடூரமான தாக்குதல் சம்பவங்களுக்கு பின்னராக நாட்டின் எட்டாவது ஜனாதிபதித் தேர்தலுக்காக இலங்கை நாடு மீண்டும் பரபரப்படைந்துவருகின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கலானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 07ம் திகதியாக தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ள நிலையில் பிரதான கட்சிகள் தமது வேட்பாளர்களையும் அறிமுகம் செய்திருக்கின்றன. அதற்கு உகந்தாற்போல் தென்னிலங்கையை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சிகளும் வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற கட்சிகள் சிலவும் தமது பூரணமான ஆதரவுகளை தாம் ஆதரிக்கும் கட்சி மற்றும் வேட்பாளரது தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆய்ந்தறியாமலே நல்கிவருகின்றமை கேளிக்கைக்குரிய விடயமாகும்

எதுஎவ்வாறாயினும் ஜனாதிபதி தேர்தலொன்றுக்காக தமிழ் தலைமைகள் மற்றும் தமிழ் கட்சிகளின் பங்களிப்பு என்கின்றபோது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு காட்டிவருகின்ற காலநீடிப்பு அன்றேல் ஐக்கியதேசிய முன்னணியின் வேட்பாளரான அமைச்சர் சஜீத்பிரேமதாஸ , சிறீலங்கா பெருமுனையின் வேட்பாளரும் முன்னாள் பாதுகாப்பு செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஸ மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளரான அனுரகுமார திஸாநாயக்க ஆகியோரில் எவருக்கேனும் வழங்கவிருக்கும் ஆதரவானது எதுவிதமான மாற்றங்களையோ அன்றேல் எவ்வகையான எதிர்பார்புக்களையோ தமிழ் மக்களுக்கு உண்டுபண்ணப்போவதில்லை என்பது அனுபவித்தறிந்த உண்மையாகும்.

வடகிழக்கு பிராந்தியங்களிலிருந்து தொடற்சியாகவே முன்வைக்கப்பட்டுவருகின்ற அளுத்தங்களான இராணுவ நில அக்கிரமிப்புக்களிலிருந்து விடுதலை , பௌத்த மதவாத மயமாக்கல் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விடயங்களை மகிந்த ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கமோ அன்றேல் மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கமோ பெற்றுத்தந்திராத நிலையில் நல்லாட்சி அரசாங்கத்தினை அமைத்துக்கொண்ட ஐக்கிய தேசியக்கட்சியானது ஐக்கியதேசிய முன்னணி என்கின்ற மாற்றாடையில் தமிழருக்கு நன்மைபயக்கும்; என்பதனை ஏற்கமுடியாது. பௌத்த பேரினவாத சக்திகள் தற்போது வீறுகொண்டு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நிலையில் அவை கண்டியில் நிகழ்த்திய அமைதிவழி சகித்தியமானது எந்தளவுதூரம் முஸ்லீம் கட்சிகளையும் முஸ்லீம் தலைமைகளையும் கூண்டோடு அடிபணிய வைத்தது என்பதனையும் நீராவியடி பிள்ளையார் கோவிலை அண்மித்த பகுதியில் பௌத்த துறவியின் இறுதிக்கிரிகைகளை நடாத்தி நீதிமன்ற கட்டளைகளை அவமதிப்புச்செய்து நீதிமன்றங்களின் சுயாதீனங்களை கேள்விக்குறியாக்கி தமிழர் தரப்பிற்கான கரிபூசலை மேற்கொண்டிருக்கின்றது என்பதனையும் இந்த நல்லாட்சி அரசாங்கம் பார்த்துக்கொண்டும் இயலாமையில் அமைதிகாத்துவருகின்றமையும் அவதானிக்கமுடிகின்றது. இவை இருவேறு சம்பவங்களாக அமைந்தாலும் இலங்கை அரசையும் இலங்கை நீதிமன்றக்கட்டமைப்புக்களையும் அடிபணியச்செய்யும் இயலுமை பௌத்தத்திற்கு உண்டு என்பதனை நிரூபித்துக்காட்டிய சம்பவங்களாக அடையாளம்காட்ட முடிகின்றது. இவ்வாறானதோர் நிலையில் தமிழர் தரப்பு யாரை ஆதரித்து எதனை சாதிக்கப்போகின்றது என்கின்ற கேள்வி எழுந்தவண்ணமேயுள்ளது.

சிங்கள பௌத்தத்தின் இனவாத மதவாத சக்திகளை மீறியும் அவற்றின் ஆசீர்வாதமும் தென்னிலங்கை தலைமைகள் எதுவித தீர்க்கமான முடிவுகளை எட்டவும் நடைமுறைப்படுத்தவும் இயலாத வரலாறுகள் இலங்கை அரசியலில் காணப்படுகின்றமையை அறிந்திருக்கின்ற அனைத்து ஆட்சியாளர்களும் கட்சிகளும் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான அன்றேல் ஒழுங்குபடுத்தப்பட்ட பொறிமுறைகளை அமைப்பதற்கு எப்போதுமே முன்வரவில்லை என்பதற்கு அப்பால் துணியவில்லை என்பதிலிருந்தே தமிழ் முஸ்லீம் இனங்களின் அரசியலசார்; வகிபங்கினையும் உரிமைகளையும் எந்தளவுதூரம் இலங்கை அரசு பாதுகாக்கும் என்பது கேள்வியாகவே தொக்கிநிற்கின்றது.

இன மற்றும் மதவாதங்கள் ஒருபுறமிருக்க வடக்கை முன்னிலைப்படுத்திய டக்ளஸ் தேவானந்தா தலைமையினாலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தனது கோட்பாடுகளில் ஒன்றான வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்கின்ற நிலைப்பாட்டில் இன்னமும் நம்பிக்கைகொண்டிருப்பது ஆசியாவின் ஆச்சரியங்களில் ஒன்றாகத்தான் கருதமுடிகின்றது. காரணம் தென்னிலங்கையின் பௌத்த பேரினவாத சக்தியாகவும் அரசியல் பின்புலங்களின் காய்நகர்தலாகவும் ஊட்டம் பெற்று செயற்பட்டு வருகின்ற பொதுபலசேனா அமைப்பினுடைய பொதுச்செயலாளர் அண்மையில் ஓர் விடயத்தினை பதிவுசெய்திருந்தார் ? வடக்கிற்கு விஜயங்களை தான் மேற்கொள்கின்றபோது அது தமிழகத்தின் ஒரு பகுதியாக தென்படுவதாகவும் நாட்டின் தொன்மையான வரலாறுகளோடு காத்து வந்த பௌத்த துறவிகளாகிய நாம் அவற்றை அழியவிடாது சகல அதிகாரமும் ஒருமுகப் பெற்ற ஒரு குடையின்கீழ் இலங்கை என்கின்ற தேசத்தை கட்டியெளுப்புவோம் என ஊடகங்களிடை எச்சரித்திருந்தமை அறிந்த விடயமாகிலும் இவ்வாறான சக்திகளுக்கு உரமூட்டும் தென்னிலங்கையின் பிரதான கட்சிகளுடன் ஈழமக்கள் ஜனநாயக்கட்சியின் கைகோர்பு எந்தளவுதூரம் நம்பகத்தன்மை வாய்தது என்பது ஒருபுறமிருக்க

மத்தியில் கூட்டாட்சியையும் மாநிலத்தில் சுயாட்சியையும் கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி மகிந்தராஜபக்ஸ ஆட்சியின்போது அதனை பின்பற்றியும் மைத்திரிரணில் நல்லாட்சியில் அதனை பின்பற்றாது போனமை புரியாத புதிராகவும் இடம்பெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலுக்கு முற்கூட்டியே கோட்டாபய ராஜபக்ஸவிற்கு பூரணமான ஆதரவினை நல்கியிருப்பதும் விளங்கமுடியாத அரசியலாகவே பார்க்கப்படுகின்றது. இதனை ராஜபக;ஸ குடும்ப ஆட்சியில் கூட்டாட்சியும் மாநிலத்தில் சுயாட்சி என எண்ணத்தோன்றுகின்றது. மீண்டுமொரு தேர்தலில் சுதந்திரக்கட்சி அன்றேல் ஸீலங்கா பெருமுனை தோல்வியைச்சந்திக்குமாகில் எந்தவித அமைச்சுப்பதவிளையும் 10 வருடங்களுக்கு வகிக்கமுடியாத நிலை தோன்றவிருப்பதும் இதனால் வடமாகாணத்தின் அபிவிருத்திகளை முன்னெடுக்கும் வலுவிழந்து வாக்குவங்கியில் சரிவினையும் ஏனைய

கோப்புப்படம்

கட்சிகளினது வாக்குவங்கிகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாயிக்கும் என்பதும் எதிர்பார்பாகும். தனது கட்சியின் கோட்பாடுகளுக்கு அமைவாகவும் தென்னிலங்கையின் குடும்ப அரசியல் நீரோட்டத்திலிருந்து விலகியும் தனது அரசியல் பயணத்தை தொடர்வாராகில் வடகில் சிறிந்த தமிழ் அரசியலை முன்னெடுக்கும் வேட்பாளராக எப்போதும் இருப்பார் என்பது உண்மைவிடயமாகும்.

ஐக்கியதேசிய முன்னணியின் ஆட்சியமைப்பை எவ்வாறான நிபந்தனைகளை எவ்வாறானதோர் நம்பிக்கையின் அடிப்படையில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆதரிக்க இருக்கின்றது என்பது அரசியல் ஆர்வலர்களின் எதிர்பார்பாக இருந்துவருகின்றது. மேற்குலக நாடுகளின் நெறிப்படுத்தலில் ஜனாதிபதியாகவுள்ள சஜீத்பிரேமதாஸவும் பிரதமராகவுள்ள ரணில் விக்கிரமசிங்கவினது பாத்திரங்களின் வகிபங்கை எப்போதும் மாற்றிட விரும்பிடாத மேற்குலகம் தமிழரின் காணாமலாக்கப்பட்டோர் விடயங்கள் ஜெனீவா அளுத்தங்கள் சர்வதேச நீதிப்பொறிமுறை செயற்பாடுகள் அனைத்தையும் வழமைக்கு மேலதிகமாக திறம்பட அற்றிக்கொடுக்கும் என்பதுவும் இந்தியாவின் பங்களிப்பும் இவ் அரசாங்கத்திற்கு நிறைவாகக் கிட்டும் என்பதுவும் உண்மையே. இங்குதான் தமிழர் தரப்பு ஏமாற்றத்தை மீண்டும்மீண்டும் சந்திக்கும் நிலை உருவாகஇருப்பதும் காலநீடிப்புவழியே பொறிமுறைகளை அமைத்து தமிழர்தரப்பு கோரிக்கைகளை மழுங்கடிக்கவிருப்பதே தென்னிலங்கையினதும் சர்வதேசத்தினதும் நிகழ்சிநிரலாகும்.

சிறீலங்கா பெருமுனையின் ஆட்சியமைப்பு என்பதனை நோக்குமிடத்து அதன் வேட்பாளருக்கான வாக்குகளை தமிழ் மக்கள் செலுத்துவார்களா?

என்கின்ற கேள்வி பரவலாக தமிழ் மக்கள் மத்தியில் பேசப்படும் விடயமாக அமைந்திருக்கின்றது. காரணம் என்னவெனின் தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடித்து யுத்த வெற்றியை முன்னிலைப்படுத்தி தென்னிலங்கையின் வாக்குகளை மையப்படுத்தி தோற்றம்பெற்ற ஸ்ரீலங்கா பெருமுனை சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கினைப்பெற்றிருந்தாலும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியுடன் ஏற்பட்ட பிளவு பெருமளவு வாக்குகளில் தாக்கத்தை உண்டுபண்ணினாலும் தமிழ் மற்றும் முஸ்லீம் வாக்குகளை பெறவேண்டிய கட்டாயமும் உருவாகியுள்ளது. இந்த சிக்கல் நிலைகளுக்கு காரணமான யுத்த வடுக்களை தமிழர் தரப்பிடமிருந்து சீர்செய்துகொடுக்க வல்ல திறமை ஸ்ரீலங்கா பெருமுனையின் பங்காளிக்கட்சியும் முகவருமான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு உண்டா? என்பதனை அக்கட்சி சுயமதிப்பீடு செய்யவேண்டிய தேவையும் பிரதானமாகும்.

தொடற்சியாக தேர்தல்களையும் ஆட்சியமைப்புக்களையும் அரங்கேற்றிவருகின்ற தென்னிலங்கையின் பிரதான கட்சிகளுக்கும் அவற்றின் சாதகபாதக நிலைமைகளில் துணைநிற்கின்ற பௌத்த தலைமைப்பீடங்களுக்கும் அரசியல் நீரோட்டத்தில் குளிர்காய்ந்துகொண்டிருக்கும் சர்வதேசமும் நிகழ்சிநிரலோடு பயணிக்கின்ற அமைப்புக்கள் மத்தியிலும் தமிழ் முஸ்லீம் கட்சிகளினது பல்வேறுபட்ட அரசியல் வியூகங்களும் காய்நகர்தலும் இணக்க அரசியல்களும் பலித்துக்கொள்வதில்லை. தமிழ் கட்சிகளைப்போலவே மலையக மற்றும் முஸ்லீம் கட்சிகளும் தம் இன மற்றும் மதம் சார்ந்த பிரச்சனைகளை உள்வாங்காமலுமல்ல ஆனால் இயலாமை என்கின்ற விடயம் இருந்தேவருகின்றது அந்த இயலாமைக்கான காரணங்களை கண்டறியவும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் பரீசீலனைக்கு உட்படுத்துதல் முதல் அவை ஆராயப்படுத்தல் வேண்டியதும் அவசியமானதாகும். சிறுபான்மை இனங்கள் எதிர்பார்கின்ற அரசியல் தீர்வுதிட்டங்களில் அன்றேல் சிறுபான்மை இனங்களின் இருப்புக்களில் ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கான நிரந்தர தீர்வுகளை எட்டுவதில் இனங்காணப்படுகின்ற இயலாமை என்கின்ற விடயத்தினை பகிரங்கப்படுத்தும் நிலையிலோ அன்றேல் ஏற்றுக்கொள்ளும் நிலையிலோ சிறுபான்மை இன கட்சிகளின் தலைமைகள் இப்போதும் தயாராக இல்லை. இன்னிலையில் இயலாமையிலும் தெரிவுகளின்றியும் எதிர்பார்புக்களின்றியும் சிறுபான்மை இனங்கள் ஐக்கியதேசிய முன்னணியையல்ல ஐக்கியதேசியக்கட்சியையும் சஜீத்தினையும் வெற்றிபெறச்செய்வர் என்பது உறுதி.

உரிமை..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

உள்ளிட்ட 11பேரை கடத்தியது. குறிப்பாக 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் 17 ஆம் திகதி இலங்கை கடற்படையின் அதிகாரி சம்பத் முனசிங்கவினால் எனது சகோதரர் சம்பத்தப்பட்டார். என்ற கருத்தினை குறிப்பிட்டதுடன், இதுபோன்ற காணாமற் ஆக்கப்பட்டோருக்கான நீதியை பெற்றுத்தருமாறு குறிப்பிட்டிருந்தமையும் இக் காலச்சூழலில் எடுத்துக்காட்டத்தக்கது.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது, காணாமற் ஆக்கப்பட்டோர் சார்பில் சிலர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தனர். இதன்போது, உள்நாட்டு, வெளிநாட்டு சட்டதிட்டங்களுக்கமைய காணாமல் போனோரை கண்டறியும் அலுவலகத்தின் ஊடாக நியாயமான தீர்வுகள் அவர்களுக்கு வழங்கப்பட நடவடிக்கை எடுத்திருப்பதாக கூறியிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதான விடயமாகவுள்ளது.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து ஆட்களைப் பாதுகாக்கும் சர்வதேச சமவாய சட்டமூலமும் நாடாளுமன்றத்தில் 37மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்திற்கு எதிரணியினர் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையிலும் சபாநாயகர் கருஜயசூரிய குறித்த சட்டமூலத்திற்கு கையொப்பமிட்டிருந்தார்.

காணி தொடர்பிலான விடயத்திலும், தற்போதைய அரசு விரைவு செயற்பாட்டினை முன்னெடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டினை பாதிக்கப்பட்ட சமூகத்தினர் கூறிவருகின்றனர். அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தினர் கூறிய வருகின்றதான சூழலில், அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என்ற கருத்தை ஆட்சியாளர்கள் முன்வைத்து வருகின்றனர். ஆனால் தமது உறவுகள், எப்போது விடுதலையாகி வருவார்கள் என்ற ஏக்கத்துடனும், எதிர்பார்ப்புடனும் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

குழந்தைகள் மீது, கருணை காட்டும் நாட்டின் அதிபர், அழைத்த குழந்தைகளின் வீட்டுக்கும் சென்று மகிழ்ந்த ஜனாதிபதி, பலகுழந்தைகளின் கண்துடைப்பார் என்ற நம்பிக்க பலரிடத்திலும் காணப்பட்டன, காணப்படுகின்றன. கடந்த மூன்று தசாப்த யுத்தத்திலே பாதிக்கப்பட்டு, அங்கங்களை இழந்து, உறவினர்களைத்தேடி இன்றும் உடலெங்கோ, மனமெங்கோ என்று தெரியாமல் வாடிக்கொண்டிருக்கும் உறவுகள் அனைவருக்கும் சிறந்த தீர்வுகளை விரைந்து எடுக்க வேண்டுமென்பதே மக்கள் அனைவரின் விருப்பாகும்.

அரசியல்வாதிகளின் அசமந்தப்போக்குகளால்

தாமதமடையும் அரச சேவைகள்

கோப்புப்படம்

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

இலங்கையின் கடந்தகால அரசியல் வரலாற்றில் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழ் தாயக மக்களின் நிலங்களை சூறையாடும் தீவிர முயற்சியில் தென்னிலங்கை அரசு தீவிரமாக ஈடுபட்டு வந்தது யாவரும் அறிந்த ஒரு விடயமே. இலங்கையில் மாறி வந்து எந்த அரசாங்கம் ஆட்சி அமைத்தாலும், தமிழர்களின் காணிகளை திட்டமிட்டு கையகப்படுத்தும் செயற்பாடு வலுவடைந்து கொண்டுதான் இருக்கின்றது.

போரின் பின்னரான காலப்பகுதியில் தற்போதும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பெருமளவிலான பௌத்த விகாரைகள் தோற்றம் பெற்றுள்ளதுடன், நல்லிணக்கம் என்ற பெயரில் குடியேற்றப்படும் அத்துமீறிய குடியேற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. வடக்கு கிழக்கில் கடந்த ஆட்சியிலும் சரி நல்லாட்சியிலும் சரி திட்டமிட்ட குடியேற்றங்கள் மற்றும் இன முரண்பாட்டு செயற்பாடுகள் தமிழ் மக்களின் வாழ்வை மேலும் அழிக்கும் செயற்பாடாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டாமல் எந்த நாட்டுடனும் ஒரு சுமுகமான உறவைப் பேண முடியாது. கடந்த அரசாங்கத்தைப் போல் நாங்கள் யாருக்காகவும் எதுவும் செய்ய வேண்டிய அவசியமில்லை என்று பொறுப்பின்றி செயற்படவும் முடியாது. ஒட்டுமொத்தத்தில் இனப்பிரச்சினையில் இருந்து விலகி இந்த அரசாங்கம் யாருக்கும் எத்தகையதொரு தீர்வையும் கொடுத்து விட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனையே புதிது புதிதாக ஏற்படும் போராட்டங்கள் வெளிப்படுத்தியும் வருகின்றன

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு ஒன்று கிடைக்காத வரையில், வேற்றினத்தவர்களின் ஆதிக்கம், வட கிழக்கு பகுதியில் அதிகரிக்கப்படும் என்பது மறுக்க முடியாத கசப்பான விடயமாகும். தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்த இடங்களில் தற்போது அவர்களுக்கு சொந்தம் என்று கூறிக்கொள்வதற்கு ஒரு அடையாளம் கூட இல்லாமல் போய்விடுமோ என்ற பயம் தோன்றுகின்றது. யுத்தத்தின் போது உயிர்களை இழந்தோம், உடைமைகளை இழந்தோம், உரிமைகளையும் இழந்தோம். தற்போது மிச்சம் இருப்பது எமது நிலம் தான். அதையும் எம்மிடமிருந்து தட்டிப்பறிக்கும் செயற்பாடாகவே நல்லாட்சியின் செயற்பாடுகள் காணப்படுவதாக மக்களின் கதறல் சத்தங்கள் போராட்டங்கள் வாயிலாக காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. சொந்த நிலங்களை விட்டுவிடுமாறு, அதை மீட்டுத்தருமாறும், நிரந்தர அரசியல் தீர்வு முதலான பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி வடக்கிலும், கிழக்கிலும் எத்தனை போராட்டங்கள், எத்தனை ஆர்ப்பாட்டங்கள், எத்தனை சந்திப்புக்கள், நாட்களை கடந்து, வாரத்தை கடந்து, தற்போது மாதங்களை, வருடங்களைக் கடந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எத்தனை தமிழ் தலைமைகள் இவர்களுக்காக குரல் கொடுத்தாலும் கூட, தமிழ் மக்கள் கேட்கும் நியாயமான கோரிக்கைகளை செய்து கொடுப்பதற்கு இந்த ஆட்சியில் யாரேனும் இல்லையா என்ற ஏக்கத்தோடு மக்கள் காத்திருக்கின்றதை அவதானிக்கலாம். இவர்களுக்கு எப்போது நியாயம் கிடைக்கும்? தமிழர் நிலங்களில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழும் விடிவு வராதா? என விமர்சகர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு நான்கு ஆண்டுகள் பூர்த்தியடைந்த நிலையில் இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்தும் நாடு முழுவதும் பல போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தென்பகுதியில் தொழிலாளர்கள் வர்க்கம் தமது உரிமைகளுக்காகவும், சலுகைகளுக்காகவும் தொழிற்சங்க போராட்டங்களை நடத்தி வருகின்றனர். வடக்கு, கிழக்கு மக்கள் தமது இனப்பிரச்சனையை முன்வைத்தும், மலையக மக்கள் தமது சம்பள உயர்வு கோரியும் தமது நாளாந்த பிரச்சனைகளை முன்வைத்தும், தமது வாழ்வுரிமைக்காவும், உறவுகளைத் தேடியும் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த முக்கோண போராட்டங்களுக்கும் இடையில் பாரிய

12 ஆம் பக்கம் பார்க்க....

தேர்தல் வெற்றிக்காக

வேட்பாளர்கள் சமூகங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடாது

சத்தார் எம் ஜாவித்

எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடை பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் பலர் போட்டி போடும் ஒரு தேர்தலாக இருக்கின்றது எனலாம். குறிப்பாக பல கட்சிகள் மற்றும் சுயற்சைக் குழுக்கள் எனப் பல இந்தத் தேர்தலில் வேட்பாளர்களை களமிறக்குகின்றமை முக்கிய அம்சமாகும்.

அதிகமான நாடுகளில் தேர்தல் என்றால் அது போட்டித் தன்மை வாய்ந்ததாக இருப்பதனால் ஒவ்வொருவரும் தான்தான் வெற்றி பெற வேண்டும் என்ற ஒரு வகையான மனநிலை அவர்களுக்குள் ஏற்படுவ தனால் அதில் தாம் வெற்றி பெற வேண்டும் என்ற காரணங்களால் அடிதடி மற்றும் சண்டைகளும் இடம் பெறும் ஒன்றாகவே காணப்படுகின் றது. இலங்கை போன்ற மூன்றாம்தர நாடுகளில் இந்த விடயங்களுக்கு தட்டுப்பாடில்லை எனலாம். இவ் வாறான செயற்பாடுகளால் அதிகம் பாதிக்கப்படுவது பொது மக்களே யாகும்.

இந்த நாட்டில் அண்மைக்கால மாக போட்டித் தன்மை வாய்ந்த அரசியல் தளம்பல் நிலைமைகளே காணப்படுகின்றன. இன்றுள்ள அரசாங்கமும்கூட பல தடவை கள் தளம்பல் நிலைமைகளுக்குள் தத்தளித்து மாற்றங்களும், குழப் பங்களும் ஏற்பட்டிருந்ததடியும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டலாம். வேட்பாளர்களால் தத்தமது கட்சி களை பலப்படுத்துவதும் அதற்காக மக்களை தம்வசப்படுத்துவதும், மக்;களுக்கு அது செய்து தருவோம், இது செய்து தருவோம் என்ற பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அவர்களை தம்பக்கம் இழுக்கும் செயற் பாடுகளும் தற்போது இடம் பெற்று வருகின்றன. அத்துடன் ஒருசில அரசியல் வாதிகள் ஒரு கட்சியில் இருந்து இன்னொரு கட்சிக்கு தாவும் மற்றொரு கைங்கரியங்களும் இடம் பெற ஆரம்பித்து விட்ட ன. நடைபெற விருக்கும் ஜனாதிபதித் தேர்தலானது பல எதிர்பார்ப்புக்களை கொண்டதாக நடைபெற இருப்பதை அவதானிக்க முடிகின்றது. பல சிறிய கட்சிகள் தமது ஆதரவை வழங்க பெரும்பான்மைக் கட்சிகளிடம் தமது கோரிக்கைகளை முன்வைத்து அதனை எதிர்பார்த்த தேர்தலாகவுமே இந்த ஜனாதி பதித் தேர்தல் அமையப் போகின்றது எனலாம்.

குறிப்பாக இலங்கையின் அரசியல் வரலாற்றில் எந்தத் தேர்தல்கள் வந்தாலும் அது சிறுபான்மை மக்களுக்கு அவ்வளவு ஆக்கபூர்வமான நன்மை களையோ அல்லது அவர்களின் அடிப்படைத் தேவைகளையோ நிவர்த்தி செய்ததாக இருந்த தில்லை எனலாம். இந்தச் செயற்பாட்டிற்கு நாம் கடந்தகால தேர்தல்களை நல்ல உதாரணமாக எடுத் துக் கொள்ளலாம். அது ஜனாதிபதித் தேர்தலாக இருக்கட்டும். பாராளுமன்றத் தேர்தலாக இருக் கட்டும், மாகாண சபைத் தேர்தலாக இருக்கட்டும் அல்லது ஏனைய சிறு தேர்தல்களாக இருக்கட்டும் அவை எல்லாம் பெரும்பான்மைக்கு சார்பானதா கவும், சிறுபான்மை மக்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுப்பவைகளாகவுமே இதுவரை காலமும் அமைந்திருந்தன. தேர்தல் விடயங்களில் பெரும் பான்மைக் கட்சிகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு அமை வாக அவர்கள் நடவடிக்கைகளை முன்னெடுக்கப்ப டுகின்றதையும் கண முடிகின்றது.

இந்த நாட்டில் வாழும் 25 சத வீதத்தைக் கொண்ட சிறுபான்மை மக்கள் பல தஸாப்தங்களாக அரசியல் ரீதியாகவும், சமூக, சமய ரீதியாகவும் பல்வேறுபட்ட இன்னல்களையும், துன்பங்க ளையும் அனுபவிக்க வேண்டியதொரு துர்ப்பாக்கிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர். ஆட்சிக்கு வரு கின்ற அரசாங்கங்கள் எல்லாம் தாம் ஆட்சிப்பீடம் ஏறும் வரை சகல வாக்குறுதிகளையும் வழங்கு கின்றனர் வெற்றி பெற்ற பின்னர் ஆறிய கஞ்சி பலங்கஞ்சியான விடயமாக இந்த மக்களை அவர் கள் மறந்து விடுகின்ற நிலைமைகளே அதிகம் காணக்கூடியதாக உள்ளது.

தேர்தல் காலங்கள் வரு கின்றபோது அதிகமாக ஏமாற்றப்படும் சமுகமாக இந்தச் சிறுபான்மைச் சமுகங்கள்தான் காணப்படு கின்றனர். காரணம் ஏதோ ஒரு வகையில் பேரின வாத சக்திகள் தமக்கு ஏற்ற வகையில் சாதகமான விடயங்களை மேற்கொண்டு தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகும். அவர் கள் சிறுபான்மை மக்களை அவர்களது அரசியல் நடவடிக்கைகளில் முன்னுக்கு வருவதை விரும்பு வதில்லை. இவ்வாறு சிறுபான்மை மக்கள் அரசிய லில் முன்னுக்கு வந்தால் தமது செல்வாக்குகளும், தமக்கான ஏனைய வரப்பிரதாசங்களும் இல்லாமல் போய்விடும் என்ற ஒரே நோக்கத்துடன் மேற்படி விடயங்களில் தமது காய்களை அவர்கள் தமது சமுகத்திற்கும், தமது அரசியல் இருப்புக்களுக்கும் ஏற்ற வகையில் மாற்றுவதற்கு காய்களை நகர்த்தி வருகின்ற விடயங்களும் இடம் பெற்று வருகின் றன.

முக்கியமாக தேர்தல்கள் வரும் போதெல்லாம் சிறுபான்மை மக்களை அரசியல் தலைமைகளும், அவர்களை ஒட்டிய அரசியல் வாதிகளும் பொய் யான வாக்குறுதிகளை வழங்கி அந்த மக்களை ஏமாற்றி வாக்குகளை பெறுகின்றனர். இவ்வாறு அவர்கள் வெற்றி பெற்ற பின்னர் அரசியல் ரீதியாக தமது செல்வாக்குகளை இழந்து விடாது பாதுகாத் துக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு பேரினவாத கட்சிகளும், அதன் அரசியல் வாதிகளும் தமக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்ற வகையில் மேற்கொளும் நட வடிக்கைகள் சமுகங்களுக்கிடையில் ஒருவகை யான முரண்பாடுகளையும், பிரச்சினைகளையும் தோற்று வித்கின்றன. தமது வெற்றிகளை அடைந்து கொள்ளும் போது ஏற்படுகின்ற எந்தப் பிரச்சினை களையும் அவர்கள் கண்டு கொள்வதும் இல்லை அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதும் இல்லை. இவ்வாறான நடவடிக்கைகளால் மக்கள் தாராளமாகவே ஏமாற்றப்படுவதைக் காணக்கூடிய தாகவுள்ளது.

இலங்கை ஒரு சிறிய நாடாக மட்டுமல்லாது சுமார் இரண்டு கோடி மக்களை மட்டும் சனத் தொகையாக கொண்டுள்ள போதிலும் அரசியல் கட்சிகள் நூற்றைத் தாண்டும் அளவிற்கு அதன் கட்சிகளின் தொகைகள் அதிகரித்துள்ளதுடன் அதி கமான கட்சிகள் தேர்தல் திணைக்களத்தில்கூட தம்மை அரசியல் கட்சிகளாகவும் பதிவு செய் துள்ளன. இவ்வாறு கட்சிகளின் தொகை அதிகரிக் அதிகரிக்க தேர்தல்களில் வாக்குகள் பலவாறாக சி தறுண்டு போட்டியிடும் வேட்பாளர்களோ அல்லது கட்சிகளொ அறுதிப் பெரும்பான்மையையோ அல் லது எதிர்பார்க்கும் அளவிற்கான வாக்குகளையோ பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்கள் ஏற்படு கின்றன.

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களை எடுத்துக் கொண்டால் எந்தவொரு பேரினவாதக் கட்சி வந்தாலும் அவை தனியே ஆட்சியமைக்க முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலைமைகளே காணப் படுகின்றன. ஆட்சியமைக்க வேறு ஒரு கட்சியை அல்லது சிறுபான்மைக் கட்சிகளை நாடவேண்டிய நிலைகளே இருக்கின்றன. கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களை நாம் ஒப்பீட்டளவில் பார்த்தால் அதிகமான அரசாங்கங்கள் சிறுபான்மைக் கட்சிகளை அரவணைத்து ஆட்சியை நடாத்திய காலங்களே அதிகம் காணப்படுகின்றன. இவ்வா றான பல கட்சிகளின் கூட்டு நிலைமைகள் ஒரு அரசாங்கம் நிலையாக இருப்பதற்கான சந்தர்ப்பங் கள் குறைவாகவே இருக்கின்றன. காரணம் ஆட்சி யில் இணைந்து கொண்ட ஏனைய கட்சிகள் சில வேளைளில் அவர்கள் தமது கோரிக்கைகள், மற்றும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படா விட்டால் அல்லது கருத்திற் கொள்ளப்டா விட்டால் அவர்கள் பிரிவதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதால் அது ஒரு அது ஒரு ஆபத்தான விடயமாகவே இருக்கின்றன.

இன்றைய நிலையில் சிறுபான்மை தமிழ் மற் றும் முஸ்லிம் மக்களிடத்தில் பல்வேறுபட்ட பிரச் சினைகள் காணப்படுகின்றன. அரசியல். பொருளா தார மற்றும் அவர்களின் சமுகம், சமயம் சார்ந்த பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இனப்பிரச்சினை இங்கு முக்கியமானதாக காணப்படுகின்றன. கடந்த மூன்று தஸாப்த கால யுத்தமும் இலங்கையின் இனப்பிரச்சினையின் ஒரு அம்சமே. தமது ஜனநா யக உரிமைகளுக்கும், சலுகைகளுக்குமாகவே அந்த யுத்தம் இடம் பெற்றது. அதன் வடுக்கள் இன்று வரை தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடத்தில் அதி களவு இருந்து வருகின்றன.

கடந்த காலங்களில் பல தேர்தல்கள் நடந்தேறி பல அரசாங்கங்களும்கூட ஆட்சி அமைத்த போதி லும் அவைகளால் சிறபான்மை மக்களின் பிரச்சி னைகளைத் தீர்க்கும் விடயத்தில் சரியான அனுகு முறைகளையோ அல்லது தீர்விற்கான முன்னெடுப் புக்களோ மேற்கொள்ளப்பட வில்லை எனலாம். இந்த நாட்டில் புரையோடியுள்ள ஒரு பிரச்சினை யாக இனப்பிரச்சினை காணப்படுகின்றது. இலங் கையில் சமாதானம், இன ஒற்றுமை என்பன ஏற்பட வேண்டுமானால் அதற்கு முதலில் இனப்பிரச்சினை விடயம் முக்கியமானதாகும். அது தீர்க்கப்படா விட்டால் சிறிதளவேனும் இந்த நாட்டில் சமாதா னத்தையோ அல்லது சமுக ஒற்றுமையையோ கண்டு கொள்ள முடியாது.

ஆட்சிக்கு வரும் பெரும்பான்மை அரசியல் தலைமைகள் எல்லாம் இந்த நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை கண்டு கொள்வ தில்லை. அவர்கள் தமது கட்சி அரசியலையும், தத்தமது அரசியல் இருப்புக்களையும் தக்க வைத் துக் கொள்வதற்குமே தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதை கண்டு கொள்ள முடிகின்றது. இது அவர்கள் விடும் பாரியதொரு பிழையாகும். சகல மக்களினதும் நலன்களில் அக்கறை செலுத்த வேண்டியவர்கள் இன்று அவற்றிற்கு மாற்றமாக போலியான வகையில் செயற்படுவதே வேதனைக் குரிய விடயமாகும்.

நாட்டில் சமாதானம் நிலவ வேண்டுமானால் இங்கு நல்லாட்சி நிலவ வேண்டும். ஒரு நாட்டில் நல்லாட்சி இல்லையேல் அங்கு சிறந்ததொரு அரசாங்கத்தைக் காண முடியாது. ஜனநாயக நாடு என்றால் அங்கு சகல மக்களும் ஒரே கண்ணோட் டத்தில் சமமாக மதிக்கப்பட வேண்டும். எந்த விடயமாக இருந்தாலும் பாரபட்சம் காட்டப்படலா காது. இவ்வாறான நல்ல அம்சங்கள் இடம் பெறு மானால் அங்கு மக்கள் நிம்மதியாக வாழவும், இன ஒற்றுமை ஏற்படவும் வாய்ப்புக்கள் இருக்கின்றன.

ஆனால் இலங்கையில் கடந்த சில காலமாக இனவாதம் என்ற ஒரு விடயம் மிகவும் மோசமா னதாக விடயமாகவே காணப்படுகின்றன. இன்று இலங்கையில் சமுகங்களுக்கிடையில் ஏற்றத்தாழ் வுகளும், பிரச்சினைகளும் எற்படுவதற்கு இனவாத சக்திகளின் இனவாதச் செயற்பாடுகளும் முக்கிய மாக காணப்படுகின் றது. குறிப்பாக பேரின வாத கொள்கை உடைய ஒருசில பௌத்த அமைப்புக்களும், அதன் செயற்பாட்டாளர் களும் தமது அரசியல் இலாபங்களுக்காகவும், சுகபோகங்களுக்ககாவும் பௌத்த சமயத்தைக் காப்பாற்றுகின்றோம் என்ற தோரணையில் அப்பாவிகளாக இருக் கின்ற சிறுபான்மை தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மீது தமது அடா வடித்தனங்களை கட் டவிழ்த்து பல நாசகார அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இவர்கள் இவ்வாறு செய்யும் நாசகார செயற் பாடுகளை பெரும் பான்மை என்ற கார ணத்தினால் அரசாங்கம் கண்டு கொள்ளாது இருப்பதும். அவர்களின் தீய செயற்பாடுகளை கட் டுப்படுத்தாது இருப்பது விடயத்தில் அரசாங்கத்தின் மீது சிறுபான்மை மக்கள் நம்பிக்கை இழந்தவர்களா கவே காணப்படுகின்றனர். அரசாங்கம் இன்று சி றுபான்மை மக்களுக்கு ஆற்ற வேண்டிய பல விட யங்களில் கோட்டை விட்டுவிட்டு தேரதல்களுக் காக வாக்குகளை வேட்டையாடுவதற்கு முனைவது வேடிக்கையான விடயமாகும்.

ஏதிர் வரும் நவம்பர் ஜனாதிபதித் தேர்தலை மையமாக வைத்து இன்று பல வேட்பாளர்கள் களிமிறங்கியிருக்கின்ற நிலையில் தொடர்ந்தும் ஏமாற்றப்படப்போகும் மக்களாக சிறுபான்மை மக்களே காணப்படுகின்றனர். இன்று அதிகமான வர்கள் தேர்தல் மேடைகளில் பல வாக்குறுதிகளை வழங்குகின்றனர். இவையெல்லாம் கடந்த காலங்க ளைப் போல் குப்பையில் போடப்பட வேண்டிய விடயம் என புத்தி ஜீவிகளும், சமுக ஆர்வளர்க ளும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இவர்கள் வழங்கும் வாக்குறுதிகள் எல்லாம் முக்கியமாக சிறுபான்மை மக்களிடத் தில் முரண்பாடுகளைத் தோற்று விப்பதாகவே அமைகின்றது. தமது நலன்களுக்காக சிறுபான்மை மக்களை இவர்கள் பகடைக்காய்களாகவே நடாத்தி வருகின்றனர். இதனால் சிறுபான்மைச் சமுகங் கள் மிகவும் கவலையுடனும், வேதனையுடனுமே காணப்படுகின்றனர். ஜனநாயக நாடு என்ற வகை யில் ஜனநாயக உரிமைகளை ஆக்கபூர்வமாக வழங் குவதற்கு பேரினவாத சக்திகள் முட்டுக்கட்டை போட்டுத் தடுப்பது சகல துறைகளிலும் இருந்து வருகின்றது.

எனவே முரண்பாடுகளைத் தோற்று வித்து இந்த நாட்டில் பேரிவாத சக்திகள் எந்த நன்மைகளையும் பெற்றுக் கொள்ள முடியாது. முரண்பாடுகளால் இன விரிசல்களே அதிகம் எற்படும். சமாதானத் தையும், இன நல்லிணக்கத்தையும் காண வேண்டு மானால் முரண்பாடுகளைக் களைந்தும், இனவாத செயற்பாடுகளை முற்றாக இல்லாது செய்துமே சமுகத்தில் ஒற்றுமையடி ஏற்படுத்த வேண்டும். இதனையே சிறுபான்மை மக்கள் மட்டுமல்லாது பெரும்பான்மை பௌத்த மக்களும் விரும்புகின்ற னர் எனலாம்.

கோப்புப்படம்

அரசியல்...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

வித்தியாசங்களை அவதானிக்க முடிகிறது.

தென்பகுதியில் நடைபெறுகின்ற போராட்டங்கள் ஓரளவு தீர்வு கண்டவுடன் அல்லது அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டுக்கு வந்தவுடன் கைவிடப்படுகின் றன. இந்தப் போராட்டங்கள் குறித்து அரசாங்கம் கூடிய கரிசனையும் செலுத்தி வருகிறது. ஆனால், வடக்கு, கிழக்கில் நடைபெறும் போராட்டங்கள் மற்றும் மலையக போராட்டங்கள் கவனிப்பாராற்ற நிலையில் தொடர்ச்சியாக 150 , 270 என 365 நாட் களைக் கடந்தும் நடைபெற்று வருகின்றன. காணா மல் ஆக்கப்பட்டோருக்கான நீதிவேண்டி மக்கள் வீதிகளில் இறங்கியிருக்கிறார்கள். தமது பூர்வீக காணிகளை விடுவிக்க கோரி அந்த காணி உரிமை யாளர்கள் வீதிகளில் இறங்கி போராடி வருகின்றனர். பல்வேறு தரப்பில் இருந்தும் இந்த இரண்டு விட யங்களிலும் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் அவைகள் ஒரு முடிவுக்கு வந்ததாக தெரியவில்லை. இவ்வாறு மக்கள் ஆட்சி மாற்றத் தின் பின் கிடைத்திருக்கின்ற ஜனநாயக இடைவெ ளியைப் பயன்படுத்தி தமது உரிமைக்காக போராடி வரும் நிலையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம் பெறும் சில சம்பவங்கள் அந்த மக்களையும் அச்சம் கொள்ள வைத்துள்ளது.

2009 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் அமைதிச் சூழல் ஏற்பட்டிருந்தாலும் வடக்கு, கிழக்கு பகுதிக ளில் ஒருவகை அச்ச நிலை தொடரவே செய்கிறது. இந்த பகுதிகளை ஓர் அச்ச நிலையில் வைத்திருப்ப தற்கு திரைமறைவில் சில சக்திகள் செயற்படுவதா கவே எண்ண வேண்டியுள்ளது. கிறிஸ் பூதம், ஆவா குழு, துப்பாக்கி சூடு, கைதுகள் என காலத்திற்கு காலம் மாறுபட்ட சம்பவங்கள் அரங்கேறிக் கொண் டிருப்பதும் கவனிக்கத்தக்கது. மறுபக்கம், புதிய அர சியல் யாப்பிற்கு எதிராக மகாசங்கத்தினரும், எதிர் தரப்பினரும் செயற்படும் விதம் வடக்கு, கிழக்கு வாழ் மக்களை ஏமாற்றமடையச் செய்துள்ளது. அரசாங்கம் பௌத்த மதகுருமார்களின் ஒப்புதல் இன்றி எதையும் நிறைவேற்ற மாட்டோம் என்றும் உறுதியளித்துள்ளது. அதேநேரம் புதிய அரசியல் யாப்புக்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு இருப்பதாகவும் கூறுகின்றது. இந்த நிலைப்பாடுக ளின் காரணமாகவே மீண்டும் ஏதேனும் விபரீதம் ஏற்பட்டு விடுமோ என்று தமிழ் மக்கள் மத்தியில் ஐயமும் அச்சமும் ஏற்பட்டுள்ளது. மக்களுடைய இந்த எண்ணங்களுக்கு அண்மையில் வடக்கு, கிழக் கில் ஏற்பட்டிருக்கும் சம்பவங்களும் உரமூட்டுகின் றன.

இந்த நாட்டில் தற்போது உள்ள சகல பிரச்ச னைகளுக்கும் மூல காரணமாக இருப்பது தேசிய இனப்பிரச்சனையே. அதனை சரியாக கையாளாமல் எந்தவொரு பிரச்சனைக்கும் நிரந்தர தீர்வு காண்பது என்பது கடினமான விடயம். உதாரணமாக அம்பாந் தோட்டையில் சீனா அமைக்கவிருக்கும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் அதனைப்போன்று திருகோ ணமலையில் ஜப்பானிற்கும், இந்தியாவிற்கும் வழங் கவிருக்கின்ற எண்ணைக் குதங்களும் இலங்கை கனியவள ஊழியர்களின் எதிர்ப்புகளுக்கும் கண்ட னத்திற்கும் உட்பட்டுள்ளது. சீனாவிடம் வாங்கிய மித மிஞ்சிய கடன் தொகையானது சீனா எங்கு எங்கு எல்லாம் இடம் வேண்டும் எனக் கேட்கிறதோ அங்கெல்லாம் இலங்கை தனது இடத்தை கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளியது. இந்த நிலையில் அரசாங்கம் இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வை எட் டாமல் எந்த நாட்டுடனும் ஒரு சுமுகமான உறவை பேண முடியாது. கடந்த அரசாங்கத்தைப் போல் நாங்கள் யாருக்காவும் எதுவும் செய்ய வேண்டிய அவசியமில்லை என்று பொறுப்பின்றி செயற்ப டவும் முடியாது. உள்நாட்டு ஊழியர்களின் அச்சத் தின் காரணமாக எழுந்திருக்கும் சீன எதிர்ப்பும், சர்வதேச சமூகத்தின் சீன எதிர்ப்பும் வேறு வேறு நலன்களை கொண்டதாக இருக்கின்ற போதிலும், இதற்கு மூல காரணமாக இருப்பது இனப்பிரச்ச னை என்பது இங்கு விளங்கிக் கொள்ள வேண்டிய விடயம். ஒட்டுமொத்தத்தில் இனப்பிரச்சனையில் இருந்து விலகி இந்த அரசாங்கம் யாருக்கும் எத்தகை யதொரு தீர்வையும் கொடுத்து விட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனையே புதிது புதிதாக ஏற்படும் போராட்டங்கள் வெளிப்படுத்தியும் வருகின்றன. இத் தருணத்தை தமிழ் தரப்பினர் சரியாக பயன்ப டுத்தி கொண்டு அரசாங்கத்தின் மீது உரிய அழுத் தத்தை செலுத்தி தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையிலும், நிரந்தர தீர்வை எட்டுவதற்கும் முயற்சிக்க வேண்டும் என்பதே அரசி யல் ஆலோசகர்களின் கருத்தாக உள்ளது.

அரசாங்கம் இனப்பிரச்சனைக்கான தீர்வை இனி யும் தள்ளி வைக்காமல் பல்வேறு விடயங்களை முன்வைத்து அதனை திசை திருப்பாமல் இதய சுத்தியுடன் தீர்வு காண்பதற்கு முன்வரவேண்டும். இதுவே இந்த நாட்டை வலுவான நிலைக்கு இட்டுச் செல்வதற்கு உதவுவதுடன் நாட்டில் சகல இனங் களும் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து ஏனைய நாட் டிற்கு முன்னுதாரணமாக திகழ்வதற்கு வழிகோலும் என்பது மக்கள் அனைவரதும் கருத்தாக உள்ளது எனலாம்.

போதை வேண்டாம்! அந்தப் பாவைகள் பாவமே

சர்வதேச நல்லொழுக்க தினமாகவும், மது ஒழிப்பு தினமாகவும் ஒக்ரோபர் 3 ம் திகதி ஐ.நா சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

கோப்புப்படம்
மது உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும்

உலக மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மது, சமூகத்தை முற்றிலும் அழிக்கும் ஒரு கொலைகாரனை போன்றது. அனைத்து வகையான நோய்களுக்கும் முன்னோடியாக இருப்பது போதைப்பொருள் பயன்பாடு. போதைப் பொருட்களை முற்றிலும் ஒழிப்பதற்கு உலக நாடுகள் நடவடிக்கை எடுப்பது மற்றும் போதைபொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவது என்ற நோக்கத்துடன் ஆண்டுதோறும் ஒக்ரோபர் 3 ம் சர்வதேச மது ஒழிப்பு தினமாகவும் மற்றும் சர்வதேச நல்லொழுக்க தினமாகவும்,கடைபிடிக்கப்படுகிறது.

மது உணர்வூட்டும் பொருள் அல்ல. உணர்வை, உடலை அழிக்கும் ஒரு நச்சுப் பொருள். மது அருந்துவதால் சுதந்திர உணர்வு தோன்றுவதாகவும், அதிக சக்தி கிடைப்பதாகவும், களைப்பு நீங்குவதாகவும் பலர் நினைக்கின்றார்கள். இளமைப் பருவத்தில் மதுவால் அதிக பாதிப்பு ஏற்படுவதில்லை என்றாலும் பிற்காலத்தில் மதுவினால் பாதிப்புகள் ஏராளம். மது நேரடியாக இரத்தத்தில் கலந்து விடுவதால் மது குடித்தவுடன், சிறிது நேரத்திற்கு உற்சாகம் பிறக்கிறது. மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால் நாளடைவில் எல்லா நோய்களையும் கொடுத்து சிறிது சிறிதாக நம்மை அழிக்கிறது.

மதுவின் தீமைகளை உணர்ந்த உலக சுகாதார நிறுவனம் ''மது நீண்ட நாளைய நலக்கேடு என்றும், தீய செயல்'' என்றும் கூறுகிறது. மது உடல் நலத்தைக் கெடுப்பதோடு சமுதாயச் சீர்கேடுகளையும் ஏற்படுத்துகிறது

மது பயன்படுத்துதல், போதைப்பொருட்களை கடத்துதல், போதை பொருள் விற்பனை ஆகிய வற்றை ஒழிக்க கடுமையான சட்டங்கள் மூலம் அனைத்து நாடுகளும் பல்வேறு முயற்சிகள் எடுத்து வருகின்றன. ஆனாலும் இதன் பயன்பாடு அதிகரிக்கின்றதே தவிர குறையவில்லை. தினமும் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் உலகில் ஆங்காங்கே நடக்கின்றன. புது தொழில்நுட்பத்தை பயன்படுத்தி போதைப்பொருட்களை கும்பல் கடத்துகிறது.

மதுவுக்கு அடிமை ஹெராயின், அபின் , கஞ்சா உள்ளிட்ட பலவகையான போதைப்பொருட்கள் உலகில் சட்டத்துக்கு புறம்பாக விற்பனை செய்யப்படுகிறது. போதைப்பொருள் பயன்படுத்தி, அவர்களை மட்டுமல்லாமல், தங்களை சார்ந்திருக்கும் குடும்பத்தையும் சீரழிக்கின்றனர். சிலர் போதைப் பொருட்கள் பயன்படுத்தாமல் இருக்க முடியாத அளவுக்கு, அதற்கு அடிமையாகி உள்ளனர். இன்றைய சூழலில் இளைஞர்கள் மட்டுமல்லாமல், ப்டசாலை மாணவர்களும் போதைப்பொருளுக்கு அடிமையாவது வருத்தமான விஷயம். இம்மாதிரியான மாணவர்களுக்கு சரியான விழிப்புணர்வு வழங்கி அப்பழக்கத்தில் இருந்து அவர்களை விடுவிக்க வேண்டும்.

சி.திவியா

439 கோடி: உலகளவில் 15 வயது முதல் 64 வயது உள்ளவர்களில் போதை மருந்து பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 5 கோடியே 90 லட்சம். இதில் வாழ்க்கையில் ஒருமுறையாவது போதை மருந்து பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 25 கோடியே 10 லட்சம். மொத்தமாக 439 கோடியே 60 லட்சம் பேர் போதைப்பொருள் பயன்படுத்துகின்றனர் என ஐ.நா., சபை போதைப்பொருள் குற்றப்பிரிவு சார்பில் 2008ம் ஆண்டு எடுக்கப்பட்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது போதைப் பொருளால் சமூகம் எவ்வாறு சீரழிந்து வருகிறது என்பதை காட்டுகிறது. அரசு ஒருபுறம் இதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தாலும், இச்செயலில் ஈடுபட்டோர் தானாக மனம் திருந்தி இதிலிருந்து விடுபட இந்நாளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

போதைப் பொருள் பாவனையில் இலங்கையில் முதலாம் இடமாக கொழும்பு மாவட்டம் காணப்படுகின்றது. இது 71% ஆக காணப்படுகின்றது. இரண்டாவதாக கம்பஹா மாவட்டம் உள்ளது. இது 22% ஈக காணப்படுகின்றது. மேல் மாகாணமே முதலிடத்தில் காணப்படுகின்றது. 600 000 இற்கு மேற்பட்டவர்கள் கஞ்சா பாவிப்பவர்கள். 1980 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஹெரெர்யின் எனும் பேர்தைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வன்புணர்வுக்கு காரணமும் இந்த போதைப் பொருள் தான்.வவுனியாவில் ஹரிஸ்ணவி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதும் போதைப் பொருள் பாவிக்கப்பட்டவர்களாலே தான். போதை வஸ்துக்கு அடிமையானவர்கள் 50% திருமணமாகாத இளைஞர்களாவர். ஜபல் கலைகழகம், உயர்தர, சாதாரணதர மாணவர்களாவர். 45% திருமணமானவர்கள். இதில் 50% இல் 69% ஆனவர்கள் பாடசாலை மாணவர்கள். இது சுகாதார அமைச்சின் அறிக்கை. யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் வடமாகாணம் போதைப் பொருள் பாவனையால் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றது.

காச நோய், இருதய நோய், நீரிழிவு நோய், புற்று நோய்கள், தொற்றா நோய்கள், போன்றவற்றுக்கு ஒரு காரணமாவும் அமைகின்றன. சிறுநீரகம் இழக்கப்படுவதற்கு முக்கிய காரணம் கசிப்பு. போதையினால் ஏற்படுகின்ற விளைவுகள் பல்வேறு பட்ட உயிரிழப்புகளுக்கு காரணமாகிறது.

பல்வேறுபட்ட நோய்களுக்கு காரணமாகின்றது. மகிழ்ச்சியை மறைத்தல், வறுமை, குடும்ப பிரச்சனைகள், பிள்ளைகளது கல்வி நிலை பாதிக்கப்படுதல், சுகாதார சீர்கேடுகள் ஏற்படுதல், பாரிய வீதி விபத்துகளுக்கு காரணமாக விளங்குதல், பாரிய குற்றச் செயல்களுக்கு முதற் காரணமாக விளங்குவது கொலை, கற்பழிப்பு, கொள்ளை. இதன் பின்னணியில் உள்ளவர்கள் கைது செய்யப்பட வேண்டும்.

ஆகவே மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் இறுக்கமான முடிவுகளை ஏற்படுத்த வேண்டும் - வீதி பாடகங்கள், துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் முலம் விழிப்புணர்வை ஏற்படுத்தல். மது பாவனையை குறைக்க முற்படும் திணைக்களங்களாக இலங்கை பொலீஸ் திணைக்களம், பொலீஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு, மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைகள், சுங்கவரித் திணைக்களங்கள், அரச திணைக்களங்கள் காணப்படுகின்றன. போதைப் பொருள் பாவனையை தடுப்பதற்கு வழிகளாக பாவனையின் பாதிப்புக்களை நன்கறிந்து கொள்ளல் 'தான் பாவனை செய்வதில்லை என சபதம் எடுத்தல்' வேண்டும். இவிழிப்புணர்வை பல மட்டங்களிலும் ஏற்படுத்தல் வேண்டும்.

மாற்றீடான நல்ல பல பொழுது போக்கு மற்றும் கேளிக்கைகளை வளர்த்துக் கொள்ளல், பாவனையால் வரும் வீண் விரயத்தை உணர்ந்து அதற்குரிய செலவை சேமிப்பாக மாற்றுதல், வீடுகளில் நடை பெறும் விசேட தினங்களில் பாவனையை குறைத்து தவிர்த்து நல்ர விடயங்களில் செலவழித்தல், பாவனையாளரை தலைமைப்பதவியில் அமர்த்தி பொறுப்புணர்வை ஏற்படுத்தல். பாவனைக்கு வற் புறுத்தப்படும் பட்சத்தில் வேண்டாம் இல்லை என சொல்ல பழகுதல்.என்பனவாகும்.

இன்றைய இளைஞர்கள் குடியுடன் கூடிய குடும்ப வன்முறைகள் மற்றும் கலாச்சார சீரழிவுகளிலிருந்தும் எமது சமுகத்தை பாதுகாப்பதற்கு போதை வஸ்துக்களை குறைப்பதற்கான வழி வகைகளை மேற் கொள்ள வேண்டும். குடி நேபயிலிருந்து மீட்டெடுக்க வைத்தியசாலைகளில் நட்பு நிலையம், உளநல பிரிவு அது சார்ந்துள்ள ஏனைய துறைகளுடன் கை கோர்த்து செயற்பட்டு வருகிறது. எனவே போதையற்ற வாழ்க்கையின் மகிமையை அறிந்து எமது சமுதாயத்தை இளைஞர்கள் வளர்சி பாதையில் இட்டுச் செல்ல வேண்டும்

சமூக அவலத்தின் உச்சிக்கு சென்றோம்... மறுபிறவி எடுத்தோம்: 'போதையின் பாதையில்' இருந்து மீண்டவர்களின் வடிகால்

ஆண்... இனிய இல்லத்தின் தூண். குடும்பத்தை வழிநடத்தும் 'ஆணிவேர்'. ஆணிவேர் நன்றாக இருக்கும் வரை, குடும்பமும் நன்றாக இருக்கும். மது, கஞ்சா, சிகரெட்... என ஆண்களை சீரழித்து, அவர்தம் குடும்பங்களை சீர்குலைக்கும் விஷயங்கள் சமுதாயத்தில் அதிகம். நல்ல வேலையை இழந்து, மனைவியிடம் மதிப்பிழந்து, பிள்ளையிடம் மரியாதை இழந்து, சமுதாயத்தில் பெயர் இழந்து, 'மனிதன்'என்ற தகுதியை மொத்தமாக இழக்கச் செய்துவிடுகிறது 'போதை'. போதையின் பாதையில் சென்று, மறுவாழ்வின் மூலம் குடும்பத்துடன் சந்தோஷமாக இணைந்த ஆடவர்களின் அனுபவங்கள், நம் ஒவ்வொருவருக்கும் பாடம். போதை எதிர்ப்பு தினமான இன்று மீளவேன்டும்

போதையால் ஏற்படும் பிரச்னைகள் குறித்து, மனநல டாக்டர் கூறியதாவது: போதை என்பதும் ஒருவித நோய் தான். மது, ஊக்கமருந்து, கஞ்சா, கொக்கோ, ஓயிட்னர், தின்னர், புகையிலை, பீடி, சிகரெட், மயக்க, தூக்க மருந்துகள், வலி நிவாரணிகள் அனைத்துமே போதை ஏற்படுத்தக் கூடியவை. மருந்துகள் அனைத்துமே நோயை குணப்படுத்த கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அதை அளவுமீறி பயன்படுத்தி, போதை மயக்கத்திற்கு ஆட்படுகின்றனர். பெரியவர்கள் மட்டுமின்றி, பள்ளி மாணவர்கள் கூட இப்பழக்கத்திற்கு ஆளாகின்றனர். ஓயிட்னர், தின்னர், நகப்பாலீஷ், இருமல் மருந்து, மயக்க மருந்துகளை மாணவர்கள் பயன்படுத்துவது முதலில் தெரியாது. அதற்கு அடிமையாகும் போது, பதட்டம், சந்தேகம், காதில் யாரோ பேசுவது போன்ற தோற்றம், தனிமையை விரும்புவது போன்ற பிரச்னைகள் ஏற்படும். கையில் காசு இல்லாத போது, வீட்டில் பொருட்களை திருடுவர். இளம் குற்றவாளிகள் உருவாவதற்கு இதுவும் காரணம். போதை பழக்கத்தால் உச்சி முதல் உள்ளங்கால் வரை உடலும், மனதும் பாதிக்கப்படும். முறையான, தொடர் சிகிச்சையின் மூலம் யாரையும் நல்வழிப்படுத்தலாம், என்றார்.

மதுவின் தீமைகளை உணர்ந்த உலக சுகாதார நிறுவனம் 'மது நீண்ட நாளைய நலக்கேடு என்றும், தீய செயல்' என்றும் கூறுகிறது. மது உடல் நலத்தைக் கெடுப்பதோடு சமுதாயச் சீர்கேடுகளையும் ஏற்படுத்துகிறது.

ஏழைகள், கூலித் தொழிலாளர்கள், கடின உழைப்பாளிகள், கவலைப்படுகின்றவர்கள், மன நிம்மதி இழந்தவர்கள் போன்றவர்களே, அதிகம் மது அருந்துவதாக புள்ளி விவரங்கள் கூறுகிறது. சந்தோசத்திற்காக குடிக்க ஆரம்பித்தவர்கள் பிறகு மதுவிற்கு அடிமையாகி விடுவதோடு குடும்பத்தையும் துயரத்தில் ஆழ்த்தி விடுகின்றார்கள். குடிப் பழக்கம் உள்ள வீட்டுக் குழந்தைகளும் நாளடைவில் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி கெட்டுப் போகும் நிலை ஏற்படுகிறது.

எனவே இளம் குடும்பங்களை சின்னாபின்னமாக்கி, சமூகத்தை சீரழிக்கும், இளைஞர்களைப் பலியெடுக்கும் மது அரக்கனை அழிப்போம்.

குடிகாரர்களை குணமுள்ள மனிதர்களாக, மதுவுக்கு அடிமையான இளைஞர்களை மதியுள்ள துடிப்பான சாதனையாளர்களாக மாற்ற திடசங்கற்பம் பூணுவோம்.

அது ஒரு அழகிய கனாக்காலம்...

மனிதன் மீண்டும்மீண்டும் பெறத்துடிக்கும் ஓர் அறிய பருவம் குழைந்தைப்பருவம். இப்பருவமே ஒருவர் வாழ்க்கையின் அடித்தளம். எதிர்கால சிந்தனைகள் அதிகமில்லா ஓர் நிகழ்கால கொண்டாட்டம் அது.

இப்பருவங்களை சிறப்பாய் அமைத்துக்கொடுப்பதென்பது அக்குழந்தைகளைச் சார்ந்தவர்களின் கடமை. முக்கியமாக பெற்றோர்கள்.

குழந்தைகளின் உணர்வுகள் மதிக்கப்படவும் கவனிக்கப்படவும்வேண்டிய ஒன்று.

காரணம்,

இப்ருவத்தின் ஒவ்வொரு உணர்வுகளும் மனதில் ஆழமாக பதிந்துவிடக்கூடியவை.

அப்படி பதியக்கூடிய விஷயங்கள் நேர்மறையாகவும், எதிர்கால உலகத்தை எதிக்கொள்ளும் சக்தியுடையதாகவும் இருக்கவேண்டுமே தவிர துளியும் எதிர்மறைகள் தீண்ட அனுமதித்திடக் கூடாது. ஒருவேளை தீண்டியிருந்தால் அதை எதிக்கொளும் நம்பிக்கை ஆயுதம் கொடுக்கப்பட வேண்டும்.

குழந்தைகளின் சிரிப்பை கவனியுங்கள், அவை ஏளனம் செய்யும் கூட்டங்களிலிருந்து வருமாயின், அண்டவிடாதீர்கள். அறிவுறுத்துங்கள்.

அழுகையை கவனியுங்கள்,

சில கடின வார்த்தையால் மனம் காயப்பட்டிருக்கலாம். அழுகை அர்த்தமற்ற அடம்பிடித்தலாக இருப்பின், அழுவதே சிறப்பு.

லீனா ஜெசி

பின் விளக்கி கூறுங்கள்.

கோபங்களை கவனியுங்கள், சமாதானம் செய்யுங்கள். முக்கியமாய், பிறர் மீதான உங்கள் கோபங்களை பிள்ளைகளிடம் திணிக்காதீர்கள்.

ஆடு பகையாகிப்போன இடங்களில் குட்டிகள் உறவாடலாம், தகுதியிருப்பின் தடுக்காதீர்கள்.

ஏக்கங்கள் எதற்காக இருப்பினும், அன்பிற்காக இருக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

அமைதிக்கான அர்த்தங்கள் பல. குழந்தையின் மாற்றம் அமைதியாய் இருப்பின் விளைவுகள் அதிகம் இருக்கலாம். உடனடியாய் கலந்துபேசுங்கள்.

சரியானவற்றை செய்ய அச்சம் தடையாய் இருக்கவிடாதீர்கள். தைரியமுடையவர்களே சாதனையாளர்கள்.

மற்ற குழந்தைகளுடன் ஒப்பிடாதீர்கள். ஒப்பிடும் நேரம் வந்தால் தன் குழந்தைகளை தாழ்வுமனம்கொள்ள வைத்துவிடாதீர்கள். அதன் வலிகள் அதிகம்.

சிறுசிறு தோல்விகளை ஏற்றுக்கொண்டு வெற்றியடைய கற்றுக்கொடுங்கள்.

உணவில் அக்கறை எடுங்கள், ஆரோக்கிய

குறையினால் மனம் பாதித்திடக்கூடாது.

உடைகளில் அக்கறை எடுங்கள், சில மோசமான

கண்களின் ஆபாச தாக்குதல்களால் மனம் வேதனையடைந்திடக்கூடாது.

அறியவையுங்கள்

புரியவையுங்கள்

சொல்லிக்கொடுங்கள்

சுற்றிக்காட்டுங்கள்

தவறான பாதைகளில் செல்லும் கிளைகளை இளமையிலேயே கண்டு களையுங்கள்.

குழந்தைகள் உயரம் தொடவேண்டியவர்கள்

பறந்து ஓடி ஆட வேண்டியவர்கள்

எதிர்கால உலகம் அவர்கள்

குழந்தைகள் உலகம்

ஒரு குழந்தை பிறக்கும்போது அதனுடன் பெற்றோர்களும் பிறக்கிறார்கள் என்பதுதான் யதார்த்தமான உண்மை. குழந்தைக்கு எப்படி இந்த உலகம் புதிதோ, அதேபோல பெற்றோர்களுக்கும் குழந்தைகள் உலகம் என்பது புதிதுதான். வளரும் குழந்தைகள் எளிதாக நமது உலகுக்குள் அடியெடுத்து வைத்து அதற்குள் தங்களை இணைத்துக் கொள்கிறார்கள். ஆனால் வளர்ந்துவிட்ட பல பெற்றோர்களால் குழந்தைகள் உலகத்துக்குள் அடியெடுத்து வைக்க முடியவில்லை. இந்த இரண்டு உலகங்களும் இணையும் இடத்தில்தான் தரமான தலைமுறைகள் உருவாக முடியும்.

குழந்தைகளின் உலகத்தைப் புரிந்துகொண்ட பெற்றோர்களிடம் வளரும் குழந்தை எதிர்காலத்தில் சிறந்தமுறையில் நம் சமுதாயத்தை எதிர் கொள்ளும் என்று கட்டாயம் சொல்ல முடியும். அந்த வகையில் குழந்தை வளர்ப்பு என்பதில் பெற்றோர்களுக்கான புரிதல் முதன்மையான இடத்தைப் பிடிக்கிறது. தகுதியான பெற்றோர்கள் என்பது அடுத்தத் தலைமறையின் அவசரத் தேவைகளில் ஒன்றாகிவிட்டது. இன்றைய பெற்றோர்களுக்கு வேண்டிய 3 முதன்மையான தகுதிகளைக் குறித்துப் பார்க்கலாம்.

மறுக்கப் பழகுங்கள்

நாம் சிறுவயதில் பக்கோடா கேட்டாலே பத்து நாள் காத்திருக்க வேண்டும். அன்று நாம் கேட்டது உடனே கிடைக்காது. அழுது புலம்பினாலும் அம்மாவிடம் ஆறுதல் வார்த்தைகளைத் தவிர வேறு எதுவும் அவ்வளவு எளிதில் கிடைத்துவிடாது. அன்று நம்மில் பலர் அண்ணாமலை ரஜினி போல சபதம் எடுத்திருப்போம். எனக்கொரு மகனோ, மகளோ பிறக்கும்போது, கேட்டதை எல்லாம் நான் வாங்கித்தருவேன் என்று. உண்மையில் அந்த சபதங்கள் எல்லாம் இன்று நிறைவேறிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். இன்று எந்த வீட்டில் வேண்டுமானாலும் போய் பாருங்கள், எவ்வளவு விளையாட்டுப் பொருட்கள் இருக்கிறதென்று. அன்று சில விளையாட்டுப் பொருட்களை வைத்திருந்த நாம் ஒரு அளவுக்கு மேல் பிடிவாதம் செய்ததில்லை. கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்தும் இன்றைய குழந்தைகள் ஏன் இவ்வளவு பிடிவாதம் செய்கின்றன. கட்டாயம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

என்பது நம்மை அதிர்ச்சியில் உறைந்து போகச் செய்யும் செய்தி. சிறுசிறு தோல்விகள் கூட ஏன் இன்றைய குழந்தைகளை தற்கொலை செய்யுமளவுக்கு தூண்டுகிறது

நம் தலைமுறைக்கு தோல்விகள் குழந்தைப் பருவத்திலிருந்தே துவங்கி விடுகின்றன. ஐஸ் கிரீம், சாக்லேட் எல்லாம் திருவிழா போன்ற நாட்களில் மட்டும்தான் கிடைக்கும் மற்றநாட்களில் கனவில் மட்டுமே சாத்தியம். இன்றைய தலைமுறை குழந்தைகள் தோல்வி என்றால் என்னவென்றே அறியாமல் வளர்கின்றார்கள். சிறுசிறு தோல்விகளுக்கெல்லாம் மனமுடைந்து போகிறார்கள். தோல்விகளைத் தாங்கிக்கொள்ளும் மனப்பக்குவம் இல்லை. கேட்டது எல்லாம் கிடைக்கும், கேட்காமலே நிறைய கிடைக்கும் என்ற மனநிலையை சிறுவயதிலிருந்தே நாம்தான் ஊட்டி வளர்க்கிறோம். கேட்டது கிடைக்காதபோது அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகையால் சிறுவயதில் இருந்தே மறுக்கப் பழகுங்கள். குழந்தைகள் துவக்கத்தில் அடம்பிடித்தாலும் போகப்போக புரிந்துகொள்வார்கள். தோல்விகள், மறுப்புகள், வலிகளும் சேர்ந்ததுதான் வாழ்க்கை. அதைத் தாங்கிக்கொள்ள குழந்தைகளைப் பழக்குவது பெற்றோராகிய நமது கடமை.

13 ஆம் பக்கம் பார்க்க....

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்பேசும் பொதுவேட்பாளர்

ஜனாதிபதி தேர்தலுக்கான முஸ்தீபுகள் மேற்கொள்ளப்படுகின்ற இறுதிக்கட்ட நேரத்திலாவது தமிழ் பேசும் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவாளர்களும், மக்களும் தமிழ் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ள முன்னாள் அமைச்சரும், ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத் , தமிழ் முஸ்லிம் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் புதிய அணுகுமுறையைப் பரீட்சித்துப் பார்க்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிகளாலும், அரசாங்கங்களாலும் உத்தரவாதம் வழங்கப்பட்டும் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ள தமிழ் முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளை நிரல்படுத்த வேண்டும் என்றும், அவற்றை நிறைவேற்றுவதற்கான அரசியல் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஆணையை சிறுபான்மை மக்களிடம் கேட்டுப் பெறுகிற சந்தர்ப்பமாக இத்தேர்தலை தமிழ் முஸ்லீம் தலைவர்கள் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த நாற்பது ஆண்டுகாலமாக நடைபெற்ற அனைத்து ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ்பேசும் மக்கள் பெரிய கட்சிகளின் வேட்பாளர்கள் அனைவருக்கும் அளித்த வாக்குகள் அனைத்தும் வீண்விரயமாக்கப்பட்ட வாக்குகள் என்பதே உண்மையாகும். எந்தவொரு ஜனாதிபதியும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றி வைக்கவில்லை என்பதை பாடமாகக் கொண்டுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் புதிய அணுகுமுறையைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதிகளாலும், அரசாங்கங்களாலும் உத்தரவாதம் வழங்கப்பட்டும் நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ள தமிழ் முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளை நிரல்படுத்தி அவற்றை நிறைவேற்றுவதற்கான அரசியல் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஆணையை சிறுபான்மை மக்களிடம் கேட்டுப் பெறுகிற சந்தர்ப்பமாக தமிழ் முஸ்லீம் தலைவர்கள் இத்தேர்தலைப் பயன்படுத்த வேண்டும்.

பெருமளவான வாக்குகளை மக்கள் தருவார்களாக இருந்தால் இவ்வாணையை பெரும்பான்மை சிங்கள மக்களிடமும்,சர்வதேசத்திடமும் , ஐக்கியநாடுகள் சபையிடமும் , அயல்நாடுகளிடமும் முன்வைத்து நியாயம் கோருவதற்கான புதிய அரசியல் நகர்வுகளைச் செய்ய முடியும். தமிழ் அரசியல் சக்திகளும், முஸ்லிம் அரசியல் சக்திகளும் நாடாளுமன்றத் தேர்தல்களில் தான் ஆணைகளைப் பெற்றிருக்கின்றன.இவையும் வெற்றுப் பிரச்சார நெடிகளாகவும், கற்பிதங்களாகவும் பழையனவாகி விட்டன என்பதை புரிந்துகொள்வது முக்கியமாகும்.

பழைய அபிலாசைகளுடனும் கோரிக்கைகளுடனும் , யுத்த முடிவின் பின்னரும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரும் , கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில் புதிய கோரிக்கைகளைக் கலந்து முன்வைத்து புத்தம் புதிய ஆணையினை மக்களிடம் இருந்து பெறுதல் அவசியமாகும்.

எப்படி நெடுங்காலமாக ஏமாற்றுவது என்பது ஒழுக்கக்கேடான அரசியலோ அவ்வாறே ஏமாறுவதும் ஒழுக்கக்கேடான அரசியலேயாகும். இந்தப் படிப்பினையை சிறுபான்மையினர் நாம் பெற்றுவிட்டோம், எமது பெரும்பான்மைச் சகோதரர்களே நீங்களும் இப்படிப்பினையை இத்தேர்தல் மூலம் பெறவேண்டும் என்று திறந்த மனதோடு கோருவதற்கான வாய்ப்பை தமிழ்பேசும் பொது வேட்பாளர் நியமனம் ஏற்படுத்தும்.

பெரிய கட்சிகள், தேர்தல் காலங்களில் சிறுபான்மைக் கட்சிகளையும் மக்களையும் இடுப்பில் தூக்கி வைத்து கொஞ்சிக் குசலம் விசாரித்துவிட்டு தூக்கி வீசுகிற அரசியலைக் இல்லாதொழிக்க வேண்டும்.சிறுபான்மைத் தலைவர்களுக்கு சலுகைகளை வழங்கிவிட்டு சமூகங்களின் பிரச்சினைகளை ஜனாதிபதிக் காரியாலய மற்றும் நாடாளுமன்றக் குப்பைக் கூடைகளுக்குள் போடுகிற வஞ்சக நடைமுறையை வீதியோரக் குப்பைத் தொட்டிக்குள் போட்டு விட நாம் துணியவேண்டும். இத்துணிவை வெளிக்காட்டுவதற்கு தமிழ்பேசும் பொதுவேட்பாளரை நிறுத்துவதே இன்றிருக்கும் ஒரே வழியாகும்.

அனுகூலமும் பிரதிகூலமும் தந்துவிட்டு ஓய்ந்து போன தைரியமான முப்பதாண்டுகால ஆயுதப் போராட்டமும், அதன் பின்னர் தைரியத்தை அடகு வைத்துச் செய்த பத்தாண்டுகால இணக்கம் கலந்த அச்ச அரசியலும், எமக்கு மேலும் தைரியத்தை தரவில்லை என்றால் அடிமை வாழ்வை தொடர வேண்டிய நிலைதான் ஏற்படும்.அடிமை வாழ்வை தவிர்க்க தமிழ்பேசும் பொதுவேட்பாளரை நிறுத்தி சிங்கள பௌத்த அடக்குமுறை அரசியலுக்கு சிறு பாடம் கற்பிக்கும் தருணத்தை தவறவிட முடியாது.

அதிகாரத்தை துறந்து புத்தர் காட்டிய ஆன்மீக நீதியான வாழ்வியல் கல்விக்கு புறம்பாக வன்முறையை கையில் எடுத்துள்ள காவிகள் நாடெங்கும் காவித் திரிகிற அரசியலுக்கு சிறுபான்மையினர் அடிபணிய முடியாது. இவ்விறுதித் தருணத்திலாவது தமிழ்பேசும் பொதுவேட்பாளரைத் தெரிவு செய்வதற்கான அழுத்தத்தை சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவாளர்களும் மக்களும் தமது தலைவர்களுக்கு கொடுக்கவேண்டும்.

ஏ .கே .சி துவான் நஸீர்
ஊடக பொறுப்பாளர்
ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு

ஆசிரியரின் மேன்மையை வலியுறுத்தும் உலக ஆசிரியர் தினம்

ஆசிரியன் என்போன் சிறந்த தேடுதலை விசாலப்படுத்திய பயிற்சியும், அதன் ஊடாக மாற்றத்தை நோக்கிய கல்வியும், கற்பவனை வளத்தில் திறமையாளனாக்கும் வல்லமை பதிந்துள்ள திறமையும், படைப்பாற்றலை உருவாக்கும் படைப்புத்திறனும், அதன் ஊடாக நேயமிக்க மனித சமூகத்தை உருவாக்குதலும், அவ்வாறான மனிதனைத் வினைத்திறன் கொண்டவனாகவும், ஒரு சிறந்த சீர்திருத்தவாதியாகவும் இளஞ்சிறார்களை சமூகத்தின் நற்பிரஜையாக்கும் பணியில் அன்றிலிருந்து இன்றுவரைக்கும் உழைத்துவருகின்ற ஒரு குழுவினர்தான் ஆசிரியர்கள் ஆவார்கள். இதனால்தான் ஆசிரியன் மிக உயர்ந்த ஸ்தானத்தில் காணப்படுகின்றான். எழுத்தறிவித்தவன் இறைவனாவான். இந்த உலகத்தில் உயர்ந்த இடத்தில் இருக்கின்ற மாதா, பிதா, குரு என்கிற முக்குரவர்களில் குருவின் தயவும், அன்பும் ஒரு குழந்தையின் வாழ்வியலில் மிக உன்னத இடத்தை வகிக்கிறது. அந்த அன்புக்குரியவர்களான ஆசிரியர்களை உலகம் போற்றவேண்டும், மதிக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட தினம் உலக ஆசிரியர் தினமாகும். இந்தத் தினம் ஒக்டோபர் 06 இலங்கையில் அனுஷ்டிக்கப்படுகிறது. இது ஆசிரிய பெருந்தகைகளுக்கு கிடைத்திருக்கின்ற மிகப்பெரிய கௌரவமாகும்.

மனிதர்களை புனிதனாக்கி, சிறந்தமனிதனாக உருவாக்குவது ஆசிரியர்களது பணியாகும். ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படுகின்ற ஒவ்வொரு மாணவர்களுக்கும் வாழ்க்கை என்றால் என்ன, சமூகத்தில் எவ்வாறு வாழவேண்டும், சக மாணவர்களிடையே எவ்வாறு பழகவேண்டும், நல்லொழுக்கத்தைப் பற்றிய உயர்வான எண்ணக் கருவினை மாணவர்களுக்கு புரிந்து கொள்ளக் கூடிய வகையில் கற்றுக்கொடுப்பவர்கள் இந்த ஆசிரியர்கள். அதனால்தான் ஆசிரியன் உருகின்ற மெழுகுதிரிக்கு உதாரணமாகக் கூறப்படுகின்றனர். பிறருக்கான ஒளியை வழங்கிக்கொண்டு தன்னை உருக்கிக்கொள்கின்ற ஒருவராக, ஒளிப் பிரவாகமாக இருந்து மற்றவருக்கு வழிகாட்டுகின்ற பணியை மேற்கொள்கின்றவர்கள் ஆசிரியர்கள். தனது வாழ்நாளை முழுவதும் கற்பிக்கின்றவர்களாகவும், சிறந்த அடைவுக்கு ஏணியாகவும், தோணியாகவும் இருந்து மற்றவர்களைக் கரைசேர்க்க தன்னை முழுமையாக அர்ப்பணிக்கின்றவர்கள்;தான் இந்த ஆசிரியர்கள்.

ஒரு சிறந்த ஆசிரியர்களின் அன்பு, பண்பு, பாசம், குணம் போன்றவைகளைப் பார்த்து தானும் பின்பற்ற வேண்டும் என்பதற்காக மாணவர்களோடு மாணவர்களாக தன்னை உருமாற்றிக் கொள்ளக் கூடியவர்கள்தான் ஆசிரியர்கள். அதனால்தான் ஒரு மாணவனுக்கு கற்பிக்கின்றபோது ஆசிரியரும் மாணவனாக, பெற்றோராக, பாசமிக்க நண்பனாக மாறி பாடங்களைக் கற்பிக்கின்றார். இவ்வாறு சிறந்த இலட்சியத்தையும், அடைய வேண்டிய குறிக்கோளையும் ஆரம்பத்திலிருந்தே மாணவர்களது மனதில் பதியவைப்பதற்குரிய முயற்சிகளை தன்னிடம் வழங்கப்பட்டுள்ள அந்த பிஞ்சுகளை மாற்றியமைக்கின்ற மாபெரும் பொறுப்பில் தன்னை முழு மூச்சாக ஈடுபடுகின்ற அந்த மகிழ்ச்சிகரமான நாளிகைகள்தான் ஒரு சிறந்த ஆசிரியருக்குக் கிடைக்கின்ற மிகப்பெரிய சந்தோசமாகும்.

இன்று உலகளவில் வளமிக்க எதிர்காலத்தை நிலையானவகையில் வைத்திருக்கின்ற எதிர்காலத் தலைவர்களாகவும், சிறந்த நற்பிரஜைகளாகவும் தோற்றுவிக்க பாடசாலைகளில் கற்றலில் ஈடுபடுகின்ற மாணவச் சமூகத்தை சீராக்குகின்றவர்கள் ஆசிரியர்கள். இவ்வாறானவர்களுக்கு கொடுக்கின்ற கௌரவும், பாராட்டுக்களும்தான் இவர்களுக்குக் கிடைக்கின்ற ஒரே ஒரு மகிழ்ச்சியான தருனமாகும். இந்தத் தருனத்தில்தான் உலக அரசுகள்கூட இணைந்திருப்பது ஆசிரியர்களுக்குக் கிடைத்திருக்கின்ற உன்னதமான கௌரவமாகும். தமக்காக தம்மை அர்ப்பணித்த இவர்களுக்கான ஒரு மரியாதை நாளாகவும் இந்நாளை ஒதுக்கியிருக்கின்றமை போற்றத்தக்கதாகும்.

மனித வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாத, மனித சமூகத்தின் முதுகெலும்பாக விளங்குகின்ற 'ஆசிரியரை' கௌரவப்படுத்தும் நோக்கில் 'ஒக்டோபர் 05' உலக ஆசிரியர் தினம் உலகளாவிய

அட்டாளைச்சேனை மன்சூர்

ரீதியில் பல்வேறு விதமாகக் கொண்டாடப்படுகின்றது. யுனெஸ்கோ நிறுவனம் ஆசிரியரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக வருடந்தோறும் கல்விக்காக தன்னை அர்ப்பணித்துவரும் ஆசிரியர்களின் நடத்தைக் கோலத்தை மனதில் கொண்டு அவர்களால் ஆற்றப்படுகின்ற சேவைக்குரிய கௌரவத்தை வழங்கி வருகின்றது. இலங்கையில்கூட இந்த ஆசிரியப் பெருந்தகைகளின் சேவைகளை நினைவுகூர்ந்து நாட்டின் ஜனாதிபதியின் பொற்கரங்களால் பரிசுவழங்கி, கௌரவிக்கப்படுகின்றனர். அதற்கான ஆசிரியர்களுக்கான உயர் விருதான குருபிரதீபா பிரபா விருதும் வழங்கி கௌரப்படுத்தப்படுத்தப்பட்டு வருகின்றமை சிறப்பானதாகும். அந்தச் சிறப்பினைப் பெறுகின்றவர்கள் தன் வாழ்நாளில் அதிகமான காலத்தை மாணவர்களின் உயர்வுக்காக வியர்வை சிந்தி, கண் விழித்து, தன்குழந்தைபோல பிறர் குழந்தையும் பாதுகாத்து கல்வி எனும் மாற்றத்தை நோக்கிய நகர்வினை மேற்கொண்டமைக்கான ஒரு உயர் விருதாகவே குருபிரதீபா விருதினை ஒவ்வொரு ஆசிரியரும் பார்க்கின்றனர்.

வாழ்க்கையில் எந்தச் சூழலிலும் தன்னம்பிக்கையுடன் போராடி வெற்றி பெற வேண்டும் என்கிற புரிதலையும், மன தைரியத்தையும் மாணவர்களிடம் ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு பொதுவாக ஆசிரியரின் கற்பித்தல் முறை இருக்கும்படி அவர்களுக்குப் போதியளவு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மனிதனை மனிதாக உருவாக்கும் சிற்பிகள் தான் ஆசிரியர்கள் என்பதை புரிந்து கொண்டு, தன்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற மாணவனை நல்மாணாக்கனாக உருவாக்குவதோடு, நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பையும் அவர்கள் கையில் எடுத்துக் கொண்டு சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கும்படி கற்பிக்கின்றனர். தின்னைப் பள்ளிகள் தொடக்கம் இன்றைய நவீன தொழிற்நுட்ப உபகரணங்களுடன் கற்பிக்கும் காலமாக மாறியிருந்தாலும் ஆசிரியர்களது பணியின்றி எவ்விதமான கற்றல் செயற்பாட்டினையும் ஒரு மாணவனாக இருந்து கற்க முடியாது. எந்தவொரு மாணவனும் சிறந்தமுறையில் கற்றுத் தேறவேண்டும் என்கிற அவாவில்தான் ஆசிரியர்கள் இயங்கிக் கொண்டுவருகின்றனர். இதற்குப் புறம்பாக சில ஆசிரியர்களது நடத்தைக் கோலங்கள் மாற்றங்காண விளைகிற போதுதான் அந்தச் சமூகத்தின் பெயர் மாசுபடுத்தப்படுகின்ற சங்கதிகளும் ஏற்படுகின்றன.

இன்று சில பிரதேசங்களில் கல்வியில் முன்னேற்றம் காணவில்லை என்கிற குற்றச்சாட்டுக்கள் பொதுமக்களாலும், கல்விப் அலுவலகங்களாலும் முன்வைகப்படுகின்றன. உண்மைதான் இதற்கு யார் குற்றவாளிகள் என்று பார்க்கின்ற போது ஆசிரியர்கள் மாணவர்களிலும், மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் ஆசிரியர்கள்மீதும் பழிசுமத்துகின்ற ஒரு நடைமுறையும் இருக்கின்றது. இன்று ஆசிரியர்களது பணி சேவை என்பதைவிட பணத்தினை எவ்வாறு மாணவர்களிடமிருந்து கறக்கலாம் என்று சிந்திக்கின்ற ஆசிரியர்களும் இல்லாமலும் இல்லை. இன்று தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மாணவர்கள் உயர்புள்ளிகளைப் பெறுவதற்கான இரவு பகல்பாராது அந்த மாணவச்சிறார்கள் தயார்படுத்தப்படுகின்றனர். நல்ல விடயம் என்று ஒருசாரார் கூறினாலும் இதன் பின்னணியில் இருக்கின்ற உளரீதியான பிரழ்வுக்க காரணர்களாக ஆசிரியர்களும் அமைந்துவிடுகின்றனர் என்பதை நம்மில் எத்தனைவீதமானோருக்கும் தெரியும்.

தரமான கல்வியை வழங்கவேண்டும் என்கிற முன்மொழிவுகளை ஏற்று இன்று பாடசாலைகள் பெயரளவில் இயங்குகின்ற ஒரு மாயைக்குள் தத்தளிக்கின்ற நிலைமையின் காரணமாகத்தான் ஆரம்பக்கல்வியில் ஆசிரியர் இல்லாவிட்டாலும் பரவாயில்லை ஏனைய மேல்நிலை வகுப்புக்களுக்கு ஆசிரியர்கள் பாடம் கற்பிக்க முனைகின்றனர். ஆரம்பக்கல்வியில் மாணவர்களது சிறப்பான அடைவினை மேம்படுத்துகின்ற போதுதான் சிறந்த மேல்வகுப்பான கல்வியை மாணவர்கள் பெறுவார்கள் என்கிற நிலை மறந்து தொண்டர் அடிப்படையில், ஆரம்பக்கல்விக்கான பயிற்சிகளைப் பெறாதவர்களிடம் தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தப்படுகின்ற ஒரு கேவலத்தையும் இன்றைய பாடசாலைகள் பலவற்றில் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு உதாரணமாக ஒரு பாடசாலையின் தரம் 5இல் கற்றலில் ஈடுபடுகின்ற ஆசிரியர் அல்லாத ஆசிரியர் பற்றியும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக கூறுகின்றேன்.

ஒரு வகுப்பறையில் ஆசிரியர் 40மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும் என்று இருந்தபோதிலும் உண்மையாகவே இன்றைய வகுப்பறைகளில் இந்தத் தொகை மாணவர்களுக்கு கற்பிக்க முடியாது. ஆனாலும் சில இடங்களில் இவ்வாறன கற்றச் செயற்பாடுகள் நடைபெறாமலும் இல்லை. சில ஆசிரியர்கள் கூறுவார்கள் எங்களால் இந்தளவு தொகையான மாணவர்களுக்கு கற்பிக்க முடியாது. வகுப்பை இரண்டாகப் பிரித்துத் தாருங்கள் என்றெல்லாம் கூறுவார்கள். ஆனால் கூறிய அந்த ஆசிரியர் மாலைவேளைகளில் தரம் 5க்கான புலமைப் பரிசில் பரிசில் வகுப்பினை நடாத்துகின்றபோது 100 மாணவர்களை வைத்து கற்பிக்கின்றார். இங்கு அவருக்கு சிறந்த ஊதியமும் பெற்றோர்களால் வழங்கப்படுகின்றன. பாடசாலையில் வழங்கப்படுகின்ற ஊதியத்தை மறந்துவிடுகின்றார். இதுவொரு நிலை.

சில பாடசாலைகளில், பாடசாலை நேரத்தில் ஒரு ஆசிரியர் தரம் ஐந்து வகுப்பில் கற்பிப்பார். மாலையானதும் அந்தப் பாடசாலையில் இருக்கின்ற அனைத்து மாணவர்களையும் ஒன்றுசேர்த்து ஒரு வெளியார் கற்பிப்பார். இவருக்கு அந்தப் பாடசாலையின் அதிபர், இன்னும் சில ஆசிரியர்களும் சேர்ந்து பெற்றோர்களை அழைந்து தலா ஆயிரம் ரூபாய் (1000/-) பணத்தை மாதாந்தம் பிடிங்கி வழங்குவார்கள். இனி இவர் பெரிய ஆசாமிபோல பாசாங்கு செய்து இவரை விட்டால் இனி ஆளே இல்லை என்கிற அளவுக்கு கோட்டை கட்டிக் கொள்கின்ற மாணவர்கள், இவர்களது பெற்றோர்கள், இந்த அதிபரும்கூட நினைக்கின்றனர். அவரும் மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாய் பணம் பெற்று கற்பிக்கின்றார். கற்பித்தல் முறைகளோ, நுணுக்களோ, எவ்விதமான பயிற்சிகளோ, ஆரம்பக்கல்வி பற்றிய புலகட்சி எதுவுமே அற்ற சாதாரணமாக ஏஎல் படித்த அல்லது நிறுவனம் ஒன்றில் வேலை செய்கின்ற ஒருவராக அவர் இருப்பார். மாணவர்களின் உயர்தாகத்தை கல்விமீதான பற்றினை ஏற்படுத்துவதிலிருந்து விலகி வெறும் ஏட்டுக் கல்வியை வழங்குவதால் எவ்விதமான பிரயோசனமும் இல்லை என்பதை இவர்கள் அனைவரும் மறந்து விடுகின்றனர். இறுதியில் இந்த 100 மாணவர்களில் வெறும் 5 அல்லது 7 மாணவர்கள்தான் உயர்புள்ளிகளை பெறுவார்கள். மீதி அவுட். உழைக்கின்ற நபர்களும் இன்றைய நாட்களில் பாடசாலைக் கவ்வியில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றனர். இதனை சமூகம் கவனிப்பதாகவும் இல்லை.

இன்றைய ஆசிரியர் தினத்தில் இதுபோன்ற பல துஷ்பிரயோகங்கள் பாடசாலைகளில் ஏற்படுகின்றன. மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய ஆசிரியர்கள் வீசின கையும் வெறுங்கையுமாக பாடசாலை நேரங்களில் கழவாடுவதும் மிகப்பெரிய துஷ்பிரயோகமாகும் என்பதை எத்தனை ஆசிரியர்கள் தெரிந்திருக்கின்றார்கள். வருடாந்த சம்பள உயர்வு, கற்பிப்பதை தவிர்த்து அரசியல்வாதிகளை தன் கைக்குள் வைத்துக்; கொண்டு வெளியில் உலாவுவது, பாடத்தை தொலைபேசியில் பேசிக் கழிப்பது, மாணவர்களின் உண்மையான அடைவில் அக்கரையின்றி காலத்தைக் கழிப்பது, ஆசிரியர் நூலை திறந்து பார்க்காமல் 100வருடத்திற்கு

13 ஆம் பக்கம் பார்க்க....

சிறுவர்களின் முன்னேற்ற அடிகளில் கல்வியின் பங்களிப்பு

'சி'றுவர்கள் எதிர்கால உலகின் அத்திவாரங்கள்' என்பதற்கமைய சிறுவர்களானவர்கள் தங்களது வாழ்க்கைப் பயணத்தை தாயின் கருவறையிலிருந்தே ஆரம்பிக்கின்றனர். தாயானவள் கருவிலிருந்தே தன் குழந்தைக்கு கற்றலை கொடுத்து வருகின்றாள். தன் குழந்தையானது பூமியை கண்விழித்து பார்க்கும் போது சிறந்த அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும் என்பதே அன்னையின் கனவாகும். 'ஒவ்வொரு குழந்தையும் மண்ணில் பிறக்கையிலே நல்ல குழந்தை தான் அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே' என அழகான பாடல் வரிகள் கூறுகின்றது. சிறுவர்களின் முன்னேற்றத்திற்கு பெற்றோர்களின் கல்வி ஊட்டலானது மிக அவசியமாகும்.

சிறுவர்கள் என்போர் சக்தியைப் பயன்படுத்தி தமது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள முடியாதவர்கள். அதனாலேயே அதனை பாதுகாக்கும் பொறுப்பு அரசிடம் வழங்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையானது சிறுவர் என்பதற்கு, 'குழந்தை கருவுற்றது முதல் பதினெட்டு வயது வரை' சிறுவர்கள் என கூறப்படுகின்றனர். இதனாலேயே 18 வயதிற்குற்பட்ட அனைவரையும் சிறுவர்கள் என சமூகத்தினர் ஏற்றுக் கொண்டு ஒக்டோபர் 1ம் திகதி உலகம் பூராகவும் சிறுவர்தினம் கொண்டாடப்படுகிறது.

தாயானவள் தன் குழந்தை எதிர்கால உலகில் எவ்வாறு மிளிர வேண்டும் என்பதை ஆரம்பத்திலே தீர்மானிக்கின்றாள். ஒரு குழந்தையினுடைய வாழ்வில் முதல் கல்வி படியாக 'ஏடுதொடக்கல்' நிகழ்வு காணப்படுகிறது. இவ் ஏடுதொடக்கலை குருவானவரே ஆரம்பித்து வைப்பார். இதன் மூலம் சிறுவர்கள் தங்களது கல்விப் பயணத்திற்கு பலமான அத்திவாரத்தை இட்டுக் கொள்கின்றனர். அத்திவாரத்தின் பலம் கல்வியின் பலத்திற்கு சமனாகும்.

'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். சிறுவர்களின் முன்னேற்ற பாதையில் மிக முக்கியமாக கல்வி விளங்குகிறது. இன்றைய யுகத்தில் கல்வியினை முறையாக கற்றுக்கொள்பவரே நாளைய உலகினை கட்டியெழுப்புவார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சிறுவர்கள் தன் குழந்தைப் பருவத்தை விருத்தி செய்யும் காலமாக பாடசாலை புகாநிலைப் பருவம் காணப்படுகிறது. இக் காலகட்டத்தில் சிறுவர்களிடத்தில் சிறந்த விருத்தி ஏற்பட வேண்டுமாயின் பிள்ளை வளர்ச்சியுடன் கற்றலும் சிறப்பாக அமைய வேண்டும். அதன் மூலமே சிறுவர்கள் தங்களது ஒவ்வொரு படிகளையும் சிறப்பாக முன்னெடுக்க முடியும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் சிறப்பான கற்பித்தலை சிறுவர்களுக்கு வழங்குவதன் மூலம் நல்ல ஆளுமையுள்ள மாணவர்களை பாடசாலைக்குள் அனுப்பி வைக்கின்றனர். பாடசாலைக்குள் சென்ற சிறுவர்கள் தன் வாழ்க்கைப் பயணத்தை இறுவரை கல்வியிலேகொண்டு செல்கின்றனர். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' எனும் பழமொழியானது சிறுவர்கள் இளமையில் கற்கும் கல்வியானது அவர்களின் வாழ்க்கை கடைசி வரை நிலையாக இருக்கும் என்பதைக் குறித்து நிற்கின்றது. சிறுவர்கள் தன் ஒவ்வொரு விடயத்திலும் துலங்கலை வெளிக்காட்டுவதற்கு கல்வி துணைபுரிகின்றது. தூண்டியை கொடுக்கும் சிறந்த ஆசிரியரின் மூலம் சிறுவர்கள் சமூகத்தில் துலங்கலை வெளிக்காட்ட முனைகின்றனர். கல்வியானது புத்தகத்தின் மூலம் மட்டும் அறிவை வளர்ப்பதன்று. ஒவ்வொருவரும் வாழும், சூழல், இடம் என்பவற்றுக்கேற்ப அவர்களை இசைவாக்கம் செய்ய தூண்டும் அதே வேளை அவ்விடத்திற்கு ஏற்றவாறு வாழ செய்வதும் கல்வியாகும். சிறுவர்களின் முன்னேற்ற அடிகளில் சூழற்கல்வி பங்களிப்பு செய்கின்றது.

அதுமட்டுமல்லாமல் சமூகத்தில் தற்காலத்தில் நிகழ்ந்து கொண்டு வரும் பிரச்சனைகளான வன்முறை, போதைப்பொருள், மது, மாது போன்றவை தொடர்பாக விழிப்புணர்வுகளை பாடசாலையில் தூண்டுவதன் மூலம் சிறுவர்களை தீய செயல்களுக்கு ஈடுகொடுக்காமல் முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல கல்வி துணைபுரிகின்றது. சிறுவர்களுக்கான ஒளிமளமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் அதற்கான திட்டத்தினை ஏற்படுத்துவதற்குமான சிறந்த ஊடகமாக கல்வி விளங்குகிறது. கல்வியானது மாணவர்களை பல வழிமுறைகளில் வழிநடத்துகின்றது. அவற்றின் மூலம் சிறந்த எதிரிகாலத்தினை சிறுவர்கள் கட்டியெழுப்பி வருகின்றனர். ஒவ்வொரு சிறுவர்களும் ஒவ்வொரு மாதிரியான

இயல்பினைக் கொண்டுள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான கல்வியை பெற்றுக்கொள்ள முடியாத நிலை தற்காலத்தில் உருவாகியுள்ளன.

'ஒரு மைல்கள் தான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்தும்' என்னும் வள்ளுவரின் வாக்கானது ஒருவன் தான் கற்ற கல்வியானது அவனது ஏழு பிறவிக்கும் வந்து உதவி செய்யும் என்று கல்வியின் சிறப்பு கூறப்படுகின்றது. இக் கருத்தானது சிறுவர்களின் முன்னேற்றத்திற்கு வழிகோல்கின்றது. கிராமப்புறங்களிலுள்ள அநேக சிறுவர்களின் வாழ்க்கைப் பொருளாதாரமாக வறுமை நிலவுகின்றது. இவ் வறுமையின் காரணமாக சிறந்த கற்றலை பெற முடியாத நிலை சிறுவர்களுக்கு எழுந்துள்ளது. இன்று அவ்வாறான சிறார்களை இனங்கண்டு அவர்களுக்கு கற்கும் வசதிவாய்ப்பினை பல்வேறு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு இலங்கையர்கள் மேற்கொண்டு வருகின்றனர். வழி மீது விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கும் வறுமையின் சிகரங்கள் கல்வியினைக் கற்று முன்னேற்றப்பாதைக்கு சென்று நாட்டில் சிறந்தவர்களாக மிளிர்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல் சிறுவர்களின் மத்தியில் பாரிய பிரச்சனையாக மொழி பிரச்சனை காணப்படுகிறது. ஏனைய மொழி பேசும் சிறுவர்களுடன் தங்களைக் அறிமுகப்படுத்தவோ, சிறந்த உறவினைப் பேணவோ இயலாதநிலை ஆரம்பத்தில் காணப்படினும் இன்றைய கலத்தில் பாடசாலையில் வகுப்பறையில் மூன்று மொழிகளையும் கற்பிக்கும் நிலை உருவாகியுள்ளன. இதன் மூலம் சிறுவர்கள் சிறந்த மொழியாற்றலினை வளர்த்து சமூகத்தில் வளர்ச்சி அடைகின்றனர். ஆரம் பகாலத்தை விட தற்காலத்தில் அதிகளவிலான சிறார்கள் விசேட தேவையுடையவர்களாக காணப்படுகின்றனர் இவர்கள் பிறப்பிலிருந்தும் பிறந்ததற்கு பின்னரும் இவ்வாறான நிலையை அடைகின்றனர். அவ்வாறான நிலையிலுள்ள சிறுவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளன என எண்ணி முடங்கியிருக்கின்றனர். ஆனால் தற்காலத்தில் அவ்வாறான சிறார்களை இனங்கண்டு அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பார்வையற்றவர்களுக்கு பிறைலின் கற்பித்தல் முறையின் மூலமும் கேட்டல், பேச முடியாதவர்களுக்கு சைகையின் மூலமும் கல்வியானது புகட்டப்படுகின்றது.

சிறுவர்களின் முடக்கத்தினை நிவர்த்தி செய்து நேரான பாதையில் செல்ல வைக்க முடிகின்றன. இன்றைய நவீன கற்றலானது தொழிநுட்ப கற்றலாக மாறியுள்ளது. கிராமப்புறங்களிலுள்ள சிறுவர்களுக்கு தொழிநுட்ப அறிவு குறைவாகவே உள்ளன. அதனால் தொழிநுட்ப அறிவை செம்மைப்படுத்தல் மூலம் வளமான சிறார்களை சமுதாயத்தில் உருவாக்கி முன்னேற்றலாம். இவையனைத்தும் கல்வியின் பங்களிப்பிலே தங்கியுள்ளது. சிறுவர்கள் தங்களது இளம்பராயத்தில் குறும்புத்தனம், சேட்டை என்பவற்றைக் கொண்டிருப்பர். இவ்வாறான காலங்களில் அதிக சிறுவர்கள் கல்வியில் நாட்டம் கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு ஆசிரியர்கள் உள்ளடங்கல் கற்பித்தல் மூலம் கல்வி வழங்கி உயர்வடைய செய்கின்றனர்.

ஒவ்வொரு சிறுவர்களின் மனமும் வெற்றுக்கூடாரமாகவே காணப்படும். அவர்களுக்கு தேவையான சிறந்த கற்றல் ஆளுமையை விருத்தி செய்வதன் மூலமே அவர்களை சமுகமயமாக்கலில் ஈடுபடுத்த முடியும். அதற்கு துணைபுரியும் முக்கிய சாதனமாக கல்வி அமைந்துள்ளது. ஒவ்வொரு சிறுவனும் தன் எதிர்காலத்தை காற்றுள்ள போது அமைத்துக் கொள்ள கல்வி பங்களிப்பு செய்யும் அதேவேளை அச்சிறுவர்களை மண் போற்றும் அளவிற்கு முன்னேற்றத்தையும் கல்வியானது வழங்கி வருகின்றது எனலாம்.

'வையகமெல்லாம் வாழ்த்த வயதேது'

க.ரக்ஷனா

சந்தைப்படுத்தலில் வியாபார சின்னம் தொடர்பான விளக்கம்

நாடளாவிய ரீதியில் தற்பொழுது சந்தைப்படுத்தலானது மிக முக்கியமானதொன்றாக மாறியுள்ளது. எல்லா வகையான பொருட்கள் சேவைகளிலும் சந்தைப்படுத்தலானது மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறான நடவடிக்கை இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தில் வியாபார சின்னமானது அவதானிக்கப்படுகிறது.

வியாபார சின்னம் பற்றி குறிப்பிட்டால் உற்பத்தியை மேற்கொள்கின்ற ஒரு நபர் தமது உற்பத்தி பொருளினை போட்டி பொருளில் இருந்து நுகர்வோருக்கு இலகுவாக வேறுபடுத்தி இனங்கண்டு கொள்வதறகு பயன்படுத்தப்படுகின்ற தெளிவாக உச்சரிக்க கூடிய சொல், கற்புலனாகக்கூடிய குறி இவை இரண்டினதும் உடைய சேர்மானம் வியாபார சின்னம் எனப்படுகிறது.

தி.நிருதிகா
வர்த்தக முகாமைத்துவ பீடம்
கிழக்கு பல்கலைகழகம்

இன்றைய காலகட்டத்தில் மக்கள் எவ்வகையான பொருட்களை தெரிவு செய்வதாக இருந்தாலும் அதன் logo அவதானித்தே தமது தெரிவினை மேற்கொள்கின்றனர். அந்தளவுக்கு மக்கள் தெளிவாக உள்ளார்கள். முன்னைய காலகட்ட மக்கள் தமது தேவை விருப்பங்களை பூர்;த்தி செய்ய தேவையான பொருட்களை உற்பத்தியாளரிடம் பெற்றுள்ளனர் ஆனால் வியாபார சின்னம் தொடர்பான விளக்கம் இருக்கவில்லை என்பதே உண்மை.

தற்பொழுது உற்பத்தியாளர் எவ்வகையான போட்டி பொருளை புதிதாக சந்தைப்படுத்தினாலும் வாடிக்கையாளர்கள் தாம் உபயோகிக்கும் டிசயனெல் உள்ள பொருளையே பெற்றுக்கொள்கின்றனர். ஏனெனில் மக்களுக்கு நன்கு பழக்கப்பட்ட வியாபார குறியின் தரம்,பாவனை என்பன பற்றிய தெளிவு மக்கள் மத்தியில் இருப்பதால், பெரியவர்கள் முதல் சிரியவர்கள் வரை தாம் பெற விரும்பும் பொருட்கள் அனைத்தையும் இலகுவான முறையில் தெரிவு செய்கின்றனர். இதனால் மக்களுக்கு பழக்கமான வியாபார சின்னத்தில் உற்பத்தியாகும் அனைத்து வகையான பொருட்களுக்குமான மேம்படுத்தல் இலகுவாக காணப்படுவதுடன் நேரடி விற்பனையை மேற்கொள்ள முடியுமாக உள்ளது.

வியாபார சின்னமானது மூன்று வகையாக காணப்படுகிறது. அவையாவன பண்டப்பெயர், பண்டக்குறி, வியாபாரக்குறி என்பனவாகும். பண்டப்பெயர் என்பது தமது பொருளினை போட்டி பொருளில் இருந்து வேறுபடுத்தி காட்ட பயன்படுத்தப்படுகின்ற தெளிவாக உச்சரிக்க கூடிய சொல், எழுத்து பண்ட பெயர் எனப்படுகிறது.

பண்டக்குறி என்பது தமது பொருளினை போட்டி பொருளில் இருந்து வேறுபடுத்தி காட்ட பயன்படுத்தப்படும் கற்புலனாகும் குறி பண்டக்குறி எனப்படுகிறது. உதாரணமாக

அதுபோல வியாபார குறி என்பது தமது பொருளினை போட்டி பொருளில் இருந்து வேறுபடுத்தி

காட்ட பயன்படுத்தப்படும் தெளிவாக உச்சரிக்க கூடிய சொல்,கற்புலனாகும் குறி இரண்டினதும் சேர்மானமாகும். இதனை 2003ம் ஆண்டு 36ம் இலக்க விவேக ஆதன சொத்து சட்டத்தில்ஃ புலமை சொத்து சட்டத்தில் பதிவு செய்து பயன்படுத்தப்படும். உதாரணமாக,

இவ் வியாபார குறியானது இலகுவாக நினைவில் வைத்து கொள்ளவும், போட்டி பொருளில் இருந்து வேறுபடுத்தி காட்டவும், இலகுவாக ஏனைய மொழிக்கு மாற்றக்கூடியாதவும்,பாதுகாப்புக்கு பொருத்தமானதாகவும் காணப்படும். வியாபார குறி மூலம் வாடிக்கையாளரும், வணிகர்களும் பல வகையான நன்மைகளை பெற்று கொள்கிறனர்.

ஆசிரியரின்...

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

முந்திய காலக் கற்றலை மேற்கொள்வது, மாணவர்கள் பற்றி அறிவினை எதுவும் பெற்றிராமல் பாடப்புத்தகத்தகத்திலுள்ள பாடத்தை வாசித்துவிட்டு பார்த்து எழுதுங்கள் என்று கூறி தேநீர்சாலைக்குள் காலம் தள்ளுகின்ற ஆசிரியர்களும் இன்றைய ஆசிரியர் குழாத்தில் இணைந்து மாணவர்களின் வாழ்க்கையினைப் பாதிக்கி;ன்ற ஆசிரியர்களும், ஆசிரியர் அல்லாதவர்களும் இன்றைய தினத்தில் நினைவுகூறப்படுவதுதான் கவலையான விடயமாகும்.

எனவே, உயர் இலட்சியப் பணியில் சேவையாற்றுகின்ற ஆசிரியப் பெருந்தகைகளை நினைவுகூறப்படுகின்ற இன்றைய நாட்களில் மாணவர்களின் கல்வியினை சீரழிக்கின்றவர்களையும் சமூகத்திலிருந்து ஒதுக்கிடவும் இந்நாளை பயன்படுத்துவதற்குத் தயங்கக் கூடாது என்பதையும் நினைவிற்கொண்டு, மாணவர்களின் கல்வி மேம்பாடே என்று பாடசாலையிலும், மாலைவேளைகளிலும் தன்னை உண்மையாக அர்ப்பணிக்கின்ற ஆசிரியர்களை சமூகம் மதிக்க வேண்டும். பணத்திற்காக கல்வியை விற்கும் இன்றைய நாட்களில் உண்மையான அர்ப்பணிப்புடன் இயங்குகின்றவர்களையும் கல்விச்சமூகம் பாராட்ட வேண்டும் என்பதை இன்றைய நாட்களில் நினைவிற்கொண்டு உண்மையான ஆசிரியருக்குரிய கௌரவத்தை ஒவ்வொருவரினதும் வாழ்நாளை மாற்றியமைத்த ஆசிரியர்களது காலடிசென்று வாழ்த்துவோமாக இருந்தால் அதுவே மிகச் சிறந்த போற்றுதலாகும்.

அதுஒரு...

11 ஆம் பக்கத் தொடர்ச்சி

குழந்தைகளும் பாலியல் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். பள்ளிகள் கூட பாதுகாப்பானதாக இல்லை. இருந்தாலும் நமக்கு எச்சரிக்கை உணர்வைக் கொடுக்கிறது. தனக்கு நேர்ந்ததை சொல்லக்கூடத் தெரியாத பருவம் அது. இருந்தாலும் குழந்தைகளைக் காப்பாற்ற நாம்தான் முன்னெச்சரிக்கையாக செயல்பட வேண்டும்.

தமிழ் கலாச்சாரத்தில் பயிர்ப்பு என்பது பெண்களுக்கான குணங்களில் ஒன்று. பயிர்ப்பு என்றால் தவறானத் தொடுதலைப் புரிந்துகொள்ளுதல் என்று பொருள். இது இன்றைய காலகட்டத்தில் பெண் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, ஆண் குழந்தைகளும் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று. 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தவறான தொடுதல் என்றால் என்னவென்று புரியவையுங்கள். இது குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகளைத் தவிர்க்க உதவும்.

இன்றைய தொழில்நுட்ப அறிவு

குழந்தைகள் எப்போதுமே மாற்றத்தை எளிதாக ஏற்றுக்கொள்வார்கள். மாறும் தொழில்நுட்பம் நமக்கு எரிச்சலூட்டும் வகையில் இருந்தாலும் அவர்களுக்கு புத்துணர்ச்சி அளிக்கத் தவறுவதில்லை. Whatsapp, Faceboook, Twitter போன்ற தொழில்நுட்பங்கள் நமக்கு கிலியூட்டும் விஷயமாக இருந்தாலும் சற்றுப் பொறுமையாக அதன் சாதக பாதகங்களை அறிந்துகொள்ள முயலுங்கள். இது குழந்தைகள் நீலத்திமிங்கலம் (Blue whale) போன்ற ஆபத்தான விளையாட்டுகளில் சிக்கிகொள்ளாமல் இருக்க உதவும். காலம் மாறும்போது நாமும் மாற்றிக்கொள்ள ஆயத்தமாகும்போது அடுத்தத் தலைமுறைக்கும் நமக்குமான இடைவெளி குறையும். அதுதான் அடுத்தத் தலைமுறை நம்மிடம் எதிர்பார்க்கும் மிகமுக்கியமான தகுதி.

ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் போர் ஆத்திரமூட்டல்களுக்கு துணைபோகும் ஐரோப்பிய சக்திகள்

பேர்லின், இலண்டன் மற்றும் பாரீஸும் ஈரானுக்கு எதிராக இராணுவ ஆக்ரோஷத்திற்கான அமெரிக்காவின் சாக்குப்போக்கு காரணங்களை ஆமோதித்து நேற்று ஓர் உத்தியோகபூர்வ அறிக்கை வெளியிட்டன. டொனால்ட் ட்ரம்ப் நியூ யோர்க் ஐ.நா. பொது சபையில் ஈரான் மீதான அவரது கண்டனங்களை அமைதிக்கு ஓர் இரத்தவெறிபிடித்த அச்சுறுத்தலாக தயாரித்திருந்த நிலையில், இந்த மிகப்பெரிய மூன்று ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகளின் அரசாங்கங்களும் ஈரானுக்கு எதிரான அமெரிக்க போர் ஆத்திரமூட்டல்களை சுய-நிரூபண உண்மைகளாக அறிவித்தன.

அவற்றின் பகிர்ந்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு நலன்களை, குறிப்பாக உலகளாவிய ஆயுதப்பரவல் தடுப்பு முறையைத் தாங்கிப்பிடித்தும் மற்றும் மத்திய கிழக்கில் ஸ்திரப்பாட்டைப் பேணுவதற்காகவும் என்று குறிப்பிட்டு, அவை சமீபத்தில் சவூதி எண்ணெய் ஆலைகள் மீது குண்டுவீசப்பட்டது சம்பந்தமான வாஷிங்டனின் சொல்லாடல்களுடன் வரிசைக்கட்டி நிற்கின்றன: ''செப்டம்பர் 15, 2019 இல், சவூதி பகுதியில் அப்குயைக் மற்றும் குரைஸ் எண்ணெய் ஆலைகள் மீதான தாக்குதலை நாங்கள் கடுமையான வார்த்தைகளோடு கண்டிக்கிறோம், மற்றும் இந்த சூழலில் சவூதி அரேபிய முடியாட்சி மற்றும் அதன் மக்களுக்கு எங்களின் முழுமையான ஆதரவை மீளவலியுறுத்துகிறோம்.

இம்மூன்று ஐரோப்பிய சக்திகளும், அந்த குண்டுவீச்சை ஈரான் நடத்தியதாகவும் மற்றும் ஓர் இராணுவ விடையிறுப்புக்குத் தகுதியுடைய போர் நடவடிக்கை என்றும் வாஷிங்டனின் குற்றச்சாட்டுக்களை ஆதரிக்க எதற்காகவேனும் எந்தவொரு ஆதாரத்தையும் வழங்கவில்லை. அவை சர்வசாதாரணமாக தொடர்ந்து குறிப்பிட்டன, இந்த தாக்குதலுக்கு ஈரான் தான் பொறுப்பாகிறது என்பது தெளிவாக உள்ளது. அங்கே வேறெந்த நம்பத்தகுந்த விளக்கமும் கிடையாது. மேற்கொண்டு விபரங்களை ஸ்தாபிக்க நாங்கள் தொடர்ந்து நடந்து வரும் புலன்விசாரணைகளை ஆதரிக்கிறோம்.

ஒரு பெரும் மோதல் அபாயம் குறித்து குறிப்பிட்டு, பேர்லின், இலண்டன் மற்றும் பாரீஸும் போர் அபாயத்திற்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்ரோஷமான நடவடிக்கைகளான - 2015 ஈரானிய அணுசக்தி உடன்படிக்கையை அது கைதுறந்ததில் இருந்து ஈரான் மீது குண்டுவீசுவதற்கான அதன் இந்தாண்டு அச்சுறுத்தல் வரையில் - அவற்றின் மீது பழிசுமத்தாமல், மாறாக தெஹ்ரான் மீது பழிசுமத்தி, சூழ்நிலையைத் தலைகீழாக்கிக் காட்டின. கடந்தாண்டு ட்ரம்ப் ஒதுக்கித் தள்ளிய அந்த அணுசக்தி உடன்படிக்கையுடன் ஈரான் முழுமையாக இணங்கி செயலாற்ற வேண்டும் என்றும், தீவிரப்படல் மற்றும் ஆத்திரமூட்டலைத் தேர்ந்தெடுப்பதைக் கைவிட வேண்டுமென்றும் அவை கோரின.

ஈரானுக்கு எதிரான போருக்குத் தயாரிப்பு செய்ய வாஷிங்டன் சவூதி அரேபியாவுக்கும் துருப்புகளையும் பாரசீக வளைகுடாவுக்கு போர்க்கப்பல்களையும் அனுப்பி உள்ள நிலையில், இந்த அறிக்கையின் உள்ளடக்கம் குழப்பத்திற்கிடமின்றி உள்ளது. முன்னணி ஐரோப்பிய ஏகாதிபத்திய அதிகாரங்கள் 2015 உடன்படிக்கையை ட்ரம்ப் ஒதுக்கித் தள்ளியது மீதான அவற்றின் ஆரம்ப விமர்சனங்களைக் கைவிட்டு வருகின்றன. 2003 இல் ஈராக்கில் அமெரிக்க தலைமையிலான போரில் வைக்கப்பட்டதைப் போல அதேபோன்ற அரசியல் பொய்களின் அடிப்படையில், மத்திய கிழக்கில் அமெரிக்க தலைமையிலான ஒரு புதிய போரைக் கட்டமைப்பதை ஆமோதித்து, அவை இம்முறை அதுபோன்றவொரு போரை ஆதரிப்பதையும், சாத்தியமானால் இணைந்து கொள்ளவும் சமிக்ஞை செய்கின்றன.

வாஷிங்டன், அதன் தரப்பில் இருந்து, ஈரானுக்கு எதிரான அதன் நடவடிக்கைக்கு ஐரோப்பிய ஆதரவைப் புகழ்ந்துரைத்தது. அமெரிக்க வெளியுறவுத் துறை செயலர் மைக் பொம்பியோ பின்வருமாறு ட்வீட் செய்தார்: சவூதி அரேபியாவுக்கு எதிரான போர் நடவடிக்கை மற்றும் அப்பிராந்தியம் எங்கிலும் உலகமெங்கிலும் அதன் தாக்கத்திற்கும் ஈரானே முழுவதுமாக பொறுப்பாகிறது என்று தெளிவாக வெளிப்படுத்தியதற்காக, எங்களின் நெருங்கிய நண்பர்களான பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனிக்கு அமெரிக்கா நன்றி தெரிவித்துக் கொள்கிறது. பொம்பியோ அவரின் இரண்டாவது ட்வீட் செய்தியில், பெரும் பொய் உத்தியை பயன்படுத்தி ஐரோப்பிய அறிக்கையைத் தொடர்ந்து பாராட்டினார்: இது இராஜாங்க விவகாரங்களையும் அமைதி நடவடிக்கைகளையும் பலப்படுத்தும். ஈரான் நடவடிக்கைகள் மீதான இந்த கண்டனத்தில் ஒவ்வொரு தேசமும் இணைய வேண்டுமென நாங்கள் வலியுறுத்துகிறோம்.

ஈரானுக்கு எதிரான அமெரிக்க போர் அச்சுறுத்தல்களை ஐரோப்பா ஆமோதிப்பது, அமைதியைப் பலப்படுத்தாது, மாறாக ட்ரம்ப் நிர்வாகம் அதன் அச்சுறுத்தல்கள் மற்றும் ஆத்திரமூட்டல்களை அதிகரிப்பதற்கு அதை ஊக்குவிப்பதுடன், ஒரு பேரழிவுகரமான போர் ஆபத்தை ஏற்படுத்துகிறது.

அனுமானிக்கத்தக்கவாறு, ட்ரம்ப் நேற்று ஐ.நா. பொதுச்சபையில் ஆற்றிய அவர் உரையை சோசலிசத்தைக் குறைகூறுவதற்காக மட்டுமல்ல, மாறாக மிரட்டும்ரீதியில் ஈரானை அச்சுறுத்தவும் பயன்படுத்தினார். ஈரானிய ஒடுக்குமுறை ஆட்சி தான், இன்று அமைதி-விரும்பும் நாடுகள் முகங்கொடுக்கும் மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களில் ஒன்றாக உள்ளது, என்று அறிவித்த அவர், ஈரானுக்கு எதிராக ஆதரவுக்கு முறையிட்டார்: எல்லா நாடுகளுக்கும் செயல்பட வேண்டிய கடமை உள்ளது. எந்த பொறுப்பான அரசாங்கமும் ஈரானின் இரத்தாகத்திற்கு விட்டுக் கொடுக்கக்கூடாது. ஈரானின் அச்சுறுத்தும் நடத்தைத் தொடரும் வரையில், தடையாணைகள் நீக்கப்படாது. அவை இறுக்கப்படும்.

அமெரிக்க ஜனாதிபதியின் வாதங்களும் அவற்றை ஆதரிக்கும் ஐரோப்பிய அதிகாரங்களின் அறிக்கைகளும் பொய்களின் பொதிமூட்டையாக உள்ளன. மூன்று தசாப்தங்களாக, 1991 இல் அமெரிக்க தலைமையிலான வளைகுடா போர் மற்றும் சோவியத் ஒன்றியத்தின் ஸ்ராலினிச கலைப்புக்குப் பின்னர் இருந்து, ஏகாதிபத்திய சக்திகள் மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியாவைச் சீரழித்துள்ளன. ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் யேமனில் அவர்களின் போர்கள் மில்லியன் கணக்கானவர்களைப் பாதித்தது, ஒட்டுமொத்த சமூகங்களையும் சீரழித்தது, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய இராணுவத் தளங்களின் வளையத்தை கொண்டு ஈரான் சுற்றி வளைக்கப்பட்டது. அமைதிக்கான முக்கிய அச்சுறுத்தலே வாஷிங்டன் மற்றும் அதன் கூட்டாளிகளின் சதிகளில் இருந்து வருகிறது.

வாஷிங்டன் ஆகட்டும் அல்லது சவூதி முடியாட்சி ஆகட்டும் அப்குய் மற்றும் குரைஸ் மீதான குண்டுவீச்சுக்களை ஈரான் தான் நடத்தியது என்பதற்கு எந்த ஆதாரமும் முன்வைக்கவில்லை. அந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்று வெளியான ஓர் அறிக்கை, சவூதி தலைமையிலான மற்றும் நேட்டோ ஆதரவிலான போரால் இலக்கு வைக்கப்பட்ட ஒரு நாடான யேமனின் ஹௌதி படைகள் மீது அதை சாட்டுகிறது, அங்கே 2015 இக்கு பின்னர் இருந்து பத்தாயிரக் கணக்கான அப்பாவி மக்கள் உட்பட 90,000 இக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் குறைந்தபட்சம் 84,701 குழந்தைகளைப் பட்டினிக்கு இட்டுச் சென்றுள்ளது. இந்த அறிக்கை உண்மை என்றாலும் கூட, ஹௌதி படைகள் சவூதிகளுக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக வாதிடக்கூடும்.

2003 அமெரிக்க போர் முனைவுகளுக்கான ஐரோப்பிய சக்திகளின் விடையிறுத்ததற்கும் அவற்றின் இன்றைய விடையிறுப்புக்கும் இடையே கூர்மையான முரண்பாடு உள்ளது. ஈராக் பாரிய பேரழிவு ஆயுதங்களைக் கொண்டிருப்பதாலும் அணுஆயுத பயங்கரவாத தாக்குதல்கள் நடத்த அவற்றை அல் கொய்தாவுக்கு வழங்க திட்டமிடுவதற்காகவும் ஈராக் மீது அது படையெடுக்க இருப்பதாக 2003 இல் புஷ் நிர்வாகம் பொயுரைத்த போது, ஜேர்மனியும் பிரான்சும் கூட்டாக அதை எதிர்த்தன. ஈராக்கிற்கு எதிராக இராணுவ ஆக்ரமிப்பை அங்கீகரிக்கும் அமெரிக்க தீர்மானங்களைப் பாதுகாப்பு அவையில் வீட்டோ தடுப்பதிகாரம் கொண்டு தடுக்க பிரான்ஸ் அச்சுறுத்தியது.

அப்போதைய வெளியுறவுத்துறை அமைச்சர் டொமினிக் டு வில்பன் பெப்ரவரி 14, 2003 இல் ஐ.நா. பாதுகாப்பு அவையில் வழங்கிய உரையில், வாஷிங்டன் அதன் போரை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்திய அதே பொய்களுடன் முரண்பட்டார். பத்து நாட்களுக்கு முன்னர், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர், திரு. பவுல், அக் கொய்தாவுக்கும் பாக்தாத் ஆட்சிக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாக குற்றஞ்சாட்டி கருத்துரைத்தார். எங்களின் ஆராய்ச்சி மற்றும் உளவுத்துறையின் தற்போதைய நிலை ஒருபுறம் இருக்க, அதுபோன்ற தொடர்புகளை ஸ்தாபிக்க எதுவுமே எங்களை அனுமதிக்கவில்லை. மறுபுறம், நாங்கள் சர்ச்சைக்குரிய இராணுவ நடவடிக்கை ஏற்படுத்தும் பாதிப்புகளை மதிப்பிட்டே ஆக வேண்டும் ... என்றார்.

இன்று, ஐரோப்பிய சக்திகள் சவூதி அரேபியா மீதான தாக்குதல்கள் குறித்து எந்தவொரு கூடுதல் விபரங்களும்தெரிய வருவதற்கு முன்னரே தீர்மானத்திற்கு வர முண்டியடிக்கின்றன என்பது மட்டுமல்ல, ஆனால் எந்த நம்பத்தகுந்த மாற்றீடும் இல்லை என்று கூறி ஈரான் மீது பழி சுமத்துவதற்காக ட்ரம்பின் ஓட்டத்துடன் ஒவ்வொருவரும் உடன்பட வேண்டும் என்று வாதிடுகின்றன.

வில்பன் உரையாற்றி 16 ஆண்டுகளுக்குப் பின்னர், வாஷிங்டனின் ஏகாதிபத்திய போட்டியாளர்களை ஆதரிப்பதன் அடிப்படையில், போரை எதிர்க்கும் முயற்சிகளின் திவால்நிலைமை மீது ஒரு கசப்பான படிப்பினை பெறப்பட்டுள்ளன. வாஷிங்டன் ஈராக்கை தாக்கியது என்பது மட்டுமல்ல, ஆனால் ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகள் மத்திய கிழக்கில் அவற்றின் வர்த்தக மற்றும் மூலோபாய நலன்களைக் கணக்கிட்டு மற்றும் சர்வதேச அளவில் ஏகாதிபத்திய-எதிர்ப்புணர்வு அதிகரித்து வருவதையும் கணக்கிட்டு, விரைவிலேயே 180 பாகை திரும்பிவிட்டன. பாரீஸும் பேர்லினும் அமெரிக்க ஆக்கிரமிப்பு ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு எண்ணெய் நிறுவனங்களை அனுப்பியும் துருப்புகளை நிலைநிறுத்தியும் புஷ் நிர்வாகத்துடன் உறவுகளைச் செப்பனிட்டன.

போருக்கு எதிரான ஓர் இயக்கத்திற்கு ஒரு சமூக அடித்தளத்தை வழங்கும் ஒரே சக்தி சர்வதேச தொழிலாள வர்க்கமாகும், அங்கே போர் மீது ஆழமாக அதிகரித்து வரும் விரக்தியும், முதலாளித்துவம் உருவாக்கி உள்ள சமூக சமத்துவமின்மை மீது வெடிப்பார்ந்த கோபமும் நிலவுகிறது.

பேர்லினும் பாரிஸும் அவற்றின் பங்கிற்கு பிரிட்டன் பிரதம மந்திரி போரீஸ் ஜோன்சனுடன் வரிசையில் நிற்கின்றன. 2015 ஈரானிய அணுசக்தி உடன்படிக்கையை குறைகூறிய இவர், ஈரான் உடனான அமெரிக்க போர் சூழ்நிலைக்கு அவசியமான விதத்தில் உதவாது என்று குறிப்பிட்ட அதேவேளையில், ஈரானுடன் ட்ரம்ப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதை ஐரோப்பா ஆதரிக்க வேண்டுமென அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதி ட்ரம்ப் சரியாக கூறியதைப் போல, யதார்த்தம் என்னவென்றால், அதுவொரு மோசமான உடன்படிக்கை, என்று ஜோன்சன் தெரிவித்தார். அதில் பல கோளாறுகள் உள்ளன. ஈரான் அப்பிராந்தியத்தில் தொந்தரவூட்டும் வகையில் நடந்து கொண்டது மற்றும் அவ்வாறே நடந்து வருகிறது. ... ஒரு சிறந்த உடன்படிக்கையை மேற்கொள்ள அங்கே ஒரேயொருவர் தான் இருக்கிறார், இந்த நிலையில் ஈரானுடன் எவ்வாறு ஒரு சிக்கலான பங்காண்மை பெறுவது என்பதை ஒரேயொருவர் தான் புரிந்து வைத்துள்ளார், அவர் தான் அமெரிக்க ஜனாதிபதி, என்றார்.

ஒரு பேரழிவுகரமான மோதலின் மிகப்பெரும் அபாயம் குறித்து சர்வதேச தொழிலாள வர்க்கம் முழுமையாக அறிந்திருக்கவில்லை என்பதே மிகப்பெரும் ஆபத்தாக உள்ளது. யேமனில் இருந்து, சிரியா வரையில் ஆப்கானிஸ்தான் வரையில் மத்தியக் கிழக்கு தீக்கிரையாக்கப்பட்டு உள்ளது. ஈரான் மீதான அமெரிக்க குண்டுவீச்சுக்கு இலக்கு பட்டியல்களை மீளாய்வு செய்து வரும் ட்ரம்ப், அணு ஆயுதமேந்திய ரஷ்யா மற்றும் சீனாவுடன் மற்றும் அணுசக்தி போர் அபாயத்துடன் ஒரு மிகப்பெரிய தீவிர மோதலாக மாறக்கூடிய பிராந்தியம் தழுவிய போரைத் தொடங்குவதில் இருந்து வெறும் ஒருசில அடி தூரத்தில் மட்டுமே நிற்கிறார்.

ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகளோ அவற்றின் பிற்போக்குத்தனமான அறிக்கையுடன், பேரழிவை நோக்கி வாஷிங்டன் கண்களை மூடியவாறு சென்று கொண்டிருக்கையில் அதனுடன் இணைந்து வருகின்றன.

நன்றி: உலக சோசலிச இணையத்தளம்

பிக்பாஸ் 3: வெல்லப்போவது யார்?

பிக்பாஸ் சீசன் 3 கடந்த ஜூன் மாதம் 24 ஆம் தேதி தொடங்கியது. இப்போது இறுதிக்கட்டத்தை எட்டியிருக்கிறது. பிக்பாஸ் வீட்டின் அன்பு, காதல், சண்டை, சூழ்ச்சி, கோபம், வெறுப்பு, பிரிவு உள்ளிட்டவை சமூக வலைத்தளத்தில் நூறு நாள்களுக்கு மேல் தொடர்ந்து பேசுபொருளாக உள்ளன.

சரி. கடந்த நூறு நாள்களாக இந்த நிகழ்ச்சியில் நடந்தவை என்ன? விவாதத்துக்கு உள்ளான விஷயங்கள் எவை? கமலின் வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால் அகத்திற்குள் செல்வோம்.

சேரன், சரவணன், ஃபாத்திமா பாபு, வனிதா, ஷெரீன், லொஸ்லியா, சாக்ஷி அகர்வால், மதுமிதா, கவின், அபிராமி, மோகன் வைத்தியா, தர்ஷன், சாண்டி, முகேன், ரேஷ்மா, - இவர்கள்தான் முதலில் பிக்பாஸ் வீட்டில் குடி புகுந்தவர்கள். இவர்களைத் தொடர்ந்து இரண்டாவது நாள்தான் மீரா வீட்டுக்குள் சென்றார்.

அணி அணியாய்

பிக்பாஸ் 3 நிகழ்ச்சியின் முதல் தலைவராகப் பொறுப்பேற்றவர் வனிதா. கவின் மீதான தன் அன்பை அபி பொதுவிலேயே வெளிப்படுத்தினார் மறுமுனையில் மீராவுடன் அவருக்கு பகையுணர்வு அதிகமானது.

பிக்பாஸ் வீட்டுக்குள் வந்த ஓரிரு நாட்களிலேயே சிலர் அணி சேர்ந்துவிட்டார்கள். சாக்ஷி, அபி, ஷெரீன் என ஒரு அணி அமைக்கக் கவின், சாண்டி, சரவணன், மோகன் வைத்யா என இன்னொரு அணி இருந்தது.

அப்பா - மகள் பந்தத்தை சேரன் மற்றும் லொஸ்லியா உருவாக்கிக்கொண்டனர். மதுமிதா பக்திமானாக முகம் காட்டினார்.

பிக்பாஸ் நிகழ்ச்சியில் ஃபாத்திமா பாபுதான் முதலில் வெளியேறினார். இரண்டாவதாக வனிதா வெளியேற்றப்பட்டார். அடுத்தடுத்த வாரங்களில் மோகன் வைத்யா, மீரா வெளியேறினர்.

பிக்பாஸ் வீட்டுக்குள் சேரன் மற்றும் சரவணன் இடையே முரண் வளர்ந்தது. சேரன் இணக்கமாகச் செல்ல எடுத்த முயற்சிகள் எதுவும் பயன் தரவில்லை.

இந்த சூழ்நிலையில் சேரன் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார் மீரா மிதுன். அவரது குற்றச்சாட்டுகள் முற்றிலும் உண்மையல்ல என்பது பின்னர் திரையிடப்பட்ட காட்சிகள் மூலம் தெரியவந்தது.

சேரனை பிக்பாஸ் வீட்டைவிட்டு வெளியேறக் கோரி வெளியிலிருந்து குரல்களும் எழுந்தன. இயக்குநர் வசந்தபாலன், திரையில் இலக்கியம் செய்ய ஆசைப்பட்டு அதில் வென்று காட்டியவர் நீங்கள். காலத்தின் கரையான் உங்களையும் உங்கள் படங்களையும் அழித்துவிடமுடியாது. இயக்குநர் மகேந்திரன், இயக்குநர் பாலுமகேந்திராவுடன் ஒப்பிடக்கூடிய திரை ஆளுமை நீங்கள். பிக்பாஸ் வீட்டிலிருந்து வெளியேறுங்கள் எனக் கோரிக்கை வைத்தார்.

இப்படியான சூழலில் திடீரென பிக்பாஸ் வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார் சரவணன்.

பேருந்தில் சிலர் பெண்களிடம் தவறாக நடப்பது குறித்த விவகாரம் ஒன்றை கமல்ஹாசன் பேசும் போது தானும் அதைச் செய்திருக்கிறேன் என கூறி தனது கையை உயர்த்தினார் சரவணன். இந்த சமயத்தில் சரவணனை கமல்ஹாசன் கண்டிக்கவில்லை என சமூக வலைத்தளங்களில் கடும் கண்டனங்கள் எழுந்தன.



இந்நிலையில் 44-வது நாளன்று பிக்பாஸ் வீட்டிலிருந்து திடீரென வெளியேற்றப்பட்டார் சரவணன்.

சரவணனின் வெளியேற்றம் குறித்து கமல்ஹாசன் மேடையில் எந்த விளக்கமும் தரவில்லை.

அவர் வெளியேற்றப்பட்ட இரண்டு நாள்களுக்கு பிறகு நடிகை கஸ்தூரி பிக்பாஸ் வீட்டுக்குள் நுழைந்தார்.

பிக்பாஸ் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட வனிதா, 50-ம் நாளன்று மீண்டும் பிக்பாஸ் வீட்டுக்குள் நுழைந்தார்.

வாடி ராசாத்தி என்ற பாடல் பில்டப்புடன் அவர் பிக்பாஸ் வீட்டுக்குள் நுழைந்தார்.

மீண்டும் வந்த வனிதா, வெளியேற்றப்பட்ட மதுமிதா

தமிழ் பிக்பாஸ் நிகழ்ச்சியில் முதன்முறையாக ஏற்கனவே வெளியேற்றப்பட்ட ஒரு நபர் மீண்டும் நிகழ்ச்சிக்கும் போட்டியாளராக உள்ளே நுழைந்தது பிக்பாஸ் ரசிகர்கள் மத்தியில் விவாதங்களை எழுப்பியது.

அவர் உள்ளே நுழைந்தபிறகு கிட்டத்தட்ட அனைத்து போட்டியாளர்களையும் விமர்சித்தார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

வழக்கமாக பிக்பாஸ் வீட்டில் நீச்சல் குளம் இருக்கும். ஆனால் சென்னையில் கோடைக்காலத்தில் கடும் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டது. சென்னை தண்ணீர் பிரச்சனை சர்வதேச அளவில் கவனம் பெற்றது.

பிபிசியின் புகைப்படம் ஒன்றை டீ காப்ரியோ இன்ஸ்டாகிராமில் பகிர அது வைரல் ஆனது.

இந்நிலையில் 'விளையாடுவதற்கு மட்டுமல்ல இந்த பிக்பாஸ் வீடு. சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தவும்தான்' எனச் சென்னை தண்ணீர் பிரச்சனைக்கு பிக்பாஸ் நீச்சல் குளத்தில் தண்ணீரை நிரப்பாமல் தன் தீர்வை முன்வைத்தது இந்த நிகழ்ச்சி.

அது மட்டுமல்லாமல் கேஸ் மற்றும் தண்ணீருக்கு மீட்டர் வைத்து தங்களது சமூக பொறுப்புணர்வை வெளிப்படுத்தினார்கள்.

இந்தியாவே சந்திக்க பயப்படும் சென்டினேலீஸ் தீவு

வெறும் ஐநூறுக்கும் குறைவான மக்கள் தொகை, உடலைத் துளைத்து வெளியேறும் வில் அம்புகள், குளந்தை போன்ற முக அமைப்பு இருந்தாலும், அவர்களின் விரிந்த கண்கள் எப்பேர்ப்பட்ட பகில்வானையும் தொடை நடுங்க வைத்து விடும். ஆம், இவர்கள் இருப்பிடத்தை விட்டு வெளியேறினால் ஒட்டுமொத்த நாடும் கதி கலங்கி விடும். அப்படி யார் இவர்கள் ? சோழர்களுக்கும் இவர்களுக்கும் என்ன தொடர்பு ?. இந்த வருடம் அதிகம் படிக்கப்பட்ட கட்டுரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

உயிர் கொல்லித் தீவு

இந்தியாவில் உள்ள 7 யூனியன் பிரதேசங்களில் ஒன்றான அந்தமான் நிக்கோபார் தீவுகளின் தலைநகர் போர்ட் பிளேர். இப்பகுதியில் அங்கொன்றும், இங்கொன்றுமாக மொத்தம் 572 தீவுகள் உள்ள போதும், அவற்றில் 36 தீவுகளில்தான் மக்கள் வசித்து வருகிறார்கள். அவற்றுள் ஒன்று தான் இந்த உயிர் கொல்லித் தீவும். இத்தீவின் உண்மையான பெயர் யாருக்கும் தெரியாது ?. ஊர் பேர் கேட்க கிட்ட நெருங்கினாலே உயிரைக் கொண்டு உணவாக உண்டு விடுவர் இங்கு வசிக்கும் ஆதிவாசிகள். குட்டித் தீவு வங்காள விரிகுடாவில் இருக்கும் அந்தமான் தீவுகளில் ஏறத்தாழ 30 கிலோ மீட்டர் சுற்றளவில் ஓர் சிறிய தீவு உள்ளது. செயற்கையான மற்றும் நவீனத் தன்மை அற்ற இத்தீவின் பெரும் பகுதி காடுகளே. இத்தீவைச் சுற்றி உள்ள கடற்கரைப் பகுதியில் கூட வேற்றுப் பகுதி மக்கள் கால் வைக்க நினைத்தால் அவர்கள் மரணிக்கப்படுவது உறுதி.

அனுமதி இல்லை

இத்தீவைச் சுற்றியுள்ள சுமார் மூன்று மலை தூரத்திற்குக் கூட யாரும் செல்லக் கூடாது என சட்டம் இயற்றப்பட்டுள்ளது. காரணம், இப்பகுதியில் வசிக்கும் மக்களால் கொலை செய்யப்படுவதே. இவர்கள் வெளி மக்களை அவர்களின் தீவில் காலடி வைக்க அனுமதிப்பதில்லை. மீறி வந்தவர்கள் உடலின் மிச்சம் மீதியே வெளியேறும்.

ஜாரவா ஆதிவாசிகள்

ஜாரவா ஆதிவாசி மக்கள் இந்த நிலம் தங்களுக்கானது எனக் கருதுகிறார்கள். இவர்களுக்கு வெளியுலகில் உள்ள நவீன சட்டதிட்டங்கள் குறித்து ஏதும் தெரியாது. எந்த விதிகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அவர்கள் கட்டுப்படுவது இல்லை. அந்தமானின் தெற்கு, மேற்கு, மத்திய பகுதிகளில் வசிப்பவர்கள். ஆக்ரோசமானவர்கள் என்பதால் இவர்களின் இடங்களுக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி இல்லை. இவர்களின் எண்ணிக்கை சராசரியாக 471 அளவிலேயே உள்ளது.

ஆங்கிலேயர்களால் பாதிப்பு

கடந்த நூற்றாண்டுகளில் அந்தமான் நிலப் பரப்பை ஆக்ரமித்த ஆங்கிலேயர்கள் தங்களது தேவைக்காக இம்மக்களை அடிபனிய வைக்க முயன்றனர். ஆனால், எதற்கும் அஞ்சாத ஜாரவா இன மக்கள் கட்டுப்பாடின்றி செயல்பட்டதால் ஆங்கிலேயர்களால் வெகுவாக கொல்லப்பட்டனர். ஊளை என்ன பேசுராங்க ? இந்த தீவில் வசிக்கும் மக்களின் பேச்சு, மொழி அருகில் உள்ள தீவு மக்களுக்கே புரிவதில்லை என்கின்றனர். ஆப்பிரிக்காவில் காணப்படும் ஆதிவாசிகள் போல தோற்றம் கொண்ட இவர்களின் உண்மையான தோற்றம் தான் எது ?. எங்கிருந்து வந்தார்கள் ? இவர்களின் அன்றாட வேலை தான் என்ன என யாருக்குமே தெரியாது.

கற்கால மனிதர்கள்

இந்த கற்கால மனிதர்கள் தீவில் வேட்டையாடி மட்டுமே உயிர் வாழ்ந்து வருகின்றனர். ஏதேனும் உதவி செய்யலாம் என நெருங்கிச் சென்றால் பின் உங்களது குடும்பத்திற்கு நிதிவுதவி அளிக்க வேண்டி வரும். அத்தகைய குணம் கொண்டவர்கள் தான் இவர்கள். கீணிஞீ நிச்ஞீஞீடிணஞ் ணிணிண நேர்த்தியான கட்டமைப்பாளர்கள் வெளிப் பகுதிகளில் இருந்து எந்த உதவியையும், பொருளையும் எதிர்பார்க்காத இம்மக்கள் தங்களது தேவையை பூர்த்தி செய்வதிலும் தேர்ச்சி பெற்றவர்களாக உள்ளனர். இதற்கு உதாரணம் இவர்கள் செய்யும் வில், அம்பு, படகுகளே. தங்களது நேர்த்தியான கைவண்ணம் மூலம் உருவாக்கும் வில் பல மீட்டர் தூரத்தில் இருக்கும் இலக்கையும் எளிதில் துளைத்து வெளியேறும் அளவிற்கு கடினமானதாக உள்ளது.

இத்தீவை நெருக்கமாக படபெடுக்க வேண்டும் என்றால் பல கிலோ மீட்டர் தொலைவில் இருந்து மட்டுமே எடுக்க முடியும். அல்லது, கூகுல் மேப் உதவியுடன் தான் இத்தீவின் அழகையும், கடற்கரை அழகையும் ரசிக்க முடியும். கூகுலில் இதன் பெயர் வடக்கு வென்டினல் என குறிப்பிட்டிருக்கும். ஒரு சில வருடங்களுக்கு முன்பு இத்தீவின் மணல் திட்டில் மாட்டிக் கொண்ட கப்பலை இன்றும் கூகுல் மேப் வழியாக பார்க்க முடியும். கப்பலில் இருந்தவர்கள் பல போராட்டங்களுக்குப் பிறகு எலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டது தனிக் கதை.

தஞ்சைக் கல்வெட்டில்

ஜாரவா ஆதிவாசிகள் அந்தமானுக்கு உட்பட்ட தீவுகள் குறித்தும், அங்கு வசிக்கும் ஆதி மனிதர்கள் குறித்தும் தஞ்சைக் கல்வெட்டில் நக்காவரம் என குறிப்பிடப்பட்டுள்ளத. நக்காவரம் என்றால் நிர்வாணம் என பொருள். அந்தமான் பகுதியில் முன்பு வாழ்ந்து வந்த ஆதிவாசிகள் குறித்தம், தற்போது இந்தத் தீவில் வசிக்கும் ஜாரவா இன மக்களைக் குறித்தும் அன்றே தஞ்சைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருப்பது வியப்பு.

சோழர்களின் பாதுகாவலர்கள்

கி.பி.11-ஆம் நூற்றாண்டில் இத்தீவுகள் முழுவதுமே சோழப்பேரரசின் ஆட்சிக்குள் கொண்டு வரப்பட்டதாக கதைகள் உண்டு. பெரிய நிக்கோபார்த் தீவருகில் புலிக்கொடி பொறித்த கல்வெட்டு இருப்பதாக வரலாற்று ஆய்வாளர்களும் குறிப்பிடுகின்றனர். அதோடு நிக்கோபாருக்கு உட்பட்ட பகுதிக்கு சோழர்கள் அடிக்கடி பயணித்தாகவும் வரலாறு உள்ளது. இவற்றின் மூலம் இப்பகுதி மக்கள் சோழர்காலத்தில் மன்னர்களின் பாதுகாவல்களாக, மக்களாக இருந்திருப்பர் என கருதப்படுகிறது.

பானைகள், எலும்புகள், சுடுமண் உறைகிணறு!

இரா.மோகன்

வைகை ஆறு பாயும் பரமக்குடி அருகே உள்ள பாம்புவிழுந்தான் கிராமத்தில் உள்ள ராக்கப்பெருமாள் கோயில் திடலில் நிலப்பகுதியைச் சீர்படுத்தியபோது சுடுமண் ஓடுகள் தென்பட்டன.

பரமக்குடியில் வைகை ஆறு செல்லும் கரையோரத்தை ஒட்டிய கிராமம் ஒன்றில் சுடுமண்ணால் உருவாக்கப்பட்ட உறை கிணறு கண்டறியப்பட்டுள்ளது. இதைய டுத்து வைகை ஆறு பாயும் ராமநாதபுரம் மாவட்டப் பகுதிகளில் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

தமிழகத்தின் தென் மாவட்ட பகுதி களான ஆதிச்சநல்லூர், அழகன்குளம், கீழடி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தமிழர்க ளின் தொன்மையான வரலாற்றுக்குச் சான் றாக பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தொல் பொருள்கள் கிடைத்து வருகின்றன. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆதிச்ச நல்லூரில் நடந்த தொல்பொருள்கள் குறித்த முடிவுகள் முழுமையாக அறிவிக்கப்படாத நிலையில் சிவகங்கை மாவட்டம், கீழடி யில் தொல்பொருள் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. 5 கட்டங்களாக இங்கு நடத்தப் பட்ட ஆய்வுகளில் 2600 ஆண்டுகளுக்கு முந்தைய நகரமைப்புகள், மக்கள் பயன்ப டுத்திய பொருள்கள் கண்டெடுக்கப்பட் டுள்ளன.

இதேபோல் ராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றின் முகமாக விளங்கிவரும் ஆற் றங்கரை அருகில் உள்ள அழகன்குளத்தில் நடத் தப்பட்ட தொல்பொருள் ஆய்விலும் 3 ஆயிரத் திற்கும் மேற்பட்ட தொல்பொருள்கள் கிடைத்தன. மேலும் கிழக்குக் கடற்கரை பகுதியின் துறைமுக நகரமாக விளங்கிய தொண்டிப் பகுதியிலும் பழை மைமிக்க தொல்பொருள்கள் கிடைத்துள்ளன.

இந்நிலையில் வைகை ஆறு பாயும் பரமக்குடி அருகே உள்ள பாம்புவிழுந்தான் கிராமத்தில் உள்ள ராக்கப்பெருமாள் கோயில் திடலில் நிலப்பகுதி யைச் சீர்படுத்தியபோது சுடுமண் ஓடுகள் தென் பட்டன. இதனால் இப்பகுதியில் முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டால் வைகை நாகரிகம் தொடர்பான சான்றுகள் கிடைக்கும் எனக் கூறப் பட்டது. கடந்த சில நாள்களாக பரமக்குடி அரசுப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றும் சரவணன், பெருமாள் கோயில் பகுதியில் உள்ள தொல்லியல் மேடுகளில் ஆய்வு மேற்கொண்டு வந்தார்.

இவரது ஆய்வின்போது பானைகள், எலும்பு கள், செங்கல் போன்றவை உடைந்த நிலையில் கண்டறியப்பட்டன. இதற்கு மேலும் வலுசே ர்க்கும் வகையில் கருவேல மரங்களுக்கு இடை யேயான பகுதியில் சுடுமண் உறைகிணறு ஒன்றும் அப்பகுதியில் உள்ள இளைஞர்களின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேல்பகுதி தடிமனாக வடிவமைக்கப்பட்ட நிலையில் 4 சுடுமண் உறை கள் வெளியே தெரிகின்றன.

சுடுமண் உறை கிணறு கண்டறியப்பட்டது குறித்து விளக்கிய ஆசிரியர் சரவணன், ¨மூல வைகை பகுதியான வருசநாடு மலைப்பகுதி தொடங்கி கடல் பகுதியான கச்சதீவு வரை வைகை நாகரிகம் பரவியுள்ளது. சமீபத்தில் கீழடியில்

நடத்தப்பட்ட ஆய்வின்போது கிடைத்த பொருள் களைப் போன்றே பாம்புவிழுந்தான் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களும் உள்ளன. இது வைகை நாகரிகம் பரவலாக இருந்து வந்ததற்குச் சான்றாக உள்ளது. எனவே தமிழக அரசு மற்றும் தொல்லியல் துறையினர் முறையான ஆய்வுகளை இப்பகுதியில் நடத்த முன்வர வேண்டும். அதன் மூலம் தமிழர்களின் பழைமையான வாழ்க்கை வரலாற்றை விரிவாக அறிந்து கொள்ள முடியும் என்றார் உறுதியாக.

நன்றி: விகடன்

பிக்பாஸ்..

14 ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்நிலையில் 54-வது நாளில் மதுமிதா பிக்பாஸ் வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

பிக்பாஸ் வீட்டில் தன்னை தானே காயப்படுத்திக் கொண்ட மதுமிதா, என்னை வீட்டில் உள்ளவர்கள் மன ரீதியாகக் கஷ்டப்படுத்தினார்கள்¡¡ எனக் குற்றஞ்சாட்டினார்.

அப்போது பேசிய கமல், கொஞ்ச நாட்கள் முன்பு வரை வெற்றி வாய்ப்பு உள்ளவர்கள் பேரில் உங்கள் பெயரும் அடிபட்டது. வெளியே மட்டும் அல்ல உள்ளே இருப்போர் (பிக்பாஸ் வீட்டில் இருப்போர்) முன் வைத்த பட்டியலிலும் உங்கள் பெயர் இருந்தது. இப்போதும் கேப்டன்சிக்காக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளீர்கள். உங்களை வெளியேற்றுவதற்கான அனைத்து வாய்ப்பும் அகன்று, தட்டில் வைத்துக் கொடுக்கப்பட்ட இந்த வெற்றியை தட்டிவிட்டு விட்டு இங்கே வந்து நிற்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது,¡¡ என்றார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய மதுமிதா, நான் தைரியமான பெண் என்று எல்லாருக்கும் தெரியும். என் தைரியம் எந்த அளவுக்குச் சோதிக்கப்பட்டிருந்தால் இந்தவொரு முடிவுக்கு வந்திருப்பேன், என்றார்.

மதுமிதா எந்த காரணத்திற்காகத் தன்னை தானே காயப்படுத்திக் கொண்டார் என்ற விவரங்களை பிக்பாஸ் நிகழ்ச்சித் தயாரிப்பு குழு தெரிவிக்க வில்லை.

மதுமிதா வீட்டை விட்டு வெளியேறிய பின்னும் சர்ச்சைகள் தொடர்ந்தன. விஜய் டிவி நிர்வாகம் மற்றும் மதுமிதா ஆகியோர் காவல்துறையில் மாறி மாறி புகார் கொடுத்தனர். செய்தியாளர்களை அழைத்து மதுமிதா தனது விளக்கத்தை தந்தார்.

இதற்கிடையில் பிக்பாஸ் வீட்டில் அபி - முகேன் நட்பு கதை முற்றுப்பெற்று கவின் - லொஸ்லியா இடையேயான அன்பின் கதை பல பக்கங்களை தாண்டி இருந்தது.

சேரன் வெளியேற்றப்பட்டு பிக்பாஸ் அழைப்பின் பேரில் ரகசிய அறையில் தங்கி மீண்டும் வீட்டுக்குள் நுழைந்தார்.

இந்த சூழலில்தான் பிக்பாஸ் வீட்டுக்குள் பங்கேற்பாளர்களின் குடும்பத்தினர் வரத் தொடங்கினர்.

பிக் பாஸ் வீட்டுக்குள் லொஸ்லியாவின் தந்தை மரியநேசன் வந்தார். கடந்த பத்தாண்டாக தன் தந்தையைப் பார்க்கவில்லை என்று லொஸ்லியா முன்பு கூறி இருந்தார்.

பல நாட்கள் கழித்து தந்தையை பார்த்த மகிழ்ச்சியில் கதறி அழுதார் லொஸ்லியா. மகளை கட்டியணைத்துத் தேற்றினார் மரியநேசன்.

லொஸ்லியாவை தேற்றிவிட்டு சக போட்டியாளர்கள் முன்னிலையிலேயே குமுறிய மரியநேசன், என்னிடம் என்ன சொல்லி நீ வந்த, நான் உன்னை அப்படியா வளர்த்தேன் என்று தழுதழுத்தார்.

மரியநேசனை சமாதானப்படுத்தினார் இயக்குநர் சேரன். லொஸ்லியா தந்தை ஆதங்கப்பட்டதைப் பார்த்து ஓரமாக அமைதியாக நின்றிருந்தார் கவின், குற்ற உணர்ச்சியில் வீட்டுக்குள் சென்ற கவின் ஒரு பக்கம் அழத் தொடங்கினார்.

இந்த காட்சிகள் ஒளிபரப்பானதும் இயக்குநர் வசந்தபாலன். தனது ஃபேஸ்புக் பக்கத்தில், பிக்பாஸ் வீட்டில் வாழும் போது காதலும் கண்ணீரும் வருவது சகஜம் தானே என்று, லொஸ்லியா- கவின் காதல் பேச்சுவார்த்தை வளரும்போதே ஏன் எதிர்க்கிறீர்கள் என்று கருத்து பதிந்திருந்தார்.

மீண்டும் பிக்பாஸ் வீட்டுக்குள் நுழைந்திருந்த வனிதா இறுதிக்கட்ட வாரங்களை எதிர்கொள்ளும் முன்னரே வெளியேற்றப்பட்டார்.

முகேன் கோல்டன் டாஸ்க்கில் நேரடியாக இறுதி சுற்றுக்குத் தேர்ச்சி பெற்றார். அதன் பின்னர், இப்போது யாரேனும் ஒருவர் பிக்பாஸ் வீட்டிலிருந்து வெளியேற விரும்பினால் அவருக்கு ஐந்து லட்சம் வழங்கப்படும் . ஐந்து லட்சம் வேண்டாமென்றால் அவர் தொடர்ந்து போட்டியிட்டு இறுதி வரை செல்லலாம் என்று பிக்பாஸ் அறிவித்தார்.

சட்டென்று எழுந்த கவின் நண்பர்கள் எதிர்ப்பை மீறி, நான் ரெடி தல என்றார். பாத்திர கடையிலேயே கோப்பை வாங்கிக் கொள்கிறேன், நான் வெளியேறுகிறேன் என்று கூறி பிக்பாஸ் வீட்டிலிருந்து வெளியேறினார்.

லொஸ்லியாவும், சாண்டியும் ஒரு பக்கம் அழ. முகேனும், தர்ஷனும் தேற்ற. இது அவன் முடிவு. அதனை அவனை எடுக்க விடுங்கள் என ஷெரீன் பேச வீடே உணர்ச்சி பிழம்பாக மாறியது.

பிக்பாஸ் வீட்டில் போட்டியாளர்களுக்கு கடும் சவாலாக இருந்தவர் தர்ஷன். வனிதாவை எதிர்த்து முதல் முதலாக கேள்வி கேட்டவரும் தர்ஷன். அவர் கோப்பையுடன் பிக்பாஸ் வீட்டை விட்டு வெளியேறுவார் என சிலர் எதிர்பார்த்திருந்தனர்.

சக போட்டியாளர்களும் தர்ஷன்தான் வின்னர் என நினைத்தனர். இந்த சூழலில் இறுதியாக தர்ஷன் பிக்பாஸ் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

தர்ஷனுக்கு வாக்கு விழாதது எனக்கு அதிர்ச்சியாக இருக்கிறது என்றார் கமல். பெருஞ்சோகத்துடன் வீட்டைவிட்டு வெளியேறினார் தர்ஷன்.

யார் வெல்வார்?

இப்போது வீட்டுக்குள் இருப்பவர்கள் லொஸ்லியா, ஷெரீன், முகேன் மற்றும் சாண்டி.

இந்த நால்வரும் கடுமையான போட்டியாளர்கள் தான்.

இந்த நால்வரில் கோப்பையை வெல்லப் போவது யார் என்பது அக்டோபர் ஆறாம் தேதி தெரியவரும்.

நன்றி: பிபிசி

சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்லாறு இலங்கை வங்கி பாடசாலைக்கு பயனுள்ள பாடப்புத்தகங்கள் கையளிப்பு

பெரியகல்லாறு நிருபர்

பெரியகல்லாறு மத்தி யகல்லூரி க.பொ.த உயர் தரம் சாதாரண தரம், மற்றும் மாணவர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும். பரீட்சை க்குத் தயார்படுத்தலுக்கான பெறுமதியான ஒரு தொகுதி பாடப் புத்த கங் க ளை யும் கடந்தகால வினாத் தாள் தொகுப்புக்களையும் பாடச ாலை அதிபர் எஸ்.பேரின் பராஜாகிடம் கல்லாறு இலங்கை வங்கி கிளைமுகா மையாளர் எஸ்.சிவநாயகம் வங்கி உத்தியோகத்தர்கள் சகிதம் வியாழனன்று (03) அதிபர் காரியாலயத்தில் வைத்து வழங்கிவைப்பதைப் படத் தில் காணலாம்.

குருகுல மாணவர்கள் கல்வி, விளையாட்டு, ஒழுக்கம் நன்றியுணர்வு என்பவற்றில் மேலோங்கிவருவது மகிழ்ச்சியளிக்கின்றது

மட்டு அரசாங்க அதிபர் மா.உதயகுமார்

பெரியகல்லாறு நிருபர்

நல்ல செயற்பாடுகளைச் செய்யும் எவரும் மக்கள் மனதில் நிலைத்து நிற்பார்கள்;. அந்தவ கையில் தவத்திரு பொன்னையா சுவாமிகளால் ஸ்தாபிபக்கப்பட்ட இந்த குருகுலம் 30ஆண்டுகளாக நிலைத்திருப்பது ஒரு நல்ல சாத னையாகும். அன்னாரை நினைவு கூர்ந்து இன்று நடக்கும் இவ்விழா வானது அவரின் அளப்பரிய அர்ப் பணிப்படன் கூடிய சேவையை மறக்காமல் மீட்டுப் பாடக்கும் வாய்ப்பை எமக்களித்துள்ளது.

மேற்கண்டவாறு களுதாவளை திருஞானசம்பந்தர் குருகுலத்தின் 30வது ஆண்டு நிறைவு விழா, குரு குல ஸ்தாபகர் தவத்திரு க.பொன் னையா சுவாமி அவர்களின் 28வது நினைவுதினம், என்பவற்றை யொட்டி குருகுல மண்டபத்தில தலைவர் ப.குணசேகரன் தலைமை யில்; நடைபெற்ற விழாவில் பிர தம விருந்தினராக கலந்து கொண்டு பேசிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உத யகுமார் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

ஆரம்ப காலங்களிலே ரிஷி கள், முனிவர்கள். ஆச்சாரியர் கள் இத்தகைய குருகுலங்களை நடாத்தி சமயம் போதித்தது துடன் சமய விழுமியங்களை காத்து வளர்த்தெடுத்தார்கள்;. வாழ்வியல் விடயங்களைச் செ ால்லிக் கொடுத்தார்கள். அதன் மூலம் நாட்டுக்கு உகந்த ஒழுக்க முள்ள பிரஜைகளை உருவாக்கி னார்கள். அதே நோக்கத்துடன்தான் ஸ்தா பகர் தவத்திரு பொன்னையா சுவாமிகள் இந்த குருகுலத்தை உருவாக்கினார். அவரின் இலக்கை இந்த குருகுலம் சி றப்பாக நிறைவேற்றி வருவது மகிழ்ச்சி யளிக்கின்றது.

இங்குள்ள மாணவர்கள் கல்வி, விளையாட்டு, கலை கலாசாரம் என்ப வற்றில் சிறந்து விளங்குவதை கண்கூ டாகக் காணக் கூடியதாக இருக்கின்றது. அவ்வாறு அவர்கள் வளர்த்தெடுக்கப்படு வது நிர்வாகிகளின் அதிஸ்டமே. அவர் களின் அர்ப்பணிப்பான சேவை மூலமே இது சாத்தியமாகியுள்ளது.

வெறும் கல்வியளிப்பதுடன் மட் டும் ஒரு நற் பிரஜையை உருவாக்கிவிட முடியாது. அவன் ஒழுக்க விழுமியங் களை சடைப்பிடிக்கக் கூடியவனாக இருந்தால் மட்டுமே அவன் கல்வியால் சமூகம் நன்மையடையும். அவனும் சமூகத்தால் மதிக்கபடுவான். அந்த வகையில் இங்குள்ள மாணவர்கள் கல்வி யிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கு வது பாராட்டுக்கரியது.

பொருத்தமற்ற சூழல் நிலவிய காலத் தில் கூட மாணவர்களை பாதுகாத்து நீ ங்கள் உயிரை துச்சமாக மதித்து ஆற் றிய சேவைகள் இறைவனுக்கு சாத்திய சேடியாகவே நான் கருதுகின்றேன். அதற்கு சான்றாக இங்கு கற்ற பழைய மாணவன் ஒருவரின் நன்றியுணர்வுடன் கூடிய நா தளதளக்க கூறிய உருக்கமான பேச்சை செவிமடுக்க் கூடியதாக இருந்த தது.

இத்தகைய அளப்பரிய சேவைக ளைச் செய்து வரும் உங்களை தவறாக விமர்சிப்பவர்களும் இருக்கலாம்.

நீங்கள் அதையிட்டு கவலை கொள்ள வேண் டிய அவசியமில்லை. அவர்கள் எந்த வேலையும் செயய்டமல் இத்தகைய விமர்சன வேலைகளை மட்டுமே செய்பவர்கள். அதற்கு அவர்களுக்கு நிறையவே நேரம் இருக் கின்றது.

ஆனால் உங்களுக்கு அப்படியல்ல. இங்குள்ள சிறார்களை எப்படி சமூகத்திற்கு ஏற்ற பிள்ளைகளாக சமூகத்திடம் கையளிக் கலாம் என்ற சிந்தனைவயப்படடவர் களாகவே இருக்கின்றீர்கள். எனவே உங்களுக்கு நேரம் போதாத நிலையே இருக்கின்றது. எனவே வீண் விமர்ச னங்கள் பற்றி யோசிப்பதற்கு உங்கள் பொன்னான நேரத்தை விரயம் செய்ய வேண்டியதில்லை. இன்னும் எப்படி சி றப்பாகச் செய்யலாம் என்பது பற்றியே சிந்தியுங்கள்.

நான்கு நாயன்மார்களிலும் முக்கிய இடத்தை பிடித்திருந்தவர் திருஞானசம் பந்தர் . அத்தகைய சமய குரவர் பெயரை பொருத்தமாக வைத்து அரம்பிக்கப்பட்ட இந்த குருகுலம் பெயருக்கேற்ப பொருத் தமான கருமங்களை, கடந்த 30 வருடங் களைக் கடந்து மேற்கொள்வது இலகு வான காரியமல்ல. அதற்கு உங்களின் அர்ப்பணிபான சேவையே காரணமாக அமைகின்றது.

பெரு விருட்சமாக வளர்ததெடுக் கப்பட்டுள்ள இந்த குருகுலத்திற்கான தேவைகள் பற்றி இதுவரை என்னிடம் பிரஸ்தாபிப்ப்படவில்லை. என்னிடம் குருகுலத்திற்கான கோரிக்கைகள் எதுவும் என்னிடம் முன்வைக்கப்படும் இடத்து, நான் அதற்கு முன்னுரிமை கொடுத்து உதவுவதற்கு தயாராகவே இருக்கின் றேன.; இவ்வாண்டில் அதற்கான ச ாத்தியங்கள் இல்லாவிட்டாலும் அடுத் தவருடம் நான் கவனத்தில் எடுப்பேன் என தெரிவித்தார். மாணவர்களின் விளையாட்டு மற்றும் கல்வியில் பிரகாசி த்த மாணவர்களுக்கான சான்றிதழ் கள் மற்றும் பரிசுப் பொருட்களையும் வழங்கி வைத்தார்.

புல்லுமலை புனித செபமாலை அன்னை திருத்தல திருவிழா

உ உதயகாந்த் - கல்லடி நிருபர்

200 வருடம் தொன்மையான புனித செபமாலை மாதாதிருத்தல திருவிழா 4-10-2019 அன்று பி.ப 5.00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13-10 -2019 அன்று அதிவந்தனைக்குரிய கலா நிதி பொன்னைய்யா யோசப் ஆண்டகை அவர்களின் தலைமையில் திருவிழா கூட் டுத்திருப்பலி நடைபெறவுள்ளது.

12-10-2019 அன்று பாதயாத்திரை யானது புனித மரியாள் பேராலயத்தில் இருந்து பி.ப 3.00மணிக்கு ஆரம்பமாகி வவுணதீவு ஆயத்தியமலை கரடியனாறு பதுளை வீதி வழியாக திருத்தலத்தை வந்தடையும். சிறப்பாக 12-10-2019 பி.ப 5.30 மணிக்கு ஆசிர்வாதத்தினை வாரிவ ழங்கும் திருச்சுருவபவனி இறைபக்த்ர்கள் சூழ இடம் பெறும் என்பது குறிப்பிடத் தக்கது. புல்லுமலை புனித செபமாலை அன்னையின் திருவிழாவை முன்னிட்டு கழிவுகளை சேகரிக்கும் ரப்பர் வாழி கள் ஒரு தொகுதியினை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் மறை மாவட்ட ஆண்டகை கலாநிதி பொன்னைய்யா யோசப் அவர்க ளிடம் கையளிக்கப்பட்டது.

மாவட்ட அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வு கூட்டம்

உ. உதயகாந்த் - கல்லடி நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய் வுக் கூட்டம் (03.10.2019) காலை 10.30 மணிக்கு அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் தலைமை யில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாவட்ட செயலகத்தின் கீழ் வரு கின்ற அபிவிருத்தி தொடர்பான மீளாய்வு பதினான்கு பிரதேச செயலகங்களிலும் முன்னெடுக்கப்பட்ட வேலைகளை இவ் வாண்டு இறுதிக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். எனவும் இது தொடர்டபில் ஏற்படுகின்ற பிரச்சனைகள் ,தடைகள் என்ன என ஆராயப்பட்டு அதற்கான தீர் மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட செயலகத்தின் புதிய கட்டிட வேலைகள்,பிரதேச செயல கம்,வாழைச்சேனை,களுவாஞ்சிகுடி,பட் டிப்பளை,ஆகிய செயலக கட்டிடங்கள் உடனடியாக வேலைகளை பூர்த்தி செய்து கையளிக்கும்படி ஒப்பந்தக்காரர்களுக்கு

பணிப்புரைகளும் வழங்கப்பட்டது.இது தொடர்பாக பொறியியலாளர் கண்கா ணித்து துரிதப்படுத்தும்படியும் அரசாங்க அதிபரால் கோரப்பட்டது.

எதிர்வருகின்ற தேர்தல் மற்றும் மழைக்காலம் ஆரம்பிக்கவுள்ளமை யினால் சகல கட்டுமானம்,வீதி,பால வேலைகளை துரிதப்படுத்தி முடிப்பதற் கான சகல நடவடிக்கையினை எல்லா உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்புடன் நடாத்தி முடிக்கும்படி பணிக்கப்பட்டது.

ஒப்பந்தக்காரர்களுக்கான நிதிகளை உரிய காலத்திற்கு வழங்கப்பட்டும் ஒப் பந்த வேலைகள் தாமதமாவது ஏன் என்ற வினாவும் எழுப்பப்பட்டது.எதுவாக இருப்பினும் வேலைகள் ஆண்டு இறு தியை கவனத்தில் கொள்ளாது உடனடி யாக முடிக்கப்பட வேண்டும் என பணிக் கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு அரசாங்க அதிபர் மா.உதயகுமார்,மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்,மாவட்ட செயல கத்தின் பிரதம கணக்காளர் க.ஜெகதீஸ்வ ரன்,திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசி கலா புண்ணியமூர்த்தி, மற்றும் பிரதேச செயலாளர்கள்,திணைக்களத்தலைவர் கள்,மாவட்ட ஒப்பந்தக்காரர்கள்,ஆகி யோர் கலந்து கொண்டனர்.

நவராத்திரி விழா

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் எதிர்வரும் (08.10.2019) ஆந் திகதி செவ் வாய்கிழமை காலை 10.00 மணிக்கு நவராத்திரி விழாவினை கொண்டாடவுள்ள து. இவ் விழாவானது மாவட்ட செயலகத் தின் வளாகத்தினுள் மாவட்ட செயலாளர் மாணிக்கம் உதயகுமார் தலைமையில் மிக வும் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

மாவட்ட செயலகத்தினால் ஒவ்வொரு வருடமும் நடைபெறுவது போன்று இம் முறையும் செயலகத்தின் உத்தியோகத்தர் கள் சகலரும் இணைந்து சிறப்பான முறை யில் ஒழுங்கமைத்து நடாத்துவதற்கு திட்ட மிடப்பட்டுள்ளது.

வாணி விழாவினை முன்னிட்டு பல கலை நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட் டுள்ளது.அத்தோடு பக்தி பாமாலை,சகல கலாவல்லி மாலை , போன்ற பண்ணிசை நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்வுகள் அனைத்தும் அரசாங்க அதி பரின் ஆலோசனையின்படி மேலதிக அர சாங்க அதிபர் திருமதி.சுதர்சினி சிறிகாந் அவர்களின் வழிகாட்டலில் சிறப்புற இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரச உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிப்பட்டறை

மட்டக்களப்பு மாவட் டத்தில் பெரும்போக சுற்றுநிருபத்தினை அரச உத்தியோகத்தர்களுக்கு தெளிவுப்படுத்தும் பயிற்சிப் பட்டரை மாவட்ட செய லக கேட்போர் கூடத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சு.ஸ்ரீகாந்த் தலைமையில் (30.09.2019) நடைபெற்றது.

இங்கு பெரும் போக சுற்றுநிருபத்தில் விவசாயிகள் பயிற்செய்கை செய்வதற்கு என்று அரச மானிய உரங்களை பெற்று சட்டவிரோத மாக பயன்படுத்துவது தண்டனைக்குறிய குற்றமாகும் என்று தேசிய உரச்செயலக உதவிப்பணிப்பாளர் தெரிவித்தார்.

விவசாயிகள் உரங்களை உரிய காலத் தில் பெற்று பயிற்ச்செய்கை பயன்படுத்த வேண்டும் என்றும்

இவ்நிகழ்வில் தேசிய உரச்செயலக உதவிப்பணிப்பாளர் , மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) நவரூபரஞ்சி னி முகுந்தன், அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.என்.சியாத், கமநல உத்தியோகத்தர்கள், பிரதம கணக் காளர் திரு.மு.ஜெகதீஸ்வரன, ;கணக் காளர் எஸ்.பிரேமகுமார் மற்றும் அரச உத்தியோகத்தர்களும் என பலரும் கலந் துகொண்டனர்

பாடசாலை மாணவர் பாராளுமன்ற தேர்தல்

ந.குகதர்சன்

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்துக்குட்பட்ட காத்தான்குடி மத்திய கல்லூரியில் மாணவர் பாரா ளுமன்ற தேர்தல் வியாழக்கிழமை கல்லூரியில் நடைபெற்றது.

காத்தான்குடி மத்திய கல்லூரி யின் முதல்வர் எஸ்.எச்.பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்ற மாணவர் பாராளுமன்ற தேர்தலில் தொன்னூறு மாணவர்கள் போட்டியிட்டனர்.

இதன்போது மாணவர் பாரா ளுமன்ற தேர்தலில் தொண்ணூறு மாணவர்கள் போட்டியிட்டு அதில் அறுபது மாணவர்கள் தெரிவு செய் யப்பட்டனர்.

இவர்களில் இருந்து பிரதமர், சபாநாயகர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உட்பட்டோர் தெரிவு செய்யப்பட்டுவார்கள் என கல்லூரி யின் முதல்வர் எஸ்.எச்.பிர்தௌஸ் தெரிவித்தார்.

அத்தோடு மாணவர் பாராளு மன்ற தேர்தலில் 1348 வாக்குகள் அளிக்கப்பட்டு அதில் எட்டு வாக்கு கள் நிராகரிக்கப்பட்டு 1340 வாக்குகள் செல்லுபடியான வாக்குகள் என்றும், இதன் மூலம் அறுபது மாணவர்கள்

தெரிவு செய்யப்பட்டனர் என்றும் தேர் தல் ஆணையாளராக கடமையாற்றிய ஆசிரியர் திருமதி.சஞ்ஜீவிகா ஜெயகாந் தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் காந்தியின் ஜனன தினம்

கல்லடி நிருபர்

மகாத்மாகாந்தியின் 150 ஆவது ஜனன தினம் (02) மட்டக்களப்பு நகரிலுள்ள காந்தி பூங்காவில் அமையப் பெற்றுள்ள திருவுருவச் சிலையருகில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மாநகர முதல்வர் தி.சர வணபவன் மற்றும் பிரதி மேயர் , மாநகர உறுப்பி னர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சர்வதேச சிறுவர் தின நிகழ்வு கல்லடி ஹரி சிறுவர் இல்லத்தில் 01.10.2019 திகதி ச.சந்திரகுமார் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செய லாளர் திரு.மா.உதயகுமார் அவர்களும் அதிதிகளாக ஸ்ரீ சித்தி விநாயகர் பேச்சியம்மன் ஆலய முகாமையாளர் திரு.ந.ஹரிதாஸ் அவர்களும் சேவா லங்கா பணிப்பாளர் திரு.ஜெ.சாய்ராஜன் அவர்களும் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 06.10.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

ஜப்பான் தூதுவராலயத்தின் அரசியல் பிரிவின் செயலாளருடன் பொறியியலாளர் ஷிப்லி பாறூக் சந்திப்பு

ஜப்பான் தூதுவராலயத்தின் அரசியல் பிரிவின் இரண்டாம் செயலாளர் டெகசி ஒசாகி மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் ஷிப்லி பாறூக் இற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு ஒன்று காத்தான்குடியிலுள்ள பொறியியலாளர் ஷிப்லி பாறுக்கின் இல்லத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் ஆக்கபூர்வமான பல விடயங்கள், முஸ்லிம் சமூகம் சம்பந்தமாகவும் நாட்டின் அரசியல் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டது.

குறிப்பாக கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகத்திற்கெதிரான திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்படும் வெறுப்பூட்டப்படும் பேச்சுக்கள், ஆடை விவகாரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் மார்க்கத்தை போதிக்கும் மதரசாக்களில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் மதரசாக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் உட்பட முஸ்லிம்கள் சமகாலத்தில் முகம்கொடுக்கும் பல பிரச்சினைகள் சம்பந்தமாக டெகசி ஒசாகியிற்கு விளக்க மளிக்கப்பட்டது.

உள்ளூர் மற்றும் தேசிய ரீதியிலான சமகால அரசியல் சம்பந்தமாகவும் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது, அரசியல் ரீதியாக முஸ்லீம் சமூகம் எதிர்கொண்டுவரும் பிரச்சனைகள், இனவாத அடக்குமுறைமைகள் தொடர்பாகவும், நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்களின் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும், எதிர்வரும் அரசாங்கத்துடன் முஸ்லிம்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பன தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், காத்தான்குடியின் தற்போதைய பாதுகாப்பு நிலவரம், எதிர்கால பாதுகாப்பு திட்டங்கள் தொடர்பிலும், 21/4 தாக்குதலுக்கு பின்னரான காத்தான்குடியின் களநிலவரம், அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகள், மற்றும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நபர்களின் குடும்ப வாழ்வாதார பிரச்சனைகள் தொடர்பாகவும், தொழில்சார் பிரச்சனைகள் மற்றும் இன்னோரன்ன சமூக பிரச்சனைகள் சம்பந்தமாகவும் பேசப்பட்டது.

பயங்கரவாத தாக்குதலுக்கு பின்னரான நாட்டின் பொருளாதார வீழ்ச்சி, பாதிப்புக்குள்ளான சுற்றுலாத்துறை சம்பந்தமாகவும், இவற்றை மேம்படுத்த அரசு மேற்கொண்டுவரும் எதிர்கால திட்டங்கள் தொடர்பாகவும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக பாதிப்புக்குள்ளகியிருக்கும் காத்தான்குடி மக்களின் வாழ்வாதார பிரச்சனைகள், காத்தான்குடி வர்த்தகர்களின் தொழில்சார் பிரச்சனைகள், வெளியூர்களில் காத்தான்குடி வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் சம்பந்தமாகவும் அவரிடத்தில் தெளிவு படுத்தப்பட்டது.

மேலும் இளைஞர்களின் வேலையில்லாப்பிரச்சினை ஜப்பான் நாட்டின் அரசாங்கத்தால் வழங்கப்படும் திறமை அடிப்படையிலான வேலைவாய்ப்பு சம்பந்தமாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

மட்டக்களப்பில் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் 14 வயது சிறுவன் உயிரிழப்பு; 3 இளைஞர்கள் கைது

மட்டக்களப்பு கித்துள் காட்டுக்கு உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியுடன் 4 பேர் வேட்டைக்கு சென்ற நிலையில் குறித்த துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் 14 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை (28) மாலையில் இடம்பெற்றுள்ளதாகவும் இதில் 3 இளைஞர்களை கைது செய்துள்ளாதாக கரடியனாறு பொலிசார் தெரிவித்தனர்

கித்துள் பிரதேசத்தைச் சேர்ந்த சிறிக்காந்தன் தனுஜன் என்ற 14 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவன் உட்பட 4 பேர் உள்ளூர் தயாரிப்பான கட்டுத்துவக்குடன் சம்பவதினம் மாலையில் காட்டில் வேட்டைக்கு சென்றுள்ளனர் இந்த நிலையில் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் சிறுவன் படுகாயமடைந்துள்ளார்

இதனையடுத்து சிறுவனை கரடியனாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட:ட மேலதிக சிகிச்சைக்காக உடனடியா மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் இடையில் உயிரிழந்துள்ளார் .

இச் சம்பவம் தொடர்பாக வேட்டைக்கு சிறுவனுடன் சென்ற குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 22, 20, 14 , வயதுடைய 3 பேரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்துள்ளனர்

ஊயிரிழந்தவரின் சடலம் மட்டு போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள துடன் .இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

புனிதமாக போற்றப்படும் இந்துக்களின் வணக்கதலத்தை இடுகாடாக மாற்றிய பௌத்த துறவிகள்; இது ஒரு மனித உரிமை மீறலாகும்

முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் து.நவரட்னராஜா

எஸ்.ஞானசெல்வன்

இந்துக்களின் ஆலயத்தினுள் பௌத்த துறவியின் சடலத்தை தகனம் செய்ததுடன் அங்கு செருப்பு காலுடன் நின்ற ஞானசார தேரரின் செயலுக்கு சட்டத்தை ஏவ வேண்டிய நாட்டின் தலைவர்கள் அறிக்கையை விட்டுவிட்டு ஏறி சிம்மாசனத்தில் அமைந்திருப்பது அரசியல் நாடகமாகும் என முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் கலாநிதி து.நவரெத்தினராஜா தெரிவித்தார்

நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் ஞானசார தேரர் நடாத்திய பௌத்த துறவியின் தகனக்கிரிகை திரு விழாவிற்கு கண்டனம் தெரிவித்து முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் கலாநிதி து.நவரெத்தினராஜா ஊடக அறிகை ஒன்றை ஞாயிற்றுக்கிழமை (29) வெளியிட்டுள்ளார்.

ஆலைய வளாகத்தினுள் அக்கினியுடன் சங்கமமாகியது பௌத்த துறவியின் உடல். இச் செயலால் மொத்தத்தில் வெந்தபுண்ணில் இந்துக்களின் இதயத்தில் வேல் பாச்சியதுடன் புனிதமாக போற்றப்படும் இந்துக்களின் வணக்கதலத்தை இடுகாடாக மாற்றிய பௌத்த துறவிகளின் ஆடிய ஆட்டம் ஒரு மனித உரிமை மீறலாகும்

இது பௌத்த நாடுதான் எல்லாவற்றுக்கும் மேலாக மதிக்கப்பட வேண்டியவர்களும் பௌத்த துறவிகள் தான் என இலங்கையின் அரசியல் யாப்பும் சொல்லுகின்றது ஆனாலும் பௌத்த துறவிகளின் இச் செயலானது வெறுக்கத் தக்கதாகும்.

இதேவேளை நீராவியடி பிள்ளையார் ஆலய விவகாரம் பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டிய செயலுக்கு நடவடிக்கை எதுவுமின்றி வெறுமனே நல்லாட்சி அரசின் காவலன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு பக்க சார்பாக கண்டன அறிக்கையை மட்டும் வெளியிட்டு விட்டு ஏறி சிம்மாசனத்தில் அமைந்திருப்பது என்பது தமிழர்களின் வாக்குகளை ஒட்டு மொத்தமாக அள்ளி ரணிலுக்கு கொடுத்துவிட்டு பல் இழித்து நிற்கும் தமிழ்தேசிய கூட்டமைப்பினர் மாத்திரமல்ல நல்லாட்சிக்கு வாக்களித்த அனைவரும் வெட்கி தலைகுனியவேண்டிய விடயமாகும்.

இதற்கு மேலாக ஞானசார தேரர் குழுவினரை ஆட்சியை பிடிக்க துடிக்கும் ஒரு குழுவினரே ஏவி விடுவதாக குற்றம் சாட்டி அரசியல் நாடகம் ஆடுவது பிரதமர் என்ற பதவிக்கும் அழகல்ல நடந்து நிறைவேறிய விடயத்துக்கு தீர்வு அல்ல என்பதை பிரதமர் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

அதேவேளை இந்த பிள்ளையார் ஆலய விவகாரத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா கண்டனத்தை தெரிவித்து மக்களுடன் சேர்ந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார். ஆனால் வேறு எந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் வாய்ச்சொல் வீரர்களும் ஸ்தலத்திற்கு வரவில்லை சம்மந்தனும் சுமத்திரனும் வாய்திறக்கவில்லை அதுமட்டுமல்ல சட்டத்தின் காவலனும் சட்ட ஒழுங்கு அமைச்சரும் திரும்பி பார்க்கவில்லை

ஜனாதிபதியா துடித்துநிற்கின்ற துறைசார் அமைச்சர் சஜித் பிறேமதாசா இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை. இந்து கலாச்சார அமைச்சர் அடுத்து என்ன செய்வாரோ தெரியவில்லை

சட்டம் எல்லோருக்கும் சமமானது நீதிமன்ற தடையுத்தரவை மீறுவது நீதிமன்றத்தை அவமதித்த செயலாகும் நீதிமன்றத்தை அவமதித்த ஞானசாரா தேரர் மட்டுமல்ல இராணுவம் பொலிசாருக்கும் இதில் சம்மந்தம் இருக்கின்றது அப்படியென்றால் சட்டம் அவர்கள் மீது பாயுமா சுமத்திரன் ஐயா ஞானசார தேரர் மீது வழக்கு தொடுத்து சிறையல் அடைக்க நடவடிக்கை எடுப்பாரா? என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் வறுமையை தடுக்க மீன்பிடி இயற்கை வளங்களை பாதுகாக்குமாறு மீன்பிடி அமைச்சருக்கு இரா.துரைரெத்தினம் கோரிக்கை

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்பிடித்தொழிலை வாழ்வாதாரமாக கொண்டவர்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படப்போகும் வறுமைகளை தடுக்கவும் மீன்பிடி இயற்கை வளங்களை பாதுகாக்கவும் அனைவரும் முன்னின்று செயற்பட வேண்டுமென முன்னாள் கிழக்கு மாகாணசபை சிரேஸ்ட உறுப்பினரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கியஸ்தருமான இரா.துரைரெத்தினம் மீன்பிடி அமைச்சருக்கு விரிவான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதுடன் மீனவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அண்ணளவாக 1140 கிராமங்கள், 346 கிராம சேவையாளர் பிரிவுகள், 14 பிரதேசசெயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய வாவிகள், கடல், குளங்கள்,ஏனைய நீர்தேக்கங்கள் போன்றவற்றில் மீன்பிடித்தொழிலை அண்ணளவாக 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட முழுநேர மீனவர்களும், ஆயிரக்கணக்கான பகுதி நேர மீனவர்களும் மீன்பிடித் தொழிலை செய்துவருகின்றனர் .

இம் மீனவர்களுக்கு மத்திய அரசாங்கம், மாகாண அரசு, ஏனைய நிதி நிறுவனங்கள், போன்றோர் பலதேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். மாவட்டத்தில் வெருகல் இருந்து துறைநீலாவணை வரையும் சுனாமி ஊடாக பல்லாயிரக்கணக்கான இழப்புக்களை உயிர்சேதம், பொருட்சேதங்களை சந்தித்தது வரலாற்றில் மறக்க முடியாத சம்பவமாகும்.

மாவட்டத்திலுள்ள அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள் ,கிராம சேவையாளர்கள். மாவட்ட மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் (மத்திய, மாகாணஅரசு) ஏனைய நிதி நிறவனங்கள் போன்றோரின் அயராத ஒத்துழைப்பின் காரணமாக, நல்லதிட்டங்கள் காரணமாக ஓரளவிற்கு மீனவர்கள் துன்பத்திலிருந்து விடுபட்டு வாழ்ந்து வருவகின்றனர். திணைக்கள அதிகாரிகளின் சரியான ஒத்துழைப்பே முன்னேற்றத்திற்கு காரணங்களாகும்.

இம்மீனவர்களைப் பொறுத்தவரையில் அனேகமான குளங்களில் மீன்வளர்ப்புதிட்டம் ஊடாக பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் நன்மை அடைகின்றனர். இதேவேளை இயற்கையான மீன் இனங்கள் மீன் வளர்க்கும் குளங்களில் அழிவடைந்து வாவிகளிலும் இயற்கையான மீன் இனங்களை அழிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இத்தோடு கடல் பிரதேசத்தில் இயற்கைக்கு முரணாக அனுமதியற்ற முறையில் தவறான மீன்பிடி செற்பாடுகள் காரணமாக, நேர்மையாக இயற்கை சூழலில் மீன் பிடிக்கும் பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் (கரைவலை,படகுகளில் மீன்பிடிப் போர்) போன்றோடர் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இத்தோடு வாவிகளிலும் பல மீனவர்கள் நேர்மையாக மீன்பிடித்தாழிலைச் செய்தாலும் குறிப்பிட்ட சிலரின் முறையற்ற, அனுமதியற்ற சுருக்குவலை ஊடாக தவறான முறையில் மீன்பிடிப்பதால் வாவிகளில் மீன்பிடிக்கும் பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் பாதிப்படைகின்றார்கள்.

மீனவர்களைப் பொறுத்தவரையில், சிறப்பாக இயங்காமலுள்ள மீன்பிடிச் சங்கங்களை புனரமைத்தல், உயிர் ஆபத்தை விளைவிக்கும் முதலைகளை பிடித்து இடம் மாற்றுதல், அசுத்த நீரை வாவிக்குள் திறந்து விடுவதை தடைசெய்தல் வாவிக்கரைகளில் குப்பை கொட்டுவதை தடுத்தல், வாவி ஓரங்களில் கண்ணாத்தாவரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்,

வாவியில் இயற்கையாக மீன் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்,வாவியை ஆழப்படுத்துதல், வாவியை இயற்கை உயிரோட்டம் உள்ளதாக மாற்றுதல், ஐஸ் உற்பத்திச் சாலையை மீள இயங்க வைத்தல், கடற்கரை ஓரங்களில் மீன்பிடி தொழிலைச் செய்வதற்கு பயன்படுத்திவந்த கரையோரங்களையும், கரையாரங்களில் வாடிகள் அமைத்து பயன் படுத்துவதற்கு அனுமதி அளித்தல்,(மீனவர் ஓய்வூதியம் 60 வயதை எட்டியதும் மூன்று மாத காலப் பகுதிக்குள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், கடற்கரை பிரதேசத்தில் அனுமதியற்ற மீன்பிடியைதடைசெய்தல்,

விதிமுறைக்கு முரணாக மீன்பிடி உபகரணங்களை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல், அனுமதியற்ற மீன் பிடித்தொழிலை செய்பவர்களை தடுத்த நிறுத்த கடற்படையினர்,பொலிசார்,மீன்பிடிதிணைக்கள உத்தியோகத்தர்கள்,மீனவர் சங்கங்களின் உதவியை நாடுதல். மீன்பிடிவள்ளங்களை தரித்து நிறுத்துவதற்கு கடற்கரை ஓரங்களில் உள்ள பகுதிகளில் மீன்பிடி இறங்குதுறையை அமைத்தல் (சிறியகாபர்)

குறிப்பாக, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பால மீன்மடு பகுதியில் 400ற்கு மேற்பட்ட மீனவர்களின் இயந்திர மீன்பிடிப் படகுகள்,50ற்கு மேற்பட்ட கடல்தோணிகளை தரித்து நிறுத்துவதற்கு இறங்குதுறை இல்லாமல் மீனவர்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். எனவே மீனவர்களின் நன்மை கருதி பாலமீன்மடு பகுதியில் மீனவர்களுக்கு இறங்குறை அமைக்க நடவடிக்கை எடுத்தல்,

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அனைத்து மீனவர்களும் வெள்ள காலத்தில் மீன்பிடி வள்ளங்களை கட்டுவதற்கு உகந்த இடமாக நீண்டகாலமாக பயன்படுத்தி வந்த பனிச்சங்கேணியிலுள்ள சல்லித்தீவை மீனவர்களுக்கு இறங்குதுறையாக பயன் படுத்துவதற்கு அனுமதி அளித்தல்,

அத்தோடு யாரும் சொந்தம் கொண்டாடவோ, யாருக்கும் குத்தகைக்கோ வழங்கக் கூடாது மீனவர்களுக்கே உரியதாக்க நடவடிக்கை எடுத்தல், வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் முறையற்ற விதத்தில் மீன்பிடிப்பதை தடுத்த நிறுத்துதல் போன்ற விடயங்கள் அனைத்தையும் விரைவாக செய்து முடிப்பதற்கு மீன்பிடித் திணைக்களத்திற்கு மீன்பிடி அமைச்சு சகல வசதிகளையும் செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். என அந்த கடிதத்தில் குறப்பிட்டுள்ளார்.

காத்தான்குடியில் முதலாவது குறுந்திரைப்பட விழா

கல்லடி நிருபர்

காத்தான்குடியில் முதலாவது குறுந்திரைப்பட விழா (30) திங்கட்கிழமை இடம் பெற்றது.

சிறகுநுனி குருந்திரைப்பட விழா 2019 எனும் இந்த குறுந்திரைப்பட திரையிடும் வைபவம் காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

சிறகுநுனி குருந்திரைப்பட தயாரிப்பாளரும் அதன் இயக்குனருமான முகம்மட் ஜாபீர் தலைமையில் நடைபெற்ற இதன் ஆரம்ப விழா வைபவத்தில் காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதர், மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் காத்தான்குடி உதவி பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா காத்தான்குடி உதவி திட்டமிடல் பணிப்பாளல் ஏ.எம்.றியாஸ் உட்பட காத்தான்குடி மற்றும் மண்முனைப் பற்று பிரதேச செயலகங்களின் தமிழ் முஸ்லிம் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது கிழக்கிலங்கையைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் இளந் தலைமுறையினர் இணைந்து உருவாக்கிய 6 புதிய குறுந்திரைப் படங்கள் திரையிடப்பட்டன.

கூத்து, ஹர்த்தால், அபாயா, முஸ்லிம் தெரு வழியே, யாழ் திரும்பும் முபாறக், பேக் ஐடி பார்த்துக் கொண்டிருக்கின்றான் ஆகிய குறுந்திரைப்படங்களே இதன் போது திரையிடப்பட்டன.

இன நல்லிணக்கம் இன ஐக்கியம் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமை சகோதரத்துவத்தை பிரதி பலிக்கும் வகையில் இந்த குறுந்திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வைபவத்தின் இறுதியில் கலந்துரையாடலும் இது தொடர்பான கருத்துப்பரிமாற்றங்களும் இடம் பெற்றன.

மட்டக்களப்பு திரணியம் நிலைய பாலர் பாடசாலை சிறுவர் தின நிகழ்வு

திரணியம் நிலைய பாலர் பாடசாலையின் சிறுவர் தின நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதி அரசாங்க அதிபர். மா.உதயகுமார் கௌரவ அதிதி - மட்டக்களப்பு மாவட்ட பாலர் பாடசாலை பணியகத்தின் பணிப்பாளர் ஸ்.சசிகரன், சிறப்பு அதிதியாக சென் ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் அ. மீரா சாகிப் மற்றும் ஆசிரியர் ஆலோசகருமான கிஷ்ணமூர்த்தி, அவர்களும் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வின் முதன் நிகழ்வாக மங்கள விளக்கேற்றல் நிகழ்வும் அதனை தொடர்ந்து இறைவணக்கமும் இடம் பெற்றது. அதன் பின்னர் வரவேற்புரையும் அதனை தொடர்ந்து தலைமையுரையும்,ஆசியுரையும் இடம் பெற்றது.

பின்னர் சிறுவர் செயற்பாட்டு பொறுப்பாசிரியர் உரையும் அதன் பின் பிரதம விருந்தினர் மா.உதயகுமார் உரையும் இடம்பெற்றது.

திருமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கேதார கௌரி விரதம்

சேனையூர் நிருபர்

இலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்றதும்,தொன்மை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றான திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிலில் தொன்மை வாய்ந்த கேதார கௌரி விரதம் 08.10.2019 செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து 27.10.2019 ஞாயிற்றுக்கிழமை கூடிய அமாவாசைத் தினத்தன்று நிறைவு பெறுகின்றது.

குறிப்பிட்ட இந்த இருபத்தொரு நாள் விரதமனுஷ்டிக்க விரும்பும் அடியார்கள் ஆரம்ப தினத்தன்று சங்கற்பம் செய்து தினமும் ஆலயதரிசனம் பண்ணி இறுதி நாளன்று உபவாசமிருந்து திருக்காப்பை அணிந்து கொள்ளலாம். இருபத்தொரு நாளும் விரதமனுஷ்டிக்க இயலாதவர்கள் விரத இறுதி நாளாகிய 27.10.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று உபவாசமிருந்து கௌரிகாப்கை அணிந்து கொள்ளலாம் என ஆலய ஆதீன கர்த்தாவும், பிரதம குருவுமாகிய வேதாகமாமணி பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் அறிவித்துள்ளார்.

வெளிநாட்டு அடியார்களுக்கு உரிய காலத்திற்குள் கௌரிகாப்பினை பெற்றுக் கொள்ள கூடிய வகையில் வழமை போள் ஆலய நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. எனவே அடியார்கள் தங்களது பதிவினை முன் கூட்டியே செய்யும்படி ஆலய ஆதீன கர்த்தாவும், பிரதம குருவு மாகிய வேதாகமாமணி பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் மேலும் அறிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்விப் பணிகள் சிறப்பாக அமையவில்லை என்றால் சிறந்த தலைவர்களை எங்களால் உருவாக்கமுடியாத ஒரு நிலைதான் காணப்படும்

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல்ஜலீல்

கரடித்தோட்ட நிருபர்

ஒரு பாடசாலையின் வளர்ச்சியிலே அதிபர், ஆசிரியர்களுக்கிடையில் காணப்படும் நெருக்கமான தொடர் புகள், அர்ப்பணிப்பான சேவைகள் இவற்றிற்கும் மேலாக பாடசாலையின் நிர்வாகம், பாடசாலைச் சமூகத்தோடு கொண்டிருக்கின்ற நெருக்கமான உற வுகள் பாடசாலை வளர்ச்சிக்கு மிகவும் பக்கபலமாக அமைகிறது. என கல் முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல்ஜலீல் தெரிவித் துள்ளாடர்.

காரைதீவு இராம கிருஷ்ண சங்க பெண்கள் பாடசாலையின் 90 வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் அண்மையில் பாடசாலை அதிபர் செல்லத்துரை மணிமாறன் தலை மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது அதில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்று கையில் ஒரு பாடசாலை எப்போது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தி ருக்கின்றது என்பதைவிட அப்பாடச

ாலை அக்காலப்பகுதியிலே எதனைச் சாதித்திருக்கின்றது எவ்வாறான சாதனைகளை கல்விப் புலத்தில் நிலைநாட் டியிருக்;கின்றது என்பதுதான் மிக முக்கியம். அந்த வகை யிலே இந்தப் பாடசாலை யின் வரலாற்றுப் பதிவுகளை நாங்கள் எடுத்துப் பார்க்கின்ற பொழுது இப்பாடசாலையா னது பல்வேறு சாதனைகளை பரீட்சைப் பெறுபேறுகளிலும், இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் அடைந்து வந்திருக்கின்றதென்றால் இது பாராட் டத்தக்க மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். கடந்த பல வருடங்களாக கல்முனை கல்வி வலய க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளிலே வல யத்திலே முதலாவது நிலையை இந்தப் பாடசாலை பெற்று வந்திருக்கின்றதென் றால் உண்மையிலே பெருமைக்குரிய எடுத்துக்காட்டாகும். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையாக இருக் கலாம், க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையாக இருக்கலாம், ஏனைய இணைப்பாட விதான செயற்பாடு களாக இருக்கலாம் எவையாக இருந் தாலும் இந்தப் பாடசாலைக்கென்று தனியானதோர் இடமுண்டு. தங்களது பாரம்பரியங்களை, கலாசாரத்தை எந்த வகையிலுமே இழந்துவிடாத வகையில் மிகச் சிறப்பான முறையில் அவற்றைத் தொடர்ச்சியாகப் பேணிவருகின்ற ஒரு நல்ல பணியினை எப்பொ ழுதுமே இந்தப் பாடசாலை செய்துகொண்டு வந்திருக் கின்றது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சியிலே அதிபர், ஆசிரியர்களுக்கிடையில் காணப்படும் நெருக்கமான தொடர்புகள் அர்ப்பணிப் பான சேவைகள் இவற்றிற் கும் மேலாக பாடசாலையின் நிர்வாகம் பாடசாலைச் சமூகத்தோடு கொண்டி ருக்கின்ற நெருக்கமான உறவுகள் பாடச ாலை வளர்ச்சிக்கு மிகவும் பக்கபலமாக அமைகிறது. இந்தப் பாடசாலை நிர்வா கம் பாடசாலைச் சமூகத்தோடு மிகவும் ஒன்றிணைந்த வகையிலே ஒருமித்துச் செயற்படுவதன் விளைவு சிறந்த பெறு பேறுகளை எப்பொழுதுமே இந்தப் பாடசாலையில் எதிர்பார்க்கக்கூடியதாக உள்ளது.

கல்விக்காக உழைக்கின்றவர்கள் சிறப்பான கல்வியை மாணவர்களுக் குக் கொடுக்க வேண்டுமென்பதற்காக தங்களை அதற்காக அர்ப்பணித்து செயற்படுகின்றவர்கள் உண்மையிலே நினைவுகூரப்படவேண்டியவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் அவர்களுடைய பணிகள் சிறப்பாக அமையவில்லை என்றால் நாங்கள் எதிர்பார்க்கின்ற நல்ல சமூகத்தை சிறந்த தலைவர்களை எங்களால் உருவாக்க முடியாத ஒரு நிலைதான் காணப்படும்.

கரடியனாறு மகா வித்தியாலய சாரணர் வெள்ளி விழா நிகழ்வு!

கே.சுபஜன்

மட்டக்களப்பு கரடியனாறு மகா வித் தியாலயத்தின் 25 வது ஆண்டு சாரணர் வெள்ளி விழா நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத் திற்கு உட்பட்ட கரடியனாறு மகா வித் தியாலத்தின் 25 ஆவது ஆண்டு சாரணர் வெள்ளி விழா தீபாசரை நிகழ்வு இரவு 07 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை முதல்வர் ஆர்.செந்தில்நா தன் தலைமையில்; நடைபெற்ற இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்;.ஸ்ரீதரன் கலந்துகொண்டிருந்தார்,சி றப்பு விருந்தினராக மட்டக்களப்பு மேற்கு முகாமைத்துவ பிரதி கல்விப்பணிப்பாளர் ஜெயக்குமார், கௌரவ விருந்தினர்களாக முன்னாள் ஏறாவூர்; பற்று மேற்கு கோட் டக்கல்வி பணிப்பாளர் எஸ்.முருகேசப் பிள்ளை , மட்டக்களப்பு மேற்கு உதவி சாரண ஆணையாளர் வி.சுப்ரமணியம், கரடியனாறு பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.சமரகோன் மற்றும் ஏறாவூர் பற்று மேற்கு கோட்ட அதிபர்கள், மண்முனை மேற்கு கோட்ட அதிபர்கள், சோபா நிறுவனத்தைச் சேர்ந்த எஸ்.ஜெயந்தன் ஏறாவூர்பற்று பிரதேசசெயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.மணிராஜ் மற்றும் பொது அமைப்புகள் கிராம அபிவிருத் திச் சங்கம் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் பாடச ாலை நலன்விரும்பிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இம்முறை 25ஆவது ஆண்டு வெள்ளி விழா சாரணர் பாசறை நிகழ்வை மிகவும் சிறப்பான முறையில் பாடசாலையின் ச ாரணர் பயிற்சி ஆசிரியர் இரா.நாயனன் அவர்களினால் மிகவும் சிறப்பாக ஒழுங் கமைக்கப்பட்டு இம்முறை சாரணர் வெள்ளி விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அதி திகளுக்கு சாரணர் தினம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டு அழைத்துவரப்பட்ட துடன் தேசியக்கொடி, பாடசாலையின் கொடி மற்றும் சாரணர் கொடி ஏற்றிவைக்கப்பட்டு , தேசியகீதம் , சாரணர் கீத மும் இசைக்கப்பட்டு தீப் பாசறை நிகழ்வு ஆரம்பிக் கப்பட்டது.

இந்நிகழ்வில் பாடச ாலை மாணவர்களினால் விழிப்புணர்வு நாடகங் கள், பாடல்கள் மற்றும் பலநிகழ்ச்சிகள் நடாத்தப் பட்டது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வலயக்கல்வி பணிப்பாளர் எஸ.;ஸ்ரீதரன் இச் சாரணர்பாசரையைப் பார்த்து மிகவும் மிகழ்ச்யும் வியப்பை டைந்தேன், உண்மையிலேயே இதை ஒழுங்குசெய்த பாடசாலையின் சாரணப் பயிற்றுவிப்பாளர் இரா.நயனன் ஆசிரி யர் அவர்களுக்கு என் ஆத்மார்தமான பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரி வித்துக்கொள்கிறேன். உண்மையிலேயே ஆசிரியர் நயனன் போன்றவர்கள்களினால் மாணவர்களின் எதிர்காலம் சிறப்புறும் என்பதில் மாற்றமில்லை அனைத்துப் அதை அவர் இந் நிகழ்வின் ஒழுங்கமைப் பின் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்.

பாடசாலைகளிலும் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறவேண்டும் என் பதே எமது அவா.

தொடர்ந்தும் உரையாற்றிய வலயக்கல் விப்பணிப்பாளர்;

அண்மையில் நடைபெற்ற பரிச்சை பெறுபவர்களை பார்த்தோமானால் எமது மாணவர்கள் மாகாண மட்ட விளை யாட்டுப் போட்டிகளில் 25 பதக்கங்க ளைப் பெற்று சாதனை புரிந்துள்ளார்கள். இந்த வெற்றிகளை பெற்ற மாணவர்கள் யாருமல்ல நீங்கள்தான் அதுமட்டுமல்லாது எமது வலயத்தில் கூட விசேட தேவை யுடைய மாணவர்கள் பல பதக்கங்களை பெற்றுள்ளார்கள். இந்த மாணவர்களும் இப்பிரதேசத்தில் பிறந்த முத்துக்கள்தான் அதேபோன்று அண்மையில் ஆங்கிலத் தினப் போட்டியில் பத்து இடங்களை பெற்று 5 முதலிடங்களை பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். உண்மையில் இதுவும் ஒரு பாராட்டத்தக்க விடய மாகும். அதேபோன்று அன்மையில் தமிழ் தின போட்டிகளில் எமது வலயத்தைச் சேர்ந்த மாணவிகள் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தை தேசிய மட்டத்தில் பெற்றுத் தந்துள்ளார்கள். இது உங்களுக்கு ஒரு மைல்க்கல் இது மட்டுமல்ல எமது வலயம் இன்னும் பல வெற்றிகளைபெற காத்துக்கொண்டிருக்கின்றன.

இலங்கையிலேயே ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட சாரண மாணவர்கள் உள்ளனர். சாரணன் என்றால் அதற்கு மிகப்பெரிய ஒரு மரியாதை உண்டு அண்மையில் நாங் கள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ் வரர் ஆலயம் மற்றும் தாந்தாமலை ஆகிய ஆலயங்களிலே பாதுகாப்புக்காக இறுதிச் திருவிழா நாளில் எமது பணிகளை ஆற்றி இருந்தோம்.

நாம் அங்கு மிகவும் அவதானித்தோம் சாரணர்கள் சொல்கின்ற கட்டளையை பல பொதுமக்கள் கேட்டு நடந்தார்கள் அந் தளவுக்கு கௌரவமும், கண்ணியமிக்க ச ாரணர்கள் நீங்கள்.

பல பாடசாலைகளில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டன ஆரம்பித்து சில நாட்களிலேயே அவை மறைந்துவிட் டன. செயலிழந்த அனைத்துக்கும் உயிர் கொடுக்க வேண்டிய கட்டாய தேவை யில்நாம் உள்ளோம் எனவும் தொடர்ந்தும் உரையாற்றினர்.

சிரேஷ்ட பிரஜைகளுக்கான இலவச வைத்திய முகாம்

சியாத் எம். இஸ்மாயில்

அட்டாளைச்சேனை

அட்டாளைச்சேனை பிர தேச செயலகத்தின் ஏற்பாட் டில் ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் முதியோர்க ளுக்கான தேசிய செயலகம் நாடளாவிய ரீதியில் நடை முறைப்படுத்தி வரும் சிரேஷ்ட பிரஜைகளுக்கான இலவச வைத்திய முகாம் பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.கைஸ் நெறிப்படுத்தலில் அட்டாளைச்சேனை 06 இல் அமைந்துள்ள கிராம சேவகர் காரியாலய கட்டிடத் தொகுதியில் நடை பெற்றது.

இதில் கலந்துகொண்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு 'பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்களினூடாக வயோதிபக் கால சுகாதாரப் பராமரிப்பும் தொற்றா நோய் பாதுகாப்பும்' என்னும் தொனிப் பொருளில் நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி (தொற்றா நோய்) வைத்தி யசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கே.எல்.எம். நக்பர் அவர்களினால் விழிப்புணர்வு உரை நிகழ்த்தப்பட்ட துடன் நீரிழிவு நோய்க்கான இலவச இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு கண் கழுவி சுத்தம் செய்யப்பட்டு அவரவர் நோய்க்கு ஏற்ப ஒருமாத காலத்திற்குத் தேவையான இலவச மருந்துப் பொருட்களும் வழங்கிவைக் கப்பட்டது.

இந் நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக நிருவாக உத்தியோகத் தர் ஆர்.எம்.நழீல், நிந்தவூர் அரசாங்க ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை யின் சிரேஷ்ட வைத்திய உத்தியோகத் தர் ஜே. யூஸுப் வைத்தியசாலை உத்தி யோகத்தர்கள் மற்றும் அட்டாளைச்சே னை பிரதேச செயலக உத்தியோகத்தர் களும் பொதுமக்களும் கலந்துகொண் டனர்.

பிள்ளைகளின் வெற்றிக்கான நட்பான நாடு

எம்.ரீ.எம்.பாரிஸ்

மட்டக்களப்பு கோறளைப்பற்று மேற்கு ஓட்டமா வடி பிரதேச செய லகமும்,சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவும் இனைந்து ஏற்பாடு செய்தி ருந்த சர்வதேச சி றுவர் தின மற்றும் முதியோர் வார நிகழ்வுகள் மிகச் சிறப்பாக மீரா வோடை அமீர் அலி கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

பிள்ளைகளின் வெற்றிக்கான நட்பான நாடு, முதியோர்களான உங்களுக்கு சம உரிமை வழங்கும் நாளைய தினத்தை நோக்கி எனும் தொனிப்பொருளில் பிரதேச செயலாளர் திருமதி நிஹாரா மௌஜுத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது பிரதேச செயலகத்தினால் சிறுவர் தினத்தை முன்னிட்டு வருடா வருடம் வெளியீடு செய்யப்படும் 14 வது வேர்கள் சஞ்சி கை பிரதேச செயலாளரால் வெளியீட்டு வைக் கப்பட்டது.

இந்நிகழ்வில் சமுர்த்தி சிறுவர் கெக்குழு போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு பரிசி ல்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் பிரதேசத் தில் சமூகப்பணி ஆற்றிய முதியவர்களும் கௌர விக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது சிறுவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டது.இங்கு சி றுவர்களின் உரிமைகள் தொடர்பாக விழிப்புட் டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் பிரதேச செயலக அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் சிறுவர் கழக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நஞ்சற்ற விவசாய உணவு தேசிய வேலைத் திட்டம்

முள்ளிப்பொத்தானை நிருபர்

தம்பலகாமம் பிரதேச செயலகத் துக்கு உட்பட்ட அரச அலுவர்களை தெளிவூட்டும் ஜனாதிபதி செயலகத்தி னால் முன்னெடுத்து செல்லும் தேசிய உணவு உற்பத்தி நஞ்சற்ற வேலைத் திட்டத்திற்காண நிகழ்வு (02)தம்பல காமம் கேட்போர் கூடத்தில்

பிரதேச செயலாளர் ஜே.ஸ்ரீபதி தலைமையில் நடைபெற்றது இந் நிகழ்வில் முள்ளிப்பொத்தானை விவசாய போதனாசியர் எம் சீ மர் சூக் அவர்களினால் நஞ்சற்ற உணவு உற்பத்தியை ஊக்விப்பது விவசாயம் உற்பத்தியைஅதிகரிப்பது தொடர்பாக அதிகாரிகளுக்கு விளக்கம் கொடுப்ப தையும் இந் நிகழ்வில் பிரதேசத்தை

அரச திணைக்களங்களில் கடமை புரி யும் வெளிக்களஉத்யோகத்தர்கள்க லந்து சிறப்பித்ததையும் படத்தில் காணலாம்

சிறுவர் தினம்

மாளிக்காடு அல் ஹுசைன் வித் தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வு செவ்வாய்க்கிழமை (1) அதிபர் ஏ.எல்.எம்.ஏ நளீர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதி யாக பொத்துவில் லகுகல தொகு தியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் அமைப்பாளரும் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளருமாகிய நிபுன ஷொய்ஷா,விஷேட அதிதி யாக காரைதீவு பிரதேச சபையின் உப தவிசாளர் ஏ.ம்.ஜாஹீர் காரை தீவு கோட்டக்கல்வி பணிப்பாளர் ஜெ.டேவிட் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வின் போது கடந்த வருடம் தரம் 5 புலமைப்ப ரிட்சையில் சித்தியடைந்த மாணவர் களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றதுடன் ஆசிரியர்களும், விசேட அதிதிகளும் கௌரவிக்கப் பட்டனர்.

கிழக்கு கல்வியமைச்சின் செயலாளர் மருதமுனை அல்-மனாருக்கு விஜயம்

மருதமுனை நிருபர் றாசிக் நபா யிஸ், நூருல் ஹுதா உமர்

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி பழைய மாணவர் அமைப் பின் செயலாளரின் அழைப்பின் பேரில் (01) அல்-மனார் மத்திய கல்லூரிக்கு கிழக்கு மாகாண கல்வி யமைச்சின் செயலாளர், ஐ.கே.ஜி. முத்து பண்டா அவர்கள் திடீர் விஜ யம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அச்சந்தர்ப்பத்தில் அதிபர் அலுவல கத்திற்கு விஜயம் செய்து பல முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடிய துடன் அவசியத் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

இக் கலந்துரையாடலில் கல்லூரி அதிபர் எம்.ஜே. .அப்துல்.ஹஸீப், அபிவிருத்தி சபையின் செயலாளர் எம்.எப்.மர்சூக் ,பழைய மாணவர் அமைப்பின் செயலாளர் எம்.ஐ.எம். வலீத் ஆகியோரும் கலந்து கொண்ட னர்.

கிண்ணியா கல்வி வலய சிறுவர் தின பிரதான நிகழ்வு

முள்ளிப்பொத்தானை நிருபர்

கிண்ணியா வலயக் கல்வி அலுவல கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சி றுவர் தினத்தின் பிரதான நிகழ்வு (01)

தி-முள்ளிப் பொத்தானை ஈச்சம் நகர் மதினா வித்தியாலாயத்தில் சிறப் பாக நடைபெற்றது.

இவ் வித்தியாலயததின் அதிபர் ஏ.சபுள்ளா தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் கிண்ணியா வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எம்.இஸட் , முனவ்வரா நளீம் பிர தம அதிதியாக

கலந்து கொண்டு மாணவர்களுக்கு சி றப்புரையாற்றியதோடு மாணவர்களுக் கான பரிசுப் பொருட்களையும் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் ஈச்ச நகர் மதினா வித் தியாலய மாணவ - மாணவிகளி னால் கலை, கலாசார, மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இதன் போது இவ்வித்தியாலயத்தில் பல்வேறு துறைகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதில் கிண்ணியா கல்வி வல யத்தின் முறைசார கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.அமீன் வாரி ஒழுங்கமைப்பில் கிண்ணியா கல்வி வலயத்தின் பிரதான நிகழ்வாக இந் நிகழ்வு இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதில் கிண்ணியா கல்வி வலயக் ஆசிரியர் வள நிலைய விரிவுரையாளர் ஏ.டபிள்யூ.முஜீப் உட்பட மற்றும் அதி காரிகளும் கலந்து கொண்டனர்.

தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று சுயமாவே தீர்மானம் எடுத்துள்ளார்கள்

தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று சுயமாவே தீர்மானம் எடுத்துள்ளதால் அதை ஏற்றுக்கொண்டு தமிழ்க்கட்சிகள் மக்களின் பக்கமே நின்று கட்சிகளுக்குள் பொதுஉடன்பாட்டுக்கு வந்து ஜனாதிபதி வேட்பாளருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு, அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு குறிப்பிட்ட வருடத்திற்கு முன்பே விடயங்களை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மு.கிழக்கு மாகாணசபை சிரேஷ்ட உறுப்பினரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கியஸ்தருமான இரா. துரைரெத்தினம் தேர்தல் தொடர்பாக அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றினார்.

ஆயுதப்போராட்டம் வலுவடைந்திருந்த காலத்தில் வலுவான ஒரு தீர்வுத்திட்டத்தை ஒற்றுமையாக அமுல்படுத்த இயக்கங்களுக்குள் இருந்த முரண்பாடு வழி விடவில்லை. 1987ம் ஆண்டுக்கு பின் அரசியல் நீரோட்டத்திற்கு வந்த கட்சிகள் 2009ம்ஆண்டுக்குப் பின் ஆயுதம் மௌனிக்கப்பட்டதற்குப் பிற்பாடு இயக்கங்களும், அரசியற்கட்சிகளும் வடகிழக்கில் ஜனநாயக அரசியலில் செயற்படக் கூடியவாறு அனைத்து கட்சிகள் பன்முத்தன்மை கொண்ட அனைத்து அமைப்புக்களும் சுயமாக வேலை செய்யக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டன.

இச் சூழலை சாதமாகமாகப் பயன்படுத்தி மத்திய அரசில் இருந்த ஒரு சில அமைச்சர்களும் வடகிழக்கிலுள்ள ஒரு சில கைக் கூலிகள் ஊடாக வடகிழக்கில் உள்ள வளங்களை சூரையாடுவதற்கும், ஒவ்வொரு குடும்பத்தையும் கடனாளியாக மாற்றுவதற்கும், ஒருபக்கச்சார்பாக அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கும், மணல்அகழ்வு, காட்டு மரங்களைத்தறித்தல், மதுபான சாலைதிறத்தல், மாவட்டத்தில் மோசமான வரி அறவீடு, போன்றவை தமிழ் மக்களை பலவீனப்படுத்தக் கூடிவாறான செயற்திட்டங்களை மத்தியஅரசே ஆரம்பித்துள்ளன. இவைமட்டுமின்றி வடகிழக்கைப் பிரித்து தமிழ் மக்களின் தற்காலிகத் தீர்வான 13வதுஅரசியல் தீர்வுத்திட்டத்தை அமுல்படுத்தாமல் நிரந்தரத் தீர்வை முன் வைக்காமல் மாவட்டத்தின் வறுமை நிலையில் முன்னேற்றம் வராமல் முஸ்லிம், சிங்கள அமைச்சர்கள் தங்களது சமூகத்திற்கு மட்டும் நிதி ஒதுக்கீடு போன்ற செயற்பாடுகள் கிழக்கு மாகாணத்தில் நடந்து வருவதோடு, தொழில் வாய்ப்புகள் புறக்கணிக்கப்பட்டது மட்டுமல்லாமல் யுத்த காலத்தில் முஸ்லிம் பகுதிகள் மட்டும் அபிவிருத்தி செய்யப்பட்டு தமிழ்பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்த நிலையில் அனைத்து அபிவிருத்திகளும் வடக்கை நோக்கிச் செல்வதும் கிழக்கு அபிவிருத்திகள் தமிழ்த்தலைமைகளால் மௌனிக்கப் படுவதும் ஏற்புடையதல்ல. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ்மக்களிடம் உள்ளது வாக்குப்பலம் மட்டுமே. அந்த வாக்குப்பலத்தை தமிழ் மக்கள் நிலையான அபிவிருத்திக்கும் அதிகாரப் பரவலாக்கலுக்கும் ஏனைய இனங்களின் அடக்குமுறையில் இருந்து விடுவிப்பதற்கும் தொழில் வாய்ப்பு போன்ற விடயங்களுக்கும் சார்பாக வாக்களிக்க தயாராக இருக்கின்றார்கள். எனவே தமிழ்த் தலைமைகள் பேரம் பேசும் சக்தியாக மாற வேண்டுமென அறை கூவல் விடுத்துள்ளார்.

கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் உலக சிறுவர் தின நிகழ்வுகள்

எம்.என்.எம்.அப்ராஸ்

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் (01) நடைபெற்றது.

இந் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.ஐ. அப்துல் ரசாக் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதன் போது விசேட காலை ஆராதனை இடம்பெற்றதுடன்

இவ் சிறுவர் தினத்தை சிறப்பிக்கும் முகமாக ஒய்வு பெற்ற முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் மருதூர் மஜீத் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மேலும் இதன் போதுமாணவர்களின் விளையாட்டு ,கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பரிசில்களும் வழங்கப்பட்டன.

பெரியகல்லாற்றில் பகல் வேளை திருடர் கைவரிசை

துரைவந்தியமேடு நிருபர்

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களில் பகல் நேர திருடர்களின் அட்டகாசம் மிக அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பெரியகல்லாறு இபெரியநீலாவணை எல்லை வீதியில் நண்பகல் வேளையில் கடைக்குச் சென்ற இளம் குடுப்பஸ்தர் அணிந்து வந்த ஒரு பவுண் தங்க மாலையினை மோட்டார் சைக்கிளில் குறித்த வீதியினால் பயணித்த திருடர் அவகரித்துச் சென்றுள்ளார்.

இது தொடர்பாக குறித்த பெண் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் திருட்டுச் சம்பவம் தொடர்பாக முறைப்பாட்டினை பதிவு செய்தமையினைத் தொடர்ந்து விரைவாகச் செயற்பட்ட பொலிஸார். சம்பவ இடத்திற்குச் சென்று வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவின் உதவியுடன் குறித்த திருடனை கைது செய்துடன் திருடப்பட்ட மாலையினையும் திருடனிடமிருந்து கைப்பேற்றியதுடன் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையினை முன்னெடுத்து வருகின்றனர்.

சாய்ந்தமருதின் அபிவிருத்தியில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும்

மு.கா.உயர்பீட உறுப்பினர் யஹ்யாகான் வேண்டுகோள்

சாய்ந்தமருது நிருபர்

ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் சாய்ந்தமருது பிரதேசத்தின் அபிவிருத்தி மிகவும் பின்னிலையில் இருப்பது கவலையளிக்கிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும் அக்கட்சியின் அம்பாறை மாவட்ட பொருளாளருமான ஏ.சி.யஹ்யாகான் தெரிவித்தார்.

தேவையுடைய சிலருக்கு வீடு திருத்துவதற்காகவும் மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்பைப் பெறுவதற்காகவும் உதவிகள் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருதில் அமைந்துள்ள யஹ்யாகானின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

சாய்ந்தமருது பிரதேசத்தில் பல பாடசாலைகளும் வீதிகளும் அபிவிருத்திக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றன. இப்பிரதேசத்தின் தோணா சுகாதாரத்துக்கு அச்சுறுத்தலாக காணப்படுகின்றது. பலர் வீடின்றி கஷ்டப்படுகின்றனர். எதிர்காலத்தில் இவைகள் சமூகப் பிரச்சனைகளாக மாறுவதற்கு வாய்ப்புள்ளது. நாட்டின் நாலா புறத்திலும் அரசாங்கத்தினால் பல்வேறு வீட்டுத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் சாய்ந்தமருதில் ஒரு வீட்டுத்திட்டத்தையாவது அமைக்க இங்குள்ள அரசியல்வாதிகள் முன்வரவில்லை. ஆகையினால் எமது பிரதேசத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி விடயங்களில் அனைவரும் ஒன்றிணைந்து கவனம் செலுத்த முன்வர வேண்டும்.

இப்பிரதேசத்தில் தேவையுடைய தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் கல்வி, விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்காகவும் நிதியுதவிகளையும் ஏனைய ஒத்துழைப்புக்களை நான் மேற்கொண்டு வருகின்றேன். அதேவேளை சாய்ந்தமருது மக்களின் நீண்ட நாள் அபிலாஷையாக இருந்து வருகின்ற உள்ளூராட்சி சபைக் கோரிக்கை விரைவில் நிறைவேற வுள்ளது. அதற்காக தன்னால் முடிந்த அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றேன் என்றும் யஹ்யாகான் குறிப்பிட்டார்.

தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் அவர்களின் வழிகாட்டலில் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் எற்பாட்டின் அம்பாறை மாவட்டத்தின் அரசாங்க அதிபர் தலைமையில் தமிழ் பேசும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் தொடர்ச்சியான 12 நாட்களை கொண்ட இலவச இரண்டாம் மொழி சிங்களப் பயிற்சி நெறி நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இப்பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சாய்தமருது பெண்கள் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இன் நிழ்வுக்கு அம்பாறை மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன். அம்பாறை மாவட்ட செயலகத்தின் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அதிகாரி அமைச்சர் மனோ கணேசனின் அம்பாறை மாவட்டத்தின் இணைப்பாளர், வளவாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

படம்: காரைதீவு நிருபர்

சர்வதேச ரீதியில் சாதனை படைக்க காத்திருக்கும் கல்முனை பற்றிமா கல்லூரி மாணவன்

பாறுக் ஷிஹான்

அதிகரித்து வரும் வீதி விபத்துக்களால் ஏற்படும் மரணத்தை தவிர்க்கும் முகமாக கல்முனை பற்றிமாக் கல்லூரி மாணவன் புதிய தலைக்கவசம் ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.

எதிர்வரும் 08ம் திகதி தொடக்கம் 12 வரை நடைபெறவுள்ள சர்வதேச புத்தாக்குனர் போட்டியில் பங்குபற்றுமுகமாக இந்தோனேசியாவிற்கு கிழக்கு மாகணத்திலிருந்து இந்த வருடம் தெரிவுசெய்யப்பட்ட கல்முனை பற்றிமா கல்லூரியின் கணித பிரிவு கி.முகேஷ் ராம் (வயது-17) என்ற மாணவன் தனது கண்டுபிடிப்பு தொடர்பில் கருத்து கூறுகையில்,

இரவு வேளையில் ஆள்நடமாற்றமற்ற பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்து நடைபெற்றால் இணைத்துக்கொள்ளப்பட்ட உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு உடனடியாக தகவல் வழங்கி மரணத்தை தவிர்த்துக் கொள்வதற்கான தலைக்கவசத்தினை கண்டுபிடித்துள்ளேன். எனது கண்டுபிடிப்பானது விபத்துக்கள் நடைபெற்ற இடத்தினை தெரியப்படுத்தும் நிலையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக தொடுகை மென்பொருளை பயன்படுத்தி பாதிப்புக்கள் சம்பந்தமான குறுஞ்செய்தி மூலம் கைத்தொலைபேசிக்கு தகவல்கள் அறிவுறுத்தப்படும் வகையில் 5000.00 ரூபாய்க்குட்பட்ட விலையில் வடிவமைக்க பட்டுள்ளது.

பௌதீகவளங்கள் இல்லாத நிலையில் இவ்வாறான மாணவர்களது கண்டுபிடிப்பானது பாராட்டத்தக்க விடயமாகும்இ இவ்வறான பாடசாலைகளுக்கு பௌதீக வளங்கள்இ தொழில்நுட்ப வசதிகள் ஏற்படுத்திகொடுக்கப்படுமானால் விஞ்ஞான கண்டுபிடிப்புகளிள் நம் நாடு மேலும் வளர்ச்சியடையும் என கல்லூரியின் அதிபர் அருட்தந்தை எஸ். சந்த்தியாகு கருத்து தெரிவித்தார்.

சிறுவர் தின நிகழ்வும் முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பும்

மருதமுனை நிருபர் றாசிக் நபாயிஸ்

கிழக்கு மாகாண பாலர் பாடசாலை கல்விப் பணியகத்தின் பங்களிப்புடன் நிலா பவுண்டேஷன் சிறிலங்கா மற்றும் என் செலக்ஸன் பப்ளிகேஷன் நிறுவனத்தின் பணிப்பாளர், எம்.ஜ.எம்.நிஸாமின் வழிகாட்டலில் சிறுவர் தின நிகழ்வும் முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வுகளும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (இன்று-06) இறுதி நிகழ்வும் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு தொகுதியில் நிறுவனத்தின் தலைவர், எம்.ஏ.நசீர் தலைமையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

சிறந்த மாணவர் சமூகத்தை உயிரோட்டமாக வழிநடாத்தவும் அர்ப்பணிப்புடனும் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் முன்பள்ளி மாணவர்கள் மத்தியில் சேவையாற்றி வரும் ஆசிரியர்களை கௌரவிக்க நிலா பவுண்டேஷன் சிறிலங்கா மற்றும் என் செலக்ஸன் பப்ளிகேஷன் நிறுவனங்கள் முன்வந்துள்ளமை சமூகத்தின் மற்றும் கல்வியாளர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் பேசும் அனைத்து முன்பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு சிறுவர் தின நிகழ்வுகளை வழங்குவதுடன் முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் கௌரவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் உட்பட நான்கு கல்வி வலயங்களில் உள்ள 980 முன்பள்ளி ஆசிரியர்கள் முன்று கட்டங்களாக கௌரவிக்கப்படவுள்ளதுடன் இதில் விஷேடமாக கல்விக்கு பணி செய்து ஒய்வு நிலையில் உள்ள கல்வியாளர்கள் மற்றும் பிரதேச ஊடகவியலாளர்கள் என பலரும் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடதக்கது.

கடந்தவாரம் மட்டக்களப்பில் கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்திய தமிழ் இலக்கிய விழாவில் 2018 ம் ஆண்டில் வெளிவந்த சிறுகதை நூலுக்கான விருது வி.மைக்கல் கொலினின் பரசுராம பூமிக்கு வழங்கப்பட்ட வேளை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.I.K.G.முத்து பண்டா நூலாசிரியருக்கு பொன்னாடை போர்த்துவதையும் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு.D.M.சரத் அபயகுணவர்த்தன விருதினை வழங்குவதையும் அருகில் முன்னாள் கலாசார பணிப்பாளர் திருமதி.R.வளர்மதியையும் படங்களில் காணலாம்.

படங்கள் - சேனையூர் நிருபர்

கிளிநொச்சி நகர் முஸ்லிம் பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டது

கிளிநொச்சி நகர் முஸ்லிம் பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்தின் பின்புறமாக அமைந்துள்ள குறித்த பள்ளிவாசல் யுத்தத்தின் பின்னர் படிப்படியாக அபிவிருத்தி செய்யப் பட்டு வந்தது.

இந்த நிலையில் குறித்த பள்ளிவாசல் முழுமையாக்கப்பட்டு இஸ்லாமியர்களின் தொழுகை வழிபாட்டிற்காக திறந்து கைய ளிக்கப்பட்டது. சவுதிஅரேபியாவிலிருந்து வருகை தந்த அரபியர்கால் குறித்த பள்ளிவா சல் திறந்து வைக்கப்பட்டது, குறித்த நிகழ் வில் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் இஸ்லாமியர்கள் பலரும் கலந்து கொண்ட னர்.

குறித்த நிகழ்விற்கு சவுதி அரேபியாவி லிருந்து அலி ஹாஇத் தந்தையும் அவரது மகனான **Saad aliani** ஆகிய இருவரும் வருகை தந்திருந்தமை குறிப்பிடதக்கதாகும்.

குறித்த பள்ளிவாசல் புனரமைப்பு செய் யப்பட்டு கையளிக்கப்பட்டமை தொடர்பில் மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளருக்கு எதிராக வவுனியாவில் தனிமனிதனொருவர் போராட்டம்

வவுனியா நிருபர்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிச ாளர் தன்னிச்சையாக செயற்படுவதாக தெரி வித்து வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்பாக (03.10.2019) காலை தொடக்கம் மதவுவைத் தகுளம் சனசமூக நிலை யத்தின் உபதலைவர் மாணிக்கம் சிவச்சந்திரன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

மதவுவைத்தகுளம் பகுதி மக்களுக்கு நான் பல வருடகாலமாக நீர் விநியோகம் மேற்கொண்டு வருகின்றேன். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் என் மீது பொய்யான காரணங்களை முன்வைத்து என்னை நீர்விநியோக பணியிலிருந்து நீ க்கி வேறோரு நபருக்கு நீர்விநியோக பணியினை வழங்கியுள்ளார். தவிசாளரின் தன்னிச்சனையான முடிவுக்கு தீர்வு வேண்டு மென தெரிவித்தே போராட்டத்தில் ஈடுபட் டுள்ளார்.

தெற்கு பிரதேச சபை தவிச ாளருக்கு எதிரான போராட்டம் எனக்கு நீதி வேண்டும் என்ற வச னத்தினை தாங்கிய பதாதையினை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடு பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ் பிர தேச சபை தவிசாளர் து.நடராஜசி ங்கம் அவர்களை தொலைபேசியு டாக தொடர்பு கொண்டு வினா விய போது,

கடந்த ஐந்து நாட்களாக பொது மக்களுக்கு நீரினை விநியோகம் செய்யாது நீர் விநியோக கட்டிடத்தின் ச ாவியினை குறித்த நபர் வவுனியா தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை காரியா லயத்தில் ஒப்படைத்துள்ளார்.

மதவுவைத்தகுளம் பகுதியில் அமைந் துள்ள நீர்வழங்கல் திட்டம் எமது பிரதேச சபைக்கு சொந்தமானது எனவே தேசிய நீ ர்வழங்கல் வடிகாலமைப்பு சபையிடம் ச ாவினை பெற்று பிரிதொரு நபரிடம் வழங்கி மக்களுக்கான நீர் விநியோகத்தினை மேற் கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

வவுனியாவில் பாடசாலை மாணவர்களை ஒன்றிணைத்து விழிப்புணர்வு பேரணி

வவுனியா நிருபர்

வவுனியாவில் சர்வதேச சிறுவர் தினத் தினை முன்னிட்டு வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் 'பிள்ளை களின் வெற்றிக்கான நட்பான நாடு' எனும்தொனிப்பொருளில் (01.10.2019) விழிப்புணர்வு துவிச்சக்கரவண்டி பேரணி யோன்று இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியா லயத்திற்கு முன்பாக பாடசாலை மாணவர் களின் துவிச்சரக்கரவண்டி பேரணியினை வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதி பர் தி. திரேஸ்குமார் கொடியினை அசை த்து ஆரம்பித்து வைத்தார்.

அவர்களின் சிறுவர் தின ஆசியுரை இடம் பெற்றதுடன் பாடசாலை மாணவர்களுக் கான சிறுவர் திறன் விருத்தி செயலமர்வும் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலக சிறுவர் மேன்பாட்டு உத்தியோகத்தர் ஜெ.ஜெயகெ னடி அவர்களின் தலமையில் இடம்பெற்ற இவ் துவிச்சக்கரவண்டி பேரணியில் வவு னியா மாவட்ட உதவி அரசாங்க அதிபர் நா.கமலதாசன் , ஓமேகா நிறுவனத்தின் அதி காரிகள் , வர்த்தக சங்க உறுப்பினர்கள், அரச மற்றும் அரசார்பற்ற உத்தியோகத்தர்கள் , பாடசாலை அதிபர் , ஆசிரியர் , மாணவர் கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கையளிக்கப்பட்ட மாணவர்கள் எங்கே? வவுனியாவில் போராட்டம்

வவுனியா நிருபர்

காணாமலாக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி கோரி வவுனியாவில் ஆர்பாட்டமொன்று முன்னெடுக்கப் பட்டது.

சர்வதேச சிறுவர் தினமான செவ்வாய்க்கிழமை வவுனியா மாவட்ட காணாமலாக்கப்பட்டவர்க ளின் உறவினர்களால் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக காலை 10மணிக்கு இந்த ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டவர்கள் சர்வதேசமே எமக்காக குரல் கொடுக்க எழுந்திரு, 'கைய ளிக்கப்பட்ட மாணவர்கள் எங்கே? குடும்பமாக ஒப்படைக்கப்பட்ட சி றுவர்கள் எங்கே?, பத்துவருடங்கள் காத்திருந்தோம் இன்னும் எத்தனை வருடங்கள் வேண்டும்? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதை களை ஏந்தியிருந்ததுடன், கோசங்க ளையும் எழுப்பினர்.

இலங்கையில் காணா மல்போன தமிழ் சிறுவர் மற்றும் குழந்தைகளின் ஒளிப்படங்களையும் இதன்போது கைகளில் ஏந்தியிருந்த னர்.

ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பி னர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராஜா, பிரதேசச பை உறுப்பினர்கள், பொதுமக்கள், சிறுவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைப் பதற்கான மகஜரொன்றும் இதன்போது வாசிக்கப் பட்டு அனுப்பி வைக்கப்பட்டது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக ஆரம்பமான பாடசாலை மாணவர்களின் துவிச்சரக்கரவண்டி பேரணியானது ஏ9 வீதியுடாக சென்று மணிக்கூட்டு கோபுரம் வழியாக திரும்பி கந்தசுவாமி கோவில் வீதியுடாக வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி யாலயம் சென்று அங்கிருந்து மாணவர்களை அழைத்துக்கொண்டு,

ஹோரவப்போத்தானை வீதியுடாக வவு னியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலைக்கு அங்கிருந்து பாடசாலை மாணவர்களை அழைத்துக்கொண்டு மீண் டும் ஏ9 வீதிக்கு சென்று மன்னார் வீதியுடாக வவுனியா காமினி மகா வித்தியாலயத்திற்கு சென்று மாணவர்களை அழைத்துக்கொண்டு மீண்டும் மன்னார் வீதியுடாக பயணித்து வவுனியா பட்டானீச்சூர் முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு சென்று அங்கிருந்து மாணவர்களை அழைத்துக்கொண்டு,

மன்னார் வீதியுடாக பயணித்து பண்டா ரிக்குளம் விபுலானந்த கல்லூரிக்கு சென்று அங்கிருந்து மாணவர்களை அழைத்துக் கொண்டு வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு அங்கிருந்து சென்று மாணவர் களை அழைத்துக்கொண்டு ஏ9 வீதியுடாக மாணவர்களின் துவிச்சரக்கரவண்டி பேரணி யானது வவுனியா மாவட்ட செயலகத்தினை வந்தடைந்தது.

வவுனியா மாவட்ட செயலக வளாகத் தில் அரசாங்க அதிபர் ஜ.எம்.ஹனிபா

வவுனியாவில் இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவற்கு எதிராக விழிப்புணர்வு

வவுனியா நிருபர்

இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவற் றுக்கு எதிராக விழிப்புணர்வு நிகழ்வு வவுனியாவில் இன்று இடம்பெற்றது.

இலஞ்சம் நாட்டையும், சமூகத் தையும் நாசமாக்கும் என்னும் தொனிப் பொருளில் நீதியானதும், சுதந்திரமான துமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) மற்றும் லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இவ் விழிப்புணர்வு நடவ டிக்கை இடம்பெற்றது.

வவுனியா புதிய பேரூந்து நிலை யம், வவுனியா பிரதேச செயலகம், வவுனியா நகரம் மற்றும் அதனை யண்டிய பகுதிகளில் இவ் விழிப்பு ணர்வு நடவடிக்கை இடம்பெற்றது. இதன்போது துண்டு பிரசுரம் வழங்கப் பட்டதுடன், ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட் டன.

லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் 1954 என்கின்ற தொலைபேசி இலக்கத் திற்கு அறிவிக்குமாறும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

97வது சர்வதேச கூட்டுறவாளர் தினம் கிளிநொச்சியில் கொண்டாடப்பட்டது

97வது சர்வதேச கூட்டுறவாளர் தினம் கிளிநொச்சியில் கொண்டா டப்பட்டது. கிளிநொச்சி கூட்டுறவு ச ங்கங்களின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

அதிதிகள் வரவேற்கப்பட்டதை அடுத்து, பூநகரி கடற்தொழிலாளர் கூட் டுறவு சங்கங்களின் சமாசமும் அதன் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து கடல்சார் கண்காட்சியும், மாதிரி விற் பனை நிலையத்தினையும் அரசாங்க அதிபர் திறந்து வைத்து பார்வையிட் டார்.

தொடர்ந்து முதன்மை கூட்டுற வாளர் இராசநாயகம் மண்டபத்தின் பெயர்ப்பலகை அரசாங்க அதிபரினால் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து கூட்டுறவாளர் தின நிகழ்வுகள் இடம் பெற்றதுடன், கௌரவிப்புக்களும் இடம்பெற்றன. குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கூட் டுறவு சங்கங்களின் சமாசங்கள் மற்றும் அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உலக அஞ்சல் தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணம் தலைமை அஞ்சல் நிலையத்தின் ஏற்பாட்டில் (01) குரு திக் கொடை முகாம் இடம் பெற்றது . நிகழ்வில் யாழ் குருதிவங்கி வைத்திய அதிகாரி பிரதீபன் தலைமையில் குழுவினர் கலந்துகொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்ததுடன் இவ் அஞ்சல் தினத்தினை சிறப்பிக்கும் முகமாக மரநடுகையும் ஈசொப்ட் அனுசரணையில் கரப்பந்தாடட போட்டிகளும் இடம் பெற்றுவருவதுடன் இதன் இறுதி போட்டி எதிர்வரும் சனிக்கிழமை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

படம்: என்.ஹரன்

வவுனியா நகரசபை பொது நூலகத்தில் இலத்திரனியல் நூலகப்பிரிவு திறந்து வைப்பு

வவுனியா நிருபர்

வவுனியா நகரசபை பொது நூலகத் தில் இலத்திரனியல் நூலகப்பிரிவு (01.10.2019) காலை 10.30 மணியள வில் திறந்து வைக்கப்பட்டது.

இலத்திரனியல் நூலகப்பிரிவினை நகரசபை தவிசாளர் , உபதவிசாளர் , நகரசபை உறுப்பினர்கள் இணைந்து நாடா வெட்டி திறந்து வைத்தனர்.

இலத்திரனியல் நூலகப்பிரிவிற்கு நகரசபையின் ரூபா 8,50,000.00 நிதியொதுக்கிட்டில் கணணிகள் மற் றும் தளபாடங்கள் கொள்வனவு செய் யப்பட்டதுடன் நகரசபை தவிசாளர்

இ.கௌதமன் அவர்கள் அவரது தனிப் பட்ட நிதியில் கணணியொன்றும் கொள்வனவு செய்து வழங்கி யுள்ளார்.

வவுனியா நகரசபை செயலாளர் இராசையா தயாபரன் அவர்களின் தல மையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் நகரசபை தவிச ாளர் இ.கௌதமன் , நகரச பை உபதவிசாளர் சுந்தரம் குமாரசுவாமி , நகரசபை உறுப்பினர்கள் , நூலக உத்தி யோகத்தர்கள் , ஊழியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியா நகரசபை பொது நூலகத்தில் சிறப்பாக இடம்பெற்ற நவராத்திரி விழா

வவுனியா நிருபர்

நவராத்திரி விரதத்தின் மூன்றாம் நாள் துர்க்கையின் பூஜை வழிபாடுகள் வவுனியா நகரசபை செயலாளர் இரா சையா தயாபரன் அவர்களின் தலமையில் வவுனியா நகரச பை பொது நூலகத்தில் சிறப் பாக இடம்பெற்றது.

நவராத்திரி என்பது ஒவ் வொரு ஆண்டும் 9 இரவு, 10 நாட்கள் கொண்டாடப்படும் இந்துக்கள் பண்டிகை.

தென் மாநிலங்களில், இத் திருவிழா மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட் டுள்ளது. முதல் மூன்று நாட் கள் துர்கா தேவியை மையப் படுத்தி நவராத்திரி பூஜைகள் மேற்கொள்ளப் படும். அடுத்த மூன்று நாட் கள் லட்சுமி தேவி மற்றும் கடைசி மூன்று நாட்கள் ச ரஸ்வதி ஆகியோருக்கு நவராத்திரி விழா கடைப்பி டிக்கப்பட்டு வருகிறது.

இவ் பூஜை வழிபாட்டில் நகரசபை உபதவிசாளர் சுந்த ரம் குமாரசுவாமி , நகரசபை உறுப்பினர்கள், நூலக உத்தி யோகத்தர்கள் , ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டி ருந்தனர்.

முறைகேடு இடம்பெற்றதாக ஆளுனரால் இடைநிறுத்தப்பட்ட வடமாகாண சுகாதார தொண்டர்களுக்கு மீண்டும் நேர்முகத்தேர்வு

வவுனியா நிருபர்

முறைகேடுகள் இடம்பெற்றதாக வடமாகாண ஆளுனரால் இடைநிறுத்தப்பட்ட சுகாதார தொண்டர்களுக்கான நிரந்தர நியமனத்திற்கான நேர்முகத்தேர்வுகள் வவுனியாவில் இடம்பெற்றன.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் குறித்த நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றன.

நேர்முகத் தேர்வில் முறைகேடுகள் இடம்பெற்றதாக பாதிக்கப்பட்ட சுகாதார தொண்டர்கள் மேற்கொண்ட போராட்டத்தையடுத்து 454 சுகாதார தொண்டர்களின் நிரந்தர நியமன நிகழ்வானது கடந்த 6 ஆம் திகதி வடமாகாண ஆளுனர் கலாநிதி சுரேன் ராகவன்

அவர்களினால் இடைநிறுத்தப்பட்டது.

குறித்த நியமனம் தொடர்பில் 1923 சுகாதார தொண்டர்களையும், நிரந்தர நியமனத்திற்கான நேர்முகத் தேர்வில் மீள தோற்றுமாறும் ஆளுனர் உத்தரவு பிநறப்பித்திருந்தார். அதற்கமைவாக சுகாதார தொண்டர்களுக்கான நேர்முகத் தேர்வானது வவுனியா பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் குறித்த நேர்முகத் தேர்வுகள் இரு தினங்களும் நடைபெற்றது. இதில் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தமது கல்வித் தகுதியினையும், தாம் கடந்த காலத்தில் சேவையாற்றியமையையும் உறுதிப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை, குறித்த நேர்முகத் தேர்வு தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு தந்தி

வவுனியாவில் சர்வமதக் குழுவினர் கலந்துரையாடல்

வவுனியா நிருபர்

வுனியாவில் சர்வமதக் குழுவினரின் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

வவுனியா, இரண்டாம் குறுக்குதெருவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, உதிர்த்த ஞாயிறு தினத்தில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து சர்வமத குழுவால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு மத நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடலை மேற்கொண்டு அவர்களினூடாக மத நல்லிணக்க செயற்பாடுகள் முன்னெடுப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில், இலங்கை தேசிய சமாதான பேரவையின் செயற்திட்ட முகாமையாளர் சமன் செனவிரட்ன, வளவாளர் ரசிகா செனவிரட்ன, உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், மதகுருமார்கள், சர்வமதக் குழுவினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பாலியல் குற்றவாளி தலைமறைவு

வவுனியா நிருபர்

வவுனியா சிதம்பரபுரம், கற்குளம் பகுதியில் (02.10) பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் வன்புனர்வுக்குள்ளாகியுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிஏயஏவஏருஏவஏதாஏவது,

வவுனியா, சிதம்பரபுரம் கற்குளம் பகுதியில் வசிக்கும் குறித்த பாடசாலை மாணவியுடன் (வயது-15) அதே பகுதியில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தந்தையான 41 வயதுடைய குறித்த நபர் தொலைபேசி மூலம் சில தினங்களாக கலந்துரையாடியுள்ளார்.

அதன் பின்னர் குறித்த நபர் தொலைபேசி மூலம் பாடசாலை மாணவியை கற்குளம் பகுதியில் அமைந்துள்ள காட்டுப்பகுதிக்கு வருமாறு தெரிவித்துள்ளார். இதனையடுத்து குறித்த மாணவியும் காட்டுப்பகுதிக்கு சென்றுள்ளார்.

இதன் போது பாடசாலை மாணவி மீது குறித்த நபர் பாலியல் துஸ்பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

அதன் பின்னர் வீடு திரும்பிய பாடசாலை மாணவி இச்சம்பவம் தொடர்பில் தந்தையிடம் தெரிவித்தமையினையடுத்து தந்தை, மாணவியை வவுனியா பொலிஸார் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இவ்விடயம் தொடர்பில் முறைப்பாட்டினை மேற் கொண்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்யும் நடவடிக்கையில் வவுனியா பொலிஸார் ஈடுபட்டுள்ளதுடன், மருத்துவ பரிசோதனைகளுக்காக மாணவி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெடுங்கேணி செல்வவிநாயகர் வித்தியாலயத்தில் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது

வவுனியா நிருபர்

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் நெடுங்கேணி கோட்டத்தில் அமைந்துள்ள செல்வவிநாயகர் வித்தியாலயத்தில் அதிபர் வே.பெரியசாமி தலைமையில் சர்வதேச சிறுவர் தினம் மற்றும் சர்வதேச முதியோர் தினம் கொண்டாடப்பட்டது.

பாடசாலையில் முதியோர் கௌரவிப்பும் சிறுவர் உளமகிழ்வு நிகழ்வுகளும் நடைபெற்றன.

நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டதுடன் சிறுவர் நிகழ்வுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை அதிபரினால் மாணவர்களுக்கு விசேட தொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டது.

தமிழ் மக்கள் அனைவரும் ஓரணியில் நின்று ஜனாதிபதி தேர்தலை முகங்கொடுக்க வேண்டும்; சிவசக்தி ஆனந்தன்

வவுனியா நிருபர்

தமிழ் மக்கள் அனைவரும் ஓரணியில் நின்று ஜனாதிபதித் தேர்தலை முகங் கொடுக்க வேண்டும் என ஈபிஆர்எல்எப் கட்சியின் செயலாளரும், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்ற போர்வையில் எமது தேசிய இனத்தின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் நடைபெற்ற 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவும், 2015ஆம் ஆண்டு தேர்தலில் மைத்திரியை ஆதரிக்கும் முடிவும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான முடிவு. இரண்டு தேர்தல்களிலும் இறுதிக்கட்ட பிரச்சாரம் நிறைவடையும் தருணத்தில் எத்தகைய நிபந்தனையையும் விதிக்காமல் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கும் முடிவு எட்டப்பட்டது.

ஆனால் நாம், நிபந்தனையற்ற ஆதரவினை வழங்க வேண்டாம் என்று வதெரிவித்தோம். இருப்பினும் எமது கோரிக்கையை தமிழரசுக் கட்சி உதாசீனம் செய்தது. முதல் இரண்டு தேர்தல்களிலும் மகிந்தராஜபக்ச வென்று விடக்கூடாது என்ற பிரச்சாரத்தை முன்வைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான பேரம்பேசும் விடயத்தைக் கோட்டை விட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரி வென்றால் தேசிய இனப்பிரச்சினைக்கு புதிய அரசியல் யாப்பினூடாக நிரந்தரத் தீர்வு எட்டப்படும் என்று தெரிவித்த இரா.சம்பந்தன் இன்று தமிழ் மக்களை நடுத்தெருவில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளார்.

எனவே,எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னிச்சையான முடிவுகள் எதனையும் மேற்கொள்ளாமல், தமிழ்த் தேசிய இனத்தின் நலன்சார்ந்து சிந்திக்கும் சகல தரப்பினருடனும் கலந்துரையாடி ஒரு பொது முடிவினை எட்டுவதற்கு முன்வர வேண்டும்.

தமிழர்கள் அனைவரும் ஓரணியில் நின்று முடிவெடுத்தால் அது சிங்களத் தரப்பினருக்கு வாய்ப்பாகப் போய்விடும் என்ற கருத்து சில தமிழரசுக் கட்சியினரால் தெரிவிக்கப்படுகிறது.

எமது உரிமைகளை நாம் பின்கதவு வழியாகப் பெற்றுக்கொள்ள முடியாது. யாருக்கும் தெரியாமல் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் எமது உரிமைகளைக் கொடுப்பார்கள் என்று சொல்வதே எம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் செயல். எனவே அனைத்து மதத் தலைவர்களுடனும், துறைசார் நிபுணர்களுடனும், அனைத்து பொது அமைப்புக்களுடனும் கலந்துரையாடிய பின்னர் எட்டப்படும் முடிவிற்கமையவே எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முடிவுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் வரவேண்டும் என்று மதத் தலைவர்களும், துறைசார் வல்லுனர்களும், பொது அமைப்புக்களும் அரசியல் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தமிழ் தரப்பினர் அனைவரும் கூடி எடுக்கும் முடிவினை அனைத்து நாடுகளின் இராஜதந்திரிகளுக்கும் தெரியப்படுத்தி அவர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்வதற்கும் முற்சிக்கவேண்டும் என்றும் சிவசக்தி ஆனந்தன் கூறினார்.

ஹரிஸ்ணவி படுகொலை வழக்கு மீண்டும் ஒத்தி வைப்பு: கண்ணீருடன் உறவினர்கள்

வவுனியா நிருபர்

வவுனியாவில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் வீட்டில் தனியாக இருந்தபோது பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவியான கெங்காதரன் ஹரிஸ்ணவி (வயது 14) அவர்களின் வழக்கு விசாரணை மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் எவ்வித முன்னேற்றமும் இன்றி எதிர்வரும் ஜனவரி 06 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஹரிஸ்ணவியின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து ஹரிஸ்ணவியின் உறவினர்கள் தெரிவிக்கும் போது,

கடந்த 2016 ஆம் ஆண்டு பாலியல் வன்புணர்விற்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ள ஹரிஸ்ணவியின் வழக்கு விசாரணைகள் திகதியிடப்பட்டு செல்லப்படுகின்றதே தவிர, வழக்கு விசாரணைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இதனால் காலதாமதம் ஏற்படுகின்றதே தவிர குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

இடம்பெற்ற விசாரணைகளின் போதும் சட்டமா அதிபரிடம் இருந்து குற்றப்பத்திரம் வராமையால் வழக்கு ஜனவரி 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. கடந்த வழக்கு விசாரணைகளின் போதும் குற்றப்பத்திரத்தை விரைவில் தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் வழக்கு விசாரணைகளில் எவ்வித முன்னேற்றங்களும் எற்படவில்லை.

இந்நிலையில் கடந்த 3 வருடங்கள் கடந்த நிலையிலும் இன்று வரையிலும் வழக்கில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஹரிஸ்ணவிக்கு நீதி கிடைக்கவில்லை குற்றவாளி சமூகத்தில் நடமாடிக்கொண்டிருக்கின்றார் என்று கண்ணீருடன் உறவினர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

மாணவி ஹரிஸ்ணவி சார்பில் மனிதவுரிமை அபிவிருத்திக்கான நிலையத்தைச் சேர்ந்த சட்டத்தரணி அனிஸ் மன்றில் முன்னிலையாகி வழக்கை நெறிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மத நல்லிணக்கம் என்னும் பெயரில் வவுனியாவில் புத்தரை குடியேற்றிய முச்சக்கர வண்டி சாரதிகள்

வவுனியா நிருபர்

மத நல்லிணக்கம் என்னும் பெயரில் வவுனியா, புகையிரத நிலையம் முன்பாக புதிதாக புத்தர் சிலை ஒன்றினை முச்சக்கர வண்டி சாரதிகள் வைப்பு செய்துள்ளமை மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா, புகையிரத நிலையம் முன்பாக சிறிய கட்டடம் ஒன்று அமைத்து அதில் பிள்ளையார், புத்தர் ஆகிய சிலைகள் வைக்கப்பட்டுள்ளதுடன், மாதா சிலையும் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள முச்சக்கர வண்டி சாரதிகள் தமது வழிபாட்டுக்காக குறித்த வழிபாட்டு தலத்தை மத நல்லிணக்கம் என்னும் பெயரில் அமைத்துள்ளனர். இருப்பினும் குறித்த புகையிரத நிலைய முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் புத்தரை வழிபடும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த எவரும் இல்லை. இந்நிலையில் தமிழ் மக்கள் வாழும் அப்பகுதியில் புத்தரின் சிலை வைக்கப்பட்டுள்ளமை எதிர்காலத்தில் பாரிய பிரச்சனைகளை உருவாக்கும் என அதிருப்தி வெளியிட்டுள்ள அப்பகுதி மக்கள் குறித்த செயற்பாட்டுக்கு வவுனியா நகரசபையும் அனுமதி வழங்கி துணை போகின்றதா என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குறித்த பகுதிக்கு வருகை தரும் பயணிகளின் வழிபாட்டுக்காகவும், தமது வழிபாட்டுக்காகவும் புத்தர் உள்ளிட்ட சிலைகள் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக முச்சக்கர வண்டி தரிப்பிட சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத் தலைவரிடம் கேட்ட் போது, குறித்த நிகழ்வு நடைபெற்றுள்ளதாக நானும் அறிந்தேன். இது குறித்த பகுதில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிட சாரதிகளால் அமைக்கப்பட்டது. இதற்கும் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்திற்கும் தொடர்பில்லை எனத் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை உபதலைவர் சு.குமாரசாமி அவர்களை தொடர்பு கொண்டு கேட்ட போது, குறித்த விடயம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் வவுனியா நகரசபைத் செயலாளர் இ.தயாபரன் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்ற போதும் அவர் பதில் அளிக்க வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்தும் முடப்பட்டு வரும் தோட்டங்கள்; தொழிலாளர்களின் எதிர்காலம் என்ன?

மஸ்கெலியா நிருபர்
செ.தி.பெருமாள்

மொனராகலை மாவட்டத்திலுள்ள தோட்டங்கள் மூடப்பட்டு அங்கு வாழும் தமிழ் மக்கள் மறைமுகமாக குடிபெயரச்செய்யப்படுகின்ற வரலாற்று நிகழ்வு போக்கின் தொடர்ச்சியாக இடம்பெற்ற அண்மைய சம்பவங்கள் அங்கு வாழ்கின்ற தமிழ் மக்களை சிந்திக்க மட்டுமின்றி செயற்படவும் தூண்டியுள்ளது.

மொனராகலை மாவட்டம் குமாரவத்தை தோட்டத்தின் சிங்காரவத்தை பிரிவில் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த 120 பேர் அனுமதின்றி உட்புகுந்து தோட்ட காணியில் இடங்களை கையகப்படுத்தி தற்காலிக கொட்டில்களை அமைத்தனர். அதே வேலை நக்கலை தோட்டப்பிரிவில் ஆறு ஏக்கர் காணி துண்டுகளாக்கப்பட்டு மக்கள்; தோட்ட அபிவிருத்தி சபையின் தலைமையகத்தில் கடமை புரியும் 73 உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டு காணி உறுதிகளும் தயார் செய்யப்பட்டுள்ள விடயமும் அறிய கிடைத்தது.

இந்நிலையில் தோட்ட காணிகளை பாதுகாக்க எண்ணிய மக்கள் தாங்கள் சார்ந்த தொழிற்சங்கங்களுக்கு அறிவித்து எந்த தொழிற்சங்கமும் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்காத நிலையில் மக்கள் தாங்களாகவே போராட முடிவு செய்தனர்.

இதன் முதல் கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை (20.09.2019) முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுப்பட தீர்மானித்து வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுப்படலாயினர். தோட்ட நிருவாகம் மசியாத நிலையிலும் தாங்கள் சார்ந்த தொழிற்சங்கங்கள் கை கொடுக்காத நிலையிலும் அடுத்த கட்ட போராட்டம் குறித்து மக்கள் சிந்திக்க தொடங்கினர்.

திங்கட்கிழமை (23.09.2019) மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நடைபெறும் போது மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்த தீர்மானித்தனர்.

கவனயீர்ப்பு போராட்டம் தொடங்கி தோட்ட காணிகளை பாதுகாப்பதற்கான மக்கள் என்ற பெயரில் முன்னெடுப்பது என்றும் முடிவு செய்தனர்.

திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு உலந்தாவை சந்தியில் ஒன்றுக்கூடிய மக்கள் ஊர்வலமாக சென்று 9.50 மணிக்கு மாவட்ட செயலகத்தை அடைந்தனர். ஊர்வலத்தில் ஐநூறுக்கு மேற்பட்ட மக்கள் பங்கு கொண்டனர்.

மாவட்ட செயலகத்தை சுற்றி தீவிர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலகத்தின் நுழைவாயிலை ஊர்வலம் அடைந்ததும் ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் உட்செல்ல முடியாதவாறு பொலிஸார் தடைகளை ஏற்படுத்தினர்.

இதனை தொடர்ந்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்ட மக்கள் நுழைவாயிலை மறித்து அமர்ந்து கொண்டனர். பிற்பகல் 1 மணியளவில் கடும் மழை பெய்ய ஆரம்பித்த போதிலும் மக்கள் தங்களது கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காதவரையில் அவ்விடத்தை விட்டு அகன்று செல்லப்போவதில்லை என்ற முடிவில் உறுதியாக இருந்தனர்.

பிரதி சபாநாயகர் ஆனந்த குமார சிறியும் ஊவா மாகாண சபை உறுப்பினர் தயாரட்ண பண்டாரவும் மக்களை சந்தித்தனர்.

பிற்பகல் 2 மணியளவில் கடும் மழையின் மத்தியில் மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிறியும், ஊவா மாகாண சபை உறுப்பினர் தயாரட்ண பண்டாரவும் அவ்விடத்திற்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை சந்தித்தார்.

மக்கள் மத்தியில் கருத்து தெரிவித்த மாகாண சபை உறுப்பினர் தயாரட்ண பண்டார போராட்டக்காரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாய தேவை இல்லை என்று குறிபிட்டார். அதேவேளை பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி கருத்து தெரிவித்த போது மக்களின் கோரிக்கைகளையிட்டு கவனஞ்செலுத்துவதாகவும், சிங்கார வத்தை தோட்டத்தில் சட்டவிரோதமாக கொட்டில்களை அமைத்தவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும், நக்கலை தோட்டத்தில் மக்கள் தோட்ட அபிவிருத்திசபையின் தலைமையக உத்தியோகஸ்தர்களுக்காக ஒதுக்கப்பட்ட காணி விவகாரம் தொடர்பில் உரிய அமைச்சருடன் கலந்துரையாடி ஒருவார காலத்திற்குள் பதில் சொல்வதாகவும் கூறியதை அடுத்து மக்கள் தங்கள் கவனயீர்ப்பு போராட்டத்தை இடைநிறுத்திகொண்டதுடன் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் போராட்டம் தொடரும் என்றும் அறிவித்தனர். மேலும் தங்களது இருப்பிற்கே சவால் விடுக்கப்படும் சந்தர்ப்பத்தில்கூட மலையக அரசியல்வாதிகளின் கண்டுகொள்ளாத போக்கையிட்டு மக்கள் வேதனையுடன் கருத்து தெரிவித்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பன்றிக்கு வைத்த வெடியில் சிக்குண்டு மூன்று பேர் வைத்தியசாலையில் அனுமதி

ஹட்டன் கே.சுந்தரலிங்கம்

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தரவலை கீழ் பிரிவு தோட்டத்தில் பன்றியைக் கொல்வதற்காக வைத்த சுத்துவெடியில் சிக்குண்டு மூன்று பெண் தொழிலாளர்கள் காயமடைந்து டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சுத்துவெடி மறைத்து வைத்திருந்த நிலையில் தொழிலாளர்கள் திடீரென அதனை பாராது மிதித்ததனால் அது வெடித்து காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களை ஏனைய தொழிலாளர்கள் மற்றும் தோட்ட நிர்வாகம் இணைந்த வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

காயமடைந்தவர்களுக்கு உயிராபத்துக்கள் எதுவும் இல்லை எனவும் இவர்களுக்கு காயம் மற்றும் அதிர்ச்சி காரணமாக சிகிச்சை பெற்றுவருவதாக வைத்தியசாலையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆசிரியர்கள் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் தமது உன்னத சேவையின் ஊடாக உயர வேண்டும்

ஹட்டன் கே.சுந்தரலிங்கம்

உலகத்தில் உள்ள அனைத்து சேவைகளிலும் ஆசிரிய சேவை உன்னதமான பணியாகும். தம்மிடம் கல்வி பயிலும் மாணவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்து உள்ளம் பூரிக்கும் உயரிய பண்பு ஆசிரியர்களிடத்தில் இருக்கின்றது. அவர்கள் தமது தன்னலமற்ற சேவையின் ஊடாக உயர்கின்ற அதேநேரத்தில், யாருக்கும் அடிபணியாது சுதந்திரமாகவும் நேர்மையாகவும் செயற்பட வேண்டும் என வாழ்த்துவதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான பி. திகாம்பரம் விடுத்துள்ள சர்வதேச ஆசிரியர் தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தமது செய்தியில்,

ஆசிரியர் பணி என்பது இலகுவான ஒரு விடயம் அல்ல. முதலில் ஆசிரியர்கள் கற்க வேண்டும், பின்னர் தாம் கற்றவற்றை மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும். தம்மிடம் வரும் மாணவர்கள் அனைவரையுமே கரை சேர்க்க வேண்டிய பாரிய சமூக பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது. அதைச் செவ்வனே செய்வதன் ஊடாக சமூத்தில் நன்மதிப்பும், பாராட்டும் கிடைக்கின்றது.

மலையகத்தைப் பொறுத்த வரையில் எத்தனையோ பாடசாலைகள் வளப் பற்றாக்குறைகளுடன் இயங்கி வருகின்றன. அவ்வாறு வசதிகள் இல்லாத போதிலும் கூட மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று உயர்கல்வி நிறுவனங்களுக்கு செல்கின்றார்கள். இதுவே, அவர்களின் சேவைக்கும் சாதனைக்கும் கிடைக்கின்ற அங்கீகாரம் ஆகும். அதைப் பெருமைப் படுத்த வேண்டியது ஒவ்வொருவரது கடமையுமாகும்.

ஆசிரியர்களுக்கு வீடமைப்புத் திட்டம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. தோட்டத் தொழிலாளர்களுக்கு தனி வீட்டுத் திட்டத்தை மேற்கொண்டு வருவது போல, ஆசிரியர்களுக்கு கிராமங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற திட்டம் உள்ளது. எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆசிரியர்களின் வீடமைப்பு தொடர்பான கோரிக்கையை தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்க கோரிக்கை விடுத்துள்ளோம். ஆசிரியர்களின் கௌரவமான வாழ்க்கைக்கு உரிய அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே எமது எண்ணம் ஆகும்.

எனவே, ஆசிரியர்கள் எந்த விதமான அரசியல் அழுத்தங்களுக்கும் அஞ்சாமல் துணிவோடும் நேர்மையோடும் அர்ப்பணிப்போடும் தமது சேவையில் நிலைத்து நின்று சமூக ஒற்றுமையை மேம்படுத்த முன்வர வேண்டும். விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல் மனசாட்சிக்கு இடம்கொடுத்து மகத்தான சேவையாற்ற வேண்டும் என்று மனதார வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

பஸ் வண்டிகளில் ஒலிபரப்பு செய்யப்படும் ஆபாச பாடல்களுக்கு தடை

இரத்தினபுரி நிருபர்

சப்ரகமுவ மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் சேவையில் உள்ள தனியார் பஸ் வண்டிகளில் ஒலிபரப்பு செய்யப்படும் ஆபாச பாடல்களுக்கு தடை விதிக்கப்பட்டு, சிறந்த பாடல்களை ஒலிபரப்பு செய்யும் வேலைத்திட்டத்தை சப்ரகமுவ மாகாண சபை முன்னெடுத்துள்ளது.

இது குறித்து சப்ரகமுவ மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் சேவையில் உள்ள தனியார் பஸ் வண்டிகளின் உரிமையாளர்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வுவென்று கடந்த வியாழக்கிமை இரத்தினபுரி புதிய நகரில்

அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண மத்திய நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதன்போது தனியார் பஸ் வண்டிகளில் பொது மக்கள் கேட்க்ககூடிய சிறந்த பாடல் அடங்கிய சீடி தட்டுக்களை சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க பஸ் வண்டி உரிமையாளர்களிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் இசைஞானி விசாரத சுதத் சமரசிங்க, இரத்தினபுரி பொலிஸ் அதிகாரி ரோஹான் ஓலுகல, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் டி.எம்.மாலணி, மாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சியாணி பத்மலதா, சப்ரகமுவ மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சரத் சந்தநாயக்க உட்பட 600 க்கும் அதிகமான பஸ் வண்டிகளின் உரிமையாளர்களும் கலந்து கொண்டனர்.

தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக சாமிமலை ஸ்டொக்கம் தோட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

க.கிஷாந்தன்

தோட்டங்கள் காடகி காட்சியளிக்கின்றது. தொழிற்சாலை ஒழுங்கான முறையில் இயங்குவதில்லை. சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிக்கும் தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுப்பதில்லை. இவ்வாறான பல்வேறு குறைபாடுகளை முன்வைத்து சாமிமலை ஸ்டொக்கம் தோட்ட தொழிலாளர்கள் அத்தோட்டத்தின் நிர்வாகத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

02.10.2019 அன்று மதியம் இந்த ஆர்ப்பாட்டம் ஸ்டொக்கம் தோட்டத்தின் தொழிற்சாலைக்கு முன்பாக இடம்பெற்றது. இதில் அத்தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 100ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

போராட்டத்தில் தொழிலாளர்கள் அத்தோட்ட நிர்வாகத்தினால் கவனிக்கப்படாத பல்வேறு விடயங்களை வாசகங்கள் எழுதிய பதாதைகள் ஊடாக வெளி கொண்டு வந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் மறுக்கப்பட்டு வருவதாக தொழிலாளர்கள் இதன் போது சுட்டிக்காட்டினர்.

அதேவேளை தோட்டத்தின் தேயிலை மலைகள் காடாகப்பட்டிருப்பதால் தோட்ட நிர்வாகம் பணிக்கும் தேயிலை இறாத்தலை பெறமுடியாது சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், வருமான ரீதியில் தாம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

அதேவேளை தோட்டத் தொழிலாளர்களுடைய மருத்துவம், இலவச வாகன போக்குவரத்து, கர்ப்பிணி தாய்தார்களுக்கான சலுகைகள் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதி உதவிகள் போன்றவற்றை இம்மக்களுக்கு வழங்காது புறக்கணித்து வருவதாகவும் அம்மக்கள் சுட்டிக்காட்டினர்.

சுகாதாரம் மற்றும் அடிப்படை பிரச்சினைக்கு ஆளாகி உள்ள நிலையில் தோட்ட நிர்வாகத்திடம் இது குறித்து வழங்கப்பட்ட கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காது செயல்பட்டு வருவதால் இவைகளை உடனடியாக தோட்ட நிர்வாகம் பெற்றுத்தர வேண்டும் எனவும், தொழில் ரீதியில் முன்னேற்றமடைய ஸ்டொக்கம் தோட்ட மலைகளை துப்பரவு செய்து அட்டைக்கடி மற்றும் காட்டு மிருகங்களின் தொல்லையில் இருந்து தோட்ட நிர்வாகம் பாதுகாக்க வேண்டும் என வழியுறுத்தியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக போராட்டகாரர்கள் தெரிவித்தனர்.

இரத்தினபுரி பிரதேசத்தில் 2017ஆம் ஆண்டு மண்சரிவில் பாதிக்கப்பட்டோருக்கு இது வரை காணிகளோ வீடுகளோ கிடைக்கவில்லை!

இரத்தினபுரி நிருபர்

இரத்தினபுரி பிரதேசத்தில் 2017ஆம் ஆண்டு மண்சரிவில் பாதிக்கப்பட்டோருக்கு இது வரை காணிகளோ வீடுகளோ அரசாங்கத்தின் மூலம் கிடைக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

மேற்படி பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த கடந்த 2017ஆம் முதல் இரண்டு வருட காலமாக வாடகை வீட்டில் வாழ்ந்து வருவதாகவும், 2017ஆம் ஆண்டு மண்சரிவில் பாதிக்கப்பட்டு மூன்று மாதங்கள் மட்டும் வாடகை வீட்டுக்கென சிறு தொகை பணம் அரசாங்கத்தின் மூலம் வழங்கப்பட்டது. மூன்று மாதத்திற்கு பின்பு அவை கிடைக்க வில்லை. இன்று வரை பாதிக்;கப்பட்ட மக்களே வாடகை வீட்டுக்கான பணத்தை செலுத்தி வருகின்றனர்.

மேற்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் மூலம் காணிகளோ வீடுகளோ இன்று வரை கிடைக்க வில்லை. குறைந்த பட்சம் மண்சரிவில் பாதிக்கப் பட்டு வாடகை வீட்டில் குடியிறுக்கும் மக்களுக்கு வாடகை வீட்டுக்கான பணத்தையாவது செலுத்துமாறும் பாதிக்கப் பட்ட மக்கள் கோரிக்கை வீடுக்கின்றனர்.

சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன

ஹட்டன் கே.சுந்தரலிங்கம்

சர்வதேச சிறுவர் தினம் இன்றாகும் இந்த சர்வதேச சிறுவர் தினத்தினையொட்டி நாடெங்கிலும் சிறுவர்களை மகிழ்வூட்டும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

மலையகத்திலும் சர்வதேச சிறுவர் தினத்தினையொட்டி பாடசாலைகளில் பல்வேறு நிகழ்வுகள் (01) திகதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

பல பாடசாலைகளில் மாணவர்களுக்கு இனிப்பு பண்டங்களையும் பரிசில்களையும் வழங்கி மகிழ்வித்தனர்.

சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கீழ் பிரிவு கிரேன்லி தமிழ் வித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வு பாசாலையின் அதிபர் குழந்தைவேல் பாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாணவர்கள் மகிழும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் சிறுவர்களின் பாது காப்பினை வலியுறுத்தி விழிப்பு ஊர்வலமும் இடம்பெற்றது.

இதன் போது சுமார் 500 மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டதுடன் கடந்த ஜூலை 18 ம் திகதி டொரின்டன் தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயின்ற

மாணவிகள் இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர் அவர்களையும் மாணவர்களாக இருக்கும் உயிரிழந்த காயமடைந்த அனைத்து மாணவர்களையும் நினைவு கூர்ந்து மௌழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலியும் செய்யப்பட்டன.

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட டிக்கோயா நுன்கலை கல்லூரியில் சர்வதேச சிறுவர் தின தொனிப் பொருளான ?நட்பு சூழ சிறுவர்களுக்கு வெற்றியை பரிசளிப்போம்? எனும் தொனிப்பொருளில் சிறுவர் தின நிகழ்வுகள் பாடசாலையின் அதிபர் எம்.மூவேந்தன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாணவர்கள் மகிழும் வகையில் பாரம்பரிய விளையாட்டுக்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன். மாணவர்களுக்கு இனிப்பு பண்டங்களும் பரிசில்களும் வழங்கி மகிழ்வித்தனர்.

இங்கு மாணவர்களின் கலை கலாசார நிஜகழ்வுகளும் இடம்பெற்றன.

இதே வேளை பிரிடோ நிறுவனம் பணிபுரியம் அனைத்து தோட்டங்களில் உள்ள பாலர்பாடசாலைகளில் இன்று சிறுவர் தின நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

இதில் சிறுவர் மத வழி பாடுகளில் ஈடுபட்டதுடன் சிறுவர் தின கொண்டாட்டங்களும் நடைபெற்றன.

இதன் போது அனைத்து சிறுவர்களுக்கும் பகல் உணவு அளித்து மகழ்விக்கப்பட்டனர்.

தமிழ் முற்போக்கு கூட்டணி மேற்கொள்ளும் முதலாவது பிரசாரக் கூட்டம் அட்டனில்

மஸ்கெலியா நிருபர்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜீத் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து தமிழ் முற்போக்கு கூட்டணி மேற்கொள்ளும் முதலாவது பிரசாரக் கூட்டம் இம்மாதம் (ஒக்டோபர்) 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு அட்டன் டி.கே.டபுள்யூ கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான பி.திகாம்பரம் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ் நியமிக்கப்பட வேண்டும் என்று ஆரம்பம் முதல் வலியுறுத்தி வந்த தமிழ் முற்போக்கு கூட்டணி அவரின் வெற்றிக்காக அயராது பாடுபடும் என்றும், மலையக மக்களும் அவரது வெற்றியை உறுதிப்படுத்தத் தயராக உள்ளவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இளம் தொழிலாளர் தலைவர்களுக்கான பேராளர் மகாநாடு

க.கிஷாந்தன்

ஆசிய பசிபிக் மற்றும் ஓசியானியாவின் பொது பணித்துறையை சார்ந்த இளம் தொழிலாளர் தலைவர்களுக்கும் தலை சிறந்த தொழில் சங்க தலைவர்களுக்குமான பி.எஸ்.ஐ - பப்ளிக் சர்வீசஸ் இன்டர்நேஷனல் சர்வதேச பொதுபணித்துறை சார் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த #APRECON2019 பேராளர் மகாநாட்டில் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவராக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் சார்பாக அருள்சாமி பரத் கலந்து கொண்டுள்ளார்.



இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் பணிப்புரைக்கமைவாக இப் பேராளர் மகாநாட்டில் கலந்துக்கொண்ட இவர் நாட்டின் தொழிற்சங்க முன்னெடுப்புகள், தேசிய அளவில் அரசியல் மற்றும் தொழிற்சங்களில் இளைஞர்களின் பங்களிப்பு, சர்வதேச வணிக ஒப்பந்தங்கள், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் அரசியல் மற்றும் தொழிற்சங்க முன்னெடுப்புகள், இளைஞர் அணியின் உதயம் என்பவற்றை பற்றி தெரிவித்துள்ளார். தெற்காசியாவின் இளம் தொழிலாளர் தலைவர்களுக்கான ஆலோசகராக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் பல துறைசார் தலை சிறந்த தொழில் சங்க தலைவர்களை சந்திக்கவும் அவர்களின் நுணுக்கங்களை அறிந்துக்கொள்ள வாய்ப்பாகவும் இவருக்கு அமைந்துள்ளது.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சப்ரகமுவ மாகாண சபையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறுவர்களின் சிறுவர் தின நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

படம்: இரத்தினபுரி நிருபர்

இது இன்னொரு வாழ்க்கை!

பகல் நேர பேருந்து பயணம், இம்சையாய் இருந்தது, கலியமூர்த்திக்கு! மனதின் கொதிப்பை விட, புறவெளியின் கொதிப்பு வெறுப்பாய், எரிச்ச லூட்டுவதாய் இருந்தது. பஸ் புறப்பட சில நிமிடங் களே இருந்தன. பஸ்சில் ஏறிய இளம் பெண் ஒருத்தி, தான் முன்பதிவு செய்திருந்த இருக்கைக்கு பக்கத்தில் கலியமூர்த்தி உட்கார்ந்திருப்பதைப் பார்த் து, நடத்துனரிடம் சொல்ல, அவர், பக்கவாட்டு இருக்கையில் அமர்ந்திருந்த தம்பதியைப் பிரித்து, இவர் அருகில் உட்கார வைத்து, அந்தப் பெண்ணை மறுபுறமாய் அமர வைத்தார்.

பக்கத்தில் வந்து அமர்ந்த அந்த நபர், கொஞ்சம், பருமனாக இருந்தார். கூடவே, அவருடைய பத்து வயது மகனை, மடி மீது உட்கார வைத்ததும், கலிய மூர்த்திக்கு, 'சுள்' என்று வந்தது.

துறுதுறுவென்றிருந்த அந்த பயலோ, நெளி யவும், மடங்கவும் என்று, தன் பாதி உடம்பை, கலி யமூர்த்தியின் மீது கிடத்தியும், அவர் கால் வைக் கும் இடத்தில் நின்று, ஜன்னல் வழியே வேடிக்கை பார்ப்பதுமாக இருந்தான்.

'பஸ் பயணம்ன்னாலே இம்சை தான்...'என்று முணுமுணுத்து, கண்களை மூடி இருக்கையில் சரிந் தார். மனம் இனம் புரியாத தவிப்பில், இலக்கில் லாத இந்த பயணத்தின் மீது எரிச்சல் வந்தது. நேற் றைய நிகழ்வுகள், கண் முன் படமாய் விரிந்தன...

வீடியோ காலிங்கில் தெரிந்த, அமெரிக்காவில் உள்ள மகனுடைய வீடும், நவீன சோபாவும், அவ னுடைய பொருளாதார வளர்ச்சியை காட்டியது.

'சந்துரு... உன்னையும், புள்ளைகளையும் பாக்க உங்கம்மா ரொம்ப ஆசையா இருக்கா... இப்பவும், நீ வர நேரமில்லன்னு சொல்றியேப்பா... இந்த தனிமை எங்கள ரெம்பவும் வாட்டுது..'என்றார் வருத்தமாக!

'ரெண்டு பேர் இருக்கிறது எப்படிப்பா தனிமை ஆகும்... கஷ்டப்பட்டு டாலரா அனுப்புறோம். சகல வசதியோட வீடு, வாசல் இருக்கு. முதுமைய, 'என்ஜாய்' செய்ய வேண்டியது தானே...? என்றான் அலட்சியமாக!

'முதுமை, 'என்ஜாய்' செய்றது இல்ல சந்துரு... வாழ்க்கைக்கான மிச்சத் தேடல். என் குழந்தை, பேரப்பிள்ளைன்னு வாழணும்ங்கிற இறுதி நாட்க ளுடைய ஏக்கம்...'

'எதுவுமே இறுதி இல்லப்பா; முடிஞ்சு போறது, இன்னொரு துவக்கத்துக்கான ஆரம்பம்...'

'அது எல்லாத்துக்கும் பொருந்தும். மரணத்திற்கு பொருந்தாது...'

அமைதியாக இருந்தான் சந்துரு. பேரப் பிள்ளை கள், கேமரா முன் நின்று, ஹாய் சொல்லின; மரும கள், குனிந்து நமஸ்கரித்து போனாள்.

இவருடைய மவுனமும், அமைதியான முகமும், அவனிடம் மிச்சமிருந்த பந்த பாசத்தை தூண்டி விட் டதோ என்னவோ, குழைவாய் கேட்டான்...

'வருத்தப்படுறீங்களாப்பா, யோசிச்சு பாருங்க... நான் களிமண் மாதிரி பிறந்தேன். என்னை கனவு களோடு உருவாக்கினது நீங்க. உயரம் தான் உல கத்துடைய பிரதானம்ன்னு கத்து குடுத்த நீங்க, இப்ப, நான் உயரத்தை எட்டும்போது சஞ்சலப்பட லாமா...'

'சந்துரு... ஒரு தகப்பனுக்கு, தன் மகனுடைய உயரம், சஞ்சலமா இருக்கும்ன்னா நினைக்கிற... இல்லப்பா... நீங்க உயர உயர எங்க கண்ணை விட்டு வெதுதூரம் போயிடுறீங்க. ஒரு கட்டத்துக்கு பின், அந்த பிரிவை தாங்க முடியல. அதீதமான சவுக ரியங்கள் கூட, கொஞ்ச நாள்ல அலுத்து போயிடுது. அந்த ஏக்கத்துல தான், உன்கிட்ட கேட்டேன்... உங் கம்மாவோ, இதெல்லாம் உனக்கு எடுத்து சொல்லத் தெரியாம, கோவிலே கதின்னு கிடக்குறா... இதெல் லாம் உனக்குப் புரியாது..'

'எனக்கான பொறுப்புகளும், கடமையும் புரியு து. ஆனா, நான் கடமைக்காக மட்டும் தான் படைக் கப்பட்டு இருக்கேனா... என் வாழ்க்கைய முழுமை செய்துக்க, இயங்கிட்டு இருக்கேன். ஆனா, நீங்க ளும், அம்மாவும் உங்களுக்கு மகனா இருக்கிறது மட்டும் தான் என் வேலைன்னு சொல்றீங்க...'

சுரீரென நிமிர்ந்தார்; கண்கள் கலங்கியது. நல்ல வேளை, இந்த வார்த்தையை கேட்க, மனைவி அருகில் இல்லை. 'லேப் - டாப்'பை அணைத்து, வெளியே வந்தார்.

'மார்பிலும், தோளிலும் தூக்கி வளர்த்த பிள் ளையே, 'உங்களுக்கு பிள்ளையாக இருப்பது என் வேலை இல்லை...'என்று சொன்ன பின், வாழ் வதில் என்ன அர்த்தம் இருக்கிறது... ஒரு முறை, ஊருக்குப் போய் உறவுகளை எல்லாம் பார்த்து வந் து, ஒரேடியாக போய் சேர்ந்து விட வேண்டியது தான்...' என்ற முடிவுடன் தான், ஊருக்கு கிளம்பி



இருந்தார்.

''தாத்தா தூங்குறாங்க... சும்மா அவுகள இடிச்சு ட்டு இருக்கக் கூடாது...'' என்ற பக்கத்து சீட் ஆசா மியின் கட்டையான குரல் கேட்டு கண் விழித்தார்.

''சார் தப்பா நினைக்காதீங்க... பையன் ரெட்டை சுழிக்காரன். பத்து நிமிஷம் ஒரு இடத்துல உட்கார வைக்க முடியாது... உங்கள ரொம்ப தொந்தரவு செய்றான்னு நினைக்கிறேன்...''

பதில் பேசாமல் சிரித்தார், கலியமூர்த்தி. அந்த சிரிப்பை, நட்புக்கான அச்சாரமாக எடுத்துக் கொண் டான்.

''நமக்கு விவசாயம் தான் தொழிலு; தென்னந் தோப்பும் இருக்கு. பெருசா விளைச்சல் இல்லாட் டியும், வீம்புக்காக விவசாயத்தை பிடிச்சுக்கிட்டு, காலத்தை ஓட்டுறோம்...'' என்றவன், ''சாருக்கு எங் க,'' என்றான்.

''அக்கா, தம்பி எல்லாரும் அங்க தான் இருக் காங்க. படிச்சு, நான் வெளியில வந்துட்டேன். பேங்க் மேனேஜர் உத்யோகம்! 32 வருஷம் ஓடிப் போச்சு... ஒரே பையன். அமெரிக்காவுல இருக் கான்...'' என்றார். உடனே, தன் பையனிடம், ''பாரு... சாரோட பையன் படிச்சு, பெரிய உத் யோகத்துல, வெளிநாட்டுல இருக்காரு. நீயெல் லாம் அங்க போக வேணாமா...''என்று, மகனின் தலையை அன்பாய் நீவி சொன்ன போது, கலிய மூர்த்திக்கு கோபம் வந்தது.

தன்னை மறந்து, ''இப்படித் தான் நானும் சொல்லி வளத்தேன். கடைசியில, 'உங்களுக்கு புள்ளையா இருக்கறது மட்டும் தான், என்னோட வேலையா'ன்னு கேட்டுட்டான். மனசு ஆற மாட் டேங்குது. இதுகள தூக்கி வளர்க்க கூடாது. அது தான் நாம செய்யுற தப்பு...''என்றவர், சட்டென்று, தன் தவறை உணர்ந்து, நாக்கை கடித்தார்.

அவரையே சிறிது நேரம் உற்றுப் பார்த்த பக்கத்து சீட்டுக்காரன், அவர் கண்களில் தெரிந்த விரக்தி, வெறுமையை கண்டு, 'வருத்தப்படாதீங்கய்யா... எல்லா கஷ்டமும் ஒருநாள் நம்மை கடந்து போயி டும்...'' என்றான், வேதாந்தி போலே!

பரிச்சயம் இல்லாதவன் தான். ஆனால், ஏதோ பந்தமிருப்பவனை போல், ஆறுதலாக பேசியது, இந்த சூழலுக்கு தேவையானதாய் இருந்தது.

''உங்களுக்கு புரியாது தம்பி... ஏன்னா, நீ ங்க இன்னும் அந்த வயச எட்டல. இதேமாதிரி தான் நானும், என் மகனை மடியிலயும், தோள் லயும் தூக்கி வளர்த்தேன். நாம வளர்க்கிற புள்ள, நாளைக்கு நம்மளவே தூரப்படுத்தி பேசினா, நம்ம வாழ்க்கைக்கு என்ன பாதுகாப்பு இருக்கு சொல் லுங்க...'' என்றார்.

''சார்... நீங்க நிறைய படிச்சவங்க. உங்களுக்கு நான் என்ன சொல்றது... இருந்தாலும், என்னைப் பொறுத்தவர, பிள்ளைங்க மீது எதிர்பார்ப்பை வளர்த்துக்கிறது தப்புன்னு தான் சொல்வேன். அதுக்காக, உலகத்துல இருக்குற எல்லா மகனுக ளும் சுயநலவாதிக. பெத்தவங்கள பாத்துக்கிறது இல்லன்னு சொல்ல வரல. நாம தான், நம்ம புள் ளைங்கள சுத்தி, நாம பின்னியிருக்கிற பாச வலை யில இருந்து நம்மை விடிவிச்சுக்கணும். நாம வளர்ந்ததும், நம்ம அப்பா, அம்மாவை விட்டு, நம்மள விடுவிச்சுக்கும் போது, இதையெல்லாம் யோசிச்சமா என்ன!

''தன் குஞ்சுகள சிறகுகளுக்குள்ள வச்சு காப்பாத் துற பறவைங்க தான், குஞ்சுக்கு றெக்க முளைச் சதும், அதுங்கள கூட்டைவிட்டு துரத்துதுங்க... அதுக்காக, அதுகளுக்கு பாசம் இல்லன்னு அர்த்தமா என்ன... வாழ்க்கையில், ஒவ்வொரு கட்டத்துலயும் நமக்கு ஏதாவது ஒரு பிடிமானம் தேவைப்படுது. அந்த பிடிமானத்தை பிடிச்சு, அடுத்த கட்டத்துக்கு போன பின்பும், அந்த பிடிமானத்து மேல அபி மானம் வைக்கிறது தப்பிலீங்களா...''என்றான்.

'சொளேர்' என்று நிமிர்ந்து பார்த்தார். அவன் வார்த்தைகளில் இருந்த விஷய ஞானம், அவன் தோற்றத்திற்கு சம்பந்தமில்லாததாய் இருந்தது.

''குழந்தைங்க நம்ம மூலமா வந்தவங்க. நமக் காக வந்தவங்க இல்ல. புள்ளைங்க மேல நம் பிக்கை வைக்கலாம். ஆனா, அவங்கள நம்பியே இருக்கக்கூடாது...''

கண்களை விரித்து, 'என்ன சொல்ல வர்றே..' என்பது போல் பார்த்தார், கலியமூர்த்தி.

''சார்... நமக்கு நடுவே, ஒரு பத்து மணி நேர பயணம் தான்... ஆனா, ஏதோ நம்பளை கட்டி வைக்கிறதா நீங்க நினைக்கிறீங்களான்னு எனக் குத் தெரியாது. ஆனா, நான் நினைக்கிறேன். அந்த நினைப்புல சொல்றேன்... பிள்ளைங்களும், நம் மோட வாழ்க்கையில பயணம் செய்ற பயணிங்க தான். மத்தவங்களுக்கும், அவங்களுக்கும் உள்ள வித்தியாசம், அவங்க நம்ம சொந்த ரத்தம்... அவ் வளவு தான்.

''அவங்கள மட்டுமே நம்மோட உலகம்ன்னு நம்பிட்டு இருக்கிறத விட்டுட்டு, நமக்கான உல கத்துல, மத்தவங்களுக்கும் இடம் கொடுத்து பாருங்க... எந்த ஏமாற்றமும் இருக்காது. யாரை யும் இழுத்து பிடிச்சு வச்சுக்கிறத விட்டுட்டு, நாம, நம்ம வேலைய பாத்தா, எல்லாம் தன்னால தேடி வரும்..'' என்று சொல்லி சிரித்தான். சிலிர்ப்பாய் இருந்தது கலியமூர்த்திக்கு!

அப்படியே, கண்களை மூடி இருக்கையில் சரிந் தவர், உறங்கி போனார்.

கணவருடைய போக்கில் தென்பட்ட மாற் றத்தை அதிசயமாக பார்த்தாள், கலியமூர்த்தியின் மனைவி.

'இது வயதான பறவைகளின் சரணாலயம்' என்று வாசலில், 'போர்டு' மாட்டினார். ஹாலில் டேபிள் போட்டு, நோட்டீஸ் மற்றும் வவுச்சருடன் அமர்ந்தார். தினமும் பலர் வந்து போக ஆரம்பித்த னர்.

''என்ன தான் செய்றீங்க... ஒண்ணும் புரிய ல...''என்ற மனைவியை, புன்னகையுடன் பார்த் து, ''மாடி போர்ஷனை காலி செய்து, 'ஓல்டு ஏஜ் ஹோம்' ஆரம்பிக்க போறேன். பிள்ளைகளால் ஒதுக்கப்பட்ட பெரியவங்க எல்லாரும் இங்க வந்து சேரலாம். மாசம் ஐயாயிரம் ரூபாய் முதல் அவங்க விருப்பப்பட்ட தொகைய தரலாம். அந்த தொகைய கொண்டு, ஏழை முதியவங்கள இலவசமா கவனிச் சுக்கலாம்.

''அது மட்டுமல்ல, வருஷத்துக்கு, ஏதாவது கோவில் இருக்குற ஊருக்கு, டூர் கூட்டிட்டு போற, 'ஸ்கீம்' கூட இருக்கு. விளையாட்டா தான் பேப் பர்ல விளம்பரம் குடுத்தேன். இதோட, நாலு பேர் போன் செய்துட்டாங்க. ஏதோ புதுசா வேலை செய் யப் போற நம்பிக்கை பிறந்திருக்கு...''

''ஐயாவோட புது அவதாரம் நல்லாத்தான் இருக்கு. ஆனா, இந்த ஐயாயிரம் தந்தாத்தான் சே ர்த்துப்பேன்னு சொல்றது மட்டும், கொஞ்சம் இடிக் குது...'' என்றாள் கேலியாக!

''அப்படியில்ல... பத்து பேர் சேர்ந்தாலும் ச மைக்க ஆள் போடணும். அவங்களுக்கு தேவை யானதையெல்லாம் செய்யணும். அதுக்கெல்லாம் நம்மகிட்ட பொருளாதாரம் பத்தாது. நான், லாபம் சம்பாதிக்க, இந்த வேலைய செய்யல... நம்மளைப் போல வயசானவங்களும் இந்த உலகத்துல வாழ றதுக்கு அர்த்தம் இருக்குன்னு காட்டத்தான், இந்த முயற்சிய செய்றேன்,'' என்றார்.

''நம்மால் முடியுமாங்க...''

''முடியும்ன்னு நம்புறேன். ஒருவேளை, என் னால முடியாமப் போனா, இங்க வர்றவங்க யாரா வது அதை எடுத்து நடத்துவாங்க...''

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள், மாதங்களாக உருண்டோடின.

அப்பாவிடம் இருந்து போன் காலே இல்லை. 'தன் வார்த்தை அவரை இத்தனை விரக்தியடைய வைத்து விட்டதா...' என்ற குற்ற உணர்ச்சி உண்டா னது, சந்துருவுக்கு!

வீடியோ காலிங் செய்தான். தாமதிக்காமல் எடுத் தார், கலியமூர்த்தி. வீட்டில் கேட்ட பேச்சுக்குரலும், நடமாட்டங்களையும் உணர்ந்து, ''என்னாச்சுப்பா... வீட்டில் நிறைய பேச்சுக் குரல் கேட்குது. நம்ம செ ாந்தக்காரங்க எல்லாம் வந்திருக்காங்களா?'' என்று கேட்டான்.

''அப்படிக்கூட வச்சுக்கலாம்... இவங்களும் நமக்கு சொந்தங்கள் தான். அடுத்த நொடி வாழ்க் கைக்கு பாதுகாப்பையும், நம்பிக்கையும் யார் ஏற்ப டுத்தி தராங்களோ, அவங்க தான் நமக்கு உறவுன்னு நீ தான் எனக்கு கத்துக்குடுத்ததே... அதனால தான் அடுத்த வேளை வாழ்க்கைக்கு நம்பிக்கையை ஏற் படுத்திக்க, வீட்டில், 'ஓல்டு ஏஜ் ஹோம்' ஆரம்பிச் சுட்டேன்,'' என்றார், சிரித்தபடி!

மறுமுனையில் பதறிப் போனான் சந்துரு.

''என்னப்பா உளறல் இது... சொந்த வீடுப்பா அது... இன்னைக்கு தேதிக்கு, ரெண்டு கோடி ரூபாய் பெருமானமுள்ள வீடு. நீங்க பாட்டுக்கு டிரஸ்ட், அது, இதுன்னு எழுதி வச்சுட்டு, பின்னாடி கஷ்டப்படுத்தாதீங்க. முதல்ல, அம்மாவ கூப்பி டுங்க, நான் பேசணும்...''

''சாரி சந்துரு... ஹோம்ல இருக்குற பிரண்ட்ஸ் கூட சேர்ந்து, தாயம் விளையாடிட்டு இருக்கா, உங் கம்மா. இப்ப, எங்களுக்கும் உனக்கு அப்பா, அம் மாவா இருந்துட்டு, உன்னை எதிர்பார்த்து காத்திட்டு இருக்கிறது மட்டும் வேலை இல்ல. உன்னை கஷ் டப்படுத்த இந்த வார்த்தைய சொல்லல... ஆனா, நீ தான், வாழ்க்கையில எனக்கு கடினமான விஷயத் தை, லேசா புரிய வச்ச... அதுக்கு, உனக்கு நன்றி சொல்லணும்...'' என்ற அப்பாவை, அன்பு மேவ பார்த்தான், சந்துரு. அந்த பார்வை, அவர்களுக்குள் இருந்த இடைவெளியை தகர்த்தது.

- எஸ்.ஜாஸ்மின்

நிறைவேறா ஆசை!

தனது கடின உழைப்பில் சேகரிக்கப்பட்ட பணத்தினால் வாங்கப்பட்ட காணியில் வருடத் துக்கு மூன்று பருவம் விளைச்சல் செய்யப்பட்டு நல்ல வருவாயைக் கொடுத்த நெற்காணி கடந்த வருடம் விளைச்சல் போதியளவு கிடைக்காததால் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார் ஆதம்காக்க.

விளைச்சலுக்காக வேண்டி பட்ட கடனைக் கூட அடைக்க முடியாத நிலையில் இருந்தும் தொடர்ந்து செய்வதா? இல்லையா? என்ற இரும னதோடு செய்வதறியாது கடுமையான யோசனை.

நஷ்டஈடு கிடைப்பதற்கும் காலம் பிந்தும் என்ற செய்தி மேலும் அவரைப் பலவீனம் அடை யச் செய்தது.

கடந்த காலங்களில் தனது உறவுக்கார முதலாளி கொடுத்த உதவியைக் கொண்டு விளைச்சல் செய்து மீண்டும் பணத்தைக் கொடுத்தாலும் அதற்கென்று வட்டி குட்டி என்றெல்லாம் வாங்காமல் உதவிய வர்தான் முஸ்தபா முதலாளி. அவர் பெரிய மனசுக் காரர்.

ஆதம் என்ன இந்தமுறை விளைச்சலுக்கு ஆயத்தம் செய்து விட்டாயா எல்லோரும் வேலையை ஆரம்பிச்சுப் போட்டாங்களாம்.

முதலாளி, போன வருசத்தில ஏற்பட்ட நஷ் டத்தை இன்னும் அடைக்க ஏலாம இருக்கன். இந்தமுறை யாருக்காவது வயலைக் கொடுக்கப் போறன்.

பயப்படாதே வேலையைத் தொடங்கு. புள்ள குடிகள பட்டினி போடலாமா? எல்லாம் நல்ல படியா நடக்கும். வேலையத் தொடங்கு என்ற செய்தி ஆதமுக்கு தெம்பைக் கொடுத்தது.

முதலாளியின் உத்தரவுக்கு இணங்க வயல் வேலைகளை ஆரம்பிக்க அவசர அவசரமாக களம் இறங்கினான். முஸ்தபா முதலாளியின் அன்பான செய்தியை மனைவி மக்களிடத்தில் சொன்னபோது இரட்டிப்புச் சந்தோசம் ஏற்பட்டது.

வாங்கிய பணத்துக்கு வேலை வெட்டிகள் நடக்கிறதா என்று அறிய ஆதமின் வீட்டுக்குச் செல்லாமலே செய்திகளை தரகு மூலம் அறிந்து கொண்டார்.

விளைச்சல் முன்பு இருந்ததை விட நன்றாக இருக்கிறதாக கேள்விப்பட்டு சந்தோசம் அடைந் தார் முதலாளி.

ஏழைகளுக்கு உதவுவதில் அவருக்கு நிகர் அவ ரேதான். கன்னாபின்னா என்று பேசி ஏமாற்றுவது மட்டும் பிடிக்காது. அப்பட்டிப்பட்டவர்களை கண் ணிலும் காட்டக்கூடாது. அவ்வளவுக்கு நேர்மையா னவர்.

வயலில் கிடைக்கும் ஆதாயத்தைக் கொண்டு வீடு கட்டினாலும் அது கொத்தும் குறையுமாகக் கிடந்தது. வீட்டை எப்படியாவது முடித்துவிட வேண்டுமென்று நினைத்தவருக்கு விளைச்சலும் அதிகமாகக் கிடைத்ததால் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினான்.

முதலாளிக்கென்று வேறாக எடுத்து வைக்கப் பட்டிருந்த நெல்லை தன் மகனிடமே கொடுத்து முதலாளியின் வீட்டில் கொடுத்து வரச் சொன்ன போது தயக்கம் காட்டாமல் மகன் எடுத்துச் சென் றான். அப்போதுதான் முதலாளிக்குத் தெரியவந் தது ஆதமுக்கு வாட்டசாட்டமான படித்த மகன் இருப்பது.

கொடுக்கப்பட்ட நெல்மூடையை திருப்பி யனுப்பி விட்டார் முதலாளி.

ஆதமோ, பதறிப்பலவிதமாகவும் சிந்தித்தான். நீண்டகால உறவை வளர்ந்துக் கொண்டும் ஏன் இப்படிச் செய்தார் என்று பல கோணங்களிலும் சிந்தித்தும் விடைகிடைக்கவில்லை.

மறுநாள் முதலாளியின் வீட்டை நோக்கிச் சென் றார். வீட்டில் முதலாளியும் அவருடைய மனைவி யும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இவரைக் கண்டவுடன், ஆதம், வா நல்ல நேரத்தில்தான் வந்திருக்காய். நல்ல விளைச்சல் என்று கேள்விப்பட்டேன். கடன்களையெல்லாம் அடைச்சுப்பேடலாமா எல்லோரும் வீட்டுக்கு படையெடுப்பார்களே என்று கேட்டார் முதலாளி.

முதலாளி, இனிமேல் விளைச்சலில் ஈடுபடுவ தில்லை என்று முடிவு கட்டிப்போட்டன். என்று சொன்னவுடன் அவரின் முகம் எதையோ நினைத் தது. ஆதம் நீ திடீரென்று ஏன் இந்த முடிவுக்கு வந்தாய்?

வயது வந்த பிள்ளைகள், மகனின் படிப்பு இதையெல்லாம் நெனைச்ச இருக்கிற காணியை வித்தாலும் போதாது போல் இருக்கு.

அது சரி உனக்கு ஒருமகன் இருக்கிறத சொல்லா மல்தானே இருந்து விட்டாய்.

படிக்க வேணாம் என்று சொன்னாலும் படிக்கத் தான் வேணும் என்று ஒத்தக்காலில் நின்றான். அவ னுக்கு சார்பாக மனைவியும் சேர்ந்து படிக்கத்தான் வேணும் என்று சொன்னார். என்னலோ எதுவும் செய்ய ஏலாமல் போய்விட்டது. எல்லாமே விதி யின் செயல்.

ஆதமுடைய பேச்சைக் கேட்டதும் முதலா ளியின் மனம் வேதனைப்பட்டது. தன்னுடைய மகன் தேவை இல்லாத நண்பர்களோடு சேர்ந்து காலத்தை வீணாக்கி விட்டானே என்று கண்கலங் கினார்.

முதலாளி கண்கலங்க வேணாம். ஒவ்வொ ருவருடைய தலையில் என்ன எழுதி இருக்கோ அதுதான் நடக்கும். நம்மட கையில எதுவுமே இல்லையே.

ஆதம் கூறிய வார்த்தை ஆறுதல் அளித்தது. வருந்துவதால் பயன்எதுவும் இல்லை என்பதை நன்கு புரிந்து கொண்டவர் மேற்கொண்டு எதை யுமே பேசாமல் வந்த விடயத்தை விபரமாகக் கேட் டார்.

முதலாளி என்னுடைய கஷ்டநஷ்டங்களைச் சொல்லிப்போட்டன். அதனாலதான் காணியை விக்கிற முடிவுக்கு வந்திட்டன். எடுத்திட்டு நியாயமா பணம் தாருங்க. அவசரப்பட்டு தேவை யில்லாத முடிவுக்கு வராதே. கஷ்டம் உனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும்தான்.

வயசுக்கு வந்த மகளை வெச்சு என்ன செய்ய லாம். காலா காலத்தில ஒருத்தருடைய கையில் பிடிச்சுக் கொடுத்தால்தான் நிம்மதி. இந்தக் காணியை இன்னும் இன்னும் வெச்சி வேடிக்கை பார்க்க ஏலாது. ஒருகாலத்தில ஓடிஓஐ உழைச்சி சேர்ந்த பணத்தில வாங்கின காணிதான். எப்படி யாவது குமர் காரியம் முடிய வேணும். அதுதான் இப்ப இருக்கிற முக்கிய வேலை. காணியை நீ ங்களே எடுத்துக்கிட்டு பெறுமதியைத் தாருங்க. வேற ஆக்களுக்கு கொடுக்க மனம் இடம்கொடுக் குது இல்ல. நீங்கதான் சரியாகச் செய்வீங்க.

தன்னுடைய காணியை வாங்க மறுப்பதற்கான காரணத்தை அறியமுற்பட்டு வினயமாக விளக்கம் கேட்டான் ஆதம். எந்த உறவுமுறைகளும் இரு வருக்கிடையில் இல்லை. காசுபணம் கொடுத்து உதவுவதைத்தவிர முஸ்தபா முதலாளி வேறு எதையுமே செய்யவில்லை என்பது ஆதமுக்குத் தெரியும்.

மறைமுகமாக பேசுவதை விட்டு நேரில் பேசி த் தீர்த்துக் கொள்ளவே ஆதமை அழைத்திருந்தார். அதற்கு மறுப்புத் தெரிவிக்காமல் அவனும் வந்தி ருந்தான் முதலாளியின் வீட்டிற்கு.

ஆதம் உன்னுடைய மகனை என்னுடைய மகளுக்கு மாப்பிள்ளையாகத் தர வேண்டித்தான் அழைத்தேன்.

முதலாளி கல்யாண விடயம் மகனிடமும் ஒரு வார்த்தை கேட்கவேணும் தானே. அவர் விரும்பி னால் எனக்கும் விருப்பம்தான்.

உன்னுடைய சகல வேலைகளையும் நான் முடித்துத் தருகிறேன். இதைவிட வேறு என்ன செய்ய வேணும் சொல்லிப்போடு.

ஆதம் மகனிடம் எல்லாவற்றையும் எடுத்து விளக்கினார். அப்போது தகப்பனிடம் மகன் சில கேள்விகளைக் கேட்டான்.

மகன் சொன்ன விடயத்தை நன்றாகப் புரிந்து கொண்ட ஆதம், முதலாளியிடம் அன்பாகப் பேசினான். முதலாளி, மகனுடைய சம்மதத்தைக் கேட்ட மாதிரி உங்க மகளுடைய விருப்பத்தையும் கேட்டுப் பாருங்களேன் என்று சொன்னதும் முதலா ளிக்கு பட்டென்று கோபம் வந்து, என் மகள் வேறு யாரையாவது விரும்பி இருக்கிறாள் என்று சொல்கி றாயா என்று கேட்டார்.

மகளுக்கு எப்படியாவது படிச்ச ஒருவரைப் பார்த்து திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஆசைப்பட்டிருந்தார். பணம் இருந்தும் நல்ல வேலையைச் செய்து விட் டால்தான் நிம்மதியாய் இருக்கும் என்று அவர் பாடுபட்டார். ஆதம் சொன்ன வார்த்தை சிந்திக்க வைத்தது.

மகளை மிகவும் அன்போடு அழைத்தார். நேரடி யாக கேட்டுவிட்டால் எல்லா விடயங்களும் தெரிந் துவிடும் என்று பேச்சை ஆரம்பித்தார்.

மகள் உனக்கு திருமணம் செய்துபார்க்க எண்ணி மாப்பிள்ளையை விசாரித்தேன். இருந்தும் உன்னிடத்திலும் கேட்டுப்பார்க்க வேண்டிய கட் டாயம் இருக்கிறது.

மகள் சொன்ன வார்த்தையில் கொஞ்ச நேரம் நிலைகுலைந்து போனார். தான் எண்ணியதெல் லாம் சுக்குநூறாகிப் போய்விட்டதே என்று வருந் தினார்.

முதலாளி தன்னுடைய நிலையை மாற்றிக் கொண்டு இனிமேல் யாரிடத்தில் இருந்தும் காணி வாங்குவதில்லை என்ற முடிவுக்கு வந்தார். ஆதமின் காணியை வேறு யாருக்காவது விற்றுக் கொடுக்க இணக்கம் தெரிவித்தார்.

முதலாளியின் மகளின் திருமணத்தைத் தானும் முன்னின்று நடாத்தி முடித்துக் கொடுக்க முன்வந்த செயலுக்கு அன்புகாட்டி நடந்ததையெல்லாம் மறந்து நிறைவேறாத ஆசையை கைவிட்டு நின் றார்.

கலாபூஷணம் மருதமுனை ஏ.எம்.எம்.பாறூக்

மிரட்டும் லட்சுமி பாம்

நமக்குள் இருக்கும் பெண் தெய்வத்தை வணங்கி நமது அளவில்லா வலிமையைக் கொண்டாடுவது தான் நவராத்திரி. நாடு முழுவதும் நவராத்திரி பண்டிகை கொண்டாடப்படும் இந்த நேரத்தில் லட்சுமி பாம் படத்தில் தனது லுக்கை அக்ஷய் குமார் வெளியிட்டுள்ளார். பலரும் இந்த முயற்சிக்காக அக்ஷய் குமாருக்கு பாராட்டி வருகின்றனர். இந்த பர்ஸ்ட் லுக் போஸ்டர் தற்போது வைரலாகி வருகிறது. ராகவா லாரன்ஸ் இயக்கி, நடித்த படம் 'காஞ்சனா' வசூல் ரீதியாக பெரும் வரவேற்பைப் பெற்றது. இப்படம் கன்னடம், சிங்களம் மற்றும் வங்காள மொழியிலும் ரீமேக் செய்யப்பட்டது. தற்போது 8 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியில் ரீமேக் செய்யப்பட்டு வருகிறது.

'லட்சுமி பாம்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தில் அக்ஷய் குமார், கியாரா அத்வானி உள்ளிட்ட பலர் நடித்து வருகிறார்கள். ராகவா லாரன்ஸ் இயக்கி வருகிறார். முதலில் ஏற்பட்ட பிரச்சினையில் இந்தப் படத்தின் இயக்குநர் பொறுப்பிலிருந்து விலகியவர், தற்போது மீண்டும் சமரசமாகி இயக்கி வருகிறார். காஞ்சனா ஒரிஜினல் தமிழ் படத்தில் ஒரு அப்பாவி மனிதன் எல்லாவற்றிற்கும் பயப்படும் ஒரு கதாபாத்திரமாக சித்தரிக்கப்பட்டிருந்தார். அந்த அப்பாவி மனிதனை வைத்து பேய்கள் தங்களை கொன்றவர்களை எப்படி வேட்டையாடி கொலையாளிகளிடம் இருந்து நியாயம் கிடைக்க பழி வாங்குகிறது என்பது தான் கதை. அதில் ஒரே மனிதனுக்குள் மூன்று பேய்கள் இருந்தது போல் காட்சியமைக்கப்பட்டன.

ஆனால் இந்தி ரீமேக் படத்தில் கதாநாயகன் பேய்களுக்கு எளிதில் பயப்படாத அச்சமற்ற ஒரு கதாபாத்திரமாக சித்தரிக்கப்பட்டுள்ளார். மேலும் மூன்று பேய்கள் அல்லாமல் ஒரே பேய் என கதைக்களத்தில் சிறிது மாற்றம் செய்துள்ளனர். இந்த ரீமேக் படம் லட்சுமி பாம் என்று பெயரிடப்பட்டுள்ளது. அக்ஷய் குமார் இப்படத்தில் லட்சுமி என்ற பெயரில் ஒரு திருநங்கையாக நடித்துள்ளார். அக்ஷய் குமாருடன் குட் நியூஸ் திரைப்படத்தில் இணைந்து நடித்த கியாரா அத்வானி தான் இப்படத்திலும் ஜோடி சேர்கிறார். 'காஞ்சனா' தமிழ் படத்தில் திருநங்கையாக நடித்திருந்தார் சரத்குமார். இந்தக் கதாபாத்திரத்தில் இந்தியில் யார் நடிக்கவுள்ளார் என்பது முடிவாகவில்லை. இதில் அமிதாப் பச்சன் நடிக்கவுள்ளார் என்று தகவல் வெளியானாலும், படக்குழு இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

கிறங்கடிக்கும் அக்ஷரா கவுடா

நடிகை அக்ஷரா கவுடாவின் கிளாமர் போட்டோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. ஹிந்தி, தமிழ், தெலுங்கு, கன்னட என அனைத்து மொழிகளிலும் பல முன்னணி ஹீரோக்களுடன் நடித்துள்ள ஒரு பிரபலமான மாடல் அழகி அக்ஷரா கவுடா. திரைப்படங்கள் மட்டுமின்றி பல முன்னனி பிராண்டுகளின் விளம்பரங்களிலும் நாம் இவரை பார்த்திருக்க கூடும். எஸ். பிரேம்நாத் இயக்கத்தில் 2011ல் வெளியான உயர்த்திரு 420 திரைப்படம் மூலம் திரையுலகிற்குள் அறிமுகமானவர்.

அப்படத்தில் பிக் பாஸ் புகழ் கவிஞர் சினேகன் ஒரு முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். அதனை தொடர்ந்து சீட்காபிரே - தி ஷேட்ஸ் ஆஃப் க்ரே எனும் திரைப்படம் மூலம் பாலிவுட்டில் கால் பதித்தவர். இளைய தளபதி விஜய் நடித்த துப்பாக்கி, அஜித் நடித்த அரம்பம், போகன், இரும்புக்குதிரை, மாயவன் என் பல திரைப்படங்களில் நடித்துள்ளார். தற்போது திரிவிகர்மா எனும் கன்னட திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

யோகிபாவுவின் காவி ஆவி நடுவுல தேவி



நவராத்திரியில் சிவாஜி ஒன்பது வேடத்தில் நடித்தார், தசாவதாரத்தில் கமல் 10 வேடங்களில் நடித்தார். காவி ஆவி நடுவில தேவி படத்தில யோகிபாவு 11 வேடங்களில் நடிக்கிறார். முழுக்க முழுக்க யோகிபாபுவின் காமெடியை நம்பியே உருவாகி வருகிறது இந்த படம். காவி ஆவி நடுவுல தேவி திரைப் படத்தில், காதலர்களை சேர்த்து வைக்க பாடுபடும் குழலூதும் கண்ணனாக யோகிபாபு நடித்துள்ளாராம். தமிழ் சினிமாவில் தற்போது உச்சபட்ச நட்சத்திரமாக கருதப்படும் யோகி பாபு ஒரு வருடத்தில் குறைந்த பட்சம் 10க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து வருகிறார். கமர்சியல் கதையாக இருந்தாலும் சரி, சிறந்த சப்போர்ட்டிங் ரோலாக இருந்தாலும் சரி சிறப்பாக நடித்து வருகிறார். பரியேறும் பெருமாள் படத்திலும் கோமாளி படத்திலும் மிகச்சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியிருந்தார். தற்போது அவர் காவி ஆவி நடுவுல தேவி என்ற முழுக்க முழுக்க நகைச்சுவையாக உருவாகும் படத்தில் நடிக்க உள்ளார். இந்த படத்தில் யோகிபாபுவுக்கு 11 வேடங்கள் என படக்குழு தெரிவித்து உள்ளது.

கடந்த 1973ஆம் ஆண்டு கறுப்பு வெள்ளையில் உருவாகி காமெடியில் கலக்கி வெற்றி பெற்ற திரைப்படம் காசியாத் திரை. அந்த படத்தில் நடித்த அனைவருமே நம்பர் ஒன் காமெடி நடிகர்கள். வி.கே. ராமசாமி, சோ, தேங்காய் சீனிவாசன், சுருளிராஜன், மனோரமா, டைப்பிஸ்ட் கோபு என நகைச்சுவை பட்டாளமே சேர்ந்து காமெடியில் திணறடித்த படம்.

தற்போது அந்த படத்தின் இரண்டாம் பாகமாக காவி ஆவி நடுவுல தேவி படத்தை தயாரிக்கின்றனர். இப்படத்திற்கு கதை எழுதியிருப்பவர் வி.சி.குகநாதன். இவர்தான் காசியாத்திரை படத்திற்கும் கதாசிரியர். இதனால் இந்தப் படமும் ஆரம்பம் முதல் இறுதி வரையில் காமெடியாகவே இருக்கும் என்பது கேரண்டி.

இப்படத்தில் யோகி பாபு காதலர்களை சேர்த்து வைக்கும் கண்ணனாகவும், காதலர்களை பிரித்து வைக்கும் தாதாவாக மொட்டை ராஜேந்திரனும் நடித்துள்ளனர். இந்த படத்தை புகழ்மணி இயக்க உள்ளார். இப்படத்தில் பல புதுமுகங்களுடன் சேர்த்து தம்பி ராமையா, மொட்டை ராஜேந்திரன், இமான் அண்ணாச்சி போன்றோரும் நடிக்க உள்ளனர்.

தளபதி 64 இணைந்தார் மாளவிகா மோகனன்

நடிகர் விஜய் நடக்கும் தளபதி 64 படத்தில் புதிய வரவாக மாளவிகா மோகனன் இணைந்துள்ளார். இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகி உள்ளது. பிகில் படத்தின் பரபரப்பை கொஞ்சம் கொஞ்சமாக தளபதி 64 விழுங்கி கொண்டு இருக்கிறது என்றுதான் கூற வேண்டும். ஆம், பிகில் படம் குறித்த எதிர்பார்ப்பை விட, தளபதி 64 படத்திற்குத்தான் எதிர்பார்ப்பு அதிகமாகி வருகிறது. தளபதி 64 படம் இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில், விஜய் நடிப்பில் வெளியாக உள்ளது. அடுத்த வருடம் மே மாதம் இந்த படம் வெளியாகும். சென்னையில் நடக்கும் கதை இது என்று குறிப்பிடுகிறார்கள்.

கடந்த வாரம் இந்த படத்தின் வில்லனாக விஜய் சேதுபதி அறிவிக்கப்பட்டார். இதற்கான அறிவிப்பை தொடர்ந்து தினமும் இந்த படத்தில் நடிக்கும் கதாபாத்திரங்கள் குறித்த விவரம் வெளியாகும் என்று கூறப்பட்டது. அதன்படி விஜய் சேதுபதி இந்த படத்தின் வில்லன் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்பின் மலையாள நடிகர் ஆண்டனி வர்கீஸ் இந்த படத்தில் இன்னொரு வில்லனாக வருவார் என்றும் அறிவிப்பு வெளியானது. இதையடுத்து இந்த படத்தில் நடிகர் சாந்தனு இணைந்துள்ளார் என்றும் அறிவிப்பு வெளியானது. இதனால் ரசிகர்கள் இந்த படத்தை எதிர்பார்க்க தொடங்கி உள்ளனர்.

இதேபோல் தற்போது தளபதி 64 படத்தில் புதிய வரவாக மாளவிகா மோகனன் இணைந்துள்ளார். இதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பு தற்போது வெளியாகி உள்ளது. பல நாட்களாக கிசுகிசுக்கப்பட்ட இந்த விஷயம் அதிகாரபூர்வமாக வெளியாகி உள்ளது.

கேரளாவை சேர்ந்த மாளவிகா மோகனன் மலையாளத்தில் நிறைய படங்களில் நடித்துள்ளார். இவர் நடித்த பட்டம் போலே படம் அங்கு பெரிய ஹிட் அடித்தது. பேட்ட படத்தில் சசிகுமார் மனைவியாக இவர் நடித்தார். அந்த படத்தில் இவரின் பாத்திரம் பேசப்பட்டது.

இவரின் இன்ஸ்டா புகைப்படங்கள் பெரிய அளவில் வைரலாகி வந்தது. இவர் நிறைய கவர்ச்சியான புகைப் படங்களை சமீப நாட்களாக வெளியிட்டு வந்தார். இதனால் தமிழில் திடீர் என்று இவர் பெரிய அளவில் வைரலானார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த படத்தில் விஜய்க்கு ஜோடியாக இவர் நடிக்கிறார். படத்தில் இவரின் ரோல் வெறும் ஹீரோயினாக மட்டும் இல்லாமல் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்துமாம். அதனால் உடனே படத்தில் நடிக்க இவர் ஒப்புக்கொண்டார் என்று கூறுகிறார்கள்.

கமலுடன் இணையும் அனில் கபூர்

கமல்ஹாசன் நடிக்க ஷங்கர் இயக்கத்தில் உருவாகிறது 'இந்தியன் 2'. இதன் படப் பிடிப்பு சமீபத்தில் தொடங்கி சென்னை, ராஜமுந்திரி பகுதிகளில் நடைபெற்று வருகிறது. இதில் ஏற்கனவே காஜல்அகர்வால், ரகுல் பிரீத்சிங், பிரியா பவானிசங்கர், சித்தார்த், பாபி சிம்ஹா, விவேக், வித்யூத் ஜம்வால், சமுத்திரகனி, டெல்லி கணேஷ் என பிரபலங்கள் இணைந்திருக்கின்றனர்.

இந்நிலையில் தற்போது மேலும் ஒரு பாலிவுட் பிரபலமான அனில்கபூர் இணைந்துள்ளதாக தகவல் வெளி வந்துள்ளது. அனில்கபூர் ஏற்கனவே 'முதல்வன்' படத்தின் இந்தி ரீமேக்கான 'நாயக்' படத்தில் நடித்துள்ளார்.

இந்தியன் 2 படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். அதிக பொருட் செலவில் தயாராகி வரும் இப்படத்தை 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர். 2021ம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தல் நடக்கவிருப்பதால் அதையொட்டி இப்படியொரு படம் வருவதை கமலும் ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கிறாராம்.

கல்யாணி

காதல் யாருக்கும் எப்போது வேண்டுமானாலும் வரலாம். சினிமா நட்சத்திரங்களுக்கும் அப்படித்தான். படத்தில் நடிக்கும்போது அல்லது இணைந்து பணியாற்றும்போது காதல் முற்றி கடைத்தெருவுக்கு வந்து பின்னர் கல்யாணத்தில் முடிந்திருக்கிறது. சில காதல் பிய்த்துக்கொண்டு ஓட்ட மெடுத்தும் இருக்கிறது. நடிகை லிசி,

கோடிகளை குவிக்கும் எங்க வீட்டு பிள்ளை

நடிகர் சிவகார்த்திகேயன் நடித்துள்ள நம்ம வீட்டு பிள்ளை படத்தின் பாக்ஸ் ஆபிஸ் விவரங்கள் தற்போது வெளியாகி உள்ளது. நடிகர் சிவகார்த்திகேயன் நடித்துள்ள நம்ம வீட்டு பிள்ளை படம் கடந்த வாரம் வெளியானது. இந்த படத்தை இயக்குனர் பாண்டியராஜ் இயக்கி உள்ளார். இந்த படத்தில் அனு இம்மானுவேல், ஐஸ்வர்யா ராஜேஷ், சமுத்திரகனி, யோகி பாபு, சூரி ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு டி இமான் இசை அமைத்துள்ளார். சன் பிக்சர்ஸ் சார்பாக கலாநிதி மாறன் படத்தை தயாரித்துள்ளார்.

படத்திற்கு கடந்த வாரத்தில் இருந்து மிகவும் நன்றாக விமர்சனம் வெளியாகி வருகிறது. இந்த படத்தின் வசூல் குறித்த விவரம் தற்போது வெளியாகி உள்ளது. அதன்படி இந்த படம் வசூல் ரீதியாக 40 கோடி ரூபாய் பெற்றுள்ளது. அதேபோல் வியாபார ரீதியாக சாட்டிலைட் உரிமை 10 கோடி ரூபாய், இந்தி உரிமை 2 கோடி ரூபாய், தியேட்டர் விற்பனை 30 கோடி ரூபாய் செய்துள்ளது.

இதில் தியேட்டர் வருமானத்தில் ஷேராக 20 கோடி ரூபாய் சென்றுவிடும். அதேபோல் மற்ற ஷேர்களுக்கு விளம்பரம் உட்பட 10 கோடி ரூபாய் சென்றுவிடும். ஆகவே 30 கோடி ரூபாய் செலவாக சென்றுவிடும். ஆகவே மொத்த வசூல் 52 கோடி ரூபாய் ஆகும்.

இதில் பட்ஜெட் என்று பார்த்தால் 30 கோடி ரூபாய். ஆகவே இந்த படம் இப்போது வரை 22 கோடி ரூபாய் வரை லாபம் பார்த்து இருக்கிறது. இது நேரடியாக தயாரிப்பு நிறுவனத்திற்கு கிடைக்கும் லாபம் ஆகும். அதாவது தியேட்டர் உரிமையாளர்கள், டிஸ்டிரிபியூட்டர்கள் போக நேரடியாக சன் பிக்சர்ஸ் நிறுவனத்திற்கு இவ்வளவு லாபம் கிடைத்துள்ளது.

இந்த படத்தின் தொடக்கம் சரியாக அமைய வில்லை. இல்லையென்றால் இன்னும் அதிகமாக வசூல் பெற்று இருக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்பட்டது. படத்திற்கு தாமதமாகத்தான் நல்ல ரிவ்யூ வந்தது. அதனால் லேட்டாக படம் வசூல் செய்ய துவங்கியது.

அதே சமயம் இந்த படத்தின் வசூல் வரும் நாட்களில் குறையும் என்கிறார்கள். ஜோக்கர் படத்தால் தற்போது படத்தின் வசூல் கொஞ்சம் அடி வாங்கி உள்ளது. அதன்பின் அசுரன் மற்றும் ஜல்லிக்கட்டு வெளியாவதால், நம்ம வீட்டு பிள்ளை வசூல் மேலும் குறையும் என்கிறார்கள்.

ஹீரோயின்களுக்கே அதிக கஷ்டம்

சினிமாவில் ஹீரோக்களைவிட ஹீரோயின்களுக்கு அதிக கஷ்டம் இருக்கிறது என்றார் சமந்தா. அவர் கூறியதாவது: சினிமாவில் நடிப்பு, தொழில் நுட்பம், தயாரிப்பு எதிலும் பெண்கள் சளைத்த வர் கள் இல்லை. இத்துறையில் ஹீரோக்களை விட ஹீரோயின்கள்தான் அதிக கஷ்டப்படுகிறார் கள். பெண் இயக்குனர், ஆண் இயக்குனர் என்ற வித்தியாசம் போக வேண்டும்.

நான் நடித்த 'ஓ பேபி' தெலுங்கு படத்துக்கு இயக்குனரோடு சேர்ந்து 8 பெண்கள் வேலை செய்தோம். ஆண்களுக்கு இணையாக உழைத்தனர். ஒரு நாள் கூட படப்பிடிப்பில் தாமதம் ஏற்பட வில்லை.எனக்கு திருமணம் ஆன பிறகு என்னை சந்திக்கும் பலரும் எப்போது குழந்தை பெற்றுக் கொள்வீர்கள் என்கிறார்கள். எப்போது குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யும் உரிமை எனக்கு இருக்கிறது. எப்போது தோன்றுகிறதோ அப்போது பெற்றுக்கொள்வேன். இவ்வாறு சமந்தா கூறினார்.

கபடி பயிற்சி பெறும் தமன்னா

தமிழில் விஷால் ஜோடியாக ஆக்ஷன் படத்திலும், பெட்ரோமாக்ஸ் என்ற படத் திலும், தெலுங்கில் தட் ஈஸ் மகாலட்சுமி படத்திலும் நடித்து வரும் தமன்னா, தெலுங்கில் புதிய படத்தில் ஒப்பந்தமாகி யுள்ளார். சம்பத் நந்தி இயக்கும் இப்படம், கபடி விளையாட்டை மையமாக வைத்து உருவாகிறது. கபடி பயிற்சியாளர் வேடத் தில் தமன்னா நடிக்கிறார். இதற்காக அவர் கபடி விளையாடி பயிற்சி பெறுகிறார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், கபடி விளையாட்டை மையப்படுத்திய கதை இது. எல்லா மொழிகளிலும் ஏராளமான படங்களில் நான் நடித்திருந்தாலும், இதில் ஏற்றுள்ள பயிற்சியாளர் வேடம் மிகவும் வித்தியாசமானது. இதை நான் சிறந்த முறையில் நடிப்பதற்காக தற்போது கடின மான பயிற்சிகளை மேற்கொண்டுள்ளேன் என்றார்.

சம்யுக்தாவின் நெருக்கம்

மொரட்டு சிங்கிள் இயக்கத்தில் வருண், சம்யுக்தா ஹெக்டே, யோகி பாபு ஆகியோருடன் பப்பி என்கிற பிங்கி நாய் நடித்துள்ள படம், பப்பி. தீபக்குமார் பாடி ஒளிப்பதிவு செய்ய, தரண் குமார் இசை அமைத் துள்ளார். படம் குறித்து வருண் கூறியதாவது: இதற்குமுன் சில படங்க ளில் முக்கியமான கேரக்டர்களில் நடித்திருந்தேன். இப்போது நான் தனி ஹீரோவாக நடித்துள்ள படம் இது.

டிரைலரை பார்க்கும்போது, இது அடல்ட் காமெடி படமாக இருக் குமோ என்று சந்தேகம் வரும். ஆனால், படத்தின் கதை வேறொரு கோணத்தில் கையாளப்பட்டுள்ளது. நானும், சம்யுக்தாவும் நெருக்க மான காதல் காட்சிகளில் நடிக்கும்போது, அவர் செம கூலாக இருந்தார். நான்தான் தடுமாறினேன். காரணம், இந்த படத்தில் நடிப்பதற்கு முன் நானும், அவரும் நன்கு பழக ஆரம்பித்தோம்.

ஷூட்டிங் ஸ்பாட்டில் டைரக்டர், திடீரென்று சம்யுக்தாவுடன் நெருக் கமாக நடிக்க வேண்டும் என்று சொன்னபோது, நல்ல தோழி ஒருவ ருடன் எப்படி இவ்வளவு நெருக்கமாக நடிப்பது என்று தயங்கினேன். பிறகு என் தயக்கத்தை சம்யுக்தா போக்கினார். இது சினிமா. நாம் சேர்ந்து நடிக்கிறோம். அவ்வளவுதான் என்று அவர் சொன்ன பிறகுதான் தைரியம் வந்தது. டைரக்டர் எதிர்பார்த்தபடி நடித்தேன்.

சனம் ஷெட்டிக்கு சத்திரசிகிச்சை

அம்புலி, சவாரி படங்க ளில் நடித்தவர் சனம் ஷெட்டி. இப்போது ஹன்சிகாவுடன் மகா, சிபிராஜுடன் வால்டர் படங்க ளில் நடித்து வருகிறார். கையில் ஏற்பட்ட கட்டி ஒன்றால் அவர் அவதிப்பட்டு வந்தார். இந்நிலை யில் சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் அவர் சேர்க்கப்பட்டார்.

அங்கு ஆபரேஷன் மூலம் கட்டி அகற்றப்பட்டது. இது பற்றி சமூக வலைத்தளத்தில் சனம் ஷெட்டி கூறும்போது, குடும்பத் தார், நண்பர்களின் அன்பால் மீண் டும் பழைய நிலைக்கு திரும்பி வருகிறேன். ஆதரவ ளித்த ரசிகர்களுக்கும் நன்றி என குறிப்பிட்டுள்ளார்.

நடிகையின் புகார்

நடிகைகளுக்கு பாலியல் தொல்லை என்பது திரையு லகில் பல்வேறு சமயங்களில் நடக்கிற து. அதுபற்றி நடிகை தனுஸ்ரீ தத்தா உள்ளிட்ட பல நடிகைகள் பகிரங்கமாக பேட்டி அளித்ததுடன் போலீசில் புகாரும் அளித்தனர். தற் போது மற்றொரு நடிகை, 2 இயக்கு னர்கள் மீது பாலியல் தொல்லை புகார் கூறியிருக்கிறார். போஸ்டர் பாய்ஸ், நாம் சபானா, பாஸார் உள்ளிட்ட படங் களில் நடித்துள்ளார்.

மேலும் பல இந்தி படங்களில் நடித்திருப்பதுடன் தமிழில், பாரிஸ் பாரிஸ் படத்தில் நடித்திருப்பவர் எல்லி அவ்ராம். சுவீடன் நாட்டை சேர்ந்த இவர் மும்பையில் தங்கி படங்களில் நடித்து வருகிறார். அவர் தனக்கு நடந்த பாலியல் தொல்லைபற்றி கூறியதாவது: எனது திரையுலக ஆரம்ப நாட்களில் படத்தில் நடிக்க வாய்ப்பு கேட்டு 2 இயக்குனர்களை நான் நேரில் சந்தித் தேன்.

அவர்கள் என்னுடைய கையை பிடித்து குலுக்கிக்கொண்டே ஒற்றை விரலால் என் உள்ளங்கையில் கீறிக் கொண்டே எதையோ உணர்த்தினார்கள். எனக்கு புரியவில்லை. எனது நண்ப ரிடம் இயக்குனர்களின் சைகை பற்றி கூறினேன். அவர் அதிர்ச்சி அடைந்து, அந்த இயக்குனர் அப்படியா செய்தார்? அப்படிசெய்ததற்கு என்ன அர்த்தம் என்று உனக்கு தெரியுமா? என்றார்.

எனக்குதெரியவில்லை என்றதும் அவர்கள் இருவரும் உன்னை படுக் கைக்கு அழைத்திருக்கிறார்கள். அதற் காகத் தான் உள்ளங்கையில் விரலால் சீண்டி சிக்னல் கொடுத்திருக்கிறார்கள் என்றார். அதைக் கேட்டு நான் அதிர்ச்சி அடைந்தேன். இவ்வாறு அவர் கூறி னார். பாலியல் தொல்லை கொடுத்த இயக்குனர்களின் பெயர்களை கூற நடிகை எல்லி அவ்ராம் மறுத்துவிட் டார்.

ஜோக்கர் – திரைவிமர்சனம்

ஜோக்கர் என்ற ஹாலிவுட் திரைப்படம் வெளியாகியுள்ளது. இதில் ஜோகுயின் பீனிக்ஸ் ஜோக்கராக நடித்துள்ளார். இந்த படத்தில் அவருக்கு ஆர்தர் என்று பெயர் இட்டுள்ளனர். படத்தில் இவர் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர். ஜோக்கர் படத்தின் ட்ரைலர் வெளியான போதே உலகம் முழுவதும் பெரும் வரவேற்பு கிடைத்தது. பேட்மேன் படத்தில் வரும் புகழ்பெற்ற கதாப்பாத்திரமான ஜோக்கரை அடிப்படையாக உருவாகியுள்ள இந்த திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. சாதாரண ஒரு சைன் போர்டு வச்சிக்கிட்டு ஒரு தொழிலை பிரபலப்படுத்தும் நபராக வருபவர். அவரை இந்த சமூகம் அடிக்கிறது, ஒதுக்குகிறது. ஒரு திக்பிரமை பிடித்த நபராக சட்ட திட்டங்களுக் குள் சிக்கி தவிக்கும் இவர், எப்படி செயல்படுகிறார் என்பதை பார்க்கும் போது தத்ரூபமாக இருக்கும். நம் அனைவரையும் நெகிழவைக்கும். சீட் நுனியில் அமர்த்திவிடும்.

ஒரு பக்கம் பயமாக இருந்தாலும் காண்போரை கவர்ந்து விடும் காட்சிகளாகவே அமைந்துள்ளது. இதை பார்க்கும் இளைஞர்களை அந்த கதாபாத் திரம் மாற்றிவிடுமோ என்ற அச்சம் தென்படுகிறது. அமெரிக்காவில் இந்த படத்தை பார்க்கச் செல்லும் சிலர் படத்தில் அந்த கதாபாத்திரம் பயன்படுத்தும் உடைகளை அணிந்து செல்கிறார்களாம். இந்த திரைப்படத்தில் நடித்துள்ள ஒவ்வொரு நட்சத்திரங் களும் நடித்த விதம் மெய் சிலிர்க்க வைக்கிறது.

படத்தில் வரும் இசை பிரமாதம். காட்சித்தி றன் செம துரள். ஜோக்கராக அவர் பேசும் டயலாக் அனைத்தும் பார்வையாளர்களின் கண்ணீரை வரவ ழைக்கும் என்பது நிச்சயம். ஒரு காட்சியில் அவர், நான் ரோட்டில் ஓரமாக இறந்திருப்பதை பார்த்தால் நீங்கள் அழுவீர்களா, என்று கேட்கும் விதம் நம்மை சிந்திக்க வைக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

இந்த சமூகத்தில் ஏற்ற தாழ்வு மனப்பான்மை எப்படி ஊடுருவி கிடக்கின்றன என்பதை புரிந்து கொள்ளலாம். பார்க்க பார்க்க இது தான் நடக்க போகிறது என்று யூகிப்போம். ஆனால் திடீர் திருப் பம் ஏற்படுவதை பார்க்கலாம். ப்பா எப்படி எடுத்தி ருக்காங்கடான்னு தோணும். இந்த படத்திற்காக 20 கிலோவிற்கு மேல் எடை குறைந்து அந்த ஜோக்கரா கவே வாழ்ந்திருக்கிறார்.

இந்த படம் கடந்த மாதம் வெனிஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட போதே பார்வையாளர் களின் மனதை நெகிழ வைத்தது. திரைப்பட விழா வில் படம் முடிந்தும் படக்குழுவினரை பாராட்டி பார்வையாளர்கள் எழுந்து நின்று சுமார் 10 நிமிடங் கள் வரை தொடர்ந்து கைதட்டி உற்சாகப்படுத்திய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. மறைந்த ஹாலிவுட் நடிகர் ஹீத் லெட்ஜரை விட ஜோக்கர் கதாப்பாத்திரத்தில் பீனிக்ஸ் மிரட்டியுள்ளதாக பல ரும் பாராட்டுக்களை தெரிவித்தனர்.

அப்போதே இது ஆஸ்கர் விருது பரிந்துரை பட்டியலில் இடம் பெறும் என்று பலரும் ஆருடம் சொன்னார்கள். அதே போல சிறந்த படம், சிறந்த நடிகர் என பல பகுதிகளில் ஆஸ்கார் விருது பரிந் துரை பட்டியலில் இடம் பிடித்துள்ளது. அனைத்து அபிநயங்களையும் கலவையாக செய்திருக்கும் திரைப்படம் என்று சொல்லலாம். தியேட்டரில் பார்ப்பது தான் நாம் இந்த ஜோக்கருக்கு செய்யும் மரியாதை என்று சொல்லலாம். அனைவரையும் ரசி க்க வைத்த ஜோக்கருக்கு ஆஸ்கர் விருது கிடைக் குமா? பார்க்கலாம்.

மீண்டும் வந்து விட்டேன்

சரண் இயக்கியுள்ள படம், மார்க்கெட் ராஜா எம்.பி.பி.எஸ். ஆரவ், காவ்யா தாப்பர், நாசர், ராதிகா, ரோகிணி நடித்துள்ளனர். ஒளிப்பதிவு, கே.வி.குகன். இசை, சைமன் கே கிங். படம் குறித்து சரண் கூறியதாவது: இதில், அமர்க்களம் படத்துக்கு நேரெதிர் கேரக்டரில் ராதிகா நடித்துள்ளார். அவருக்கு நடிகவேள் செல்வி என்ற பட்டம் வழங்கியதில் எங்கள் குழுவுக்கு அதிக மகிழ்ச்சி.

நான் இயக்கிய படங்களில் வழக்கமாக இடம்பெற்ற வைரமுத்து, பரத்வாஜ் கூட்டணி, இந்தப் படத்தில் இல் லாத குறையை இசை அமைப்பாளர் சைமன் கே கிங் நிவர்த்தி செய்துள்ளார்.

வேற லெவல் என்று சொல்லக்கூடிய ஒளிப்பதிவை என் தம்பி கே.வி.குகன் கொடுத்துள்ளார். ஆரவ் இரு வேறு சாயலில் நடித்துள்ளார். இனி அவர் தமிழ் சினிமாவின் தாதாவாக மாறுவார். மார்க்கெட் ராஜா மூலம் மீண்டும் சி னிமாவுக்குள் வந்துவிட்டேன். வசூல்ராஜா எனக்கு தலை என்றால், மார்க்கெட் ராஜா எனக்கு பாதம். இனி நான் வெற் றிநடை போடுவேன்.

கவர்ச்சியை குறைக்க முடிவு

நடிகை யாஷிகா பல படங்களில் நடித்திருந்தாலும் இருட் டறையில் முரட்டு குத்து படத்தில் நடித்த கவர்ச்சி கதாபாத் திரம் ரசிகர்கள் மனதில் அட்டைபோல் ஒட்டிக்கொண்டிருக் கிறது. இன்ஸ்டாகிராமில் அவரிடம் பேசும் நெட்டிஸன்கள் டபுள் மீனிங்கில் பேசி தொல்லை தருகிறார்களாம். இதில் அப்செட் ஆன யாஷிகா, கவர்ச்சியான நடிப்பை குறைத்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறார்.

இதுகுறித்து யாஷிகா கூறியது: சினிமாவில் கவர்ச்சியாக நடிப்பதால், என்னிடம் என்ன வேண்டுமானாலும் பேசலாம் என அர்த்தம் கிடையாது. இன்ஸ்டாகிராம் மூலமாக ரசிகர்க ளிடம் பேசுவது எனக்குப் பிடிக்கும். சிலர், போலி கணக்கு மூலமாக வந்து தவறாக கமென்ட் செய்யும்போது கோபம் வருகிறது. அதுதான் அவர்கள் பாணியி லேயே பதிலடி கொடுக்கிறேன்.

'இருட்டு அறையில் முரட்டு குத்து' படத்தில் நான் நடித்தது கூட சிலர் என்னிடம் டபுள் மீனிங் கள் பேச காரணமாக இருக்கலாம். அந்த படத்தில் நடித்ததற்காக நான் வருத்தப்படுகிறேன். அதில் நடிக்க ஒப்புக்கொண்டது என்னுடைய தவறுதான். என்னிடம் கதை சொன்னபோது இல்லாத விஷ யங்களை எல்லாம் ஷூட்டிங் நேரத்தில் படமாக் கினர்.

அந்த நேரத்தில் என்னால் அதை மறுக்க முடியவில்லை. இனிமேல் அந்த தவறு செய்ய மாட்டேன். அப்படியானல் இனிமேல் கவர்ச் சியாக நடிக்க மாட்டீர்களா என்கிறார்கள். அப் படியில்லை கவர்ச்சியை கொஞ்சம் குறைத்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறேன். நடிப்பை வெளிப்படுத்தும் நல்ல கதாபாத்திரங்களை தேர்வு செய்து நடிப்பேன்.



விருதுகளைக் குவித்த ராட்சன்

ராம்குமார் இயக்கத்தில் விஷ்ணு விஷால், அமலாபால் நடிப்பில் வெளியான ராட்சசன் திரைப்படம் வெளி நாட்டில் 4 விருதுகளை குவித்துள்ளது. முண்டாசுப்பட்டி படம் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் ராம்குமார். இவர் விஷ்ணு விஷால், அமலா பால் ஆகியோரை வைத்து ராட்சசன் என்ற படத்தை இயக்கினார். சைக்கோ திரில்லர் ஜானரில் வெளியான இந்தப் படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று சூப்பர் ஹிட்டானது.

மேலும் பல்வேறு திரைப்பட விழாக்களில் இப்படம் கலந்துக் கொண்டு பல விருதுகளை பெற்றது. இந்நி லையில் அமெரிக்கா லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற திரைப்பட விழாவில் ராட்சசன் படம் கலந்துக் கொண்டது.

இதில் 4 விருதுகளை ராட்சசன் திரைப்படம் வென்றுள்ளது. சிறந்த திரைப்படம், சிறந்த நடிகர், சிறந்த திரில் லர், சிறந்த பின்னணி இசை ஆகிய பிரிவுகளில் ராட்சசன் திரைப்படம் விருதுகளை வென்றுள்ளது.

யின் காதல்

குனர் பிரியதர்ஷன் மகள் கல்யாணி. இவர் ருடத்துக்கு முன்புதான் நடிக்க வந்தார். ஹலோ'தெலுங்கு படத்தில் அறிமுகமா ர் அடுத்தடுத்து படங்களில் நடித்து வருகி தமிழில், சிவகார்த்திகேயன் ஜோடியாக ரா படத்தில் நடிக்கிறார். கல்யாணியும், ர் மோகன்லால் மகன் பிரணவும் சிறுவயது லே பழகி வருகின்றனர். சிறுவயது நட்பு பெ வயசானதும் காதலாக மாறியிருக்கிறது. னவும் தற்போது படங்களில் நடித்து வருகி

ல்யாணி தந்தையும் இயக்குனருமான தர்ஷன், நடிகர் மோகன்லால் டிகிரி ஸ்துக்கள். பிரியதர்ஷன் இயக்கத்தில் வேறு படங்களில் மோகன்லால் நடித்திருக் ர். இரண்டு குடும்பத்தினரும் அவ்வளவு க்கும். கல்யாணி, பிரணவ் காதலுக்கு இந்த ம் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. பிரணவ்வை காதலிக்கிறீர்களா? என்று கல் னியிடம் கேட்டால் அதற்கு நேரடியாக ல் சொல்லாமல் மறைமுக பதில் அளிக்கி அவர் கூறும்போது, நான் ஒருவரை காத கிறேன். எதிர்காலத்தில் அவரை மணப் . எங்கள் குடும்பத்தினருக்கு நான் யாரை லிக்கிறேன் என்று தெரியும். எங்களுக்குள் பிரச்னையும் இல்லை. அவரது பெய ம் மற்ற விவரங்களையும் இப்போதைக்கு ல்ல மாட்டேன் என்றபடி எஸ்ஸானார் கல் னி.

கவுதம் மேனன் இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள படம் என்னை நோக்கி பாயும் தோட்டா. இதில் தனுஷ் ஜோடியாக மேகா ஆகாஷ் நடித்துள்ளார். இந்த படத்தின் ஷூட்டிங் 2017ம் ஆண்டில் முடிந் துவிட்டது. பைனான்ஸ் பிரச்னையால் படம் ரிலீஸ் ஆகாமல் தள்ளிப்போய்க்கொண்டிருந்தது. இந்நிலை யில் கடந்த மாதம் படம் வெளியாகும் என அறிவிக் கப்பட்டது.

ஆனால் ரிலீசுக்கு ஒரு நாள் முன்பாக அதே பிரச்னைகளால் படம் நிறுத்தி வைக்கப்பட்டது. இது பற்றி கவுதம் மேனன் கூறும்போது, தவிர்க்க முடியாத காரணங்களால் படத்தின் ரிலீஸ் தள்ளிப் போயுள்ளது. நவம்பர் 15ம் தேதி கண்டிப்பாக படம் திரைக்கு வரும் என்றார்.

உங்களுக்கு அடிக்கடி சோர்வு ஏற்படுகிறதா?

ஒருசிலர் எப்போதும் சோர்வாகவே காணப்படுவார்கள். அடிக்கடி தூங்கவும் விரும்புவார்கள். அப்படி நாள் முழுவதும் சோர்வுடன் காட்சி அளிப்பது பல்வேறு உடல்நல குறைபாடுகளை தோற்றுவிக்கும். ஒருசில அறிகுறிகளை கொண்டு அந்த சோர்வு எத்தகையது என்பதை கண்டறிந்து அதனை போக்கிவிடலாம்.

★ சிலர் எதையும் ஈடுபாட்டோடு செய்யும் மனநிலையில் இருக்க மாட்டார்கள். தான் பலவீனமாக இருப்பதாக கருதுவார்கள். உடலில் இரும்பு சத்து குறைவாக இருப்பது இதற்கு காரணம். இரும்பு சத்து ஹிமோகுளோபினின் முக்கிய அங்கமாக இருப்பதால் அது குறையும்போது உடல் பலவீனமடையும். உடலில் உள்ள செல்களுக்கு போதுமான அளவு ஆக்சிஜன் கிடைக்கவில்லை என்றாலும் பலவீனமாக இருப்பது போன்ற உணர்வு ஏற்படும். பச்சை இலை காய்கறிகள், இறைச்சி, பயறு வகைகள், நீர்ச்சத்து கொண்ட பழங்கள், நட்ஸ் வகைகளை சாப்பிட்டு வருவதன் மூலம் சோர்வை விரட்டலாம்.

★ பகல் வேளையில் சோம்பலாக இருப்பதாக உணர்ந்தால் நிறைய பேர் காபி பருகுவார்கள். அது உடனடியாக சோம்பலை போக்கி உற்சாகத்தை தரும். ஆனால் அது சில மணி நேரங்கள் மட்டுமே நீடிக்கும். மேலும் அதிக அளவு சர்க்கரை கலந்த பானங்களை பருகும்போது அவை ரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவை குறைக்கும். அதனால் உடனடியாக புத்துணர்வு கிடைக்கும். ஆனால் சிறிது நேரத்தில் மீண்டும் சோர்வு எட்டிப்பார்க்க தொடங்கிவிடும். ரத்தத்தில் சர்க்கரையின் அளவு சீரற்ற நிலையில் இருப்பது நல்லதல்ல. இதனை தவிர்க்க சீரான இடைவெளியில் சாப்பிட வேண்டும். நார்ச்சத்து மற்றும் புரதம் அதிகம் கொண்ட உணவு வகைகளை தேர்ந்தெடுத்து சாப்பிட வேண்டும்.

★ சிலருக்கு மனம் நிம்மதி இன்றி தவிக்கும். நாள் முழுவதும் காபின் கலந்த பானங்களை பருகுபவர்களுக்கு இந்த பிரச்சினை ஏற்படும். காபின் அதிகமாக உட்கொள்ளும்போது அது உடலையும், மனதையும் பாதிக்கும். காபி அதிகம் பருகுவதை தவிர்த்து மூலிகை டீ வகைகளை பருகி வரலாம்.

★ கவனச்சிதறல், ஆர்வமின்மை போன்ற காரணங்களாலும் சோர்வு எட்டிப்பார்க்கும். அது அன்றாட செயல்பாடுகளை நேரடியாக பாதிக்கும். அப்போது மூளையின் செயல்பாடும் குறையும். அதனால் சோர்வு உண்டாகும். அதற்கு வைட்டமின் பி குறைபாடு காரணமாக இருக்கலாம். மது அருந்துவதாலும் இத்தகைய பாதிப்பு நேரும். புரதம் நிறைந்த உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும். மதுப்பழக்கத்தை கைவிடவேண்டும்.

★ காலை உணவை தவறாமல் உட்கொள்ள வேண்டும். சாப்பிடாமல் நீண்ட நேரம் வெறும் வயிற்றுடன் இருப்பது வளர்சிதை மாற்றத்தை பாதிக்கும். மந்தமான உணர்வு ஏற்படும்.

பாலை எப்படி குடிக்க வேண்டும்?



பாலை பகலிலும் இரவிலும் அருந்தலாம், அருந்தலாம், ஆனால் உணவு உண்ட பிறகுதான் குடிக்க வேண்டும்.

பாலைக் குடிக்கும் போது அமைதியாகவும் சிறுகச் சிறுகச் சுவைத்து குடிக்க வேண்டும். அதுவே உடலுக்கு நல்லது. அவ்வாறின்றி மளமளவென குடிப்பது மற்றும் பெரும் அளவில் விழுங்குவது ஆகியவற்றால் வயிற்றில் செரிப்பதில் பிரச்சினை ஏற்படும்.

பாலுடன் சர்க்கரையைச் சேர்த்துக் குடிப்பதால், சர்க்கரை பாலின் தன்மையைக் கெடுத்து, அதை இரைப்பையில் புளிக்கும்படியும் வாய்வு உண்டாகும்படியும் செய்கிறது. அதனால் சர்க்கரை சேர்க்காமலே குடிப்பது நல்லது.

களைப்பு, மயக்கம், சுவாச காசம், அதிக தாகம், பசி, இரத்தக் குறைவு இவற்றையெல்லாம் பசும்பால் எளிதில் குணப்படுத்தும்.

பாலில் 101 வகை நன்மை தரக்கூடிய பொருட்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பாலில் புரோட்டின் அதிகமாக உள்ளது. இது உடலின் திசு உற்பத்திக்கும்.

வெள்ளைக் கருவா மஞ்சள் கருவா ஆரோக்கியமானது?

தினம் ஒரு முட்டை சாப்பிட்டால் நோய்கள் நெருங்காது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒரு முட்டையின் வெள்ளைக் கருவில் 17 கலோரியும், மஞ்சள் கருவில் 59 கலோரியும் உள்ளது.

ஒரு முட்டையில் 6.3 கிராம் புரோட்டீன் உள்ளது. இதில் வெள்ளைக்கருவில் 3.5 கிராம் புரோட்டீனும், மஞ்சள் கருவில் 2.8 கிராமும் உள்ளது. முட்டையின் வெள்ளைக்கருவில் குளோரின், மெக்னீஷியம், பொட்டாஷியம், சோடியம், சல்பர், ஜிங்க் உள்ளிட்ட 11 மினரல்கள் உள்ளன. மஞ்சள் கருவில் வைட்டமின் டி, பி 12, ஏ, இ, கே, பி 6 போன்ற சத்துகள் உள்ளது.

முட்டையில் இயற்கையாகவே வைட்டமின், 'பி12' மற்றும் ரைபோபிளமின் போன்ற நினைவாற்றலை மேம்படுத்தும் விட்டமின்கள் உள்ளன. இந்தச்சத்துகள், குறிப்பாக கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் முக்கியத் தேவை. முட்டையில் உள்ள குறிப்பிட்ட சில ஆன்டி ஆக்சிடென்ட், கண் புரை போன்ற பிரச்சனைகள் வராமல் தடுக்கிறது.

உடலுக்குத் தேவையான நல்ல கொழுப்பு 5 சதவீதம் உள்ளது. எலும்பு வளர்ச்சிக்குத் தேவையான வைட்டமின், 'டி' முட்டையில் உள்ளது. அதேபோல் தோலுக்குத் தேவையான விட்டமின் 'ஈ' மற்றும் ரத்த சிவப்பணுக்கள் உற்பத்திக்கு ஆதாரமான இரும்பு சத்து, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும் துத்தநாகம் போன்றவையும் முட்டையில் உள்ளன.

செல் சுவர்களை உருவாக்கும், மூளை வளர்ச்சிக்குப் பயன்படும் கோலின் என்ற நுண்ணூட்டச் சத்தும் முட்டையில் உள்ளது. மஞ்சள் கருவில் கொழுப்புச் சத்து மட்டும் 185 மில்லி கிராம் உள்ளது. இளம் வயதினர் தினமும், 300 கிராம் கொழுப்பு சாப்பிடலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

இதய நோய், சர்க்கரை நோய் பிரச்சனை, அதிக அளவு கெட்ட கொழுப்பு உடலில் இருந்தால், முட்டையின் மஞ்சள் கருவை தவிர்க்க வேண்டும்.

வயதானவர்களுக்கு ஜீரண சக்தி குறைவாக இருக்கும் என்பதால், அவர்களும் முட்டையை தவிர்க்கலாம். கொழுப்பை தவிர்க்க விரும்புபவர்கள் காலை உணவில் இரு முட்டைகளின் வெள்ளைக் கருவை மட்டும் சாப்பிடலாம்.

உணவகம் செல்லும்போது கவனிக்க வேண்டியவை...

வீடுகளில் பார்த்துப் பார்த்து சமைத்து, ஆரோக்கியமானதை மட்டுமே உண்டு வரும் பலரும் உணவகங்களுக்குச் சென்றால் ஒரு பிடி பிடித்து உபாதைகளை உபரியாகப் பெற்று வந்து விடுகின்றனர். உணவகங்களுக்குச் செல்லும் போது கீழ்க்கண்ட பத்து விஷயங்களையும் கவனத்தில் கொண்டால், உறவு பலப்படுவதுடன் ஆரோக்கியமும் சிதையாமல் காத்துக் கொள்ள முடியும்.

1. பரபரப்பான உணவகம் எனில் முன் கூட்டியே முன் பதிவு செய்து கொள்ளுங்கள். நேரம், நபர்களின் எண்ணிக்கையை தெளிவாய் சொல்லுங்கள். முன்பதிவு செய்யும்போதே ஏதேனும் கூப்பன் உள்ளதா போன்ற செய்திகளையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்துவிட்டால் தாமதம் ஏற்படுத்தாமல் குறித்த நேரத்தில் கண்டிப்பாக செல்லுங்கள். ஒருவேளை முன்பதிவு இல்லாமல் இருந்து காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால் ஒரு மெனு அட்டையை வாங்கி என்ன உண்ணலாம் என்பதை முடிவு செய்து கொள்ளலாம்.

2. உணவுக்கு முன் சூப், ஸ்டார்டர் சாப்பிடும் போது அதிக அடர்த்தியான சூப் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். அதிக அடர்த்தியான சூப் பொதுவாக அதிக கொழுப்பு உடையதாக இருக்கும். ஸ்டார்டர் உண்ணும் போது பொரித்த வகையறாக்களை விடுத்து அவித்த பொருட்களைத் தேர்வு செய்து உண்ண வேண்டும். உதாரணமாக நன்றாக பொரித்த கோழியை விட தந்தூரி வகையறாக்கள் நல்லது.

3. ஏதேனும் ஒரு சாலட் தருவியுங்கள். அதிக கிரீம்கள் பூசப்படாத, ஒரு சாலட் உண்பது பின்பு உண்ணப்போகும் உணவின் அளவை ஆரோக்கியமாகக் கட்டுப்படுத்தும்.

4. பெப்சி, கோக் போன்ற குளிர்பானங்களை அறவே தவிருங்கள். அவை உடலுக்கு எந்த விதத்திலும் நன்மை செய்வதில்லை. தண்ணீர் தவிர்த்து ஏதேனும் பானம் அருந்த வேண்டுமென்று விரும்பினால் எலுமிச்சை சாறு குடிக்கலாம், அல்லது ஒரு தேனீர் அருந்தலாம்.

5. உணவு குறித்தோ, அதன் தயாரிப்புப் பொருட்கள், தயாரிக்கும் விதம் குறித்தோ ஏதேனும் தெரியவேண்டுமெனில் தயங்காமல் கேளுங்கள். முழு திருப்தி தராத உணவுகளை உட்கொள்ளாதீர்கள். உங்களுக்கு ஏதேனும் உணவு ஒவ்வாமை உண்டெனில் அதற்குத் தக்க உணவுகளை கவனமாய் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

6. அசைவப் பிரியர்கள் லிவர், சிறுநீரகம் போன்றவற்றை உண்பதை அளவுடன் நிறுத்திக் கொள்ளுங்கள். தோலில் அதிக கொழுப்பு இருக்கும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். வறுத்த 'கொழுப்பு' போன்றவற்றின் பக்கம் சாயவே சாயாதீர்கள். முட்டை உண்ணும்போது அவித்த முட்டையின் வெள்ளைக்கருவை மட்டும் உண்ண முடிந்தால் அற்புதம்! உங்களுக்குப் பிடித்தமான உணவு வகைகள் அதிகக் கொழுப்புள்ளவையாக இருந்தால் அதை முழுமையாய் தவிர்க்க வேண்டுமென்பதில்லை. உண்ணும் அளவையேனும் குறைத்துக் கொள்ளுங்கள்.

7. பீட்ஸா சாப்பிடக் கிளம்புகிறீர்கள் எனில் 'மெல்லிய' **(thin& crust)** பீட்சாவை தேர்ந்தெடுங்கள். கூடவே அசைவப் பீட்சாவையும், அதிக சீஸ் (பாலாடை) உள்ள பீட்சாவையும் தவிர்க்க வேண்டுமென்று முடிவெடுங்கள். வாங்கிய எல்லாவற்றையும் தின்று முடிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. போதும் எனுமளவுக்கு உண்ணுங்கள், மிச்சத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்.

8. உண்டு முடித்தபின் ஐஸ்கிரீமை ஒரு கட்டு கட்டுவது எல்லாவற்றுக்கும் பிரச்சனையாய் முடியும். எனவே கடையில் உண்ண பழங்களையே தேர்ந்தெடுங்கள். ஐஸ்கிரீமை தவிர்க்கவே முடியாது என உங்கள் மனம் உங்களை நச்சரித்தால் பழங்களுடன் கலந்து சிறிதளவு உண்ணுங்கள்.

9. உங்களுக்கு உணவு பரிமாறுபவர் மீது உங்கள் எரிச்சல்களைக் காட்டாதீர்கள். அன்புடன் பேசுங்கள். நன்றாக உங்களைக் கவனித்துக் கொள்பவர்களுக்கு தயங்காமல் நிறைய டிப்ஸ் கொடுங்கள். அமெரிக்கா போன்ற நாடுகளில் 15 முதல் 25 விழுக்காடு வரை டிப்ஸ் வைப்பது மேஜை நாகரீகமாகக் கருதப்படுகிறது.

10. அவசரப்பட்டு உண்ணாதீர்கள். கைப்பேசிகளை அணைத்து வையுங்கள். மெதுவாக, சுவாரஸ்யமாக பேசிக்கொண்டே உண்ணுங்கள். நன்றாக மெல்லவேண்டும் என்பதை நினைத்துக் கொண்டே உண்ணத் துவங்குங்கள். உணவு அருந்த அதிக நேரம் செலவிடுவது உங்கள் ஆரோக்கியம் பலப்படவும், உறவு பலப்படவும் பேருதவியாய் இருக்கும்.

அடிக்கடி அனைவரும் கூடி ஒன்றாய் நேரத்தைச் செலவிடும் நல்ல பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உலகில் உறவுகள் தரும் மன நிறைவையும் அர்த்தத்தையும் வேறேதும் தந்து விடாது என்பதை மனதில் ஆழப் பதியுங்கள்.

தினமும் தயிர் சாப்பிடுவது நல்லதா?

தயிர் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி உண்ணும் உணவுகளில் ஒன்றும். பாலிலிருந்து உருவாவதுதான் தயிர். தயிரிலிருந்து உருவாவது தான் மோர். தயிரின் ஒரு பகுதிதான் நெய். ஆனால், இவற்றின் குணாதிசயங்கள் வெவ்வேறாக காணப்படும்.

தயிர் இது ஒரு ஊட்டச் சத்து மிகுந்த மற்றும் தனிப்பட்ட உடல் நலத்தை பேணும் ஆதாயங்கள் கொண்ட உணவாகும். இதில் புரதங்கள், கால்சியம், ரிபோப்லாவின், வைட்டமின் ஆ6 மற்றும் வைட்டமின் ஆ12 போன்ற ஊட்டச்சத்துகள் கொண்டதாகவும் திகழ்கிறது.

அந்தவகையில் தயிரை தினமும் சாப்பிடுவதனால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றி பார்ப்போம்.

நன்மைகள்

தினமும் தயிரை சாப்பிடுவதால், இதயம் வலுப்பெறும். உயர் ரத்த அழுத்தம் ஏற்படாது. தயிரை சாப்பிடுவதால், நோய் எதிர்ப்பு செல்கள் தூண்டப்படும். மேலும் பெண்களுக்கு பிறப்புறுப்பில் வரும் தொற்றுக்களை எதிர்க்கிறது.

தயிர், கார்டிசால் சுரப்பை தூண்டி, சம நிலையில் வைக்க உதவுகிறது. இதனால் உடல் எடை குறையும். தயிர் மன அழுத்தம் மற்றும் பதட்டத்தை குறைக்கிறது. நரம்புகளில் ஏற்படும், இறுக்கத்தை தளர்த்தி, புத்துணர்வோடு இருக்கச் செய்கிறது. மூளையின் செயல்களை தூண்டுகிறது.

தீமைகள்

தயிர் ரத்தக்குழாய்களில் அடைப்பை ஏற்படுத்தக்கூடியது. தொடர்ந்து தயிர் சாப்பிட்டால் உடல் வீக்கம், அரிப்பு, அக்கி போன்ற பிரச்னைகள் ஏற்படக்கூடும். தயிர் சாப்பிடுவதன் மூலம் உடலில் கொழுப்பு அதிகமாகச் சேர்வதால் ரத்தக்குழாயில் அடைப்பு, சர்க்கரைநோய் போன்ற பிரச்சனைகள் உருவாகும்.

தயிரை சூடுபடுத்திச் சாப்பிடக்கூடாது. வெயில் காலத்தில் கண்டிப்பாகத் தயிர் சாப்பிடக்கூடாது. வெயில் காலத்தில் அதிக வெப்பத்தால் உடலில் அரிப்பு ஏற்படும். சூடான சாதத்தில் தயிர் கலந்து சாப்பிடுவதைத் தவிர்க்கவேண்டும்.

தயிருக்குப் பதில் வெண்ணெய் நீக்கிய மோரை சாப்பிட்டால் ஆரோக்கியம் மேம்படும்.

இளநீரை எந்த நேரத்தில் குடித்தால் நல்லது

இளநீரை சரியான நேரத்தில் குடிப்பதன் மூலம் அதனால் கிடைக்கும் நன்மைகள் இரட்டிப்பாகும். அப்படி எந்த நேரத்தில் இளநீர் குடித்தால், அதிக நன்மைகள் கிடைக்கும் என்பதை பார்ப்போம்.

உலகில் இதுவரை கலப்படம் செய்யப்படாத ஒரு பொருள் என்றால் அது இளநீர்தான். இது உடனடி ஆற்றலை வழங்கும் பானமாகவும் இருக்கிறது. இதில் கலோரிகள் குறைவாக உள்ளது மற்றும் இயற்கையான என்சைம்கள் மற்றும் பொட்டாசியம் போன்ற தாதுக்களைக் கொண்டுள்ளது

காலை நேரம் வெறும் வயிற்றில் இளநீரை முதலில் குடிப்பது பல வழிகளில் உதவும். இளநீரில் லாரிக் அமிலம் உள்ளது. இது உங்களின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது, மேலும் உடலின் வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கவும், எடை குறைப்பிற்கும் உதவுகிறது.

கர்ப்பிணி பெண்கள் உடலில் நீர்ச்சத்தை தக்கவைக்கவும், மலச்சிக்கலை குணப்படுத்தவும் உதவும். மேலும் கர்ப்பகாலத்தில் பெண்களுக்கு காலை நேரத்தில் ஏற்படும் நெஞ்செரிச்சலை குணப்படுத்த உதவுகிறது.

விளையாட்டு வீரர்களுக்கு இது ஒரு மிகச் சிறந்த பானமாகும். உடற்பயிற்சிக்கு முன்னர் இளநீர் குடிப்பது உடலில் நீரேற்றத்தை அதிகரிக்கவும், ஆற்றலை அதிகரிக்கவும் பயன்படுகிறது. உடற்பயிற்சிக்கு பின்னர் இளநீர் குடிப்பது தீவிர உடற்பயிற்சியால் இழந்த எலெக்ட்ரோலைட்டுகளின் இழப்பை சமன் செய்கிறது. இளநீர் குடிப்பது சோர்வை எதிர்த்துப் போராட உதவுகிறது மற்றும் சிறந்த ஆற்றல் அதிகரிக்கும் பானங்களில் ஒன்றாகும்.

உணவுக்கு முன் புத்துணர்ச்சியூட்டும் இளநீரைக் குடிப்பது, உங்கள் உணவை முழுமையாக்குகிறது, இதனால் அதிகப்படியான உணவு சாப்பிடுவதைத் தடுக்கிறது. இது கலோரிகளில் குறைவாக இருப்பதால் செரிமானத்தை எளிதாக்குகிறது.

தூங்கும் முன்னர் இளநீர் குடிப்பது உடலில் இருக்கும் அனைத்து நச்சுகளையும் வெளியேற்றவும், உங்கள் சிறுநீர் பாதையை சுத்தப்படுத்தவும் உதவும். இது உங்களை நோய்த்தொற்றில் இருந்தும், சிறுநீரக பிரச்சினைகளில் இருந்தும் பாதுகாக்கிறது.

உடல் எறையை குறைக்கும் கேல் கீரை

கீரைகள் என்றாலே சத்து டானிக் என்று சொல்வது மிக பொருத்தமாக இருக்கும். அதிலும் கீரைகளின் ராணி என்று ஒரு கீரையை அழைக்கிறார்கள். அது தான் ஆங்கிலத்தில் **Kale** என்றும் தமிழில் பரட்டைக் கீரை என்றும் அழைக்கப்படுகிறது. பார்ப்பதற்கு தலை விரிக்கோலத்துடன் இருப்பதால் இந்த பரட்டை என்ற திருநாமத்தை பெற்றிருக்கலாம்.

இதில் காணப்படும் அளவில்லா சத்துக்கள் காரணமாகவே கீரைகளின் ராணி என்ற பெயர் பெற்றுள்ளது. குறைந்த கலோரி, நிறைய நார்ச்சத்து, பூச்சியம் அளவு கொழுப்பு சத்து நிறைந்தது இக்கீரை.

உடல் எடை பராமரிக்க விரும்புவோர் தினமும் இக்கீரையை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதிகப்படியான கொலஸ்ட்ராலை குறைக்கும். இக் கீரைஅதிக நார்ச்சத்து இருப்பதால் எளிதில் ஜீரணமாகும் உணவு. ஜீரணக்கோளாறு மலச்சிக்கல் ஆகிய பிரச்சினைகள் இருப்பவர்கள் அடிக்கடி இந்த கீரையை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இரும்புசத்து அத்கம் கொண்டது. ஆண்டி ஆக்சிடன்ட்ஸ் இதில் நிறையவே இருக்கிறது. ஈரல், புற்றுநோய், எலும்பு குறைபாடு, ஆஸ்துமா போன்ற பல நோய்கள் வராமல் தடுக்க கூடியது.

பார்வை தெளிவாக இருக்க தினமும் கேல் உணவில் சேர்க்க வேண்டும். அன்றாடம் நமது உடலுக்கு வேண்டிய வைட்டமின் சி, வைட்டமின் ஏமற்றும் வைட்டமின் கே கால்சியம் எல்லாம் இந்த கீரையில் இருக்கிறது.

வியர்வையின் மூலம் மன அழுத்தத்தை கண்டறியும் கருவி கண்டுபிடிப்பு



உடலின் வியர்வையை கொண்டே மன அழுத்தத்தை நொடிகளில் கண்டறியும் வாட்டர் ப்ரூஃப் பட்டையை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். தோலில் அணியக்கூடிய சிறிய பட்டை நம் தோலில் ஒட்டிக் கொண்டதும் வியர்வையை உறிந்து கொண்டு கார்டிசல் அதவாது மன அழுத்தத்தை ஏற்படுத்தும் ஹார்மோனை (இயக்குநீர்) நொடிகளில் கண்டறிந்து விடும்.

நாள் முழுக்க உடலில் கார்டிசல் அளவு இயற்கையாகவே ஏறி, இறங்கும், அந்த வகையில் வழக்கமான காஜ் மனிதர்களின் உடல் சோர்வு மற்றும் மன சோர்வை கண்டறிந்து, அவர்களது அட்ரினல் சுரப்பி சீராக வேலை செய்கிறதா என மருத்துவர்கள் சோதனை செய்ய முடியும்.

தற்சமயம் பயன்படுத்தப்படும் வழி முறைகளில் ஆய்வகங்களில் இருந்து கிடைக்கும் முடிவுகளை தெரிந்து கொள்ள பலநாள் காத்திருக்க வேண்டிய சூழல் நிலவுகிறது. அந்த வகையில் பயனர் தனது உடலின் வியர்வையில் பட்டையை வைத்து, இதனை சாதனத்துடன் இணைத்தால் சில நொடிகளில் கொண்டு சில நொடிகளில் மன அழுத்தம் சார்ந்த விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

தற்சமயம் ப்ரோடோடைப் முறையில் சோதனை செய்யப்படும் இந்த வழிமுறை வெற்றிபெறும் பட்சத்தில் மன அழுத்த அளவு சீராக இல்லாத நிலையில், பயனர்கள் வீட்டில் இருந்தபடியே முடிவுகளை அறிந்து கொள்ள முடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆராய்ச்சியாளர்கள் செவ்வக வடிவம் கொண்ட நீட்டத்தக்க சென்சார் மற்றும் மெம்பிரேன் கார்டிசலுடன் இணைந்து கொள்ளும் வகையில் இந்த பட்டையை உருவாக்கியுள்ளனர். தோலில் ஒட்டிக் கொள்ளும் இந்த பட்டையில், வியர்வை படும் போது அதில் உள்ள ஓட்டை வழியே அனுமதிக்கிறது. இதன் வாட்டர்ப் ரூஃப் லேயர் பட்டையை பாழாகாமல் பார்த்துக் கொள்கிறது.

உடலில் உள்ள வியர்வை பட்டையில் உள்ள நீர்தேக்கம் போன்ற பகுதியில் சேமிக்கப்படும், இதன் மேல் கார்டிசலை உணரும் சவ்வு பொருத்தப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக்கிற்கு மாற்று செல்லுலோஸ்

ஒரு முறை பயன்படுத்தி கடாசப்படும் பிளாஸ்டிக் கப்புகளுக்கு மாற்றாக, செல்லுலோஸ் மூலம் கப்புகள், தட்டுக்களை செய்யும் தொழில்நுட்பத்தை உருவாக்கி இருக்கிறது, 'பல்பாக்!'

ஏற்கனவே பல துறைகளில் புழங்கும் செல்லுலோசைக் கொண்டு, உலர்ந்த பொருட்கள், ஈரமுள்ள பொருட்கள் என, இரண்டையும் கையாளும் வகையில் தயாரிக்கும் தொழில் நுட்பத்தை, பல்பாக் அறிமுகப்படுத்தி அசத்தியுள்ளது. உலர் கலன்களுக்கான செல்லுலோஸ் கூழினை, வார்ப்புகளில் ஊற்றி, ஒரே நொடி அழுத்தம் தந்தால், ஒரு செல்லுலோஸ் கப் தயாராகிவிடுகிறது.

ஈரப் பொருட்களை சுமக்கும் செல்லுலோஸ் கப்பை தயாரிக்க, 'ஐசோஸ்டாடிக் பிரஸ்' முறையில் அழுத்தம் தந்து பொருட்களை தயாரித்து விடலாம். ஈரப் பொருட்களை வெகுநேரம் தாங்கும் வகையில், இது சற்றே கூடுதல் கடினமாகவும் இருக்கும்.

இரண்டு முறைகளிலும் பிளாஸ்டிக் கைவிட குறைந்த நேரத்தில், குறைவான செலவில் கப்புகள் போன்றவற்றை தயாரிக்க முடியும் என்கிறது, பல்பாக். செல்லுலோஸ் நீரில் கரையும்; எளிதில் மட்கிவிடும்.

இதனால், ஒரு முறை பயன்படுத்தி எறியப்பட்டாலும், அவை சுற்றுச்சூழலுக்கு சவாலாக இருக்காது. ஒரு முறை பயன்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை உலகெங்கும் பரவும் நிலையில், வந்திருக்கும் செல்லுலோஸ் கப்புகள், தட்டுகளுக்கு வரவேற்பு பெருகுமா?

32 கோடி பக்கங்களுடன் உலகிலேயே மிகப்பெரிய இணையதளம்

டெல்லியில் இணையதளத்தை உலகிலேயே மிகப்பெரிய அளவில் 32 கோடி பக்கங்களுடன் 23 நாட்களில் உருவாக்கி உலக சாதனை படைக்கப் பட்டுள்ளது.

டெல்லியை சேர்ந்தவர் அமித் சர்மா. இவர் Cheaflightsall.com என்ற இணையதளத்தை உருவாக்கி இருக்கிறார். இந்த இணையதளத்தை உலகிலேயே மிகப்பெரிய அளவில் 32 கோடி பக்கங்களுடன் 23 நாட்களில் உருவாக்கி உலக சாதனை படைத்து உள்ளார்.

32 கோடி பக்கங்கள் உடைய இந்த இணையதளம் 5 டி.பி.க்கு சமமாகும். (1 டி.பி.=1000 ஜி.பி.) இந்த இணையதள முகவரியை விமான போக்குவரத்து வசதிகள் உள்ள 159 நாடுகளில் தொடர்புகொள்ள முடியும்.

ஏற்கனவே அமித் சர்மா, 6 முறை உலக சாதனை புரிந்தவர்.

கதை சொல்லும் பொம்மை

4 முதல் 10 வயதுக் குழந்தைகளுக்கு ஏற்ற கதைகளை கூறுதல், பொது அறிவுத் தகவல்களை கூறுதல், சிறிய விளையாட்டுகளை பயிற்றுவித்து அவற்றை விளையாடச் செய்தல் போன்றவற்றை செய்யும் பொம்மை. ஸ்மார்ட் ஃபோன் மற்றும் வீடியோ கேம் என்று வீட்டுக் குள்ளேயே முடங்கிக் கிடக்கும் குழந்தைகளை வெளி உலகத்துக்கு அழைத்துவர உதவும். முதல்முறை பயன்படுத்தும்பொழுது இந்த பொம்மையை ப்ளூடூத் வழியாக ஸ்மார்ட் ஃபோனுடன் இணைக்க வேண்டும். ஸ்டோரி பால் எனப் பெயரிடப்பட்டுள்ளது. குளோபல் ஸ்டார்ட் அப் விருதை பெற்றுள்ள இந்த பொம்மை குழந்தைகளின் வயதுக்கு ஏற்ப ஏழு வகைகளில் கிடைக்கிறது.

பாட்காஸ்ட் பத்திரிகை

ஆடியோ வடிவிலான நிகழ்ச்சிகளை இணையம் வாயிலாகக் கேட்டு ரசிப்பதற்கான வழியாக 'பாட்காஸ்டிங்' அமைகிறது. அண்மையில் கூகுள் நிறுவனம்கூட 'பாட்காஸ்ட்' செய்வதற்கான பிரத்யேகச் செயலியை அறிமுகம் செய்தது.

பாட்காஸ்டிங் சேவைகளை வழங்கும் எண்ணற்ற அலைவரிசைகளும் இருக்கின்றன. இவற்றை எல்லாம் தொகுத்து வழங்கும் பத்திரிகையாக வில்சன். எப்.எம் செயலி அறிமுகமாகியுள்ளது. ஐபோனில் செயல்படும் இந்தச் செயலி புதிய பாட்காஸ்டிங் நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்து கொள்ள வழிசெய்கிறது.

மேலும் தகவல்களுக்கு: https://wilson.fm/

சூடேற்றும் சுரங்க ரயில் நிலையங்கள்!

லண்டனின் பிரசித்தி பெற்ற சுரங்க ரயில் நிலையங்கள், ஏராளமான பொருட் செலவில் வெப்பமூட்டப்படுகின்றன. இந்த வெப்பத்தின் கணிசமான பகுதி, காற்றுப் போக்கி குழாய்கள் வழியே உடனுக்குடன் வெளியேற்றப்படுகின்றன.இதை ஏன் மறுபடியும் பயன்படுத்தக் கூடாது?

இதைத் தான், லண்டன் மாநகர நிர்வாக அமைப்புகள் வெற்றிகரமாக செய்திருக்கின்றன. லண்டனின் இஸ்லிங்டன் பகுதியில், சுரங்க ரயில் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் வெப்பத்தை, வெப்ப உந்து இயந்திரங்கள் மூலம் பிடித்து கடத்தி, அப்பகுதியிலுள்ள, 700 வீடுகளுக்கு கதகதப்பை வழங்குகிறது, லண்டன் நிர்வாகம்.

இதில் அதிக செலவு கிடையாது என்பதோடு, சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் வாய்ப்பும் இல்லை. ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் இந்த திட்டம் வெற்றி பெற்றதால், தற்போது மேலும், 450 வீடுகளுக்கு வெப்பம் வழங்க,தற்போது வேலைகள் நடந்து வருகின்றன.

குளிர்காலத்தில் இப்படி வெப்பத்தை கடத்துவது போலவே, கோடையில், இஸ்லிங்டன் பகுதியிலுள்ள சுரங்க ரயில் நிலையங்களுக்கு, வெளியிலிருந்து குளிரூட்டப்பட்ட காற்றை வழங்குகிறது சுரங்க ரயில் நிர்வாகம்.

YouTube சனல்களை தேடுவதற்கு...

ரிவி சேனல்கள் போலவே எண்ணற்ற யூடியூப் சேனல்கள் இருக்கின்றன. இவற்றுக்கு லட்சக்கணக்கான சந்தாதாரர்களும் கோடிக்கணக்கான பார்வையாளர்களும் இருக்கிறார்கள். இந்த சேனல்களின் உரிமையாளர்கள் யூடியூப் பிரபலங்களாகக் கொடிகட்டிப் பறக்கின்றனர். யூடியூப் மூலம் இணையத்தில் ஹிட்டான சேனல்களைக் கண்டறிவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், அதிகம் கவனத்தை ஈர்க்காத அருமையான புதிய யூடியூப் சேனல்களை அறிந்துகொள்ள விரும்பினால் கொஞ்சம் சிரமப்பட வேண்டியிருக்கும்.

யூடியூப் தளத்திலேயே தேடல் வசதி இருக்கிறது தான். ஆனால், யூடியூப் வசதி வீடியோக்களைத் தேடுவதற்கானது என்பதால் தனிப்பட்ட சேனல்களைக் கண்டறிய அதிகம் உதாவது. அதிலும் பயனாளிகள் தங்கள் ரசனைக்கேற்ப சேனல்களைத் தேடிக் கண்டுபிடிக்க விரும்பினால், யூடியூப் தேடல் போதுமான தாக இல்லை என நினைக்கலாம்.

வெகுமக்களின் கவனத்தைப் பெறாமல் போகும் நல்ல படங்கள்போலவே, யூடியூப்பிலும் பரவலாக அறியப்படாத அருமையான சேனல்கள் அநேகம் இருக்கின்றன. இணைய உலகம் பெரும்பாலும் வைரலாகப் பரவும் வீடியோக்களையும், லட்சக்கணக்கில் பார்வைகளைக் குவிக்கும் வீடியோக்களையுமே கவனிப்பதால், நல்ல சேனல்கள் அதிக ஆதரவு இல்லாமல் யூடியூப் கடலில் மூழ்கி விடுகின்றன. இப்படி யூடியூப்பில் மறைந்திருக்கும் மாணிக்கங்களைத் தேடி கண்டுபிடிக்க உதவுவதற்கென இணைய சேவைகள் இருக்கின்றன. அவற்றில் சில:

சேனல் கிராலர்
(https://www.channelcrawler.com/)

அறியப்படாத, கண்டுபிடிக்கப் படாத யூடியூப் சேனல்களை எளிதாகக் கண்டுபிடிக்க உதவும் தளம் இது. இந்தத் தளத்தில் பயனாளிகள் பலவிதங்களில் யூடியூப் சேனல்களைத் தேடலாம். பெயர், சேனல் வகை, மொழி, நாடு போன்றவற்றைக் குறிப்பிட்டு அதற்கேற்பத் தேடலாம். இவை தவிர சந்தாதாரர்கள் எண்ணிக்கை, பார்வையாளர்கள் எண்ணிக்கை, மொத்த வீடியோக்கள் எண்ணிக்கை அடிப்படையிலும் தேடலாம். குறிப்பிட்ட தலைப்பிலான வீடியோக்களை விலக்கிவிட்டுத் தேடும் வசதியும் இருக்கிறது. அரிதான சேனல்களைத் தேடுவதோடு புதிய சேனல்களையும் இந்தத் தளத்தில் சமர்ப்பிக்கலாம்.

சேனல்ஸ்ஹண்ட்
(https://www.channelshunt.com/)

யூடியூப் சேனல்களுக்கான தேடியந்திரம்போல இது அமைந்திருக்கிறது. சேனல்களுக்கான வழிகாட்டியாகவும் இது விளங்குகிறது. எளிமையான முகப்பு பக்கத்தைக் கொண்ட இந்தத் தளத்தில் யூடியூப் சேனல்கள் பல்வேறு தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளன. வடிவமைப்பு, செய்தி, இசை, கேமிங், சினிமா, விளையாட்டு, பொழுதுபோக்கு என நீளும் இந்தப் பட்டியலிலிருந்து விரும்பிய தலைப்பைத் தேர்வு செய்து சேனல்களைப் பார்க்கலாம்.

மொத்தம் 1,204 சேனல்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு சேனலை 'கிளிக்' செய்தால், அவற்றுக்கான சுருக்கமான அறிமுகம், சந்தாதாரர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட தகவல்களைப் பார்க்கலாம். அறிவியல் அல்லது கணிதம் தொடர்பான சேனல்கள் தேவையெனில், அதற்கான வகையில் 'கிளிக்' செய்தால் போதுமானது. ஆயிரக்கணக்கான வீடியோக்கள் மத்தியில் தேடும் நிலை இல்லாமல் விரல் விட்டு எண்ணக்கூடிய சேனல்கள் பரிந்துரைக் கப்படுவது ஆசுவாசம் அளிக்கலாம். இதில் மின்னஞ்சல் முகவரியை அளித்து சந்ததாரராக இணையலாம்.

டியூப் ஸ்பார்க் (https://tubespark.com/)

சுவாரசியமான முறையில் யூடியூப் சேனல்களை அறிமுகம் செய்துகொள்ள டியூப் ஸ்பார்க் உதவுகிறது. குறிப்பிட்ட பிரிவில் உள்ள ரசிகர்களை மட்டும் கவர்ந்த வீடியோக்களை இது பரிந்துரைக்கிறது. ஒரு நேரத்தில் ஒரு வீடியோ மட்டுமே பரிந்துரைக்கப்படுகிறது. பிடித்திருந்தால் அதை 'கிளிக்' செய்யலாம். இல்லையெனில் அடுத்த வீடியோவுக்குப் போய்விடலாம். வீடியோ பிடித்திருக்கிறது, பிடிக்கவில்லை என ஆதரவு தெரிவிக்கலாம். இவை வாக்குகளாகக் கருதப்பட்டு இந்த எண்ணிக்கையின் அடிப்படையில் வீடியோக்கள் முன்னிறுத்தப்படும். வீடியோக்களுக்கு வாக்களிக்க உறுப்பினராக இணைய வேண்டும். வீடியோக்களை உறுப்பினர் ஆகாமலேயே பார்க்கலாம்.

சேனல் வாட்ச்
(https://www.reddit.com/r/ChannelWatch/)

இணையத்தின் முகப்பு பக்கம் என வர்ணிக்கப்படும் ரெட்டிட் சமூகத் தளம் சார்ந்த சேவை இது. ரெட்டிட் உறுப்பினர்கள் விவாதிக்காத விஷயமே கிடையாது. ரெட்டிட் உறுப்பினர்கள் மத்தியில் விவாதிக்கப்பட்ட யூடியூப் சேனல்களை இதில் பட்டியலாகப் பார்க்கலாம். குறிப்பிட்ட சேனல்கள் தொடர்பான உறுப்பினர்களின் கருத்துகளைப் படிக்கலாம். விதவிதமான சேனல்களை அறிமுகம் செய்துகொள்ள எளிய வழி இந்தத் தளம்.

சில் டிவி
(https://andchill.tv/)

சில் டிவி தளம் கொஞ்சம் புதுமையானது. இந்தத் தளத்தில் பார்வை அறையை உருவாக்கிக்கொண்டு மற்றவர்களுடன் இணைந்து வீடியோக்களைப் பார்க்கலாம். ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள அறைகளிலும் இணைந்து வீடியோக்களைப் பார்க்கலாம். இந்தத் தளத்தைப் பயன்படுத்த பதிவுசெய்து கொள்ள வேண்டும்.

இந்த சேவைகள் தவிர, ஸ்மால் யூடியூபர் சோன் (http://smallyoutuberzone.com/) தளம் அதிகம் புகழ் பெறாத யூடியூப் பயனாளர்களை அறிமுகம் செய்கிறது.

பயணிகளுக்கான வரைபட சேவை

இணையத்தில் வரைபடம் என்றதும் கூகுள் வரைபடம்தான் நினைவுக்கு வரும். கூகுள் வரைபடம் தவிர மேலும் பல வரைபட சேவைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று சைஜிக் டிராவல் மேப்ஸ். பயணிகளுக்குத் தேவையான தங்குமிடங்கள், முக்கிய இடங்கள், ஹோட்டல்கள், சுற்றுலா தலங்கள் ஆகியவற்றைக் கச்சிதமாக அடையாளம் காட்டுகிறது. இந்தத் தளத்தின் மூலம் கூடுதலான தகவல்களையும் தெரிந்துகொள்ளலாம். தேவையெனில் இதன் மூலமே பயணங்களைத் திட்டமிடலாம். தேடல் வசதியும் இருக்கிறது. பயனாளிகளின் இருப்பிடத்தை உணர்ந்து தளத்தில் நுழைந்ததுமே அவர்களுடைய வசிப்பிடப் பகுதி வரைபடத்தில் முன்னிறுத்தப்படுவது சிறப்பு. 'ஓபன் ஸ்டிரீட் மேப்' சேவையைப் பயன்படுத்தி இது உருவாக்கப்பட்டுள்ளது. இணைய முகவரி: https://travel.sygic.com/en

விற்பனைக்கு வந்தது அயன்மான் சூட்

ஹாலிவுட் சினிமாவின் கற்பனை கதாபாத்திரமான ஐயன் மேன் மார்வெல் காமிக் புத்தகங்கள் மற்றும் பல்வேறு திரைப்படங்களின் மூலம் நம்மை மகிழ்வித்து வருகிறது.

திரைப்படம் மற்றும் காமிக் புத்தகங்களின் படி பணக்கார வியாபாரி ஒருவர் அதிநவீன சூட் ஒன்றை உருவக்கி உலகம் எதிர்நோக்கும் ஆபத்துக்களில் இருந்து மக்களை காப்பாற்றும் வகையில் ஐயன் மேன் கதாபாத்திரம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

உலக பிரபலமாக இருக்கும் ஐயன் மேன் கதாபாத்திரத்தை தழுவிய நிஜ வாழ்க்கையில் பயன்படுத்தக்கூடிய ஐயன் மேன் போன்ற சூட் ஒன்றை வியாபாரி ஒருவர் உருவாக்கி இருக்கிறார். ரிச்சர்டு பிரவுனிங் எனும் தொழிலதிபர் ஐயன் மேன் போன்று இயங்கும் சூட் ஒன்றை உருவாக்கியதை நாம் அறிந்திருப்போம்.

இந்த உடை தற்சமயம் லண்டனில் விற்பனைக்கு வந்திருக்கிறது. லண்டனில் இயங்கி வரும் விற்பனையகத்தில் இந்த உடையின் விலை 3,40,000 பவுன்ட்கள் (இந்திய மதிப்பில் ரூ.3,04,76,290) என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஏழு சூட் மட்டுமே விற்பனைக்கு வந்திருக்கிறது. 3ஈ ப்ரின்ட் செய்யப்பட்ட பாகங்கள் மற்றும் மின்சார இணைப்புகள் கொண்ட சூட் மொத்த எடை 27 கிலோ ஆகும்.

ஜெட் ஃபியூயல் அல்லது டீசல் மூலம் இயங்கும் இந்த பறக்கும் சூட் மணிக்கு 32 மைல் (51 கிலோமீட்டர்) வேகத்தில் செல்லும். வானில் அதிகபட்சம் 12,000 அடி வரை பறக்கும் திறன் கொண்டிருக்கிறது. எனினும் ரிச்சர்ட் பிரவுனிங் பாதுகாப்பு காரணங்களுக்காக தரையில் இருந்து சில மீட்டர்கள் உயரத்தில் பயன்படுத்துகிறார்.

கிராவிட்டி இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தை துவங்கி, மனிதர்களை காற்றில் பறக்கச் செய்யும் உடையை ரிச்சர்ட் கண்டறிந்தார். திரைப்படங்களில் வருமளவு அதிநவீன வசதிகள் இன்றி, இன்றைய காலத்துக்கு ஏற்ப முதற்கட்டமாக மனிதர்களை காற்றில் பறக்க வைக்கும் திறனை இவர் கண்டறிந்து இருக்கும் சூட் வழங்குகிறது.

டேடுலஸ் மார்க் 1 (Daedalus Mark 1) என பெயரிடப்பட்டிருக்கும் இவரது ஐயன் மேன் போன்ற சூட் ஆறு மினியச்சர் ஜெட் இன்ஜின்களை கொண்டிருக்கிறது. இந்த இன்ஜின்கள் மனிதர்களை செங்குத்தாக காற்றில் பறக்க வைக்கிறது. இவர் தனது சூட்டில் பொருத்தியிருக்கும் இன்ஜின்களின் மொத்த செயல்திறன் 1,001 ஹெச்பி என கணக்கிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் இவரது சூட் புகாட்டி வெரான் மாடல் காரில் உள்ளதற்கு இணையான செயல்திறன் வழங்குகிறது. சூட் பறக்கும் வேகம், திசை உள்ளிட்டவற்றை கைகளாலேயே கட்டுப்படுத்த முடியும் என்றும், எரிபொருள் பயன்பாடு மற்றும் இதர தகவல்கள் இவரது ஹெல்மெட் திரையில் தோன்றுகிறது.

உலகில் அதிவேகமாக செல்லும் திறன் படைத்த ஜெட் இன்ஜின் கொண்ட சூட் என கின்னஸ் சாதனை படைத்திருக்கும் டேடுலஸ் மார்க் 1 மணிக்கு 51.53 கிலோமீட்டர் வரை செல்லும் திறன் கொண்டதாக சான்று அளிக்கப்பட்டு இருக்கிறது.

எனினும் இவரது பறக்கும் சூட் மணிக்கு அதிகபட்சமாக 320 கிலோமீட்டர் வரை செல்லும் என்றும் ஆயிரம் அடிகளுக்கு கீழ் தொடர்ச்சியாக பத்து நிமிடங்களுக்கு பறக்க முடியும் என ரிச்சர்டு பிரவுனிங் தெரிவித்துள்ளார். மேலும் பாதுகாப்பு காரணங்களுக்காக வேகம் மற்றும் பறக்கும் உயரம் கட்டுப்படுத்தப்பட்டு இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கணவனின் பழைய வாழ்க்கையால் பிரச்சினையா?

உங்களின் பழைய வாழ்க்கையை உங்கள் காதலி அல்லது மனைவியிடம் மறைக்கவே செய்வீர்கள். ஆனால் அந்த பழைய வாழ்க்கை பற்றி உங்கள் துணைவிக்கு தெரியவரும் போது அது குடும்பத்தில் பலவிதமான பிரச்சனைகளை உண்டாக்கும். எனவே மனைவியிடம் எதையும் மறைக்க கூடாது.

உங்களின் பழைய உறவுகள் பற்றி ஒரு நாள் உங்கள் மனைவிக்கு தெரிய வரும் போது, இனியும் அவர் எதையும் பொறுக்க மாட்டார். உங்கள் மீது சந்தேகப்பட ஆரம்பித்து விடுவார். தான் அவமதிக்கப்பட்டு விட்டதாக கருதுவார். உங்கள் உறவின் வருங்காலத்தின் மீது பாதுகாப்பின்மையை உணர்வார். உங்கள் பழைய வாழ்க்கையை பற்றி அவர்களாகவே கண்டுபிடித்து விட்டால், உங்களை விட்டு நிரந்தரமாக பிரியவும் வாய்ப்புள்ளது. முதலில், நீங்கள் அவர் மீது உண்மையான காதலை கொண்டிருந்தால், ஏன் அவரிடம் இருந்து எதையும் மறைக்க வேண்டும்?

அவர் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? உங்கள் கடந்த காலத்தை அவர் மன்னித்து உங்களை ஏற்றுக் கொள்வார் என்ற நம்பிக்கை இல்லையா உங்களுக்கு? உங்கள் உறவின் மீது நீங்கள் உண்மையிலேயே மரியாதை வைத்திருந்தால், உங்கள் வாழ்க்கையில் நடந்துள்ள நல்லது, கெட்டது மற்றும் மோசமான அனைத்து கடந்த கால நிகழ்வுகளையும் அவரிடம் தைரியமாக கூறுங்கள்.

உங்கள் கடந்த காலத்தை உங்கள் மனைவி மன்னித்தாலும் கூட, இனி எந்த பெண்ணிடமும் நெருங்கி பழக அனுமதிக்க மாட்டார். அதற்கு காரணம் உங்கள் குணத்தின் மீது அவர் சந்தேகப்பட தொடங்குவார். ஆனால் அவராக அறிவதற்கு முன்பு, நீங்களே உங்களின் கடந்த காலத்தை பற்றி அவரிடம் சொல்லி விட்டால், உங்களின் வெளிப்படையை எண்ணி அவர் அசந்து போவார். அதனால் எதையும் மறைத்து மாட்டிக் கொள்ளாதீர்கள்.

குழந்தைகளின் ஸ்மார்ட் போன் பழக்கமும் பெற்றோர்களின் பங்கும்

சில வீடுகளில் குழந்தைகளிடம் ஸ்மார்ட்போனை பயன்படுத்த கொடுக்கிறார்கள். இதனால் அவர்களின் சுபாவம், நடத்தை எல்லாம் பெருமளவில் மாற்றம் அடையும். போனில் வீடியோகேம்ஸ் விளையாடிப் பழகி, அதற்கு அடிமையாகி விடுவார்கள். ஒரே இடத்தில் உட்கார்ந்து கேம்ஸ் விளையாடுவார்கள்.

இயற்கையான விளையாட்டுகளின் மீது உள்ள மோகம் குறைந்துவிடும். பருமன் பிரச்னையும் ஏற்படும். அதனால் குழந்தைகளிடம் ஸ்மார்ட் போனை கொடுக்கும் போது ***Flight mode***ல் கொடுக்க வேண்டும். அப்போது கேம்ஸ் போன்ற சில ஆப்ஷன்களை பயன்படுத்த முடியாது.

குழந்தைகளை ஸ்மார்ட்போன் பழக்கத்திற்கு அடிமையாக பெற்றோர் எந்த வழிகளில் காரணமாக இருக்கிறார்கள் என்று பார்க்கலாம்.

★ குழந்தைகள் ஸ்டைலாக செல்போன் பிடித்துப் பேசுகிறார்கள் என்பதற்காக பிஞ்சுப் பருவத்திலேயே அவர்களிடம் போனைக் கொடுப்பது தான் தவறின் அடிப்படை.

★ தூரத்தில் இருக்கும் தந்தையுடனும், உறவுகளுடனும் பேசுகிறார்கள் என்று போனை கொடுத்துப் பேசப் பழக்குவது பெற்றோர் செய்யும் பெரும் தவறு. இவையே தவறான பழக்கத்திற்கு அடிகோலுகிறது.

★ அழும் குழந்தைகளை சமாதானப்படுத்துவதாகவும், வேடிக்கை காட்டி உணவு ஊட்டுவதற்காகவும் ஸ்மார்ட்போன்களை அவர்களின் கைகளில் கொடுப்பதும் குழந்தைகள் ஸ்மார்ட்போன் அடிமைகளாகக் காரணம். ரைம்ஸ் கற்கிறார்கள் என்று போனைக் குழந்தைகளிடம் கொடுப்பதும் இந்த வகைத் தவறுதான்.

★ செயல்பாடு இல்லாத குழந்தைகள்தான் சேட்டை செய்யும். குழந்தைகளின் சேட்டைகளை குறைப்பதற்காக அவர்களின் கைகளில் செல்போன்களைக் கொடுத்து அவர்களை சேற்றில் மூழ்க வைத்துவிடாதீர்கள்.

★ குழந்தைகளின் கண்முன்னே பெற்றோர் அதிக நேரம் செல்போன் பயன்படுத்துவதை தவிர்த்தால் அவர்களும் அந்த அடிமைத்தனத்தில் இருந்து விடுபடுவார்கள் என்பதுதான் நிபுணர்கள் தரும் முதலும், முடிவுமான அறிவுரை. பெற்றோரின் பழக்க வழக்கத்தில் இருந்தே குழந்தைகள் பெரும்பாலான விஷயங்களை கற்றுக் கொள்கிறார்கள். எனவே உங்கள் குழந்தைகளை ஸ்மார்ட்போன்களிடம் இருந்து விடுவிப்பது பெற்றோரான உங்கள் கைகளில்தான் இருக்கிறது.

கூந்தல் விடயத்தில் அறியாமல் செய்யும் தவறுகள்

தலைக்கு குளிக்கும்போது அதிக வெப்ப நிலையில் உள்ள தண்ணீரைக் கொண்டு முடியை அலசுவது தவறு. ஏனெனில் உங்கள் முடி அதிகம் சேதமடையும். அத்துடன் முடிகளில் வெட்டுக்களையும் ஏற்படுத்தும். எனவே மிதமான சூட்டில் உள்ள நீரை பயன்படுத்த வேண்டும்.

conditioner பயன்படுத்தும் போது, முடியின் நடுப்பகுதியில் இருந்து கீழ்பகுதி வரை பயன்படுத்துவது நல்லது. ஏனெனில், அடிப்பகுதியில் உள்ள முடிகள் வெகு நாட்களுக்கு முன்பே வளர்ந்த ஒன்றாகும். எனவே அவற்றை மட்டும் நீங்கள் **conditioner** செய்தால் போதுமானது. மேலும் உங்கள் முடிக்கு தேவையான அளவு மட்டும் **conditioner**உபயோகிப்பது சிறந்தது.

ஈரமான கூந்தல் கனமானதுடன் மிகவும் மென்மையானது. எனவே, அப்போது நீங்கள் கூந்தலை வாரும் போது உடைந்து விடும். ஆகையால், நீங்கள் குளித்து முடித்து கூந்தல் உலர்ந்த பிறகு வார வேண்டும். அல்லது குளிக்க செல்லும் முன்பு வாரலாம்.

உங்கள் உடலுக்கு ஒரு துண்டையும், தலைமுடிக்கு ஒரு துண்டையும் பயன்படுத்துங்கள். உங்கள் முடியை தலைகீழாக அல்லது வல துபுறமாக போட்டு துவட்டுவது நல்லது. இவ்வாறு செய்வதன் மூலம் முடியில் உள்ள ஈரம் விரைவில் வெளியேறிவிடும்.

ஈரமான தலைமுடியை பின்னல் போடக் கூடாது. சிறிது சீரம் பயன்படுத்திவிட்டு, சற்று காய்ந்த பிறகு ஒரு தளர்வான பின்னல் பின்னிக் கொள்ளலாம்.

குறைந்தது மூன்று அல்லது 6 மாதங்களுக்கு ஒரு முறை உங்கள் முடியின் அடிப்பகுதியை வெட்டுவது அவசியம். இது பூச்சிவெட்டுகளை அகற்ற உதவும். ஆனால், மற்ற முடி வெட்டும் முறைகளை கையாள்வது தவிர்க்க வேண்டும். குறிப்பாக வீட்டில் அதனை செய்வது தவறு.

காஜலை நீக்க இலகு வழிகள்

பெண்கள் அழகுக்காக பயன்படுத்தும் பொருட்களில் ஒன்றுதான் காஜல். அவ்வாறு தினமும் காஜலைப் பயன்படுத்தும் பெண்கள் ஒரு நாள் அதனை பயன்படுத்தவில்லை என்றாலும், பார்க்க ஏதோ ஒன்று குறைந்தது போல் காணப்படுவர். சிலசமயங்களில் அந்த காஜலை போட்டவர்கள் சரியாக அதனை நீக்காமல் இருப்பதும் கருவளையத்திற்கு காரணம். அதனாலேயே நிறைய பெண்களுக்கு கருவளையம் வந்துவிட்டது போன்று காணப்படுகிறது.

ஆகவே அத்தகைய காஜலை சரியாக நீக்குவதற்கு ஒரு சில டிப்ஸ் இருக்கிறது. அவை இதோ

★ தினமும் முகத்தை கிளின்சிங் மில்க்கை வைத்து கழுவ வேண்டும். இதுவும் மேக்கப்பில் ஒரு வித பகுதி தான். அதிலும் முகத்திற்கு என்னதான் மேக்கப் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ போட்டாலும், கிளின்சிங் மில்க்கால் கழுவ வேண்டும். அதிலும் காஜலை எளிதாக நீக்குவதற்கு, கிளின்சிங் மில்க்கை முகத்திற்கு தடவி, முகம் மற்றும் கண்களுக்கு நன்கு மசாஜ் செய்ய வேண்டும். பின் அதனை ஒரு காட்டனை வைத்து, துடைத்து எடுக்க வேண்டும். இதனால் முகத்தில் இருக்கும் காஜல் வருவதோடு, அழுக்குகளும் வந்துவிடும். இல்லையெனில் மேக்கப் ரிமூவல் க்ரீம் என்று விற்கப்படும் கிரீமையும் பயன்படுத்தி நீக்கலாம்.

★ காஜல் பயன்படுத்தியதால் ஏற்படும் கருவளையத்தை தடுப்பதற்கு, தினமும் படுப்பதற்கு முன், எண்ணெயை வைத்து நன்கு மசாஜ் செய்து, தூங்க வேண்டும். அவ்வாறு மசாஜ் செய்ய பயன்படுத்தும் எண்ணெய் ஆலிவ் அல்லது ஆமணக்கெண்ணெயை பயன்படுத்தினால் நல்லது. இவ்வாறு எண்ணெயை பயன்படுத்தினால், கண் இமைகள் நன்கு வளர்வதோடு, காஜலும் எளிதில் நீங்கும். வேண்டுமென்றால், எண்ணெயை பயன்படுத்தி மசாஜ் செய்ததும், ஒரு காட்டனை வைத்து துடைத்துவிட்டு, பின் ஃபேஸ் வாஷை பயன்படுத்தலாம்.

★ வாஸ்லினை பயன்படுத்தி கண்களுக்கு அடியில் சிறிது நேரம் மசாஜ் செய்து, பின்னர் காட்டனை வைத்து, துடைக்க வேண்டும். இதனால் காஜல் எளிதில் நீங்கிவிடும்.

ஆகவே மேற்கூறியவாறெல்லாம் செய்தால், காஜல் எளிதில் நீங்குவதோடு, கருவளையம் ஏற்படாமலும் இருக்கும்.

பெண்கள் வீட்டு உபயோகப் பொருட்களை சுத்தமாக வைத்திருக்க எளிய முறைகள்...

மிக்ஸி, ஃபிரிட்ஜ், வாஷிங் மெஷின், மைக்ரோ அவன், ஏசி, டிவி என்று எந்த வீட்டு உபகரணங்களையும் எவ்வளவு உபயோகப்படுத்துகிறோமோ அந்த அளவிற்கு அவற்றை சுத்தமாக வைத்துக் கொள்வதும் அவசியம். இது போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை எளிய முறையில் எவ்வாறு சுத்தமாக வைத்துக் கொள்ளலாம் என்பதைப் பார்ப்போம்.

ஃபிரிட்ஜ்

365 நாட்களும் 24 மணி நேரமும் வேலை செய்யும் ஒரு பொருள் என்றால் அது ஃபிரிட்ஜ் ஆகத்தான் இருக்கும். பல பேர் வீடுகளில் இந்தப் பொருளானது சுத்தம் செய்யப்படாமல் மிகவும் மோசமாக இருப்பதைப் பார்க்கலாம்.

ஒரு மென்மையான நன்கு பிழியப்பட்ட ஈரத்துணியால் ஃபிரிட்ஜின் வெளிப்பாகத்தைத் துடைக்க வேண்டும். உட்புறத்தை மிகவும் மைல்டான டிடர்ஜெண்ட் பவுடரை உபயோகப்படுத்தி உள்ளே படிந்திருக்கும் உணவுப் பொருள், கறைகளைத் துடைக்கலாம். மேலும், உள்ளிருக்கும் கண்ணாடி, பிளாஸ்டிக் ட்ரேகளை கவனமாக அகற்றி குழாய் நீரில் கழுவி சுத்தப்படுத்த வேண்டும். அதேபோல், வேக்யூம் கிளனரை கொண்டு ஃபிரிட்ஜின் பின்புறம் படிந்திருக்கும் ஒட்டடை, தும்பு தூசுகளை வருடம் ஒரு முறையாவது சுத்தம் செய்ய வேண்டும்.

ஃபிரிட்ஜை சுத்தம் செய்த பிறகு அறிந்த எலுமிச்சை அல்லது சிறிய கரித்துண்டை உள்ளே வைத்தால் அவை தேவையற்ற நாற்றம் ஏற்படுவதைத் தவிர்க்கும். அதை நேரத்தில் ஃப்ரீஸர் பகுதியையும் துடைத்து சுத்தம் செய்து பின்பு இயக்கலாம். எந்தப் பொருளையும் வாரம் ஒரு முறை சுத்தம் செய்யும் பொழுது, அதிக அழுக்குகள் சேராது, சுத்தம் செய்யும் வேலையும் எளிதாகி விடும்.

மிக்ஸி

எல்லோர் வீட்டிலும் உழைத்துப் பலவித கறைகளையும் தாங்கி நிற்கும் ஒரு போர்வீரன் என்றால் அது மிக்ஸிதான். மிக்ஸியின் வெளிப்புறக் கறைகளை பேக்கிங் பவுடர் மற்றும் வினிகர் கலந்த கரைகளைக் கொண்டு துடைத்து 15-லிருந்து 20 நிமிடங்கள் கழித்து தண்ணீர் கொண்டு துடைக்கலாம்.

மிக்ஸி ஜாருக்குள் இருக்கும் கறைகளை நீக்க கல் உப்பை சிறிது போட்டு அடித்து பின்பு ஜாரைக்க ழுவும் பொழுது அதில் ஒட்டியிருக்கும் தேவையற்ற துகள்கள் வந்துவிடும். அதேபோல் இஞ்சி பூண்டு விழுது அரைத்த பிறகு ஏற்படும் வாசத்தைப் போக்க எலுமிச்சை தோலை மிக்ஸியில் அரைத்து 15-20 நிமிடம் கழித்து அந்த ஜாரைக் கழுவும் பொழுது அதிலிருக்கும் தேவையற்ற நாற்றம் நீங்குவதோடு ஜாரும் பளிச் சென்றிருக்கும்.

மைக்ரோவேவ் அவன்

மைக்ரோவேவ் அவனைச் சுத்தப்படுத்துவதற்கு முன், அதன் கையேட்டில் குறிப்பிட்டிருக்கும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் படித்து பின்னர் சுத்தம் செய்யத் தொடங்கவும். ஒரு கிண்ணம் நீரில் சிறிது வினிகரைக் கலந்து, அதை மைக்ரோ அவனில் 2 நிமிடங்கள் வைத்து சூடாக்கவும். அதை 15-20 நிமிடங்கள் அதனுள்ளேயே வைத்து மூடி விடவும். பின்பு ஒரு ஈரமான துணியால் அதனுள்ளே துடைக்கும் பொழுது அங்கிருக்கும் பிசுக்கு மற்றும் உணவுப் பொருள் படிவுகள் மிக எளிதாக நீங்குகின்றது.

தலைமுடியை நீரில் அலசுவதில் மிகுந்த கவனம் தேவை. அதிக அளவில் அலசினால், முடியின் தன்மை சுத்தமாக மாறிவிடும். அதாவது முடி உடையக்கூடியதாக மாறிவிடும். அதேபோல் குறைந்த அளவு அலசும்போது, அழுக்குகள் வெளியேறாமல் மேலும் அழுக்குகளை உள்வாங்கி எண்ணெயுடன் மாறுகிறது. எனவே, வாரத்தில் மூன்று முதல் நான்கு முறை **Shampoo**-வை உபயோகித்து தலை முடியை அலசலாம்.

உதட்டை சுற்றியுள்ள கருமையை போக்கும் வீட்டு வைத்தியம்

பொதுவாக சிலருக்கு வாய்ப்பகுதியை சுற்றி கருமையடைந்து காணப்படுவதுண்டு. இது முக அழகினை கெடுத்து விடுகின்றது. வாயின் அருகே மென்மையான தன்மை என்பதால் சூரிய ஒளிபடும்போது மெலனின் ஹார்மோன் விரைவில் தூண்டப்பட்டு கருமையடையச் செய்துவிடும்.

இதனை கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டால் இறந்த செல்கள் அங்கே குவிந்து, அந்த கருமையை போகவிடாமல் செய்துவிடும். இதனை நாம் சமையலறை பொருட்களை கொண்டு சரி செய்ய முடியும். தற்போது

தேவையான பொருட்கள்:

ஓட்ஸ் - 1 டீஸ்பூன்
தக்காளி சாறு - 1 டீஸ்பூன்
தயிர் - அரை டீஸ்பூன்

செய்முறை:

தக்காளி பெரிய துவாரங்களை சுருக்க செய்யும். அழுக்குகள், செல்கள் தங்காது. அதோடு நிறத்தையும் வெளுக்கச் செய்யும் குணமுண்டு. தயிர் ஈரப்பதத்தை அளிக்கும், கருமையையும் நீக்கும்.

ஓட்ஸ் இறந்த செல்களை நீக்கும் இயற்கையான ஸ்க்ரப். சுருக்கங்களை நீக்கி முகத்தை பொலிவுறச் செய்யும்.

ஓட்ஸை பொடி செய்து அதனுடன் தக்காளி சாற்றினையும், தயிரையும் கலந்து முகத்தில் குறிப்பாக வாயை சுற்றிலும் போடுங்கள்.

15 நிமிடங்கள் கழித்து, குளிர்ந்த நீரில் கழுவுங்கள். விரைவில் பலன் கிடைக்க, வாரம் மூன்று முறையாவது போடுங்கள்.

முதுகில் இருக்கும் கருமையை போக்கும் சூப்பர் டிப்ஸ்

சில பெண்களுக்கு பொதுவாக முகம் வெள்ளையாக காணப்படும். ஆனால் முதுகு கருப்பாக காணப்படும். இதற்கு காரணம் கை, கால்களின் அழகை பராமரிக்கும் நாம் முதுகை கணக்கிலேயே எடுத்துக்கொள்வதில்லை. அந்தவகையில் இதற்கு பல இயற்கை வழி முறைகள் உள்ளன. அவற்றில் சிலவற்றை பார்ப்போம்.

★ தேன் மற்றும் எலுமிச்சை இரண்டையும் நன்றாக கலந்து உங்களது முதுகுப் பகுதி முழுவதும் பூசுங்கள். இதனை அரை மணி நேரம் விட்டுவிட்டு பின்னர் சோப்பு போடாமல் குளித்து விடுங்கள். இதனை இரவு நேரத்தில் செய்ய வேண்டும். ஏனெனில் இதனை செய்த பிறகு நீங்கள் வெயிலில் போக கூடாது.

★ தேன், கடலை மாவு, மஞ்சள் தூள் ஆகிய மூன்றையும் ஒன்றாக கலந்து முகம் மற்றும் உடலுக்கு பேக் போட்டுக்கொள்ளுங்கள். இதனை 20 நிமிடங்கள் கழித்து கழுவி விடுங்கள். இது உடலில் இருக்கும் கருமையை நீக்கி பொலிவை தரக்கூடியது.

★ விட்டமின் இ கேப்சூல், கடல் உப்பு, தேன் ஆகியவை சேர்ந்த கலவையை எடுத்து உடலுக்கு நன்றாக தேய்த்து குளிக்கவும். இவ்வாறு செய்வதால் மேனி இழந்த பொலிவை திரும்ப பெற்று, கூடுதல் நிறம் பெறும். விட்டமின் இ கேப்சூல் மருந்துக்கடைகளில் கிடைக்கும்.

★ தக்காளி மற்றும் எலுமிச்சை சாறு நன்றாக தேய்த்து, 20 நிமிடங்கள் கழித்து கழுவி விட வேண்டும். இதனை அடிக்கடி செய்தால் மிகச்சிறந்த பலன் கிடைப்பது உறுதி.

★ ஆரஞ்சு தோலை காய வைத்து பவுடர் ஆக்கி கொள்ளலாம். அல்லது கடைகளில் கிடைக்கும் ஆரஞ்ச் பவுடரையும் பயன்படுத்தலாம். இந்த பவுடரை ரோஸ் வாட்டர் உடன் கலந்து அப்ளை செய்து சிறிது நேரம் அப்படியே விட்டு வாஷ் செய்தால் கருமை நீங்கும்.

இயற்கையின் தீர்ப்பு

மலையிலிருந்து சலசலவென அருவி விழுந்து வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அந்த பகுதி உயரமான மரங்களும், அடர்த்தியான புல்வெளியுமாக இருந்தது. அங்கங்கு வண்ணபூக்கள் பூத்து காற்றில் தலையசைத்துக் கொண்டிருந்தன. அந்த அழகான பகுதியில் எல்லா விலங்குகளும் ஒன்று கூடி யாருக்காகவோ காத்திருந்தன.

திடீரென்று மின்னலொன்று வெட்டியது. அந்த இடம் முழுவதும் பிரகாசமானது. ஜொலிக்கும் வண்ண உடையில், தலையில் கிரிடமும் கையில் மந்திரக் கோலுடனும், சிறகடித்து பறந்து வந்து தரை இறங்கினாள் தேவதை. எல்லா விலங்குகளும் வணங்கின. என்னை அழைத்ததற்கான நோக்கம் என்ன? என்று கேட்டது தேவதை.

கூட்டத்தின் நடுவே தும்பிக்கையை தூக்கி பிளிறிக்கொண்டு வந்த யானை தேவதையே வணக்கம், இப்ப என்ன நடக்குதுன்னு தெரியுமா? இந்த மக்கள் உயரமா இருக்கிற மரங்களையும், காடுகளையும் அழிச்சுக்கொண்டே வர்றாங்க. இப்படியே போனா காடே இல்லாமல் போயிரும், இத தடுக்கணும் தேவதையே என்றது.

ஓடிக்கொண்டிருந்த தண்ணீரிலிருந்து குதித்து வந்தது ஒரு குட்டி மீன் தேவதையே நீர் நீராவே இல்ல. எல்லாம் கறுத்துப் போச்சு. இப்ப தண்ணீர் ஒடுறது இல்ல, சாக்கடையும், தொழிற்சாலை கழிவும் கலந்து ஒடுது என்றது.

அடுத்து வந்தது குயிலக்கா, நான் பாடுறதுக்கு முன்னாடி, தோட்டம், தோப்பெல்லாம் இருந்தது. ஆனா இன்னைக்கு அதெல்லாம் குறைச்சிருக்சு, அப்படியே பாடினாலும் என் பாட்டு கேட்கிறது இல்ல, ஒரே இரைச்சல் சத்தமா தான் கேட்குது என்றது.

இப்படி ஒவ்வொரு விலங்குகளும் தங்களது குறைகளை கூற, அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தாள் தேவதை.

இறுதியாக இயற்கை பாதுகாக்க வேண்டும் என்று எல்லா விலங்குகளும் ஒருமித்த குரலில் கூறின. நான் பார்த்து கொள்கிறேன் என்று சிறகடித்து தேவதை கிளம்பினாள்.

மறுநாள் அந்த நாட்டு அரசனின் கனவில் தோன்றினாள். தோன்றி தனது ஐந்து விரல்களை காட்டினாள். பின் கடைசி இரண்டு விரல்களை மடக்கினாள். மீதியுள்ள முதல் மூன்று விரல்களையும், பாதுகாப்பாக வைத்து மறைத்தாள்.

இரவில் கண்ட கனவிற்கு அர்த்தம் தெரியாமல் குழம்பிப் போனான் அரசன். ஊரில் உள்ள அனைவரையும் அழைத்து விளக்கம் கேட்டான். யாருக்கும் தெரியவில்லை.

கடைசியாக ஒரு பெரியவர் விளக்கம் சொன்னார். 5 விரல் - ஐம்பூதம் (நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம்) கடைசி இரண்டை தவிர்த்து விட்டால், மீதியுள்ளது நீர், நிலம், காற்று தான். இம் மூன்றும் கெட்டுப்போகாமல் பாதுகாக்க வேண்டியது உன் கடமை என்றார்.

அரசனும், அமைச்சர்களும் ஒன்று கூடி பல்வேறு திட்டங்களை தீட்டினர்.

காடுகள் அழிப்பதை தடுப்பது. ஆபத்து தரும் தொழிற்சாலைகளை மூடுவது. பிளாஸ்டிக் பொருளை தவிர்ப்பது. நச்சு காற்று வெளியேறுவதை நிறுத்துவது, இரைச்சலை குறைப்பது, அணு ஆயுதத்தை எதிர்ப்பது என முடிவு செய்தனர்.

சில நாட்கள் கழித்து, சில அமைச்சர்கள் நமது திட்டத்தை நிறைவேற்றினால், நமது நாடு வளர்ச்சியில் பின்னால் போய் வீடும். அறிவியல் வளர்ச்சி பெறாது என்றனர். அரசன் யோசிக்க ஆரம்பித்தான், நீண்ட நேரத்துக்கு பிறகு தேவதை கூறியதை விட்டுவிடுவோம் என முடிவு செய்தான்.

சில ஆண்டுகளில் நாடு நவீனமயமானது, வளர்ச்சி பல மடங்கானது. மக்கள் அறிவியல் வளர்ச்சியால் மாறிப் போயிருந்தனர். ஆனால் இயற்கை வளம் குறைந்து கொண்டே வந்தது.

பால் போல ஓடிய தண்ணீர், சாக்கடையும் தொழிற்சாலை கழிவுமாக ஓடியது.

குடியிலோசை கேட்ட காற்றில், காதை கிழிக்குமளவு இரைச்சலாக இருந்தது.

ஆலமரமும், வேல மரமும் நின்ற இடத்தில், உயர உயரமான கட்டிடமும் மாளிகையுமாக இருந்தது.

சிலமக்கள் மட்டும் வீடுகளில் மழைநீர் சேகரிப்பு, மரம் வளர்ப்பது, பிளாஸ்டிக் தவிர்ப்பு, விவசாயிகளுக்கு முன்னுரிமை, நீர் நிலை பாதுகாப்பு என இயற்கையை நேசித்தனர்.

நாட்கள் செல்ல செல்ல இயற்கை மிகவும் மோசமானது. தேவதை அரசனிடம் சென்று எச்சரித்தாள். அரசன் அதை கண்டுக்கொள்ள வில்லை. நாட்டில் மழை பெய்வது கொஞ்ச கொஞ்சமாக குறைந்தது. தண்ணீர் பற்றாக்குறையானது. நாடு வறண்டு போனது. புதுப்புது நோய்கள் வந்தது. அரசனும், மக்களும் அளவுக் கதிமாக கஷ்டப்பட்டனர். திடிரென்று பெருமழை பெய்தது. நாடு முழுவதும் தண்ணீராக நிரம்பியது, மக்கள் அனைவரும் தண்ணீரில் தத்தளித்தனர்.

அந்நேரம் சிறகடித்து பறந்து வந்த தேவதை இயற்கையை நேசித்தவர்களை மட்டும் தூக்கி சென்றது. வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த அரசன், காப்பாத்துங்க... காப்பாத்துங்க என்று கத்தினான். தேவதை அவனை கண்டு கொள்ளவில்லை. கடைசியாக தேவதை அவனைப் பார்த்து சொன்னது

கடவுள் எப்போதும் மன்னிப்பார்
மனிதன் எப்போதாவது மன்னிப்பான்
ஆனால்,
இயற்கை ஒருபோதும் மன்னிக்காது, தண்டித்து விடும் என்றது.

இயற்கையை பாதுகாக்க தவறியது என்னுடைய தவறுதான் என்று உயிரை விட்டான் அரசன். இயற்கையை பாதுகாக்க தவறிய அனைவரும் அழிந்து போனார்கள்.

கணினி சார்ந்த பொது அறிவு

கணினி பற்றிய பொது அறிவை தெரிந்து கொள்ளுங்கள்.....

★ இன்டர்நெட்டின் தந்தை என்று அழைக்கப்படுபவர் - வின்ட் ஸர்ப்

★ www (World wide web) என்னும் இன்டர்நெட் தாரக மந்திரத்தை உருவாக்கியவர் - திமோத்திஜான் பெர்னர்ஸ்லீ. இதன் துவக்க பெயர் Enquire

★ கணினி வழி தகவல் பரிமாற்றத்தில் புன்னகை தவழும் முகம் என்பதை குறிக்க :-

எனும் கூறியீடு பயன்படுத்தப்படுகிறது. இதை முதன் முதலாக 1982ல் பயன்படுத்தத் துவங்கியவர் - ஸ்காட் பால்மன்

★ கூகுள் தேடுபொறியை உருவாக்கியவர்கள் - லாரிபேஜ், ஸ்சேர்கி பிரின்

★ விகிபீடியா வலைதளத்தை உருவாக்கியவர் - ஜிம்மி வேல்ஸ்

★ பேஜ்மேக்கர் எனும் பப்ளிஷிங் சாப்வேரை உருவாக்கியவர் - பால் பிரெயினார்ட், இவர் இந்தியாவின் சூப்பர் கம்ப்யூட்டர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

★ சி++ எனும் கணினி மொழியை வடிவமைத்தவர் - பியான் ஸ்ட்ரூ ஸ்டெரெப்

★ MS-Dos எனப்படும் கணினி நிரலை உருவாக்கியவர் - டிப் பாட்டர்ஸன்

★ ஆப்பிள் கணினியை துவக்கியவர் - ஸ்டீவ் வோஸ்னியாக்

★ CD என்ற குறுந்தகடை கண்டுபிடித்தவர் - ஜேம்ஸ் ரஸ்ஸல்

★ Vital Information Resources Under Seas எனும் கணினி வார்த்தையின் சுருக்கம் தான் VIRUS

★ Commonly operated machine purposely used for trade and Engineering research என்பதன் சுருக்கம் தான் COMPUTER

★ கணினி மவுஸை கண்டுபிடித்தவர் - டக்ளஸ் எங்கல்பர்ட்

★ Uniform Resource Location என்பதன் சுருக்கம் தான் URL முகவரியாகும்.

சிந்திக்காத சுண்டெலிகள்

ஒரு வீட்டில் மூன்று சுண்டெலிகள் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் அவைஎண்ணெய் திருடிக் குடிக்க விரும்பின. சமையல் அறையில் ஒரு பெரிய பாத்திரத்தில் எண்ணெய் இருப்பதை அவை அறிந்தன.

மூன்று சுண்டெலிகளும் அந்தப் பாத்திரத்தின் மேலே ஏறின. அந்தப் பாத்திரம் உயரமாக இருந்தது. எண்ணெய் அந்தப் பாத்திரத்தில் அடியில் ஆழமான இடத்தில் இருந்தது.

மூன்று சுண்டெலிகளும் எண்ணெயை எப்படிக் குடிப்பது எனச் சிந்தித்தன. அவை ஒரு திட்டம் தீட்டின.

ஒரு சுண்டெலியின் வாலை இன்னொரு வாயால் கௌவிக் கொண்ட சங்கிலித் தொடர் போல பாத்திரத்தின் அடிப்பகுதியை அடைந்து எண்ணெய் குடிப்பது என அவை முடிவெடுத்தன.

முதலில் இறங்கிய எலி முதலில் குடிப்பது என்றும், இப்படியே ஒவ்வொரு சுண்டெலியும் ஒன்றுக்கு ஒன்று உதவி, மாறி மாறி எண்ணெய் குடிப்பது என்றும் அவை தங்களுக்குள் உறுதி கூறிக் கொண்டன. அடியில் தொங்கிய முதல் சுண்டெலி எண்ணெயை வயிராறக் குடித்துக் கொண்டே இருந்தது.

நடுவில் இருந்த சுண்டெலி இதைப் பார்த்தது. எண்ணெய் கொஞ்சம்தான் இருக்கின்றது. முழுவதையும் அதுவே குடித்து விடும் போலிருக்கிறதே! என்று கவலைப்பட்டது.

ஆகவே நடுவில் இருந்த அந்தச் சுண்டெலி, முதலில் இறங்கிய எலியின் வாலை விட்டு விட்டு, தான் கீழே குதித்து எண்ணெய் குடிக்கலாம் என்று எண்ணியது.

மேலே இருந்த சுண்டெலி, மற்றைய இரண்டும் குடித்த பிறகுதானே எனக்குக் கிடைக்கும். இருக்கின்ற கொஞ்ச எண்ணெயையும் அவை இரண்டும் குடித்து விட்டால் என்ன செய்வது? என்று கவலைப்பட்டது.

நான் அதன் வாலை விட்டு விட்டு பாத்திரத்தில் குதித்தால் தான் எனக்கு எண்ணெய் கிடைக்கும்! என்று மேலே இருந்த சுண்டெலியும் எண்ணியது. நடுவில் இருந்த சுண்டெலி தான் முடிவு செய்தபடியே வாலை நழுவ விட்டது. அடியில் இருந்த சுண்டெலி பாத்திரத்தின் உள்ளே விழுந்தது.

மேலே இலுந்த சுண்டெலியும் தான் நினைத்தபடி நடுவில் இருந்த சுண்டெலியின் வாலை விட்டு விட்டது. எனவே, நடு சுண்டெலியும் பாத்திரத்தின் உள்ளே விழுந்து விட்டது. உனனே மேலே இருந்த சுண்டெலியும் பாத்திரத்தின் உள்ளே குதித்தது. மூன்றும் எண்ணெயை வேக வேகமாக குடித்தன.

இருந்த எல்லா எண்ணையையம் மூன்றும் குடித்து முடித்தன். பிறகு அவை வெளியே வர முயன்றன. பாத்திரம் உயரமாக இருந்ததால் வெளியே வர முடியாமல் அவை அங்கேயே சிக்கித் தவித்தன.

பொது அறிவு தகவல்கள்

★ பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படுவர்?
- ஆடம் ஸ்மித்

★ ஆசியாவில் முதன் முதலாக தொழில்மயமான நாடு?
- ஜப்பான்

★ ஆசியாவில் கடைசியாக தொழில்மயமான ஐரோப்பிய நாடு?
- ரஷ்யா

★ காளானில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து எது?
- பென்சிலின்

★ லட்சத்தீவில் அதிகம் பேசப்படும் மொழி?
- மலையாளம்

★ சிவப்பு எறும்பின் கொடுக்கில் அமைந்துள்ள அமிலம்?
- பாரமிக் அமிலம்

★ தாஸ் கேபிடல் என்றும் புத்தகத்தை எழுதியர்?
- கார்ல் மார்க்ஸ்

★ வௌவால் ஏற்படுத்தும் ஒலி?
- மீயொலி

★ மனிதன் ஒரு அரசியல் மிருகம் எனக் கூறியவர்?
- அரிஸ்டாட்டில்

★ வனவிலங்கு தடுப்புச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?
- கி.பி 1890

விடுகதைகள்

அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைப்பான் அவன் யார்?
-மேளம்-

ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள் அது என்ன?
-வாய்-

விடுமுறை இல்லாத கடை எது?
-சாக்கடை-

சின்னப்பயல் உரசினால் சீறிப் பாய்வான் அது என்ன?
-தீக்குச்சி-

நிறந்தீட்டுவோம்



இயற்கையின் நண்பன் மண்புழு

மண்புழு தாவரக் கழிவுகளை உணவாக்கிக் கொண்டு, கழிவுகளை வெளியேற்றுகிறது. இதனால் மண் வளம் பெறுகிறது. மென்மையாக மாறுகிறது.

காற்றும் நீரும் இந்த மண்ணுக்குள் அதிக அளவில் தங்குகின்றன.

இதனால் தாவரங்களின் வேர்கள் தங்கள் தேவைகளை எளிதாகப் பூர்த்தி செய்துகொள்கின்றன.

இப்படித் தாவரங்களுக்கு உதவி செய்வதால், மண்புழுவை உழவர்களின் நண்பன் என்று அழைக்கிறார்கள்.

இன்று மண்புழு முக்கியமான வியாபாரமாகிவிட்டது.

இதே மண்புழுக்கள் தாவரங்களின் வேர்களை உணவுக்காக வெட்டிவிடுவதும் உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா?

குயிலே பாடு

குயிலே! குயிலே
கூவிடுவாய்
கோலப்பாட்டடைப்
பாடிடுவாய்
ஒயிலாய்ப் பாடும் குயிலே நீ
ஒதுங்கி இங்கே
வாழ்வதுமேன்
கறுப்பாய் நானும்
இருக்கின்றேன்
காணும் எவரும் பல பேசி
வெறுப்பார் என்றே நீயுந்
தான்
விலகிக் காட்டுக்குள்
வந்தாயோ?
நிறத்தில் கறுப்பாய்
இருந்தாலும்
நெஞ்சம் உருகப் பாடுகிறாய்
திறத்தில் உயர்ந்தார்
எவ்வாறாய்த்
திகழ்ந்தாலும் தான்
குறையில்லை.

நல்ல புத்தகம் ஒரு சிறந்த நண்பன்

★ சில பக்கங்களைப் படிக்கிறோம். ஆனால் படித்த பிறகு என்ன படித்தோம் என்று நினைவுக்கு வருவதில்லை. காரணம் மனம் அதில் ஈடுபடாமல் இருப்பதால், கிரகித்துக் கொள்ள முடியவில்லை. அதனால் குறிப்புகள் எடுப்பது சிறந்தது.

★ கண்கள் 5 சதவிகிதம் தான் வேலை செய்கிறது. 95 சதவிகிதம் மூளைதான் வேலை செய்கிறது. 1 மணி நேரம் படியுங்கள். பின்னர் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.

★ காலையில் கிழக்குப் பக்கமும், மாலையில் மேற்குப் பக்கமும் உட்கார்ந்து படியுங்கள். தெற்கு நோக்கிப் படிப்பதை தவிர்க்கவும்.

★ எவற்றைப் படிக்க வேண்டுமென்று முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

★ அவசியமில்லாததை ஒதுக்கித்தள்ள வேண்டும். மூளை ஒரு சேமிக்கும் வங்கி.

★ அவசியம் அல்லது முக்கியம் என்று கருதுவதை நன்கு படித்து நினைவுப் பெட்டியில் பத்திரப்படுத்த வேண்டும். மனப்பாடம் செய்வதில் தவறில்லை. ஆனால் புரிந்து கொண்டு செய்தால், எப்போதும் நினைவிலிருக்கும்.

★ படிக்கும் வேகம் என்ன என்று அறிந்து, அதனைப் படிப்படியாக அதிகரித்துக் கொள்.

★ ஒரு நிமிடத்திற்கு 150 வார்த்தைகளைப் படிக்கவும், அதில் 100 வார்த்தைகளையாவது கிரகிக்கும் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

★ பின்னர் 200-150, 200-250 எனப் படிப்படியாக உயர்த்திக் கொள்ள முயற்சி செய்யவும்.

★ தினசரி பாட சம்பந்தமில்லாத, பொது அறிவினை வளர்க்கக் கூடிய ஏதேனும் ஒரு புத்தகத்தை குறைந்தது 15 நிமிடமாவது படிக்கவும். ஒரு வாரத்தில் சுமார் 2 மணி நேரம், மாதத்தில் 8 மணி நேரம் கிடைக்கிறது. ஒரு நல்ல புத்தகத்தைப் படிக்க சுமார் 4 மணி நேரம் தேவை. மாதத்தில் இரண்டு புத்தகங்களைப் படிக்கலாம். ஆண்டில் 24 புத்தகங்களைப் படிக்கலாம்.

★ வெளியில் போகும் போது, ஒரு புத்தகத்துடன் செல்லுங்கள், பயணம் செய்யும் போதும், பலவற்றிற்காகக் காத்திருக்கும் போது, நமது நேரத்தை வீணாகச் செலவிடாமல், பயனுள்ள வகையில் செலவிடலாம்.

★ படிப்பதைக் கடமையாகக் கருதாமல் பிடித்தமான விஷயமாக மாற்றிக் கொண்டால், நிச்சயமாக மறக்காது.

★ படிக்கிற நேரம் உங்களுக்கு எந்த நேரம் சிறந்தது என்று கருதுகிறீர்களோ, அதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

★ படிக்கின்ற போது முக்கியமானவற்றை அடிக்கோடிடுங்கள். தனி குறிப்பேட்டில் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.

★ படிக்கும் பழக்கும் ஒரு சிறந்த பழக்கம். அதனை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு நல்ல புத்தகம் ஒரு சிறந்த நண்பன், வழிபோக்கத் துணைவன்.

பறக்கும் பலூன்கள்!

பலூன்களைப் பிடிக்காதவர்கள் யாரும் இருக்க முடியாது. பிறந்தநாள், திருமணம், திருவிழாக்களில் பலூன்கள் இன்று முக்கியமான இடத்தைப் பிடித்து விட்டன.

பொம்மை பலூன்களுக்கு முன்பாகவே மிகப் பெரிய வெப்பக் காற்று பலூன்கள் வந்துவிட்டன. 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்ஸில் வெப்பக் காற்று பலூன்கள் பறக்கவிடப் பட்டன. 1783-ம் ஆண்டு முதல் மனிதராக எட்ன்னெ மாண்ட் கோல்ஃபியர் பலூனில் பறந்தார்.

விஞ்ஞானி மைக்கேல் ஃபாரடே 1824-ம் ஆண்டு எலாஸ்டிக் பலூன்களில் பல வாயுக்களை நிரப்பிப் பரிசோதனைகளைச் செய்தார். ஓராண்டுக்குப் பிறகு பொம்மை பலூன்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

பலூன்களில் ஹீலியம், ஹைட்ரஜன், நைட்ரஸ் ஆக்சைடு, ஆக்ஸிஜன், காற்று, நீர் போன்றவற்றை நிரப்பிப் பயன்படுத்துகிறார்கள். ரப்பர், லாடெக்ஸ், நைலான் துணி போன்ற பொருட்களில் இருந்து நவீன பலூன்கள் தயாரிக்கப்படுகின்றன. விதவிதமான வண்ணங்களிலும் வடிவங்களிலும் பொம்மை பலூன்கள் கிடைக்கின்றன.

விழாக்களுக்குப் பயன்படுத்தும் பலூன்கள், வெப்பக் காற்று நிரப்பப்பட்ட பலூன்கள் என்று பல வகைகளில் பலூன்கள் உள்ளன. ஹீலியத்தால் நிரப்பப்பட்ட ரப்பர் பலூன்களும் பிளாஸ்டிக் பலூன்களும் மிதந்து கொண்டே இருக்கக்கூடியவை. சில நாட்களிலிருந்து ஒரு வாரம் வரை கூட இந்த பலூன்கள் உடையாமல் தாக்குப்பிடிக்கின்றன.

சில நாடுகளில் பலூன்களை வானில் பறக்கவிடும் போட்டிகளை நடத்துகிறார்கள். தண்ணீரால் நிரப்பப்பட்ட பலூன்களை ஒருவர்மீது மற்றொருவர் அடித்து விளையாடுகின்றனர். முக்கிய நிகழ்வுகளை பலூன்கள் மூலம் விளம்பரப்படுத்தும் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

சிறப்பு பலூன்கள் மருத்துவத்திலும் பயன்படுகின்றன. அடைபட்ட தமனிகளை நீக்குவதற்கும், உள் உறுப்புகளில் வெளியேறும் ரத்தத்தைத் தடுப்பதற்கும் பலூன்களைப் பயன்படுத்துகிறார்கள். அறிவியல் ஆராய்ச்சிகளிலும் பலூன்கள் பயன்படுகின்றன. இரண்டாம் உலகப் போருக்கு முன்பு எதிரிகளைக் கண்காணிக்கவும் பலூன்கள் பயன்பட்டன.

இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்

இவ்வாரம் தனபாவம், பொருள் வரவு , மனை, வாகன , குடும்பம் அபிவிருத்தி பெறும். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். கன்னியரின் காதல் விவகாரம் கைகூடும். வியாபாரிகளுக்கு கூட்டுவாணிபம் நன்மை தரும். விவசாயிகள் நவீன முறைகளை பூச்சு புழுக்களின் தொல்லைகளின் இருந்து பயிர் பாதுகாப்புகளை மேற்கொள்ளலாம். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு அமையும்.

வீரிய பாவத்தில் புதன், மாதா ஸ்தானத்தில் வெள்ளி , சத்துரு பாவத்தில் குரு இருப்பதால் விவேகம் கூடும். புத்திச்சாரியம் மிகும். மாதா நலம், கல்வி விருத்தி ஏற்படும். மனை சுகம், வாகன நலம் , குடும்ப சேமம் உண்டாகும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பும், உத்தியோக அதிகாரமும் கொள்வர். வியாபாரிகள் இவ்வாரம் கொள்முதலையும், முதலீடுகளையும் ஆரம்பிக்கலாம். விவசாயிகள் விவசாயப் பண்ணைகளால் நல்ல ஆதாய முன்னேற்றமடையலாம்.

2ம் தன ஸ்தான ரவியைச் சனி நோக்குவதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டு. விவேக பாவத்தில் வெள்ளி சஞ்சரிப்பதால் புத்திச்சாரியம் மிகும். எதிலும், நிதானம் உண்டாகும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகளுக்கு கொள்முதலையும், முதலீடுகளையும் இவ்வாரம் ஆரம்பிக்கலாம். விவசாயிகளுக்கு விளைபொருட்களைச் சந்தைப்படுத்தலால் நல்ல ஆதாய முன்னேற்றம் காணலாம்.

ஜென்ம ரவி உஷ்ண ரோகத்தைக் கொடுக்கும். தேகாபிமானம் அவசியம். அல்லாவிடின், வைத்தியச் செலவை உண்டாக்கும். தன பாவத்தில் வெள்ளி சஞ்சரிப்பதால் தனலாபம், பொருள் வரவு , மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். வெளிநாட்டுப்பணம் வந்து சேரும். உத்தியோகத்தர் சக ஊழியர்களின் அனுசரித்து நடந்தால் வேலைச்சுமை குறையும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும், கொள்முதல்களையும் தொடங்கலாம்.

செய்யும் தொழிலால் உயர்வு , விருத்தி, இலாபம் சேமிப்பு வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். கருமங்கள் யாவும் சிரமமின்றி நிறைவு பெறும். இவ்வாரம் 3இல் குரு மறைவு, 5இல் சனி தோஷத்தால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை பயக்கும். உத்தியோகத்தர்க்கு கணிசமான வேலைப்பழுவும், மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் புதிய முதலீடுகளைக் கட்டுப்படுத்தல் வேண்டும். ஆசிரியர், மாணவர் உறவு சீராகவே இருக்கும்.

தன ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் வெளி நாட்டுப் பணவரவுண்டு. நற்செய்திகள் நன்மை தரும். நிதிச் சேர்கை , வங்கி இருப்பு, சேமிப்பு முதலியன ஏற்படும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைக்கூடித் திருமணப் பேச்சுக்கள் இவ்வாரமும் தொடரும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். விவசாயிகளுக்கு அரச உதவி, மானியம் கிடைக்கும். விவசாயிகள் நவீன முறைகளால் பயிர் உற்பத்தியைப் பெருக்க முடியும்.

ஜென்மத்து வியாழ தோஷமும், சனீஸ்வரனின் சுபயோக சஞ்சாரமும் இவ்வாரம் நன்மை , தீமைகள் கலந்த பலாபலன்களே ஏற்படும். கர்ம பாவத்தில் புதன், இலாப ஸ்தானத்தில் சுக்கிரன் சஞ்சரிப்பதால் உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் , விவசாயிகள் தத்தம் தொழில் முன்னேற்றத்தால் நல்ல ஆதாயம் பெறுவர். குடும்பப் பெண்களின் குடும்ப நிர்வாகம் புத்திரர் அனுகூலமுடன் நன்கு நடைபெறும்.

இவ்வாரம் 12இல் விரய வியாழ தோஷம் ஏழரைக்கடைக்கூறு சனி தோஷமும் இருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தல் வேண்டும். உத்தியோகத்தர்க்கு வேலைப்பழுவும் மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு பழைய நிலுவைகள் வந்து சேரும். விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு பூச்சி புழுக்களின் தொல்லைகளின் இருந்து பயிர் பாதுகாப்புக்களை மேற்கொள்ளலாம்.

ஜென்மச் சனி (ஏழரை நடுக்கூறு) அஷ்டமத்தில் ராகு, ரவி தோஷம் இருப்பதால் கணவன் மனைவியர்களுக்கிடையே கருத்து பேதங்கள் அவ்வப்போது தோன்றி மறையும். தர்ம ஸ்தானத்தில் சுக்கிரன் யோகமாகச் சஞ்சரிப்பதால் தர்ம, புண்ணிய காரியங்களில் ஈடுபாடு, ஆர்வம் , நோன்பு , விரதம் அனுஷ்த்தல், ஆலய தரிசனம் முதலியன ஏற்படும். பிதாவழிச் சொத்துச் சேர்கை கிட்டும். உத்தியோகப் பெண்கள் ஏற்றம் காண்பர். ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவு வலுவடையும்.

இவ்வாரம் அஷ்டமத்தில் வெள்ளி சஞ்சரிப்பதால் ஆயுட் பலமுண்டு. ஜீவன , கர்ம பாவத்தில் குரு சஞ்சரிப்பதால் உத்தியோகத்தர் வெளியூர் பணிகளில் மேற்கொள்ள நேரிடும். சிலருக்கு வெளிநாட்டுச் சஞ்சாரம் கிட்டும். ஏழரைச் சனி முற்கூறுத் தோஷம் இருப்பதால் வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் ,கூட்டு வாணிபத்தையும் மட்டுப்படுத்தல் வேண்டும். விகுடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் பல சிரமத்தின் மத்தியில் நடந்தேறும்.

சப்தம , களத்திர ஸ்தானத்தில் சுக்கிரன் உச்ச யோகம் அடைவதால் கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைக்கூடித் திருமண சம்பந்த நிகழ்வுகள் நன்மை தரும். தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். நற்செய்திகள் நன்மை தரும். வியாபாரிகள் விவசாயிகள் தத்தம் தொழில் முன்னேற்றத்தால் நல்ல ஆதாயம் பெறுவர். வங்கி இருப்புக்கள், நிதி வசதிகள் மனநிறைவைக் கொடுக்கும்.

இவ்வாரம் சத்துரு , ரோக பாவத்தில் சுக்கிரன் சஞ்சரிப்பதால் சத்துரு ஜெயம், ரோக நிவர்த்தி உண்டாகும். சிவில் வழக்கு விடயங்கள் ஜெயமளிக்கும். உத்தியோகத்தர் சக பணியாளர்களை அனுசரித்து நடந்தால் வேலைச்சுமை குறையும். வியாபாரிகளுக்கு பழைய கடன்கள் யாவும் வசூலாகும். விவசாயிகளுக்கு விவசாயப் பண்ணைகளில் கூலியாட்களின் மேலதிக உதவி, ஒத்துழைப்புக்களைப் பெறமுடியும். நவீன முறைகளால் பயிர் பாதுகாப்புக்களை மேற்கொள்ளலாம்

செவ்வாய் தோஷம் போக்கும் விநாயகர் விரதம்

திருமணத்துக்கு ஜாதகப்பொருத்தம் பார்ப்பவர்களை பெரும்பாலும் கலங்கடிப்பது செவ்வாய் தோஷமாகும். இந்த தோஷத்தால் நிறைய பேரின் திருமணம் தாமதம் ஆகி விடுவதுண்டு. செவ்வாய் தோஷத்தை விரட்டும் ஆற்றல் விநாயகர் வழிபாட்டுக்கு உண்டு. அதன் பின்னணியில் ஒரு வரலாறு உள்ளது.

விநாயகரின் பரமபக்தரான பரத்து வாச முனிவர் தலயாத்திரை சென்றபோது நர்மதை நதியில் நீராடினார். அங்கே ஒரு கந்தர்வ மங்கையைக் கண்டார். அவள் மேல் அன்பு கொண்டு வாழ்ந்தார். இவ் விருவருக்கும் சிவந்த நிறத்தில் குழந்தை ஒன்று பிறந்தது. செந்நிறம் கொண்டிருந்ததால் 'அங்காரகன்' என்று குழந்தைக்கு பெயர் சூட்டப்பட்டது. அக்குழந்தையைப் பூமாதேவி எடுத்து வளர்த்ததால் 'பூமி குமாரன்' என்ற பெயரும் உண்டு.

அங்காரகர் சிறந்த விநாயகர் பக்தர். அவருடைய பக்தித்திறத்தை மெச்சிய விநாயகர் அங்காரகன் வேண்டிக் கொண்டபடி தேவர்களைப் போல் வாழவும், நவக்கிரகங்களில் ஒருவராகத் திகழும் பெரும்பேற்றினையும் பெற்றார். அதனுடன் அங்காரகனுக்குரிய செவ்வாய்க்கிழமைகளில் வரும் சதுர்த்தி திதியில் விநாயகரின் திருவடிகளைப் பணிவோரின் பிணிகளைத் தீர்க்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார். இதன் காரணமாகச் செவ்வாய்க்கிழமை சதுர்த்தி விரதம் இருந்து விநாயகப் பெருமானின் திருவருளைப் பெறுவோர் உடல் பிணிகள் யாவும் நீங்கப் பெறுவர்.

செவ்வாய் தோஷமுள்ளவர்கள் செவ்வாய்க்கிழமைகளில் சதுர்த்தி விரதம் அனுஷ்டித்தால் தோஷம் நீங்கி திருமண பாக்கியம் உண்டாகும். திருமணத்துக்கு ஜாதக பொருத்தங்களைப் பார்க்கத் தொடங்கும் போது முதலில் ஆயுள் பலத்தைக் கண்டறிய வேண்டும். பிறகு பெண், பிள்ளை இருவருடைய தசாபுத்தி அந்தர காலங்களைப் பார்க்க வேண்டும்.

இருவருக்கும் திருமண பாக்கியம் வந்திருக்கிறதா? களத்திர தோஷம் உண்டா? மாங்கல்ய தீர்க்கும் இருக்கிறதா? என்பன போன்ற முக்கியமான அம்சங்களைப் பார்க்க வேண்டும். பிறகு பொருத்தங்கள் பார்க்கும் போது பெண் அல்லது பிள்ளை ஜாதகத்தில் தோஷம் உள்ளதா? என்பதை ஆராய்ந்து அறிய வேண்டும். குறிப்பாகச் செவ்வாய் தோஷத்தை அறிவது அவசியமாகும். பெண் அல்லது பிள்ளையின் ஜாதகத்தில் லக்கனத் திறகு 2, 4, 7, 8, 12 ஆகிய இல்லங்களில் செவ்வாய் தங்கினால் தோஷமாகக் கருதப்படுகிறது.

அடுத்து சந்திரன் தங்கிய ராசிக்கு 2, 4, 7, 8, 12 இல்லங்களில் செவ்வாய் நின்றாலும் தோஷமாகும்.

மூன்றாவதாக சுக்கிரன் நின்ற ராசிக்கு 2, 4, 7, 8, 12 ராசிகளில் செவ்வாய் தங்கினாலும் தோஷமடைகிறார்.

ஆனால் 2, 4, 7, 8, 12 ஆகிய ராசிகளில் செவ்வாய் தங்கினால் மாத்திரம் தோஷம டைந்து விட்டதாகக் கூற இயலாது.

ஜாதகத்தில் மேஷம், விருச்சிகம் போன்ற ஆட்சி வீடுகளில் செவ்வாய் தங்கினால் அதுதோஷமாகாது. அதேபோல மகர ராசியில் செவ்வாய் உச்சம் பெற்றாலும் தோஷம் இல்லை.

கடக ராசியில் செவ்வாய் தங்கி நீச்சமடைந்தாலும் தோஷம் என்ற பேச்சுக்கே இடமில்லை. செவ்வாய் தோஷ அமைப்பில் இடம் பெற்றுள்ள போது அந்த கிரகத்தை குரு, சனி, ராகு, கேது பார்த்தாலும் அல்லது அந்த கிரகங்களும் சேர்ந்து தங்கினாலும் செவ்வாய் தோஷம் பரிகாரமடைந்து விடுகிறது.

செவ்வாய் தோஷம் காரணமாகத் திருமணம் நடைபெறக் காலதாமதமானால் அதற்கு பரிகாரமாகவும் சாந்தி செய்வது போன்றும் சிலவற்றை செய்வதன் மூலம் திருமணம் கைகூடும். சுபம் நடைபெறும்.

செவ்வாய்க் கிழமைகளில் வரும் சதுர்த்தி திதி நாளில் விநாயகருக்கு அபிஷேக ஆராதனை செய்து விரதம் இருப்பதால் நல்லவை நடைபெறும். 41 செவ்வாய்க்கிழமை விரதம் இருக்க வேண்டும். விரத நாள் அன்று அதிகாலை எழுந்து நீராடி, சிவந்த வஸ்திரம் உடுத்தி, செவ்வாய் கிரகத்திற்கு செண்பகப்பூ, சிவப்பு அலரி ஆகிய மலர்களால் அர்ச்சனை செய்ய வேண்டும்.

விரதம் பூர்த்தி செய்யும் நாள் ஐந்து பேருக்கு விருந்து அளிக்க வேண்டும். அவர்களுக்கு சிவப்பு வஸ்திரம், செம்புச் செம்பு, தம்ளர் மற்றும் தாம்பூலத்துடன் தட்சணையும் அளித்து அவர்களை வணங்கி ஆசி பெற வேண்டும்.

வாழ்வின் படிநிலையை சொல்லும் கொலு தத்துவம்

'ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணால் ஆன பொம்மையால் என்னை பூஜித்தால், அவர்களுக்கு சகல சுகங்களையும், சௌபாக்கியங்களையும் அளிப்பேன்' என்று தேவி புராணத்தில் அம்பிகை கூறியுள்ளார். அன்னையின் அந்த வார்த்தையை சுரதா என்ற மன்னன் கடைப்பிடித்து, தன் பகைவர்களை வீழ்த்தியதோடு, பலவிதமான இன்னல்களில் இருந்தும் விடுதலை அடைந்தான். எனவே கொலு பொம்மைகளை வைத்து வழிபாடு செய்வது என்பது நவராத்திரி விழாவில் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது.

மனிதன் படிப்படியாக தன் ஆன்மிக சிந்தனைகளை வளர்த்து, இறுதியாக இறைவனுடன் கலக்க வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துவதற்காகவே, கொலுவில் படிகள் அமைக்கப்பட்டு, அதில் பொம்மைகள் அடுக்கி வைக்கப்படுகின்றன. ஒன்பது படிகள் அமைப்பது மரபு. ஒவ்வொரு படியிலும் ஐதீகப்படி பொம்மைகளை வைக்க வேண்டும். பொம்மைகளை வைக்கும் மரபையும், அந்த பொம்மைகள் கூறும் தத்துவத்தையும் இங்கு காணலாம்.

நவராத்திரியின் சிறப்பு அம்சம் கொலு வைப்பதே ஆகும். கொலு என்பது பல படிகளை கொண்ட மேடையில் பலவித பொம்மைகளை நேர்த்தியாக அலங்கரித்து வைப்பது என்பது பொருளாகும். ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணினால் செய்யப்பட்ட பொம்மைகளை சக்தியின் அம்சங்களாக எண்ணி நவராத்திரியில் பூஜிப்பவர்களுக்கு சகல நலங்களையும் தருவேன் என்று அம்பிகையே கூறியிருக்கின்றார். நவராத்திரியில் வீட்டில் வைக்கப்படும் கொலு மேடையானது, 9 படிகள் கொண்ட தாக அமைக்கப்பட்டு இருக்க வேண்டும். ஒவ்வொரு படிகளும் ஒவ்வொரு தத்துவத்தை மிக எளிதாக சொல்லிச் செல்கின்றன.

முதலாம் படி

கொலு மேடையில் கீழிருந்து முதல் படியில் ஓரறிவு கொண்ட உயிர்களான புல், செடி, கொடி போன்ற தாவரங்களின் பொம்மைகளை கொலுவாக வரிசைப்படுத்தி வைக்க வேண்டும்.

இரண்டாம் படி

அடுத்ததாக அமைந்த இரண்டாவது படியில் ஈரறிவு கொண்ட நத்தை, சங்கு போன்ற உயிர்களின் பொம்மைகளை கொலுவில் வைக்க வேண்டும்.

மூன்றாம் படி

மூன்றறிவு படைத்த உயிரினங்களான கறையான், எறும்பு போன்றவற்றின் பொம்மைகளை கொண்டு மூன்றாவது படியை அமைக்க வேண்டும்.

நாலாம் படி

நான்கறிவு உயிர்களை விளக்கும் நண்டு, வண்டு போன்றவற்றின் பொம்மைகளை வைத்து நான்காவது படியை அலங்கரிக்க வேண்டும்.

ஐந்தாம் படி

ஐந்தறிவு கொண்ட உயிர்களான மிருகங்கள் மற்றும் பறவைகளின் பொம்மைகளை வைத்து ஐந்தாவது படியை அமைக்க வேண்டும்.

ஆறாம் படி

இந்த படி மனிதர்களுக்கு உரியது. எந்த உயிருக்கும் இல்லாத சிந்திக்கும், சிரிக்கும் சக்தியை இறைவன் மனிதனுக்கு வழங்கியுள்ளார். அத்தகைய ஆறாவது அறிவு கொண்ட மனிதர்களின் பொம்மைகளை வைத்து ஆறாவது படியை நிர்மாணிக்க வேண்டும்.

ஏழாம் படி

மனித நிலையிலிருந்து உயர்நிலையை அடைந்த சித்தர்கள், ரிஷிகள், மகரிஷிகள் (ரமணர், வள்ளலார்) போன்றோரின் பொம்மைகள் கொண்டு ஏழாவது படியை அமைக்க வேண்டும்.

எட்டாம் படி

தேவர்கள், அட்டதிக்கு பாலகர்கள், நவக்கிரக அதிபதிகள் போன்ற தெய்வங்கள், தேவதைகள் போன்றோரின் பொம்மைகளைக் கொண்டு எட்டாவது படியை அலங்காரம் செய்ய வேண்டும்.

ஒன்பதாம் படி

பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய முப்பெரும் தேவர்கள், சரஸ்வதி, லட்சுமி, பார்வதி தேவி போன்ற முப்பெரும் தேவிகள் ஆகிய தெய்வங்களையும், அவர்களின் நடுவில் நடுநாயகமாக ஆதிபராசக்தியின் உருவ பொம்மையையும் வைத்து ஒன்பதாவது படியை நிறைவு செய்ய வேண்டும்.

மனிதன் படிப்படியாக உயர்ந்து தெய்வ நிலையை அடைய வேண்டும் என்பதை உணர்த்தும் விதமாகவே இதுபோன்ற வரிசையில் கொலு அமைக்கச் சொல்லப்பட்டுள்ளது.

துன்ப நேரங்களில் கடவுள் காப்பார்



ஒரு விவசாயி பாடுபடுகிறார் என்றால் அவர் கடினப்பட்டு உழைக்கிறார் என்பது பொருள். ஒரு வீரன் பாடுபடுகிறான் என்றால் அவன் கடின பயிற்சிகளை மேற்கொள்கிறான் என்பது புலனாகிறது. இதேபோன்று ஒவ்வொரு தொழிலிலும் பாடுகள் உண்டு. பாடுகள் என்றால் இங்கே துன்பங்கள் அடங்கிய வெற்றி பாதைகள் என்பதை புரிந்துகொள்கிறோம்.

ஏசு தன் பணியின் சூழலில் பல பாடுகளைபட்டார். பல அவமானங்களை மேற்கொண்டார். ஏசுவின் பாடுகள் அவருடைய பணிகளின் நிறைவாகவும், மீட்பின் வழிகளாகவும் அமைந்தன. கடவுளின் திட்டத்தை நிறைவேற்றவே அவர் பாடுகள் பட்டார். தந்தை எனக்கு அளித்த துன்பக்கிண்ணத்தில் இருந்து நான் குடிக்காமல் இருப்பேனா? (யோவான் 18:11) என்றார்.

நாம் எவ்வாறு நம்முடைய துன்ப நேரங்களில் செயல்படுகிறோம்? துன்பங்களை கண்டு துவண்டு போகிறோமா? தோல்விகளைக் கண்டு ஓடி ஒளிந்து விடுகிறோமா? வறுமையையும், வியாதிகளையும் கண்டு வாடிவிடுகிறோமா? இந்த துன்ப நேரத்தில் கடவுள் நம்மோடு இருக்கிறார். நம்மை கைவிடமாட்டார். ஏசுவின் பாடுகளும் மரணமும் பரமத்தந்தையின் விருப்பமாகவும் திட்டமாகவும் மீட்பின் வரலாற்றில் இடம் பெறுகின்றன.

நம்முடைய துன்பங்களும் தோல்விகளும் கடவுளின் விருப்பம் என்று உணர்ந்து அவைகளை ஏற்றுக்கொண்டு வாழும் போது நாமும் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுபவர்களாக இருக்கிறோம். துன்பங்களின் நேரங்களில் கடவுளை விட்டு வெகுதூரம் சென்று விடாமல் அவரின் கரங்களைப் பற்றிக்கொண்டு பின்பற்றுபவர்களாக வாழ்வோம்.

இலங்கையில் சிறுவர் உரிமையும் சிறுவர்களின் பாடசாலை இடைவிலகலும்

தொகுப்பு : அட்டாளைச்சேனை எஸ்.எல். மன்சூர்

கடந்தவாரத் தொடர்ச்சி

உறுப்புரை 11:- சட்டவிரோத இடமாற்றமும் மீளாமையும்

பொற்றோரோ மூன்றாம் தரப்பினரோ சிறுவர்களைக் கடத்துதலை அல்லது மறித்து வைத்தலைத் தடுப்பதும் நடவடிக்கை எடுப்பதும் அரசின் கடமையாகும்.

உறுப்புரை 12:- சிறுவரின் கருத்து

தனது கருத்தைத் தெரிவிக்கும் சுதந்திரம் பிள்ளைக்கு உண்டு. பிள்ளையைப் பாதிக்கும் எந்த விடயத்திலும் அதன் கருத்தைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

ஒக்டோபர் 01ஆந் திகதி சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

உறுப்புரை 13:- கருத்துச் சுதந்திரம்

பிறரின் உரிமைகளை மீறினாலன்றி மற்றும்படி தனது எண்ணங்களைத் தங்கு தடையின்றி வெளியிடவும் தகவல்கள் பெறவும், தன்கருத்தை அல்லது தகவலைத் தெரியப்படுத்தவும் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிமை உண்டு.

உறுப்புரை 14:- சிந்தனை, மனசாட்சி, மதச் சுதந்திரம்

பெற்றோரின் முறையான வழி நடத்தலுக்கும் தேசிய சட்டத்துக்கும் அமைய, சிந்தனைச் சுதந்திரம், மனச் சாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிமை உண்டு.

உறுப்புரை 15:- கூடும் சுதந்திரம்

பிறரின் உரிமைகளை மீறினாலன்றி மற்றும்படி பிறருடன் சேர்வதற்கும் சங்கங்கள் அமைத்தல், அல்லது அவற்றில் அங்கம் பெறுவதற்கும் சிறுவருக்கு உரிமை சிறுவர்களுக்கு உண்டு.

உறுப்புரை 16:- அந்தரங்கத்தைக் காத்தல்

பிள்ளைகளுக்குத் தங்களது அந்தரங்கத்தைப் பேணும் உரிமை உண்டு. தமது அந்தரங்கம், குடும்பம், வீடு, கடிதத்தொடர்பு ஆகியவற்றில் பிறர் தலையிடாதிருக்கும் உரிமை சிறுவர்களுக்கு உண்டு.

உறுப்புரை 17:- தகுந்த தகவல்கள் கிடைக்க வழி செய்தல்

வெகுசன ஊடகங்களின் முக்கியத்தை அரசாங்கம் அங்கீகரித்தல் வேண்டும். அத்துடன் பிள்ளை உள்ளூர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து பல்வேறு தகவல்களையும் தகவற் சாதனங்களையும் குறிப்பாக அதன் சேமநலனை மேம்படுத்தும் சாதனங்களையும் பெறுவதற்கான வாய்ப்புகளையும் அளித்தல் வேண்டும். இதுவிடயத்தில் பிள்ளையின் கலாசாரப் பின்னணிக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

உறுப்புரை 18:- பெற்றோர் பொறுப்பு

பிள்ளையை வளர்க்கும் முக்கியத்தை அரசாங்கம் அங்கீகரித்தல் வேண்டும். அத்துடன் பிள்ளை உள்ளூர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து பல்வேறு தகவல்களையும் தகவற் சாதனங்களையும் பெறுவதற்கான வாய்ப்புக்களையும் அளித்தல் வேண்டும். இதுவிடயத்தில் அவர்களுக்கு ஆதரவு அளித்தல் வேண்டும். பிள்ளைகளை வளர்ப்பதில் அரசாங்கம் பெற்றோருக்குத் தகுந்த உதவி வழங்குதல வேண்டும்.

உறுப்புரை 19:- இம்மை, புறக்கணிப்பு ஆகிய வற்றிலிருந்து பாதுகாப்பு

சகல வகையான இம்மைகள் புறக்கணிப்பிலிருந்தும் பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்

நன்றி: யுனிசெவ் கோப்புப்படம்

ளைகளுக்கு உண்டு. பிள்ளைகளைத் துன்புறுத்த பெற்றோருக்கோ பிற பராமரிப்பாளர்களுக்கோ உரிமை இல்லை. இது தொடர்பான தடுப்பு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு அரசினுடையதாகும்.

உறுப்புரை 20:- குடும்பச் சூழலற்று வாழும் பிள்ளை விசேட பாதுகாப்புப் பெறும் உரிமை

அவ்வாறான சந்தர்ப்பங்களில் தகுந்த மாற்றுக் குடும்பப் பராமரிப்பினை அளிப்பதும் அல்லது பராமரிப்பு நிலையமொன்றில் இடம் தேடிக் கொடுப்பதும் அரசாங்கத்தின் கடமையாகும். இந்தக் கடமையை நிறைவேற்ற முயலும் போது பிள்ளையின் கலாசாரப் பின்னணியைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

உறுப்புரை 21:- சுவீகாரம்

பிள்ளையின் நலனை முன்னிட்டே அது மேற்கொள்ளப்படல் வேண்டும். அப்போது கூட, சட்டத்துக்கு அமைவாக அது நிறைவேற்றப்படல் வேண்டும்.

உறுப்புரை 22:- அகதிச் சிறுவர்கள்

ஒரு சிறுவன் அல்லது சிறுமி தன் சொந்த வீட்டிலோ நாட்டிலோ வாழ்வது பாதுகாப்பற்றது என்பதால் அவ்விடத்தை விட்டு அகன்று அநாதையானால் விசேட பாதுகாப்பும் உதவியும் பெறும் உரிமை அச் சிறுவன் அல்லது சிறுமிக்கு உண்டு.

உறுப்புரை 23:- ஊனமுற்ற சிறுவர்கள்

உள மற்றும் உடல் ஊனமுற்ற பிள்ளைகள் கண்ணியத்துடன் வாழ்வதற்கும் முடிந்த வரை சிறப்பான முறையில் தம் சொந்தக் காலில் நிற்கவும் சமுதாயத்துடன் இணைந்து கொள்ளவும் வாய்ப்புப் பெறும் பொருட்டு விசேட பராமரிப்பு, கல்வி, பயிற்சி என்பனவற்றைப் பெறும் உரிமையுடைவர்களாகவர்.

உறுப்புரை 24:- சுகாதாரமும் சுகாதார சேவைகளும்

மிக உயர்ந்த தராதரமுடைய சுகாதாரத்தையும் பராமரிப்பையும் பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு. ஆரம்ப மற்றும் நோய்த்தடுப்புச் சுகாதாரப் பராமரிப்பு, பொதுச் சுகாதாரப் பராமரிப்பு, பொதுச் சுகாதரக்கல்வி, சிசு மரண விகிதாசாரத்தைக் குறைத்தல் ஆகிய சேவைகளைப் பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பளித்தல் வேண்டும்.

உறுப்புரை 25:- தாபரிப்பிடத்தை அவ்வப் போது கண்காணித்தல்

பராமரிப்பு, பாதுகாப்பு அல்லது சிகிச்சைக்கெனத் தாபரிப்பு இடமொன்றில் அரசாங்கத்தாற் கையளிக்கப்பட்ட பிள்ளை, அவ்விடத்தில் முறையாகத் தாபரிக்கப்படுகிறதா என்பதை அவ்வப்போது கண்காணிக்கும் கடமை அரசாங்கத்திற்கு உண்டு.

உறுப்புரை 26:- சமூகப் பாதுகாப்பு

சகல சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் உள்ள பயன்களைப் பெறும் உரிமை பிள்ளைக்கு உண்டு.

உறுப்புரை 27:- வாழ்கைத் தரம்

ஒவ்வொரு பிள்ளையும் இசைவான வாழ்க்கைத் தரத்தைப் பெறும் உரிமை உடையதாகும். பிள்ளை தகுந்த வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதை உறுதிப்படுத்தும் தலையாய பொறுப்பு பெற்றோரைச் சாரும். இந்தப் பொறுப்பை நிறைவேற்ற பெற்றோரால் முடியாதபோது அவர்களுக்கு உதவுதல் அரசின் பொறுப்பாகும்.

உறுப்புரை 28:- கல்வி

கல்வி பயிலும் உரிமை எல்லாச் பிள்ளைகளுக்கும் உண்டு. அரசாங்கத்தின் கடமை, ஆரம்பக் கல்வியாவது கட்டாயமாகவும் இலவசமாகவும் கிடைப்பதை உறுதிப் படுத்துதல் ஆகும்.

உறுப்புரை 29:- கல்வியின் நோக்கம்

பிள்ளையின் ஆளுமை, திறமை, உடல் மற்றும் உள ஆற்றல்கள் ஆகியவற்றை முழுமையாக விருத்தி செய்வதே கல்வியின் நோக்கம். சுதந்திரமான சமுதாயத்தில் பொறுப்புடனும், அமையுடனும் வாழ்வதற்கும் அடிப்படை மனித உரிமைகள், தமது சொந்தக் கலாசார, தேசிய ஆசாரசீலங்களை மட்டுல்லாமல் பிறரின் விழுமியங்களையும் கனம் பண்ணுவதற்கும் கல்வி சிறுவரைத் தயார் செய்தல் வேண்டும்.

உறுப்புரை 30:- சிறுபான்மை மக்களின் பிள்ளைகள்

தமது சொந்தக் கலாசாரத்தை அனுபவிக்கவும் தமது சொந்த மதம், மொழி ஆகியவற்றைப் பயிலவும் சிறுபான்மை இனத்தவர்களின் பிள்ளைகளுக்கு உரிமை உண்டு.

உறுப்புரை 31:- ஒய்வு, பொழுதபோக்கு, கலாசார நடவடிக்கைகள்

பிள்ளைகள் ஒய்ந்திருக்கவும் விளையாட்டு, கலாசார, கலை நிகழ்ச்சிகளிற் பங்குபற்றவும் உரிமையுடையவர்களாவர்.

உறுப்புரை 32:- பால்ய ஊழியம்

ஆரோக்கியம், கல்வி அல்லது மேம்பாடு ஆகியவற்றுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய வேலைப் பளுவிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு. தொழில் புரியும் குறைந்த பட்ச வயதெல்லையை நிர்ணயிப்பதும் வேலை நிபந்தனைகளை நெறிப்படுத்துவதும் அரசின் கடமையாகும்.

உறுப்புரை 33:- போதைப் பொருட் துர்ப்பிரயோகம்

சட்ட ஷவிரோதமான மருந்துகளையும், வேறு போதை வஸ்துகளையும் உபயோகிப்பதிலிருந்தும் அவற்றைத் தயாரித்தல் அல்லது விநியோகித்தல் ஆகியவற்றிலிருந்தும் பாதுகாக்கப்படும் உரிமை சிறுவருக்கு உண்டு.

உறுப்புரை 34:- பாலியல் இம்சை

விபசாரம் மற்றும் ஆபாச நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படல் உட்பட, பாலியல் சார்ந்த சுரண்டல் அல்லது இம்சையிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை ஒவ்ஷேவொரு பிள்ளைக்கும் உண்டு.

உறுப்புரை 35:- விற்பனை, பரிவர்த்தனை, கடத்தல்

பிள்ளைகளை விற்பனை செய்தல், பரிவர்த்தனை செய்தல் அல்லது கடத்திச் செல்லுதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

உறுப்புரை 36:- ஏனைய இம்சைகள்

பிள்ளைகளின் சேமநலன் சார்ந்த உறுப்புரைகள் 32,33,34,35 ஆகியவற்றிற் குறிப்பிடாத மற்றெல்லா இம்சைகளிலிருந்தும் அரசாங்கம் பிள்ளையைப் பாதுகாத்தல் வேண்டும்.

உறுப்புரை 37:- சித்திரவதை சுதந்திரத்தை மறுத்தல்

எந்தப் பிள்ளையும் சித்திரவதை, துன்பம், தண்டணை, சட்டவிரோதக் கைது அல்லது சுதந்திரத்தை மறுத்தல் ஆகியவற்றுக்கு ஆளாக்கப்படலாகாது. தகுந்த சிகிச்சை, தடுப்புக் காவலில் உள்ள பெரியவர்களிடமிருந்து பிரிந்திருத்தல், குடும்மத்தவர்களுடன் தொடர்பு பேணல், சட்ட மற்றும் ஏனைய உதவி பெறும் உரிமைகளாகும்.

உறுப்புரை 38:- ஆயுதப் பிணக்குகள்

போர்க் காலங்களில் பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு. 15 வயதுக்குட்பட்ட எந்தப் பிள்ளையும் சண்டைகளில் நேரடியாகப் பங்குகொள்ளவோ ஆயுதப் படைகளிற் சேர்க்கப்படவோ கூடாது.

உறுப்புரை 39:- புனர்வாழ்வு, பராமரிப்பு

ஆயுதமேந்திய சண்டைகள், சித்திரவதை, புறக்கணிப்பு, துன்புறுத்தல், சுரண்டல் ஆகியவற்றுக்கு இலக்கான பிள்ளைகள் குணமடைவதற்கான சிகிச்சை பெறுவதையும் சமுதாயத்தில் மீண்டும் இணைந்து கொள்வதையும் உறுதிப்படுத்தல் அரசின் கடமையாகும்.

உறுப்புரை 40:- பால்ய நீதி பரிபாலனம்

பிள்ளைகள் குற்றம் இழைதடதவர்களாகக் குற்றம் சாட்டப்பட்டால் சட்ட மற்றும் ஏனைய உதவிபெறும் உரிமை அவர்களுக்கு உண்டு.

உறுப்புரை 41:- நடைமுறையிலுள்ள நியமங்களை மதித்தல்

சிறுவர் உரிமைகள் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச சட்டத்தில் வரையப்பட்ட நியமங்கள் இந்தச் சமவாயத்தில் உள்ளவற்றிலும் உயர்ந்தனவாக விளங்கும் பட்சத்தில், உயர்ந்த நியமமே என்றும் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

உறுப்புரை 42:- அமுலாக்கல்

இந்தச் சமவாயத்திற் சொல்லப்பட்டுள்ள உரிமைகளை வயது வந்தோருக்கும் சிறுவர்களுக்கும் பரவலாக அறியச் செய்தல் அரசாங்கத்தின் கடமையாகும்.

சமவாயத்தில் எல்லாமாக 54 உறுப்புரைகள் உள்ளன. 42 முதல் 45 வரையான உறுப்புரைகள், இச் சமவாயத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட முன்னோற்றத்தை 5 வருடத்துக்கு ஒரு முறை ஜக்கிய நாடுகள் சபைக்கு அறிக்கையிடும் பொறுப்புப் பற்றியன. 46 முதல் 54 வரையான உறுப்புரைகள் அரசுகள் சமவாயத்திற்குத் தம்மை அர்பணிக்கும் விடயத்தில் பின்பற்ற வேண்டிய நடைமுறையை விளக்குகின்றன.

(தொடரும்)

டிஜிட்டல் மார்க்கெட்டிங் மூலம் தொழில் முனைவோர்கள் கென்டன்ட் (Content Marketing) மார்க்கெட்டினை எவ்வாறு பயன்படுத்துதல்

டிஜிட்டல் தொழிநுட்பம் ஒரு தொழிலின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகிறது.அதேபோல் தொழிலை , ஒரு தயாரிப்பை அல்லது சேவையை சந்தைப்படுத்துவதிலும் டிஜிட்டல் மார்க்கெட்டிங்கை பயன்படுத்தும் போது தொழில் வளர்ச்சிக்கு அதிகரிக்கும்.பலவகையான டிஜிட்டல் மார்க்கெட்டிங் உத்திகள் உள்ளன.அதில் ஒன்று கென்டன்ட் மார்க்கெட்டிங் அகும்.

கென்டன்ட் மார்க்கெட்டிங்

கென்டன்ட் மார்க்கெட்டிங் என்பது நிறுவனம்,தொழில்,தயாரிப்பு,சேவை தொடர்பானவற்றை கட்டுரையாகவோ,தகவல்களாகவோ,செய்தியாகவோ, வீடியோவாகவோ, ட்வீட், இன்போகிராபிக்ஸ், மீம்ஸ், விமர்சனங்கள், பேட்டிகள், வழிகாட்டிகள், கருத்துப்பதிவு, தரவுகள், லிங் போஸ்ட், **e book, podcasts** போன்ற பலதரப்பட்ட கென்டன்ட்டை இணையத்தளம் டிடழப,சமூக வலைத்தளம்,வீடியோ செனல் போன்ற டிஜிட்டல் ஊடகத்தில் வெளியிடுவது கென்டன்ட் மார்க்கெட்டிங் அகும்.

கென்டன்ட் மார்க்கெட்டிங்கை மிகச்சிறப்பாக செய்ய சில வழிமுறைகளை பின்பற்றலாம்.

1. பொருத்தமான படங்களைப் பயன்படுத்துதல்

ஆயிரம் வார்த்தைகள் சொல்லக்கூடிய விளக்கத்தை ஒரு படம் சொல்லிவிடும்.இப்போது சமூக வலைத்தளம் மற்றும் பலவற்றில் ஒரு கருத்தை எளிமையாக விளக்க படங்கள் பயன்படுத்தப்படுகின்றன.இதேபோல் ஒரு நிறுவனத்தைப்பற்றி விளக்க பிராண்டு தயாரிப்பு மற்றும் சேவையைப் பற்றி விளக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தப்படங்கள் கென்டன்ட்க்கு உறுதுணையாக இருக்கின்றன.மற்றும் பார்வையாளர்களைக் கவர படங்கள் உதவுகின்றன.எனவே கென்டன்ட்க்கு பயன்படுத்த மிகவும் பொருத்தமான, சரியான படங்களை நாம் சொல்ல வரக்கூடிய விளக்கங்களை,கருத்துக்களை ,பொருளை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.மேலும் படங்கள் அதிக தரம் உள்ளவையாக இருக்க வேண்டும். அந்தப்படங்கள் நமக்கு சொந்தமான படங்களாக இல்லாத பட்சத்தில் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்பதை குறிப்பிட வேண்டும்.

நாம் ஏதேனும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் பயன்படுத்தி வளர்ச்சியடையும் நிறுவனங்களை பார்த்தோமானால் அவர்கள் நிறுவனம் சார்ந்த பதிவுகளை மற்றும் கென்டன்டை அவர்களின் இணையத்தளத்தில் ,சமூக வலைத்தளத்தின் பக்கங்களில் ,இமெயில் வழியாகவும் ,பிற ஊடக தளத்திலும் அடிக்கடி பதிவிடுவார்கள்.அந்தப் பதிவு பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்து அவர்களை வாடிக்கையாளர்களாக மாற்ற உதவும். எனவே தொழில் சார்ந்த பதிவுகளை அடிக்கடி வெளியிடுவது வாடிக்கையாளர்களை பெற உதவும்.

கென்டன்ட் பதிவிட்ட திகதியை குறிப்பிட வேண்டும்.இது பார்வையாளர்களுக்கு,அடிக்கடி பதிவிடுகிறார்கள்.என்பதை தெரியப்படுத்தும். அடுத்தடுத்த பதிவுகள் படிக்க அவர்களை தூண்டும்

2 .உங்கள் பார்வையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை பற்றி தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் பதிவுகளின் மற்றும் கென்டன்ட் உடைய பார்வையாளர்களைப்பற்றி தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்,பார்வையாளர்கள் எந்தமாதிரி வெளியிட்டால் அவர்களுக்குப்பிடிக்கும்.எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் போன்றவற்றை தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

முக்கியமானவற்றை கோடிட்டு காட்டுவது , பெரிதாக காட்டுவது,தனித்துக் காட்டுவது போன்றவற்றை செய்வதால் அவர்களுக்கு அந்த கென்டென்டை படிக்கத்தூண்டும்.

SEO Keyword

வாடிக்கையாளர்கள் கூகுள் போன்ற தேடு பொறியில் என்னன்ன வார்த்தைகளைப்பயன்னுடுத்தி தேடுவார்களோ அதுவே **SEO Keyword** ஆகும்.கூகுள் போன்ற தேடுபொறியில் முன்னணி பக்கத்தில் நிறுவன இணையத்தளம் வர அந்த இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ள கென்டன்ட் மிக முக்கிய பங்காற்றுகிறதோடு பொறியின் 3வது,4வது பக்கத்தில் உங்கள் இணையத்தளம் வருமானால் தேடுபவர்கள் உங்கள் இணையத்துக்கு வராமலேயே போக வாய்ப்புள்ளது.

நிறுவன இணையத்தளம் முன்னணிப்பக்கத்தில் வருவதற்கு அதில் உள்ள கென்டன்டில் சரியான **Keyword** இடம்பெற்றிருக்க வேண்டும். அப்பொழுதுதான் வாடிக்கையாளர்கள் கூகுளில் தேடும் போது உங்கள் இணையத்தளம் முன்னணிப்பக்கத்தில் வரும்.

3.பதிவிடும் கென்டன்ட் விற்பனைக்கு வழிவகுக்க வேண்டும்.

கென்டன்ட் மார்க்கெட்டிங் நோக்கமே விற்பனையை அதிகப்படுத்த வேண்டும் என்பதே. நிறுவனம் வெளியிடும் கென்டன்ட் விற்பனைக்கு வழிவகுக்கவில்வையென்றால் மறுபடியும் மறுபரிசீலனை செய்து கென்டென்டை விற்பனையை தூண்டும் விதமாக வெளியிட வேண்டும்.

4. பார்வையாளர்களை தொடர்ந்து தக்கவைக்குமாறு அமைக்க வேண்டும்.

பார்வையாளர்கள் ஒரு முறை மட்டும் கென்டன்டை படிக்க வைப்பதாக இல்லாமல் தொடர்ந்து உங்கள் தொழிலின் கென்டென்டை படிக்க வைப்பதற்காக அவர்களை உங்கள் **news letter** பதிவு செய்ய ஊக்குவித்தல். சமூக வலைத்தளத்தின் பக்கங்களை பின்பற்ற ஊக்குவித்தல் போன்றவற்றை செய்ய வேண்டும்.இதனால் அவர்கள் தொடர்ந்து உங்கள் பதிவுகளைப் பார்ப்பார்கள்.

5. கென்டென்டை பலவகைகளில் பதிவிடுங்கள்

நிறுவனம் தொடர்பான கென்டென்டை கட்டுரை அல்லது **blogs** ஆக மட்டுமல்லாமல் பல வகைகளில் பதிவிடலாம் **tweets, infographics, webinars, podcasts** மற்றும் வீடியோ போன்ற பலவகைகளில் கென்டென்டை மார்கெட்டிங் செய்யலாம்.

6. வெளிப்படுத்த வேண்டிய விடயத்திலிருந்து விலகாமல் இருக்க வேண்டும்.

தொழில் முனைவு,நிதி சார்ந்த கட்டுரை,சமூக செய்தி ,ஒரு பஸன் வலைப்பதிவு,ஒரு பயணக் கதைடி அல்லது ஒரு தொழிநுட்ப கட்டுரை போன்ற எது சம்மந்தபாக வெளியிட விரும்புகிறீர்களோ அந்த விஷயத்திலிருந்து விலகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தங்கத்துரை தவப்பிரியா
2ம் வருடம் வர்த்தகப்பிரிவு
கிழக்குப் பல்கலைக்கழகம்

குறிக்கோள் வாசகத்தை தாங்கி இருத்தல்,முக்கிய செய்தியை கொண்டிருத்தல் மற்றும் இதை சரியான படங்களைக்கொண்டு வெளிப்படுத்தலாம்.

7. முக்கியமானவற்றை பதிவிடுவது

டிஜிட்டல் மீடியாவில் எழுதும் போது பல அம்சங்களை கருத்தில் கொள்ள வேண்டும். இப்போது என்ன ட்ரெண்ட் உள்ளது+ என்பதை அறிந்து கென்டென்ட் வெளியிட வேண்டும்.

8. வெளியிட்ட கென்டென்டை விளம்பரப்படுத்துவது

நிறுவனம் தொடர்பான கென்டென்ட் வெளியிடுவது எவ்வளவு முக்கியமானதோ அந்தளவிற்கு அதை விளம்பரப்படுத்துவதும்,அதை பேச வைப்பதும் முக்கியமானது. உதாரணத்திற்கு ஒரு கென்டென்ட்டை சமூக ஊடகத்தில் பரவ செய்வது, வீடியோவை வைரலாக தேவையானவற்றை செய்வது ,வாடிக்கையாளர்களிற்கு **news letter** அனுப்பி உங்களிடம் ஒரு தொடர்பை ஏற்படுத்த செய்வது , படிப்பவர்களை பகிர வைப்பது , அவர்களின் கருத்தை பதிவிட வைப்பது போன்றவை செய்ய முடியும்.

எனவே டிஜிட்டல் மார்கெடடிங் மூலம் தொழில் முனைவோர்கள் கென்டென்ட் மார்கெட்டிங் மூலம் வாடிக்கையாளர்களை அதிகம் கவர்வதோடு அவர்களை ஈர்த்து தக்க வைத்துக் கொள்ள முடியும் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

விஜயதசமியும் ஆயுத பூஜையும்

நவராத்திரி விரதம் புரட்டாதி மாதத்தில் வரும் வளர்பிறைப் பிரதமை நாள் முதல் நவமி நாள் வறையுள்ள ஒன்பது நாட்கள் நவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ்வாண்டு (விகாரி வருடம்) புரட்டாதி மாத வளர்பிறைப் பிரதமை 13 ஆம்நாள் ஞாயிற்றுக்கிழமை 29 திகதி அமிர்த சித்த யோகத்தில் ஆரம்பமாகி புரட்டாதி மாத 22 ஆம்நாள் அக்டோபர் 08ம் திகதி விஜயதசமி, ஆயுத பூஜை மற்றும் கேதார கௌரி விரதத்தின் தொடக்க நாளில் நிறைவடைகின்றது.

ஒன்பது நாட்களும் பூஜை செய்ய முடியாதவர்கள் கடைசி மூன்று தினங்களாகிய சப்தமி, அட்டமி, நவமி ஆகிய நாட்களில் வழிபாடு செய்தாலும் முழு நாட்களும் செய்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

பத்து நாட்கள் வருகின்ற இவ் நாராத்திரியில் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதிக்கு கோவிலில் கும்ப பூசை மூன்று தேவியருக்கும்தான் செய்யப்படுகின்றது. ஆயினும் சரஸ்வதிக்குரிய நாளை மூலநட்சத்திர நாளில் ஆரம்பித்து திருவோண நட்சத்திர நாளில் நிறைவு செய்ய வேண்டும் என்று விரத நிர்ணய விதியும் உண்டு

அறியாமையை அழித்த அம்பிகைக்கு புரட்டாசி மாதம் பிரதமை திதியிலிருந்து ஒன்பது நாள் விழா கொண்டாடப்படுகிறது. இந்த நாட்களில் நம்மை சூழ்ந்துள்ள அறியாமை என்னும் இருள் விலக அம்பிகையை இரவு நேரத்தில் பூஜை செய்கிறோம்

சரஸ்வதி பூஜை

சரஸ்வதி : இவள் வைரத்தின் அழகு. அமைதிப் பார்வையுடன் அழகாகப் பிரகாசிக்கிறாள். கல்வியின் தெய்வம். பிரம்மபிரியை. ஞான சக்தி. தமிழ் நூல்கள் சரஸ்வதியை ஆற்றங்கரைச் சொற்கிழத்தி என்று குறிப்பிடுகிறது.

நவராத்திரியின் ஆறாவது ஏழாவது நாளில் மூல நட்சத்திரம் உச்சமாக இருக்கள் ஏற்பாடாகியுள்ளன. இவை மனித நாகரிகத்தின் வளர்ச்சிப்படிகள் எனின் மிகையல்ல.

ஒக்டோபர் 06 உலக ஆசிரியர் தினம் உலகளாவிய ரீதியில் பல்வேறு விதமாகக் கொண்டாடப்படுகின்றது. யுனெஸ்கோ நிறுவனம் ஆசிரியரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக, ஆசிரியரின் தன்மையினைக் கருத்திற்கொண்டு அங்கீகாரமளித்தல் என்ற கூற்றுடன், பொதுக் கல்விக்காக அல்லது சிறப்புத் துறையொன்றுக்காக அவர்களினால் ஆற்றப்பட்டு வரும் பங்களிப்பினை மரியாதை செய்யும் முகமாக, இவ் உலக ஆசிரியர் தினத்தை அறிவித்து, வருடாந்தம் கொண்டாடப்பட்டும் வருகின்றது.

பொதுவாக ஆசிரியரை தெய்வீகத்தன்மையுடன் மதித்து மரியாதை செய்யும் வழக்காற்றினை ஆசிய நாடுகள் கொண்டுள்ளன. அவரவர் சமய கலாசார பின்னணிகளுக்கு ஏற்ப இதனை வெளிப்படுத்தும் விதத்தில் மாற்றங்கள் உள்ளன.

இலங்கை சிங்களவர் மற்றும் தமிழர் ஆசிரியர்களுக்கு வெற்றிலையைக் கொடுத்து காலில் விழுந்து வணக்கம் செலுத்துவர். மேற்கு நாடுக ளின் மாணவர்கள் தாம் அமர்ந்த இடத்தில் இருந்து கூறல் - கேட்டல் செய்வதை எவரும் குறையாகக் கருதுவதும் இல்லை.அந்த வகையில் அவர்களை கௌரவித்து, மரியாதை செய்து, நினைவு கூறுவ தற்கு வருடத்தில் ஒரு கணம், ஒரு ஆசிரியர் தினம், அவசியம் தான்

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை முகவரியில் லாத கடிதத்திற்குச் சமம் என்பர். இது போல் தான் மாணவ சமூகமும் குறிக்கோள், இலட்சியம் இல் லாமல் இருந்தால் எதிர்காலம் ஓர் இருண்ட பாதை என்பதை ஆரம்ப காலத்தில் இருந்தே மாணவ மனதில் நன்கு பதிய வைத்து மாணவர்களை சீரிய வழியில் வழிநடத்துவதில் ஆசிரியர்களின் பங்கு விசாலமானவை. தனது வழிகாட்டலின் மூலம் கிடைக்கும் வெற்றியை பார்க்கும் ஆசிரியர்களின் மனதில் தோன்றும் மகிழ்ச்சியை அளவிட முடியாது.

தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவனை நல்ல மாணவனாக ஆக்குவதோடு, நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருக்கிறது. அதே போல் ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவ சமூகத்தை உருவாக்குபவர்கள் அல்ல, மாறாக உயிரூட்டுபவர்கள் என்றாலும் மிகையாகாது.

. மாணவனுக்கு ஞானத்தின் சுடரை ஏற்றுகிற பணி ஆசிரியருடையது. அவர்களை நன்றியுடன் நினைவு கூரவும், அவர்களின் பணி தொடர வாழ்த்துவதுமே ஆசிரியர் தினம் கொண்டாட்டங்களின் பிரதான எதிர்பார்க்கையாகும். மனிதனை மனிதனாக, உருவாக்கும் சிற்பிகள் என்று ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகளைச் சொல்வதுண்டு. மனிதனை முதன்மைப் படுத்த உரமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் என்றால் அது மிகையாகாது.

ஆசிரியர்களின் பணியைக் கொண்டாட ஒரு தினத்தை மட்டும் ஒதுக்குவது முறையல்ல என்றும் சிலர் வாதிடுவர். ஏனெனில், இவர்களின் பணி நாள்தோறும் பல்வேறுபட்ட கோணங்களில் பல்வேறுபட்ட பரிணாமங்களை தோற்றுவித்துக் கொண்டே இருக்கின்றன. எனவே, ஏனெனில் இந் நிமிடம் வரை உலகில் நிகழும், நிகழ்த்தப்படும் மாற்றங்கள், வியப்புக்கள் அத்தனையும் நிகழ்த்தப் படுவது எங்கோ ஒரு மூலையில் தன்னலம் கருதா மல் ஓர் ஆசானால் உருவாக்கிய அந்த மாணவச் சமூகத்தினால் தான் என்பதை வைத்தே அதனை ஒரு தினத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தக்கூடாது என்பது இவர்களின் வாதமாகும். உலகில் வாழ்ந்த, வாழும், வாழப்போகும் ஒவ்வொரு ஜீவனுக்கும் பின்னால் ஓர் ஆசான் இருந்தான், இருக்கிறார்,

என்.ஹரன்

அஷ்ட சரஸ்வதி: வாகீஸ்வரி சித்ரேஸ்வரி துளஜா கீர்த்தீஸ்வரி அந்தரிட்ச சரஸ்வதி கடசரஸ்வதி நீலசரஸ்வதி கினி சரஸ்வதி

ஒன்பது சக்திகள்: முப்பெரும் சக்திகளில் ஒவ்வொரு சக்திக்கும் மும் மூன்று அம்சங்கள் சிறப்பாக உள்ளன.

துர்க்கை:
1. மகேசுவரி
2. கௌமாரி
3. வராகி.

இலட்சுமி:
4. மகாலெட்சுமி
5. வைஷ்ணவி 6. இந்திராணி.

சரஸ்வதி :
7. சரஸ்வதி
8. நாரசிம்மி
9. சாமுண்டி.

நவராத்திரியின் போது இந்த ஒன்பது தேவியர்களையும் முறையாக வழிபடுகிறோம்.

ஒரு தேவியை முதன்மையாகவும் மற்றவர்களைப் பரிவார தெய்வங்களாகவும் கொள்ளவேண்டும். நவராத்திரியில் கன்னி வழிபாடு என்பது ஒரு வகை.

நவராத்திரியின் போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கன்னியை ஒவ்வொரு தேவியாக பாவனை செய்து வழிபடுவது ஒரு முறை. இதனால் நவராத்திரி வழிபாட்டில் பல கன்னியர்களும் அவர்களின் குடும்பத்தாரும் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு வழிபாட்டில் பலர் பங்கேற்பது என்பது நவராத்திரியின் விழாவின் குறிக்கோள்களில் ஒன்றாகும்.

கல்வி, இசை, புகழ், செல்வம், தானியம், வெற்றி, தண்ணீர் ஆகிய அனைத்தையும் சக்தியே தருகிறாள்.

ஆதிபராசக்தியை துர்க்கையாக நினைத்து வழிபட்டால் பயம் நீங்கும். லட்சுமி வடிவில் தரிசித் தால் செல்வம் பெருகும். சரஸ்வதியாக எண்ணி வணங்கினால் கல்விச்செல்வம் சிறக்கும். பார்வதியாக வழிபட்டால் ஞானப்பெருக்கு உண்டாகும். எனவே தான் இந்நாட்களில் கொலுவும் வைக்கிறார்கள். தேவியை நடுவில் வைத்து இந்த உலகப்பொருட்களை எல்லாம் சுற்றிலும் வைக்கிறார்கள்.

இதற்கு காரணம் தேவியால் தான் இந்த உலகம் இயங்குகிறது என்பதைக் காட்டுவதற்காக. பிரம்மா விஷ்ணு சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் ருத்திரன் சதாசிவன் ஆகிய சிவனின் மற்ற வடிவங்களும் சரஸ்வதி லட்சுமி பார்வதி மகேஸ்வரி மனோன்மனி ஆகிய சக்திகளுக்குள் அடக்கமாக உள்ளனர்.

இருள் விலகி ஒளி பிறந்த பத்தாம் நாள் விஜயதசமி கொண்டாடுகிறது. ஒரு நாளில் பகல் என்பது சிவனின் அம்சமாகவும் இரவு என்பது அம்பிகையின் அம்சமாகவும் கருதப்படுகிறது. பகலும் இரவும் இல்லாவிட்டால் நாள் என்பது கிடையாது. பகலில் உழைக்கும் உயிரினங்களை இரவில் அம்பாள் தன் மடியில் கிடத்தி தாலாட்டி உறங்க செய்கிறாள்.

இரவெல்லாம் விழித்திருந்து உலகை காக்கும் அம்பிகைக்காக ஒன்பது நாள் இரவு மட்டும் திருவிழா கொண்டாடப்படுகிறது என்பர்.

விஜய தசமி

ஒன்பது நாட்கள் மகிஷாசுரனுடன் போரிட்ட தேவி பத்தாம் நாள் அவனை வென்றாள். இந்நாளே விஜயதசமி - வெற்றி தருகிற நாள். பல குழந்தைகள் கல்வியினை இன்றுதான் ஆரம்பிப்பார்கள்.

இன்று தொடங்கும் அனைத்து நற்காரியங்களும் வெற்றி தரும். இதனால்தான் சிறுவர்களுக்கு பாடசாலை கல்வியினை தொடர்வதற்கு முன்னதாக சிறந்த நல்ல நேரத்தில் பெரியோரின் ஆசியுடன் முதல் முதலாக ஏடு தொடங்கும் முறை தொண்டு தொட்டு வருகின்றது.

பிள்ளையார் சுழி போட்டு நீ நல்லதை தொடங்கி விடு என்பதற்கு எது வாக ஏடு தொடங்கும் போது வாழை இலையில் அரிசியினை பரப்பி அதன் மீது முதல் முதலாக குளந்தையின் கையினை பிடித்து விரலினால் எழுதி விடுவர் இதன் போது சிறந்த பேச்ச ாற்றலும் இவ் பூவுலகில் வாழ்வதற்கு தேவை எனவேதான் அன்றைய தினம் நாக்கில் தர்ப்பைப்புல்லினால் தேன் ஒரு துளியினை தொட்டு குழந்தையின் நாக்கில் வைப்பதும் உண்டு .

ஆயுத பூசை

நவராத்திரிப் பண்டிகையில் சரஸ்வதி பூசை அன்று அவரவர் தம் தொழிலில் பயன்படுத்தும் கருவிகளுக்குச் செய்யும் பூசையாகும்

மனிதன் தமது வாழ்க்கையினை நடாத்துவதற்கு தேவையான தொழிலுக்கு ஏதோவொரு கருவி தேவையாக உள்ளது உழவனுக்கு ஏர் முக்கியம், எழுத்தாளனுக்கும் எழுதுகோல் போல ஒவ்வொரு வரும் தாம் செய்கின்ற தொழிலுக்கு நன்றி செலுத்தும் முகமாக இவை அமைகின்றன இது குறிப்பாக தாம் வாழ்க்கையினை நடத்த உதவுகின்ற தொழிலுக்கு செய்கின்ற பூசையாகவே பார்க்கப்படுகின்றது

இறுதி 03 நாட்களும் நவராத்திரி பூஜை ஆய கலைகள் 64ற்கும் அதிபதியான சரஸ்வதி தேவிக்கு அலுவலகங்கள் பாடசாலைகளில் விசேட பூசை இடம்பெறுகின்றதுடன் அக்டோபர் 08ம் திகதி விஜயதசமி, ஆயுத பூஜை மற்றும் கேதாரகௌரி விரதத்தின் தொடக்க நாளில் நிறைவடைகின்றது சிறப்பாகும்.

ஆசிரியர்களும் கடவுளே!

சர்வதேச ஆசிரியர் தினம் அக்டோபர் 06

ஆர்.நடராஜன்

வெறும் மாணவர்களாக பள்ளிக்கு வரும் சிறுவர்களுக்கு ஒழுக்கம், நல்ல பழக்க வழக்கம், படிப்பு என அறிவுக் கண்ணை திறந்து வைத்து அவர்களை சாதனையாளர்களாக்குவது ஆசிரியர்களே. அவர்களைக் கொண்டாடும் நாள் இன்னாள்.

எங்கே நடப்படுகிறாயோ அங்கே மலராகு என்ற பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாய் இருப்பவர்கள் ஆசிரியர்கள் தான். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களை வாழ்க்கை என்றால் என்ன? இதில் மாணவ, மாணவி சமூகத்தின் பங்கு எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு தெளிவை ஆசிரியர்கள் தான் கற்றுக் கொடுக்கின்றனர்.

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை முகவரியில்லாத கடிதத்திற்குச் சமம். இது போல் தான் மாணவ சமூகமும் குறிக்கோள், லட்சியம் இல்லாமல் இருந்தால் எதிர்காலம் ஓர் இருண்ட பாதை என்பதை ஆரம்ப காலத்தில் இருந்தே மாணவ மனதில் நன்கு பதிய வைத்து, அதன் மூலம் கிடைக்கும் வெற்றியை பார்க்கும் பொழுது ஆசிரியர்களின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றும்.

இதனை சொல்வதை விட உணர்வுப் பூர்வமாக உணர முடியும். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவனை நல்ல மாணவனாக ஆக்குவதோடு, நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருக்கிறது. அதே போல் ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவ சமூகத்தை உருவாக்குபவர்கள் அல்ல, மாறாக உயிரூட்டுபவர்கள். ஒரு சிறந்த ஆசிரியர்களின் பண்புகள், குணங்களை பார்க்கும் மாணவ, மாணவிகளின் மனதில் அப்படியே பதியும்.

அதனால் ஆசிரியர்கள் தங்களை மாணவர்களின் காலக் கண்ணாடி என்ற எண்ணத்தில் தான் பணியாற்றி வருகின்றனர்.அப்படி பணியாற்றுவதன் மூலம் கடினமாக உழைத்து வாழ்வில் ஒளிரும் மாணவ சமூகத்திற்கு ஆசிரியர்கள் உரிமையாளர்களாக மாறுகின்றனர்.

ஒரு தேசத்தின் வளமான எதிர்காலத்தைத் தாங்கவிருக்கும் தூண்களுக்கு வைரம் பாய்ச்சுகின்றவர்களும் அவர்களே. நமக்காக தம்மை அர்ப்பணித்த இவர்கள் எமது மனதளவு நன்றிக்கும், செயலளவு மரியாதைக்கும் உருத்துடையவர்களே.

மனித வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாத, மனித சமூகத்தின் முதுகெலும்பாக விளங்குகின்ற 'ஆசிரியரை' கௌரவப்படுத்தும் நோக்கில் பல்வேறு சமய கலாசார மற்றும் நிறுவன நிகழ்வு

கோப்புப்படம்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 06.10.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.